## ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின்

# ப்ராத: ஸங்கல்ப கத்ய

**(தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)**

**கன்னடத்தில் உரை எழுதியவர்:**
**தாவணகெரெ திரு. பீமராவ்**

## தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர்:

‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
380, 2A Main, 16th Cross, JP Nagar 4th Phase
Bengaluru : 560078
https://jagannathakesava.blogspot.com
httis://dasa-sahitya.blogspot.com
Ph: 8904458276. haridasa.vijayam@gmail.com

# ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின்
# ப்ராத: ஸங்கல்ப கத்ய
# (தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)

ஸ்ரீஹரிவாயுகுருகளின் ஆசியுடன்
ஜேஷ்ட பகுள த்ரயோதசி - (16-6-2023),
ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்தரின் ஆராதனை நாளன்று
வெளியிடப்பட்டது

**வெளியிடுவோர்**
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
380, 2A Main, 16th Cross, JP Nagar 4th Phase
Bengaluru : 560078
https://jagannathakesava.blogspot.com
httis://dasa-sahitya.blogspot.com
Ph: 8904458276. haridasa.vijayam@gmail.com

**இந்தப் புத்தகத்தை வெளியிட பொருளுதவி செய்த**
**அனைத்து ஹரிபக்தர்களுக்கும் நன்றி!!**

**|| ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||**

# முன்னுரை

எவ்வித செயலையும் :

1. செய்யத் துவக்கும் முன் - இது பகவத் ப்ரீதிக்காகவே செய்யப் போகிறேன் என்று - சங்கல்பம் செய்ய வேண்டும்.

2. அந்த செயலை செய்யும்போது - நாஹம் கர்தா ஹரி: கர்தா - என்ற சிந்தனையுடனேயே அதனை செய்ய வேண்டும்.

3. அந்த செயலை செய்து முடித்தபின் - அதனை பகவந்தனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும்.

என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதன்படி, சங்கல்பம் எப்படி செய்ய வேண்டும்? என்ன சொல்லி செய்ய வேண்டும்? என்ற சந்தேகம் வந்தால், அதற்கான பதிலாகவே, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள், நமக்காக இந்த 'ப்ராத: ஸங்கல்ப கத்யத்தை' இயற்றிக் கொடுத்திருக்கிறார். இத்தகைய ஸங்கல்பத்தின் மூலமாக, குருராயர், மத்வ ஸித்தாந்தத்தின் முக்கிய கருத்துகளின் ஸாரத்தையே மிகவும் அழகாக சொல்லியிருக்கிறார் என்பதை பார்க்கலாம். அதனுடன், வேத, புராண, உபநிஷத்களின் ஸாரத்தையும் மற்றும் ஸ்ரீமதாசார்யரின் நிர்ணயத்தின்படியும் இந்த கத்யம் உள்ளது என்பதை இதனுடைய அர்த்தத்தினை படித்தால் நன்றாக உணரலாம்.

ஒரே, நீண்ட வாக்கியமாக உள்ளதான இந்த கத்யத்தின் அர்த்தத்தை நன்றாகப் புரிந்து கொண்டு, 7-8 நிமிடங்களில்

சொல்லி முடிக்கக்கூடியதான இதை, தினம்தோறும் காலையில் தவறாது பாராயணம் செய்து, முக்யபிராணாந்தர்கதனான பகவந்தனின் அருளைப் பெறுவோமாக.

பாராயணத்திற்காக என்று மூல கத்யம் மட்டும் தனியாகவும், பின்னர், அர்த்தங்களுடன் என்று இரு பகுதிகளாக இந்தப் புத்தகம் உள்ளது.

**18.05.2023** **'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்**
**பெங்களூரு** **8904458276**

# ப்ராத: ஸங்கல்ப கத்யம்
# மூலம் மட்டும் (பாராயணத்திற்காக)

1. ஓம் லௌகிக வைதி3க பே4த3 பி4ன்ன வர்ணாத்மக த்4வன்யாத்மக அஶேஷ ஶப்3தா3ர்த்த2 ருகா3தி3 ஸர்வேவேதா3ர்த்த2 விஷ்ணு மந்த்ரார்த்த2 புருஷஸூக்தார்த்த2 கா3யத்ர்யர்த்த2 வாஸுதே3வ த்3வாத3ஶாக்ஷர மந்த்ராந்தர்க3த ஆத்3ய அஷ்டாக்ஷரார்த்த2 ஸ்ரீமன் நாராயணாஷ்டாக்ஷர மந்த்ரார்த்த2 வாஸுதே3வ த்3வாத3ஷாக்ஷர மந்த்ராந்தர்க3த அந்த்ய சதுரக்ஷரார்த்த2 வ்யாஹ்ருத்யர்த்த2 மாத்ருகா மந்த்ரார்த்த2 பிரணவோ பாஸகானாம்

2. பா1பா1வித்3த4 தை3த்யபூகா3வித்3த4 ஸ்ரீவிஷ்ணு ப4க்த்யாத்யனந்த1 கு3ணபரிபூர்ண ரமாவ்யதிரிக்த பூர்வப்ரஸித்3த4 வ்யதிரிக்த அனந்தவேத3 ப்ரதிபாத்3ய முக்2யதம அனந்தஜீவ நியாமக அனந்த ரூப ப4க3வத் கார்யஸாத4க பரமத3யாளு க்ஷமாஸமுத்4ர ப4க்தவத்ஸல ப4க்தாபராத4 ஸஹிஷ்ணு ஸ்ரீமுக்2ய ப்ராணாவதார பூ4தானாம்

3. அக்3ஞ ஞானார்த்தி2 ஞானயோக்3ய ப4கவத் க்ருபாபாத்ரபூ4த ஸல்லோக க்ருபாளு பி3ரம்ம ருத்3ராத்3யர்த்தி2த ப4க3வதாக்3ஞாம் ஶிரஸி பரமாத3ரேண அனர்க்4ய ஶிரோரத்னவத் நிதா4ய ததா2 அஶேஷ2 தே3வதா ப்ரார்த்த2னாம் ஹாரவத் ஹ்ருதி3 நிதா4ய சர்வஸ்வகீய ஸஜ்ஜனானுக்3ரஹேச்சயா கர்மபு4வி அவ தீர்ணானாம்

4. ததா2 அவதீர்ய ஸகல சச்சாஸ்த்ர கர்த்ருணாம், ஸகலது3ர்மத ப4ஞ்சகானாம், அனாதி3த: ஸத்ஸம்ப்ரதா3ய பரம்பரா ப்ராப்த ஸ்ரீமத்3 வைஷ்ணவ ஸித்தா3ந்த ப்ரதிஷ்டாபகானாம்

5. அத ஏவ ப4க3வத் பரமானுக்3ரஹ பாத்ரபூ4தானாம், ஸர்வதா3 ப4க3வதா3க்ஞயா ப4க3வத் ஸன்னிதௌ4 பூஜ்யானாம் ததா2 ப4க3வதா1 த3த்த வராணாம்

6. த்3வாத்ரிம்ஶல் லக்ஷணோ பே1தானாம், ததா2 ஸமக்3ர கு3ருலக்ஷணோபேதானாம், அஸம்ஶயானாம் ப்ரஸாத3மாத்ரேண ஸ்வப4க்தா ஶேஷ2 ஸம்ஶயச்சேத்ரூணாம்

7. ப்ரணவாத்3யஶேஷ2 வைஷ்ணவ மந்த்ரோத்3தா4ரகாணாம், ஸர்வதா3 ஸர்வ வைஷ்ணவ மந்த்ர ஜாபகானாம் ஸம்ஸித்3த4 ஸப்தகோடி மஹாமந்த்ராணாம்,

8. ப4க3வதி ப4க்த்யதி1ஶயேன ப4க3வது3பாஸனார்த்த2ம் ஸ்வேச்சயா க்3ருஹீதரூபாணாம்

9. தத்ர தத்ர ப்ருத2க் ப்ருத2க் ப4க3வத: அனந்த ரூபேஷு2 ப்ருத2க் ப்ருத2க் வேதோ3க்த தத3னுக்த பா4ரதோக்த தத3னுக்த ஸம்ப்ரதா3யாக3த ஸ்வேதர ஸ்வாபி4ன்னதயாபி அஶேஷ2ஶக்தி விஶேஷா2ப்4யாம் ப்ருத2க்3 வ்யவஹார விஷ2ய ஸர்வ ஸாமர்த்2யோபேத நிரவதி4க அனந்தானவத்ய கல்யாண கு3ணபரிபூர்ண அனந்தகு3ணோப ஸம்ஹத்ருணாம்

10. ததா2 வேதோ3க்த ஸர்வ க்ரியோப ஸம்ஹர்த்ரூணாம் ஏவம் அனந்தரூபாவயவ கு3ண க்ரியாஜாத்யவஸ்தா2 விஶிஷ்ட ப4க3வது3பாஸகானாம்

11. பரம த3யாளூனாம் க்ஷமா ஸமுத்3ராணாம் ப4க்த வத்ஸலானாம் ப4க்தாபராத3 ஸஹிஷ்ணூனாம் ஸ்வப4க்தான் து3ர்மார்க்கா3த் உத்3த்4ருத்ய ஸன்மார்க்க3 ஸ்தா2பகானாம் ஸ்வப4க்தம் மாம் உத்3தி3ஷ்ய ப4க3வத: புர: பரம த3யாளோ க்ஷமாஸமுத்3ர ப4க்தவத்ஸல ப4க்தாபராத3 ஸஹிஷ்ணோ த்வத3தீ4னம் தீ3னம் தூ3னம் அனாத2ம் ஷரணாக3தம் ஏனம் உத்3த4ர இதி விக்ஞாபன கர்த்ரூணாம்

12. ஸர்வக்3ஞ ஶிரோமணீனாம் அஶேஷ2 கு3ர்வந்தர்யாமிணாம் ஸதா3 ப4க3வத்பராணாம் ப4க3வதோऽன்யத்ர ஸர்வ வஸ்துஷு2 மன:ஸங்க3 ரஹிதானாம்,

13. ஸர்வத்ர ஸர்வதா3 ஸர்வாகார ஸர்வாதா4ர ஸர்வாஸ்ரய ஸர்வோத்பாத3க ஸர்வபா1லக ஸர்வ ஸம்ஹாரக ஸர்வ நியாமக ஸர்வ ப்ரேரக ஸர்வ ப்ரவர்த்தக1 ஸர்வ நிவர்த்தக யதா2யோக்3யம் ஸர்வ ஞானாஞான ப4ந்த3மோக்ஷப்ரத3 ஸர்வ ஸத்தாப்ரத3 ஸர்வ ஶப்3த3வாச்ய ஸர்வஶப்த3 ப்ரவ்ருத்தி நிமித்த ஸார்வகு3ணாதி1 பரிபூர்ணதம ஸர்வ தோ3ஷா2தி1தூ3ர ஸர்வாசிந்த்ய ஸர்வோத்தம ஸர்வேஶ்வர ஸர்வாத்1யந்த விலக்ஷண ஸ்வக3தபே4த3 விவர்ஜித1த்1வாதி3னா ப4க3வத்3ரஷ்ட்ரூணாம்

14. அபி4மானாதி3 ஸர்வதோ3ஷதூ3ராணாம் அஸூயோர்ஷ்2யாத்3ய ஶேஷ4 மனோதோ3ஷ நிவர்த்தகானாம்

15. நித்யாபரோக்ஷீக்ருத ரமாயுக்தா அஶேஷ2 ப4க3வத் ரூபாணாம் அத ஏவ விலீனாஶேஷ2 ப்ரக்ருதி ப3ந்தா4னாம் அத ஏவ தூ3ரோத்ஸாரித1 அஶேஷ2 அனிஷ்டானாம் அத ஏவ அஶேஷ2 ப4க்தாஶேஷ2 அனிஷ்2ட நிவர்த்தகானாம்

16. ப்ரணவோபாஸகானாம் அஸ்மதா3தி3 கு3ரூணாம் ஸ்ரீமதா3னந்த3 தீர்த்த2 ஸ்ரீமத் சரணானாம் (அந்தர்யாமின்)

17. அனிருத்3த4 ப்ரத்3யும்ன ஸங்கர்ஷண வாஸுதே3வாத்மக ஸ்ரீமத்4வ வல்லப4 ஸ்ரீலட்சுமி வேத3வ்யாஸாத்மக அண்ட3ஸ்தி2த அனந்தரூபாவயவ கு3ணக்ரியா ஜாத்1யவஸ்2தா விஸிஷ்2ட ரமாயுக்த க்ஷீராப்3தி4 ஶேஷ2ஶாயி ஸ்ரீபத்3மனாபா4த்மக

18. அண்டாத்3 ப3ஹிரபி4வ்யக்த ஶுத்3த4 ஸ்ருஷ்டித்வேன அபி4மத ஸ்ரீசதுர்முக2 முக்2யப்ராணோபாஸ்யத்வாத்3யனேக ப்ரயோஜனக அனந்தானந்தரூப மூலபூ4த ததா2 அஶேஷ2 ஜக3த்பாலன பிரயோஜனக ஶாந்திபதி அனிருத்3த4 மூலபூ4த ததா2 அஶேஷ2 ஜக3த்ஸ்ருஷ்டி ப்ரயோஜனக க்ருதிபதி ப்ரத்3யும்ன மூலபூ4த, ததா2 அஶேஷ2 ஜக3த்ஸம்ஹார பிரயோஜனக ஜயாபதி ஸங்கர்ஷண மூலபூ4த

19. ததா2 ஸ்வஸ்வ ஸமக்3ர யோக்3யதாபி4க்ஞ பரமானுக்3ரஹ ஶீலப4க3வத்ப்ரேரித சதுர்முகா2தி3 ஸத்கு3ரூபதி3ஷ்ட ஸ்வஸ்வயோக்3ய ப4க3வத்3ரூப கு3ணோபாஸனயா ஸஞ்ஞாத ஸ்வஸ்வயோக்3ய ப4க3வத்ரூப விஶேஷ2த3ர்ஷன போ4கா3ப்4யாம் வினஷ்டானிஷ்ட சஞ்சித ப்ராரப்3த4லக்ஷணாஶேஷ2 கர்மணாம்

20. ஸ்வஸ்வயோக்3யதானுஸாரேண ஸம்பூர்ண ஸாத4னானம் பூர்வகல்பே பி3ரம்ஹணா ஸஹ விரஜானதீ3 ஸ்னானேன த்யக்த லிங்கா3னாம் ததா2 வினஷ்2ட அவஶிஷ்2ட இஷ்2டாஶேஷ2 ப்ராரப்3த4 கர்மாணாம் பிரலயகாலே ப4க3வது3த3ரே வஸதாம்

21. ஆனந்த3மாத்ர வபுஷாம் தத3னுப4வ ரஹிதானாம் ஸ்வஸ்வயோக்3ய ப4க3வத்3ரூப விஶேஷ2 த்4யான ரதா1னாம் ஸ்ருஷ்டிகாலே ப4க3வதா3ஞயா ப4க3வது3த3ராத் ப3ஹிர்க3தானாம் ஶ்ரீஶ்வேதத்3வீப த3ர்ஷனம் நிமித்தீக்ருத்ய ப்ரதா4னாவரணபூ4த ஸ்வேச்சாப1ஸரணேன ஸ்வஸ்வயோக்3ய ஆனந்தா3விர்பா4வலக்ஷண முக்திப்ரதா3ன ப்ரயோஜனக மாயாபதி ஶ்ரீவாஸுதே3வாத்மக

22. லக்ஷ்ம்யாத்மக பிரளயாப்3தி4ஸ்த2 ஶ்ரீவடபத்ரஶாயி அஶேஷ2 ஜக3து3த3ர அஶேஷ2 முக்த நாபி4தே3ஶோர்த்4வபா4க3 குக்ஷ்யாக்2யதே3ஷ த்ரிவிதா4ஶேஷ ஸம்ஸாரி நாபி4தே3ஷ அஷே1ஷ2தம: பதிதனாப்4யதோ4 பா4க3தே3ஷ ஶ்ரீபூ4ம்யாலிங்கி3த காலாதி3சேஷ்2டக பரமாண்வாத்3ய ஶேஷ2காலாவயவ ஸ்ருஷ்ட்யாதி3கர்த்ரு அஶேஷ2 நாமக பரமபுருஷ நாமக ஶ்ரீசதுர்முக2 ப்ராணோபாஸிதசரண அனிருத்3தா4தி3 சதூரூபாத்மக கா3யத்ரீ நாமக ஸவித்ரு நாமக ரூபவிஶேஷா2த்மக வ்யாப்தரூப ப்3ருஹச்சரீர

23. ஶூன்யாபி4த3 காலாபி4த3 கேவலாபி4த3 பி3ரம்மாபி4த3 அனந்தாபி4த3 ரூபவிஶேஷா2த்மக நிருபசரித மூலரூப நிருபசரித வ்யாப்த ப்ரதிபாத்3ய அனந்ததேஜ:புஜ்ஜ தாத்3ருஷ ரமாயுக்தரூப விஶேஷாத்மக கா3யத்ரீ பூ4தவாக்1 ப்ருதி2வி ஶரீர ஹ்ருத3யபே4தே3ன ஷட்3வித4 கா3யத்ரி நாமக லோகவேத3ஸமீர

ரமாந்தர்க3த ப்ரணவாக்2ய துரீயபாதோ3பேத கா3யத்ரீ பாத3சதுஷ்2டய ப்ரதிபாத்3ய வைகுண்ட2ஸ்தி2த அனந்தாஸன ஸ்தி2த ஶ்வேதத்3வீபஸ்தி2த ஸர்வஜீவஸ்தி2த ரூபபே4தே3ன சதுரூபாத்மக தே3ஹவ்யாப்த தே3ஹாந்தர்யாமி ஜீவவ்யாப்த ஜீவாந்தர்யாமி ரூபபே4தே3ன சதுரூபாத்மக

24. நிருபசரித சர்வவாக3ர்த்த2 ப்ரதிபாத3க ஶ்ரீதே3வ்யாதி3 ரமாரூபாஷ்2டக அபி4மன்யமான சக்ரஶங்க2 வராப4யயுக்த ஹஸ்த சதுஷ்2டயோபேத ப்ரதீ3பவர்ண ஸர்வாப4ரணபூ4ஷித

25. விஶ்வாதி3 ப4க3வத்3ரூபாஷ்2டக ப்ரதிபாத3க அகாராத்3யஷ்2டாக்ஷராத்மக ஶ்ரீமத் ப்ரணவாத்3யஷ்2ட மஹாமந்த்ர ப்ரதிபாத்3ய அஷ்2ட ரூபாத்மக மந்த்ராத்4யாயோக்த பூ4வராஹாத்3யஶேஷ2 வைஷ்ணவமந்த்ர ப்ரதிபாத்3ய பூ4வராஹாத்3ய ஶேஷ ரூபவிஶேஷா2த்மக ரமாதிமந்த்ர ப்ரதிபாத்3ய ரமாதி3 நிஷ்2ட ரமாதி3 நாமக ரூப விஶேஷா2த்மக ஶ்ரீலட்சுமி ந்ருஸிம்மாத்மக பரமத3யாளோ க்ஷமாஸமுத்3ர ப4க்தவத்ஸல ப4க்தாபராத3 ஸஹிஷ்ணோ தே3ஶகாலாதி4பதே தே3ஹேந்த்3ரியாதி4பதே ஸூர்யவம்ஷத்4வஜ ரகு4குலதிலக லக்ஷ்மண ப4ரத ஷத்ருக்4னாக்3ரஜ ஶ்ரீமத் ஹனுமது3பாஸிதசரண ஸீதாபதே ஶ்ரீராமசந்தி3ர ।

26. த்வதா3க்ஞயா த்வத்ப்ரஸாதா3த் த்வத்ப்ரேரணயா த்வத்ப்ரீத்யர்த்தம் த்வாமுத்3தி3ஶ்ய த்வாம் அனுஸ்மரன்னேவ த்வதா3க்ஞயா நியதேன மன்னியாமகேன ஸத்தாப்ரத வாயு நாமக சேஷ்டா2 ப்ரத3 ப்ராண நாமக தா4ரணா ப்ரத த4ர்ம நாமக முக்திப்ரத3 ப4க்தி நாமக ரூபவிஶேஷை2: மத்3 ஹ்ருதி3ஸ்தி2தேன பரம த3யாலுனா க்ஷமா ஸமுத்3ரேண ப4க்தவத்ஸலேன ப4க்தாபராத4 ஸஹிஷ்ணுனா ஸர்வஸ்வாமினா ஸர்வப்ரேரகேண ஸர்வதாத்விக தே3வதா ப்ரேரகேண ஸர்வ தாத்விக அஸூர ப4ஞ்சகேன ததா2 தத் ப்ரேரணா ப்ரயுக்தாஶேஷ2 து3ர்மத ப4ஞ்சகேன அத ஏவ ப்ரப4ஞ்ஜன ஶப்3த3வாச்யேன

27. ப்ரதிதி3னம் ப்ரதிக்ஷணம் பு3த்3தி4ஷோத4கேன ஸர்வகர்ம கர்த்ரா ஸர்வகர்ம காரயித்ரா ஸர்வகர்ம ஸ்வாமினா ஸர்வகர்ம

ஸமர்ப்பகேண ஸர்வகர்ம ப2லபோ4க்த்ரா ஸர்வகர்ம ப2ல போ4ஜயித்ரா ஸர்வகர்ம ப்ரேரகேண ஸர்வ கர்மோத்3போ3த4கேன ஸர்வகர்ம ஶுத்3தி4ப்ரதே3ன ஸர்வகர்ம ஸித்3தி4ப்ரதே3ன ஸர்வகர்ம நிஷ்2டேன ஸர்வகர்ம ஸாக்ஷிணா ஸர்வகர்ம நிஷ்2ட2 ப4க3வத்3ரூபோபாஸகேன

28. அஶேஷ2ஜீவனி: ஸங்க்2ய அனாதி3காலீன த4ர்மாத4ர்ம த்3ரஷ்டு ஸ்வேச்சயா உத்3போ3த4கேன தத்3வாசக கபிலோபாஸகேன ரமாவ்யதிரிக்த பூர்வ ப்ரஸித்3த4 வ்யதிரிக்த அனந்தவேத3 ப்ரதிபாத்3ய முக்2யதம அனந்தகு3ண பரிபூர்ணேன ஸர்வ தோ3ஷதூ3ரேண த்வச்சித்தாபி4க்3ஞேன த்வச்சித்தானுஸாரி சித்தேன த்வத்பரமானுக்3ரஹ பாத்ரபூ4தேன மத்3யோக்3யதா பி4க்3ஞேன ஶ்ரீபா4ரதிரமணேன ருத்3ராத்3யஶேஷ தாத்விக தே3வதோபாஸித சரணேன மம ஸர்வாஸ்வவஸ்தாஸு சித்ரதா3 விசித்ரதா3 த்வது3பாஸகேன ஶ்ரீமுக்2யபிராணேன ப்ரேரித:ஸன்

29. த்வத் ஸம்ஸ்க்ருதி பூர்வகம் ஶயனாத் ஸமுத்தா2ய அத்3யதனம் ஸ்வவர்ணாஶ்ரமோசிதம் தே3ஶ காலாவஸ்தோ2சிதம் நித்ய நைமித்திக காம்யபே4தே3ன த்ரிவித4ம் த்வத்பூஜாத்மகம் கர்ம யதா2ஶக்தி யதா2ஞப்தி யதா2வைப4வம் கரிஷ்யே । மதா3ஞாகாரிபி4: வித்3யா ஸம்ப3ந்தி4பி4: தே3ஹ ஸம்ப4ந்தி4பி4ஸ்ச த்வதீ3யை: அஶேஷைர்ஜனை: தத் ஸர்வகர்ம க்ர்த்ருத்வ காரயித்ருத்வாத்யனு ஸந்தா4னபூர்வகம் காரயிஷ்யே ச ।।

**இதி ஶ்ரீராக4வேந்திராக்2ய யதினா க்ருதமஞ்சஸா ।**
**ப்ராத:ஸங்கல்ப க3த்யம் ஸ்யாத் ப்ரீத்யை மாத4வ மத்4வயோ: ।।**

***

## ப்ராத: ஸங்கல்ப கத்யம்
## தமிழ் அர்த்த விளக்கங்களுடன்

**1. ஓம் லௌகிக வைதி$^{3}$க பே$^{4}$த$^{3}$ பி$^{4}$ன்ன வர்ணாத்மக த்$^{4}$வன்யாத்மக அஶேஷ ஶப்$^{3}$தா$^{3}$ர்த்த$^{2}$ ருகா$^{3}$தி$^{3}$ ஸர்வேவேதா$^{3}$ர்த்த$^{2}$ விஷ்ணு மந்த்ரார்த்த$^{2}$ புருஷஸூக்தார்த்த$^{2}$ கா$^{3}$யத்ர்யர்த்த$^{2}$ வாஸுதே$^{3}$வ த்$^{3}$வாத$^{3}$ஶாக்ஷர மந்த்ராந்தர்க$^{3}$த ஆத்ய$^{3}$ அஷ்டாக்ஷரார்த்த$^{2}$ ஶ்ரீமன் நாராயணாஷ்டாக்ஷர மந்த்ரார்த்த$^{2}$ வாஸுதே$^{3}$வ த்$^{3}$வாத$^{3}$ஷாக்ஷர மந்த்ராந்தர்க$^{3}$த அந்த்ய சதுரக்ஷரார்த்த$^{2}$ வ்யாஹ்ருத்யர்த்த$^{2}$ மாத்ருகா மந்த்ரார்த்த$^{2}$ பிரணவோபாஸகானாம்**

ஓம் லௌகிக வைதிக பேத பின்ன - லௌகிக, வைதிக என்னும் பேத செயல்களிலிருந்து வேறுபட்டதும்; வர்ணாத்மக த்வன்யாத்மக - வர்ணரூபமும், த்வனி ரூபமும் ஆன; அஷேஷ ஷப்தார்த்த - அனைத்து ஷப்தார்த்தங்களையும்; ருகாதி ஸர்வேவேதார்த்த விஷ்ணு மந்த்ரார்த்த - ரிக்வேத முதலான வேதங்களின் அர்த்தபூதமான விஷ்ணு மந்த்ரார்த்தத்தையும்; புருஷஸூக்தார்த்த - புருஷ சூக்தத்தின் அர்த்தத்தையும்; காயத்ர்யர்த்த - காயத்ரி மந்திரத்தின் அர்த்தத்தையும்; வாஸுதேவ த்வாதஷாக்ஷர மந்த்ராந்தர்கத - 'ஓம் நமோ பகவதே வாஸுதேவாய' என்னும் 12 எழுத்துக்களைக் கொண்ட மந்திரத்தில் இருக்கும்; ஆத்ய அஷ்டாக்ஷரார்த்த - முதலாம் எட்டு எழுத்துக்களின் பிரதிபாத்யங்களும்; ஸ்ரீமன் நாராயணாஷ்டாக்ஷர மந்த்ரார்த்த - 'ஓம் நமோ நாராயணாய' என்னும் அஷ்டாக்ஷரங்கள் உள்ள சிறந்த மந்த்ர ப்ரதிபாத்யங்களும்; வாஸுதேவ த்வாதஷாக்ஷர மந்த்ராந்தர்கத - (அதே) த்வாதஷாக்ஷர (வாசுதேவ) மந்திரத்தின்; அந்த்ய சதுரக் ஷரார்த்த - கடைசி நான்கு எழுத்துக்களின் ப்ரதிபாத்யங்களும்; வ்யாஹ்ருத்யர்த்த - ருகாதி வ்யாஹ்ருதிகளால் ப்ரதிபாத்யங்களும்; மாத்ருகா மந்த்ரார்த்த - அகாராதி 50 வர்ண ப்ரதிபாத்யங்களும், ஆன பகவத் ரூபங்கள் அனைத்தும் ப்ரதிபாதனை செய்யும் (அர்த்தங்களை உள்ளடக்கிய) பிரணவோபாஸகானாம் - ப்ரணவ (ஓம்) மந்திரோபாஸனையில் முக்யாதிகாரிகளான ப்ரதான வாயுதேவரின்.

லௌகிக வைதிக பேதத்தினால் பல விதங்களாக இருக்கும் அனைத்து வர்ணங்களாலும், த்வனி ரூபத்தின் ஸர்வ ஷப்தங்களாலும் சொல்லப்படும் அனைத்து அர்த்தங்களையும்; ருகாதி

வேதார்த்தங்களையும், விஷ்ணு மந்த்ர, புருஷ ஸூக்த மற்றும் காயத்ரி மந்திரங்களின் அர்த்தங்களையும்; 'ஓம் நமோ பகவதே வாஸுதேவாய' என்னும் (12) த்வாதஷாக்ஷர மந்திரத்தின் முதலாம் அஷ்டாக்ஷரங்களாலும், 'ஓம் நமோ நாராயணாய' என்னும் அஷ்டாக்ஷர மந்திரத்தாலும், அதே த்வாதஷாக்ஷர மந்திரத்தின் கடைசி நான்கு எழுத்துகளாலும், அகாராதி 50 வர்ணங்களாலும் (மாத்ருகா) போற்றப்படும் அனைத்து பகவத் ரூபங்களையும் விளக்கும் அர்த்த விசேஷங்களையும் அடக்கியிருக்கும் ப்ரணவ மந்திரத்தின் (ஓம்காரத்தின்) உபாஸனையில் முக்யாதிகாரியானவர் ப்ரதான வாயுதேவர்.

சிறப்பு விளக்கம்:

* சம்ஸ்கிருதத்தின் அகாராதி 50 எழுத்துக்கள் நித்ய மற்றும் நிர்விகாரங்கள் (மாற்றம் இல்லாதவை) ஆகையால், சம்ஸ்கிருதம் அப்ராக்ருத மொழி எனப்படுகிறது. அதன் நீட்சியான மற்ற மொழிகளான கன்னட, இந்தி, தமிழ், மராத்தி, ஆங்கிலம், ஜெர்மன், ரஷ்யன் முதலான அனைத்து மொழிகளும் ப்ராக்ருதம் எனப்படுகின்றன. அனாதி நித்யமும், அபௌருஷேயமும் ஆன வேதங்களில் இருக்கும் வர்ணங்கள் அனைத்தும் வைதிக வர்ணங்கள் ஆகும். ப்ராக்ருத மொழிகளின் வர்ணங்கள் அனைத்தும் லௌகிக வர்ணங்கள் ஆகும்.

* வர்ணங்களின் சேர்க்கையால் சொற்களும், சொற்களின் சேர்க்கையால் வாக்கியங்களும் உருவாகின்றன. இத்தகைய வாக்கிய, சொற்களால் மட்டுமல்லாமல், அனைத்து எழுத்துக்களாலும்கூட முக்ய வாச்யன் (முக்கியமாக போற்றப்படுபவன்) ஸ்ரீஹரி. அதாவது, அவை அனைத்தும், ஸ்ரீஹரியின் ஸ்வரூபத்திலிருந்து வேறுபாடுகள் இல்லாத அவனது மகிமைகளையே வர்ணிக்கின்றன. ஸ்ரீஹரி, ஸர்வ ஷப்த வாச்யன் என்னும் ஆதாரம், பிரம்மஸூத்ர முதல் அத்தியாயத்தில், யுக்தியுடன், பிரமாணங்களுடன், விளக்கப்பட்டுள்ளது. சொற்கள், வர்ணாத்மக மற்றும் த்வன்யாத்மக என்று இரு விதம்.

மரம், செடிகள், மேகங்கள் என அனைத்திலிருந்தும் புறப்படும் சத்தங்களும் விஷ்ணு மகிமையை சொல்லும் அவனின் நாமங்களே என்று ஐதரேய உபநிஷத் சொல்கிறது. அனைத்து நாமங்களின்

வ்யாஹ்ருதியும் ஒன்றே. அதாவது, விஷ்ணுவின் நிர்தோஷத்வ, குணபரிபூர்ணத்வத்தை நிரூபிக்கும் செயல்களே அவை ஆகும். ப்ருஹத் ஸம்ஹிதை என்னும் கிரந்தத்தில் த்வன்யாத்மக சொற்களை ஸ்ரீவிஷ்ணுவிற்கு பொருத்திப் பார்க்கும் விதம் விளக்கப்பட்டுள்ளது. கடலிலிருந்து புறப்படும் ஹுங்காரம், விஷ்ணுவின் ஸர்வாதிக்ரமண சக்தியை விளக்குகிறது. மேகங்களில் இருக்கும் வாயு, எப்போதும் 'ஓம்' என்று த்வனியைக் கொடுக்கிறது. 'ஓம்காரம் ஸர்வாதிக சிறப்பினை விளக்குகிறது'. இதிலிருந்து (மேக நாதத்திலிருந்து) விஷ்ணுவே ஸர்வோத்தமன் என்று மேகம் கோஷிக்கிறது என்று அறிய வேண்டும்.

மந்த்ர, அனுதாத்த, ஸ்வரித மற்றும் உதாத்த என்பவை ஸ்வர-விஸேஷங்கள். இவை, முறையே நீசோச்ச ஸ்தாயிகள் மற்றும் நாக்கின் கீழ், மூல, மத்ய, மேல் பாகங்களிலிருந்து உச்சரிக்கப்படுபவை. அனுதாத்த ரூபத்தின் பேரிநாதம், ஸர்வஷக்தனான விஷ்ணுவின் கருணையை விளக்குகிறது. ஸ்வரித ரூபத்தின் கண்டா நாதம், முதலான சத்தங்கள், மற்ற அனைத்தும், விஷ்ணுவை விட நீசம் என்று விளக்குகிறது. உதாத்த ஸ்வரங்கள் விஷ்ணுவின் நித்யோத்தமத்வத்தை நிரூபிக்கின்றன. மந்த்ர ஸ்வரம், விஷ்ணுவின் அசலமான ஒரே மாதிரியான நிலையை வர்ணிக்கிறது. தயிர் கடையும் ஓசை, மரத்திலிருந்து வரும் சத்தம் ஆகியவை விஷ்ணுவின் 'யாருக்கும் பயப்படாத' குணத்தை விளக்குகின்றன.

பற்பல ஷாகைகளைக் கொண்டுள்ள ருக், யஜுஸ், ஸாம மற்றும் அதர்வண என்னும் நான்கு வேதங்களிலும், விஷ்ணு மந்த்ர, புருஷ ஸூக்த, மற்றும் காயத்ரி மந்திரங்களிலும் சொல்லப்படும் விஷ்ணு குணங்கள் அனைத்தையும், ப்ரணவ மந்த்ரம் (ஓம்காரம்) போற்றுகிறது (விளக்குகிறது). ஓம்காரம், ஸர்வவாகாத்மக, ஸர்வ ஷப்தார்த்தங்க்ளை அடக்கிக் கொண்டிருக்கிறது. அனைத்து வேதங்களாலும் பிரம்மன், விஷ்ணுவை துதித்து, அவனுடைய அருளால், தேக வலிமையைப் பெற்று, அந்த விஷ்ணுவை ஸ்வதேஹத்தில் தரித்தான். ஆகையால், வேத பிரதிபாத்யனான விஷ்ணு, 'ஸம்ஹிதா' என்னும் பெயர் கொண்டவன் ஆனான்.

விஷ்ணு என்னும் பெயரில் உள்ள 'ண' காரம், பூர்ண வலிமையையும், 'ஷ2' காரம், தேஷ கால குணங்களால் வ்யாப்தியையும், அனைத்து

ஸம்ஹிதைகளும் 'ண' கார, 'ஷ2'காரார்த்தம் கொண்டவை என்பதையும், எந்தவொரு இரு எழுத்துக்களின் கூட்டினால் இந்த அர்த்தங்களே முக்கியமாக வருகின்றன என்பதையும், 'வி' காரத்தினால் விஷ்ணுவின் சிறப்பினையும், கடைசியில் இருக்கும் 'உ' காரத்தினால் எப்போதும் இந்த ஸ்வபாவத்தைக் கொண்டவன் என்றும் சொல்கின்றன என்பதையும் அறிபவனே, விஷ்ணுஞானி என்று ஐதரேய பாஷ்யத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. விஷ்ணு மந்த்ரம், அஷ்டமஹா மந்திரங்களில் ஒன்றாகும்.

அனைத்து வேதார்த்த ரூபமான விஷ்ணு மந்திரத்தினால் போற்றப்படும் அனைத்து அர்த்தங்களையும் ஓம்காரம் தன்னுள் அடக்கியிருக்கிறது. பூ: புவ: ஸ்வ: என்பது ஓம்காரத்தின் வ்யாக்யானமாக இருந்து, வ்யாஹ்ருதி என்று அழைக்கப்படுகிறது. இந்த வ்யாஹ்ருதிகளின் வ்யாக்யானமே 'ஓம் தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி, தியோ யோ ந: ப்ரசோதயாத்' என்னும் காயத்ரி மந்திரத்தின் மூன்று பாதங்கள் ஆகும். காயத்ரி அர்த்தத்தின் விவரணையே புருஷ ஸூக்தம். புருஷ ஸூக்தத்தின் விளக்கமே அனைத்து வேதங்கள். இப்படியான முக்கியத்துவம் உள்ள புருஷ ஸூக்தம், அஷ்ட மஹா மந்திரங்களில் ஒன்றாக இருக்கிறது. அனந்த மஹிமனான ஸ்ரீஹரியின் பல்வேறு மகிமைகளை வேதங்களின் ஒவ்வொரு பாகமும் வர்ணித்து, அந்த குணத்யானத்தின் உபாஸனா கிரமத்தை (வித்யையை) நிரூபிக்கின்றன. உபாஸனாதிகாரிகளான ஜீவர்கள் வெவ்வேறு யோக்யதையைக் கொண்டவர்கள். அனைவரும் ஸ்ரீஹரியின் அனைத்து குணங்களையோ, ஒன்றிரண்டு குணங்களையோ உபாசனை செய்வதில்லை. முக்தி யோக்ய ஜீவர்களில் ஏககுணோபாஸகர்களும் இருக்கின்றனர். இவர்கள் ஆத்மா (ஸ்வாமி) என்னும் ஒரே குணவிசிஷ்ட சாட்சாத்காரத்தை பெறுகின்றனர். மனுஷ்யோத்தமர்கள் 'ஓம் ஆனந்தாதய: ப்ரதானஸ்ய ஓம்' என்னும் ஸூத்ரத்தில் ஸத், சித், ஆனந்த, ஆத்மா என்னும் நான்கு குணங்கள் உள்ளவன் என்று பகவந்தனை உபாஸனை செய்வதற்கு தகுதி கொண்டவர்கள் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

மனுஷ்யோத்தமர்களைவிட உத்தமரான ரிஷி, கந்தர்வ, தேவாதிகள் ஆகியோர் அவரவர்களின் யோக்யதைக்கேற்ப பல குணங்களை

உபாஸிக்கின்றனர். பிரம்ம வாயுகள் மட்டும் (இந்த பதவிக்கு தகுதி பெற்ற ருஜு ஜீவர்கள் மட்டும்) அனைத்து குணங்களையும் உபாஸனை செய்கின்றனர். எந்த அதிகாரி எவ்வளவு குணங்களை சிந்தித்து தியானித்தாலும், அவருடைய ஸ்வரூப யோக்யதைக்கேற்பமான ஸாக்ஷாத்காரத்திற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு பகவத் குணங்கள் மட்டும் தெளிவாக, ஒரு முறை மட்டும் தியானத்தில் தெரிகிறது. குணப்ரத்யயத்துடனேயே (குண ஞான) பகவந்தனின் ஸாக்ஷாத்காரம் ஆகிறது.

பகவத் குணங்கள் ஒவ்வொன்றும் பரிபூர்ணமும், லோக விலக்ஷணமென்றும் சிந்திக்க வேண்டும். பகவந்தனின் ஞானானந்தாதி குணங்கள், நம் அனுபவத்தில் இருக்கும் எந்த (யாரின்) ஞானானந்தாதிகளைப் போல அல்ல. அவை விஜாதீய குணங்கள். 'ஆனந்தோ நேத்ருஷானந்த:' ஆகிய ஸ்ருதிகளே இதற்கான பிரமாணமாக இருக்கிறது.

வேதோக்தமான எந்த வித்யையால் எந்த ஷாகையில் சொல்லப்பட்ட எவ்வளவு குணங்களின் சிறப்புகளை அறிவதற்கு தான் தகுதி உள்ளவன் என்பதை நிச்சயம் செய்துகொள்ள வேண்டும். பிறகு, பகவத் உபாஸனையில் ஈடுபட வேண்டும். ஸ்வரூப ஞானமில்லாத, ஸாதனாவஸ்தையில் இருக்கும் யாருக்கும் இது ஸாத்தியம் இல்லை. ஆகையால், தத்தம் ஷாகைக்கேற்ப குணஞானம் போதாது என்றும், அனைவருக்கும் அனைத்து வேதார்த்த ஞானம் அவசியம் என்றும் 'ஓம் ஸர்வவேதாந்த ப்ரத்யயம் சோதனாத்ய விசேஷாத் ஓம்' என்னும் அதிகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பஹுகுணோபாஸனையில் அதிகாரம் இல்லாதவர்களுக்கு ஸர்வ வேதார்த்த ஞானம் வீண் என்னும் சந்தேகம் பலருக்கு இருக்கிறது. இங்கு கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது.

உபாஸனாதிகாரிகளுக்கும் ஞானாதிகாரிகளுக்கும் இருக்கும் வித்தியாசத்தை கவனிக்க வேண்டும். யார், எந்த வேத வித்யையை வணங்கி, அங்கு சொல்லப்பட்டுள்ள குணங்களால் உபாசனை செய்து, அந்த குண ப்ரத்யய (ஞான) ஸஹிதமான பகவத் ஸாக்ஷாத்காரத்தை அடைகிறாரோ, அவன் அந்த வித்யைக்கு உபாஸனாதிகாரி ஆகிறான். மற்றவர்கள் அந்த வித்யையில், ப்ரதிபாத்யமான பகவத் குணங்களை

அறிவதில் மட்டும் அதிகாரிகள் ஆகின்றனர். இவர்களையே ஞானாதிகாரிகள் என்பார்கள்.

அனைவரும் ஸர்வகுணோப ஸம்ஹாரத்தினால் (ஒரேயொரு முறை சிந்தித்து) த்யானிப்பதற்கு தகுதி பெற்றவர் அல்லர். ஸாக்ஷாத்காரத்தில் கிடைத்த குண ஞானத்தினாலும் பிரயோஜனம் உண்டு. தம் தகுதிக்கேற்பவான ஸாக்ஷாத்காரத்திற்கு தேவையான அளவு குணங்கள் தெளிவாக ஒரு முறை தெரிவதற்கு மற்றும் யோக்யத்திற்கேற்ப பூர்ணத்வ லோக விலக்ஷணங்க்ளின் பாவனைக்கு, மற்ற குணங்களின் ஞானம் உதவி செய்கிறது.. ஓம்காரத்தில், விஷ்ணு மந்திரத்தில் அல்லது ஆத்ம முதலான ஒவ்வொரு சொற்களில், ஸர்வவேத ப்ரதிபாத்ய குணங்கள் அடங்கியிருந்தாலும், அதனை அறிந்து உபாஸனை செய்து, ஸர்வகுண ப்ரத்யயத்துடன் ஸாக்ஷாத்காரத்தை அடையும் சாமர்த்தியம் உள்ளவர்கள் பிரம்ம வாயுகள் மட்டுமே.

அஷக்தருக்காகவே, ஸ்ரீபாதராயணர் வேதங்களை ஷாகைகளாக பிரித்து உபதேசம் செய்திருக்கிறார். ஸ்வஷக்தியின் ஞானம் இல்லாத ஸாதகர்கள், தமக்கு ஸாத்தியமான அளவு குணங்களின் ஞானத்தை அடைந்து, ஒரு முறை குணங்களை சிந்தித்து, த்யானிப்பதற்கு முயல வேண்டும். சம்பாதித்த ஞானம் அனைத்தும் சம்ஸ்கார ரூபத்தினால் மனதில் அடங்கியிருந்து, தன் ப்ரபாவத்தை பரப்பிக் கொண்டிருக்கிறது. ஜன்மாந்தர சம்ஸ்காரங்களை தாங்கி, பற்பல தேகங்களால் சாதனையை தொடர்ந்து செய்யும் ஜீவர்களுக்கு ஸர்வ வேதார்த்த ஞானத்திற்காக முயற்சி செய்வது சாத்தியம் இல்லை என்று இல்லை. அந்த சிறப்பு ஞானத்தின் சிந்தனை, அனைத்து (எல்லா) பிறவியிலும் இருக்க வேண்டும் என்னும் நியமமும் இல்லை.

அனைத்து வேதங்களின் ஸாரம் எனப்படும் புருஷ ஸூக்தம் அனைத்து வித்யைகளைவிட அதிகமாக, விஷ்ணு குணங்களை சொல்கிறது. அனைத்து குணங்களையும் அல்ல. 'ஸர்வத: பௌருஷேஸூக்தே குணா விஷ்ணோருதீரிதா: | தத்ராபி நைவ ஸர்வேபி தஸ்மாத்கார்யோப ஸம்ஹ்ருதி: '. என்று பிரம்ம தர்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

க்ருத்ஸோsதிகந்தவ்ய: ஸரஹஸ்யோ த்விஜன்மனா' , 'ஸர்வான் வேதான் ஸேதிஹாஸான் நபுராணான் ஸயுக்திகான் | ஸபஞ்சராத்ரான் விக்ஞாய விஷ்ணுர்ஞேயோ ந ஜன்யதா' . ஆகிய ஸ்ருதி ஸ்ம்ருதிகள் இந்த பிரமேயத்தை நிர்ணயித்து நிரூபிக்கின்றன. இவ்வாறு இருப்பதால், புருஷ ஸூக்தத்தினால் அனைவரும் அனைத்து வேதார்த்தங்களையும் அறிய முடியாது. அங்கு அனைத்தையும் சொல்லவில்லை என்று சொல்லும், மேலே உதாரணம் கொடுக்கப்பட்டுள்ள பிரம்மதர்க்க வாக்கியத்தின் அர்த்தத்தை ஸர்வாதிகாரிகள் ஏற்கும் ரீதியில் சொல்லப்படவில்லை என்று அறிய வேண்டும். புருஷ ஸூக்தார்த்தத்தையும் அறிந்து, உபாஸிக்கும் உபாஸகர்களில் ஸர்வ வேதார்த்தங்களை (சமஸ்த வேதோக்த பகவத் புராணங்களை) சிந்திக்கும் ஸ்ரீ வாயுதேவரே மஹாதிகாரிகள் என்று அறிய வேண்டும்.

'ஓம்' காரம் அகார, உகார, மகார, நாத, பிந்து, கோஷ, ஷாந்த, அதிஷாந்த என்று அழைக்கப்படும் எட்டு அக்ஷரங்களைக் கொண்டது. இந்த எட்டு எழுத்துக்கள் முறையே, விஷ்வ, தைஜஸ, ப்ராக்ஞ, துரீய (ஜாக்ருத், ஸ்வப்ன, தூக்க ஸமாதி மற்றும் முக்தி) என்னும் நான்கு நிலைகளின் நியாமக ரூபங்கள் மற்றும் ஆத்ம, அந்தராத்ம, பரமாத்ம, ஞானாத்ம என்னும் எட்டு ரூபங்களை போற்றுகிறது. இந்த எட்டு ரூபங்களால் ஸ்ரீஹரியின் 50 ரூபங்கள் வெளிப்படுகின்றன. இவற்றை அகாராதி 50 எழுத்துக்கள் போற்றுகின்றன. க்ஷகாரம் ஸ்ரீ நரசிம்ம ரூபத்தை போற்றுகின்றது.

ஓம்காரத்தில் இருக்கும் 8 எழுத்துக்களால் வெளிப்படும் 50 பகவத் ரூபங்கள் எவை என்றால்,

* அகாரத்திலிருந்து அஜ, ஆனந்த, இந்த்ர, ஈஷ, உக்ர, ஊர்ஜ, ருதம்பர, ரூக, ல்ருஷ, ல்ரூஜி, ஏகாத்ம, ஐர, ஓஜொப்ருத், ஔரஸ, அந்த, அர்த்தகர்ப்ப;
* உகாரத்திலிருந்து கபில, கபதி, கருடாஸன, கர்ம, ஞஸார;
* மகாரத்திலிருந்து சார்வங்க, சந்தோகம்ய, ஜனார்த்தன, ஜாடித, ஞம;
* நாதத்திலிருந்து டங்கி, டலக, டரக, டரீ, ணாத்ம;
* பிந்துவிலிருந்து தார, தப, தண்டி, தன்வி, நம்ய;
* கோஷத்திலிருந்து பர, பலி, பலி, பக, மனு;
* ஷாந்தத்திலிருந்து யக்ஞ, ராம, லக்ஷ்மிபதி, வர;

* அதிஷாந்தத்திலிருந்து ஷாந்தஸம்வித், ஷட்குண, ஸாராத்ம, ஹம்ஸ, ளாளுக
என்னும் 50 ரூபங்கள் வெளிப்படுகின்றன.

பிரணவத்தின் 8 எழுத்துக்களால் 'ஓம் நமோ நாராயணாய' என்னும் அஷ்டாக்ஷர மந்த்ரத்தின் எட்டு எழுத்துக்கள் வெளிப்பட்டன. அதாவது, பிரணவத்தின் எட்டு எழுத்துக்களின் அர்த்தத்தை நாராயண மந்திரத்தின் எட்டு எழுத்துக்கள் முறையே சொல்கின்றன. பிரணவத்தின் முதலாம் நான்கு எழுத்துக்களால், அதாவது - அ, உ, ம, நாத என்னும் நான்கினால்; பூ;, புவ: ஸ்வ: பூர்புவஸ்வ: என்னும் நான்கு வ்யாஹ்ருதிகள் வெளிப்பட்டன. அதாவது, அவற்றின் அர்த்தத்தை இந்த வ்யாஹ்ருதிகள் சொல்கின்றன. இந்த நான்கு வ்யாஹ்ருதிகளிலிருந்து, அனிருத்த, பிரத்யும்ன, ஸங்கர்ஷண, வாஸுதேவ ரூபங்கள் போற்றப்படுகின்றன. இந்த நான்கு ரூபங்களே 'ஓம் நமோ பகவதே வாஸுதேவாய' என்னும் வாஸுதேவ த்வாதஷாக்ஷர மந்த்ரத்தின் நான்கு பதங்களால் (ஓம் - வாஸுதேவ; நம: ஸங்கர்ஷண; பகவதே - ப்ரத்யும்ன; வாஸுதேவாய - அனிருத்த) போற்றப்படுகின்றன.

நாராயண அஷ்டாக்ஷர மந்திரத்தின் எட்டு எழுத்துக்களால் மற்றும் பூ- முதலான நான்கு வ்யாஹ்ருதிகளால், வாஸுதேவ த்வாதஷாக்ஷர மந்திரத்தின் 12 எழுத்துக்கள் வெளிப்பட்டன. இந்த 12 எழுத்துக்கள், முறையே கேஷவாதி 12 பகவத் ரூபங்களை (கேஷவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுஸூதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷிகேஷ, பத்மனாப, தாமோதர) போற்றுகின்றன. நாராயண மந்திரத்தின் எட்டு எழுத்துக்களாலும், நான்கு முறை உச்சரிக்கப்படும் நான்கு வ்யாஹ்ருதிகளாலும் (அதாவது 16 வ்யாஹ்ருதிகளாலும்), என மொத்தம் 24 எழுத்துக்களால் வேத மாத்ரு எனப்படும் 24 எழுத்துக்களைக் கொண்ட காயத்ரி மந்திரம் வெளிப்பட்டது. கேஷவாதி 12 மற்றும் சங்கர்ஷணாதி 12 (சங்கர்ஷண, வாஸுதேவ, பிரத்யும்ன, அனிருத்த, புருஷோத்தம, அதோக்ஷஜ, நாரஸிம்ம, அச்யுத, ஜனார்த்தன, உபேந்த்ர, ஹரி, கிருஷ்ண) மொத்தம் கேஷவாதி 24 பகவத் மூர்த்திகள் காயத்ரியின் 24 எழுத்துக்களால் போற்றப்படுகின்றன.

புருஷ ஸூக்தத்தின் மூன்று வர்க்கங்கள் காயத்ரியின் மூன்று பாதங்களின் அர்த்தங்களை விளக்குகிறது. புருஷ ஸூக்தத்தின் வ்யாக்யானங்களே அனைத்து வேதங்கள் ஆகும். இவ்வாறு இருப்பதால், வாஸுதேவ த்வாதஷாக்ஷரத்தின் முதலாம் 8 எழுத்துக்களின் ப்ரதிபாத்ய ரூபங்களான கேஷவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுஸூதன, த்ரிவிக்ரம, வாமன என்னும் ரூபங்கள் என்று அறிய வேண்டும். அதே த்வாதஷாக்ஷர மந்திரத்தின் கடைசி நான்கு எழுத்துக்களின் ப்ரதிபாத்ய ரூபங்கள் - ஸ்ரீதர, ஹ்ருஷிகேஷ, பத்மனாப, தாமோதர என்று அறிய வேண்டும். நாராயண மந்திரத்தின் எட்டு எழுத்துக்கள், பிரணவத்தின் எட்டு எழுத்துக்களால் போற்றப்படும் ரூபங்களையே சொல்கிறது (விஷ்வ, தைஜஸ ஆகியவை).

மாத்ருகா மந்த்ரார்த்தபூதமான பகவத் ரூபங்கள் அகாராதி அக்ஷர ப்ரதிபாத்ய அஜ ஆனந்தாதி ரூபங்கள் ஆகும். நான்கு வ்யாஹ்ருதிகளால் அனிருத்தாதி ரூபங்கள் போற்றப்படுகின்றன. இந்த அனைத்து பகவத் மூர்த்திகளின் ப்ரதிபாதகமானது - பிரணவ. இந்த விவரங்களை தந்த்ரஸாரத்திலிருந்து அறியலாம். இவ்வாறு அறிந்து, அந்த அனைத்து ரூபங்களையும் சாக்ஷாத்காரம் பெற்றுக்கொண்டு, உபாசிக்கும் மஹாதிகாரிகள், ஸ்ரீவாயுதேவரே ஆவார்.

**2. பா1பா1வித்3த4 தை3த்யபூகா3வித்3த4 ஸ்ரீவிஷ்ணு ப4க்த்யாத்யனந்த1 கு3ணபரிபூர்ண ரமாவ்யதிரிக்த பூர்வப்ரஸித்3த4 வ்யதிரிக்த அனந்தவேத3 ப்ரதிபாத்3ய முக்2யதம அனந்தஜீவ நியாமக அனந்த ரூப ப4க3வத் கார்யஸாத4க பரமத3யாளு க்ஷமாஸமுத்4ர ப4க்தவத்ஸல ப4க்தாபராத4 ஸஹிஷ்ணு ஸ்ரீமுக்2ய ப்ராணாவதார பூ4தானாம்**

பாபாவித்த - பாப சம்பந்தமே இல்லையென்றாலும்; தைத்யபூகாவித்த - அசுர சமூகத்தினால் ஸ்பர்சம் ஆகாதவர்களும்; ஸ்ரீவிஷ்ணு பக்த்யாத்யனந்த குணபரிபூர்ண - விஷ்ணு பக்தியே முதலான அஸங்க்ய ஸத்குண பூர்ணரும்; ரமாவ்யதிரிக்த பூர்வப்ரஸித்த வ்யதிரிக்த - ஸ்ரீமஹாலட்சுமியைத் தவிர மற்றும் அனாதி ப்ரஸித்தனை (நாராயணனை) தவிர; அனந்தவேத ப்ரதிபாத்ய

முக்யதம - அனந்த வேதங்களில் ப்ரதிபாத்யரான தேவதைகளின் நடுவில் முக்கியமானவரும் (அனைவரைவிட சிறந்தவரும்); அனந்தஜீவ நியாமக - நித்யரான அஸங்க்ய ஜீவர்களை ஸர்வ விதத்தினால் நியமனம் செய்பவரும்; அனந்த ரூப - அனந்தரூபங்களைக் கொண்டவரும்; பகவத் கார்யஸாதக - ஸ்ரீஹரியின் பகவத் ஸம்பந்தமான சிறந்த காரிய ஸாதகரும்; பரமதயாளு - கருணைக் கடலும்; க்ஷமாஸமுத்ர - அபாரமான க்ஷமா குணத்தைக் கொண்டவரும்; பக்தவத்ஸல - விஷ்ணு பக்தர்களில் நிர்வ்யாஜ்ய அன்பு கொண்டவரும்; பக்தாபராத ஸஹிஷ்ணு - பக்தர்களின் அபராதங்களை சகித்துக் கொள்பவரும்; ஸ்ரீமுக்ய ப்ராணாவதார பூதானாம் - ஸ்ரீமுக்ய ப்ராணதேவனின் அவதாரமும் (ஆன ஸ்ரீமதானந்த தீர்த்த பகவத்பாதரின்)..

ஸ்ரீமுக்யபிராணன் பாபங்களின் லேபம் இல்லாதவன்; தைத்யர்களால் தொடக்கூட முடியாதவன்; விஷ்ணு பக்த்யாதி அனைத்து ஸத்குண பரிபூர்ணன். துக்க, அஞ்ஞானாதி தோஷங்களின் ஸ்பர்ஷம் எந்த காலத்திற்கும் இல்லாதவன்; அனைத்து வேதங்கள், பரம முக்ய வ்ருத்தியினால், ஸ்ரீஹரியையே போற்றுகின்றன. அவனின் மகிமைகளையே (ஸத்குணங்களையே) வர்ணிக்கின்றன. அந்த வேதங்களே நாராயணனுக்குப் பிறகு, முக்ய பிரவ்ருத்தியினால் ரமாதேவியையும் போற்றுகின்றன. இந்த இருவரைத் தவிர, மற்றும் நாராயணனைக் குறிக்கும் சில சிறப்பான சொற்களைத் தவிர, அனைத்து வேதங்களால் போற்றப்படுபவன், ஸ்ரீமுக்யபிராணன்.

சில வேதபாகங்களால் மட்டும் (ஸூக்தாதிகளில்) போற்றப்படுபவர்களான அக்னி முதலான பற்பல தேவதைகளில் இவன் மிகவும் முக்கியமானவன். வேத ப்ரதிபாத்ய தேவதைகளுடனான அனந்த ஜீவர்களுக்கும் நியாமகன். அவன் செய்து, செய்ய வைக்கும் எந்த செயல்களையும் எந்த ஜீவனும் என்றும் செய்யமுடியாது. அனந்த ஜீவர்களையும் நியமிக்கும் அனந்த ரூபங்களைக் கொண்டவன். சேதனாசேதனாத்மக ஜகத் ஸம்பந்தமான ஸ்ருஷ்டி ஸ்திதி லய நியமன ஞான அஞ்ஞான பந்த மோக்ஷ என்னும் ஸ்ரீஹரியின் அனைத்து காரியங்களில் பங்கு பெற்று, ஸ்ரீஹரியை வணங்கும் முக்கிய மந்திரி இவனே. இப்படியான அபார மகிமைகளைக் கொண்டவனும், அனைத்து ஜீவர்களையும் அனைத்து

விதங்களிலும் நியமனம் செய்யும், எதிரிகளே இல்லாத அதிகாரியும் ஆன, இவன், பரம தயாளு, க்ஷமா ஸமுத்ர, நிர்வ்யாஜ்ய பக்தப்ரேமி, பக்தர்களின் தவறுகளை மன்னித்து, அவர்களை நல்வழியில் வைத்து, அவர்களை மேம்படுத்தும் மகானுபாவன். இவனின் மூன்றாம் அவதாரரான ரூபமே ஸ்ரீமதானந்ததீர்த்த பகவத்பாதர்.

ஸ்ரீஹரியின் ஆணை ரூபமான ஸ்ருதி ஸ்ம்ருதிகளுக்கு எதிராக நடப்பது - அதாவது, அங்கு சொல்லப்பட்டுள்ள விதிகளை மீறுவது மற்றும் விதிமீறல்களை செய்வது, பாவம் எனப்படுகிறது. காலக்கிரமத்தில் (முற்பிறவிகளில் கூட) துக்கத்திற்கு காரணமாகும், செயல்களால் வருபவையே பாவம். பகவத் அபரோக்ஷத்தினால் (ஸாக்ஷாத் தரிசனத்தால்) ப்ராரப்த கர்மத்தைத் தவிர, அனைத்து செயல்களும் தீர்கின்றன. கர்மங்கள் ஸஞ்சித, ப்ராரப்த, ஆகாமி என்று மூன்று விதங்கள். இதுவரை செய்யப்பட்ட கர்மங்கள் (முற்பிறவிகளில்கூட) ஸஞ்சித கர்மங்கள் ஆகும். இவை ஒவ்வொரு ஜீவனின் பின்னும், மூட்டை மூட்டையாக இருக்கின்றன.

ஸ்ரீஹரியின் விருப்பப்படி, அவற்றின் பலன்களை தொடர்ந்து அனுபவிக்க வேண்டும். இவற்றில் எந்த கர்மத்தின் பலன்களை (கர்மத்தினால் வந்த பலன்களை) அனுபவிக்கத் துவங்கியிருக்கிறோமோ, அவை 'ப்ராரப்த' . அடுத்து செய்யப்போகும் கர்மங்கள் 'ஆகாமி' . அபரோக்ஷ ஞான என்னும் அக்னி, ப்ராரப்த கர்மத்தைத் தவிர மற்ற அனைத்து பாவங்களையும் எரிக்கிறது. அபரோக்ஷ ஞான காலத்தில், பல போகத்திற்கு துவங்கியிருக்கும் கர்மங்களை, அது முழுமையாகும் வரை, அனுபவிக்க வேண்டும். அடுத்து செய்யப்போகும் கர்மங்கள் (ஆகாமி கர்மங்கள்) சேர்வதில்லை. அதாவது, சுக துக்கத்தை கொடுப்பதில்லை. ஸஞ்சித பாவங்கள் அனைத்தும், ஞான என்னும் அக்னியினால் எரிகிறது. ஸஞ்சித புண்யங்கள் என்ன ஆகிறது என்பதை அறிய வேண்டுமல்லவா?

இங்கு முன்னர் கூறிய, த்ரிவித கர்மங்களும், புண்ய பாபங்கள் என்னும் பேதத்தினால் இரு விதங்களாக இருக்கின்றன. காலகிரமத்தில் ஸுகத்திற்கு காரணமாகும் அதிருஷ்டம், புண்ய என்றும், தர்ம என்றும் அழைக்கப்படுகிறது. ஸஞ்சித புண்யம் இரு விதம். 'அனபீஷ்ட மனாரப்தம் புண்யமப்யஸ்ய நஷ்யதி' என்று

சொல்லப்பட்டிருப்பதைப் போல, பலன்களைக் கொடுக்கத் துவங்காதிருக்கும் ஸஞ்சித புண்யம், இஷ்ட, அனிஷ்ட பேதத்தினால் இரு விதங்களாக இருக்கின்றன. அனிஷ்ட புண்ணியம்கூட ஞானத்தினால் அழிகின்றன. இஷ்ட புண்ய பாகத்தை ஸ்வேச்சானுஸாரமாக, ஸ்வபக்தர்களுக்கு தானம் செய்யலாம் என்று சொல்லப்படுகிறது.

தத்வாபிமானி தேவதைகள் அனைவரும் அனாதி காலத்திலிருந்து அபரோக்ஷ ஞானிகளே. 'நைவ தேவபதம் ப்ராப்த பிரம்மதர்ஷன வர்ஜிதா:' அதிகார ஸ்தானங்களில் இருக்கும் எந்த தேவதைகளும் அபரோக்ஷம் இல்லாமல் இல்லை. இவர்களுக்கு ஸாதனை என்பது, தரிசனம் ஆகும் பகவத் ரூபங்களில் அதிகம் ஸ்புடத்வத்தையும், அதிக எண்ணிக்கையின் பகவத் ரூபங்களின் தரிசனத்தையும், கிடைக்கச் செய்யும் பலன் கொண்டது. இந்த தாத்விக தேவதைகளுக்கும் நியாமகரான ஸ்ரீவாயுதேவர், நித்யாபரோக்ஷிகள் என்று சொல்லவும் வேண்டுமா?. தாத்விக தேவதைகளின் (ருஜுகணத்தின் பிரம்ம வாயுகளின் ஸமேதரான தாத்விக தேவதைகளின்) மகிமைகளை ஹரிகதாம்ருதஸாரத்தில் ஸ்ரீஜகன்னாததாசர் இவ்வாறு விளக்கியிருக்கிறார்.

ஸாதனாத் பூர்வதலி ஈ ரு
ஜ்வாதி தாத்விகரெனிப சுரகண
நாதி சாமான்யா பரோக்ஷிகளெந்து கரெசுவரு |
சாதனோத்தர ஸ்வஸ்வபிம்ப உ
பாதி ரஹிதாதித்ய நந்ததி
சாதரதி நோடுவரு அதிகாரானுசாரதலி ||13

ருஜுகணம் என்று அழைக்கப்படும் ஒரு குழு இருக்கிறது. அதில் அனந்த ஜீவர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் அனாதி காலத்திலிருந்து அபரோக்ஷிகளே. ஆகையால், இவர்களுக்கு இருப்பது ப்ராரப்த கர்மம் மட்டுமே. இவர்கள் அனைவரின் ப்ராரப்தமும் வெறும் சுக ப்ராரப்தமே. துக்க, அஞ்ஞானாதிகளின் ஸ்பர்ஷமே இல்லாத இவர்களுக்கு பாப கர்மங்கள் எங்கிருந்து வரும்? இவர்களுடைய ப்ராரப்த போகம், 100 பிரம்ம கல்பங்களின் பிந்தைய காலத்திலிருந்து துவங்கியிருக்கிறது. (43,20,000 மனித ஆண்டுகளின் காலம் என்பது, பிரம்மனின் 1 பகல். அதுபோலவே இரவு. இத்தகைய

360 நாட்களுக்கு ஒரு ஆண்டு. 100 ஆண்டுகள் பிரம்மனின் ஆயுட்காலம். ஒரு பிரம்மனின் காலம், ஒரு பிரம்ம கல்பம் எனப்படுகிறது).

பிரம்ம வாயுகளின் ஸுக ப்ராரப்த போகம், ஸத்ய லோகாதிபத்ய போகத்தில் முடிகிறது. பிறகு, லிங்கதேகம் பங்கமாகி, முக்தர் ஆகின்றனர். ப்ராரப்த புண்ய போகத்தின் இந்த தீர்க்க காலத்தில், புண்ய நிமித்தமான, அவர்களின் ப்ரவ்ருத்திகள் அனைத்தும் ஸ்ரீஹரி ப்ரீத்யர்த்தமாகவே இருக்கிறது. மற்றும் அதனால், ஸ்வபக்தர்களின் அருளும் கிடைக்கிறது. மற்ற தாத்விக தேவதைகளின் ப்ராரப்தம், தாரதம்யத்திற்கேற்ப, கீழே இருப்பவர்களுக்கு, துக்கம் அதிகமாக சேர்ந்து கொண்டே போகிறது. மற்றும் குறைந்த காலத்தில் அதன் போகமும் முடிந்துவிடுகிறது.

** பாவங்களை செய்வதில், முக்தி யோக்ய ஜீவர்களுக்கு தைத்யரே காரணர் ஆவர். ஸ்வரூபத்தினால் சுத்தமானவர்களான இந்த ஜீவர்கள், ப்ராக்ருதேந்த்ரியங்களால் பாப கர்மங்களை ஏன் செய்ய வேண்டும் என்று ‘அத கேன ப்ரயுக்தேன பாபம் சரதி பூருஷ: | அனிச்சன்னபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித:’ (கீதை). அர்ஜுனன் கேள்வி கேட்கையில், ‘காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண ஸமுத்பவ:’ ஆகிய வாக்கியங்களால், ரஜோ குண நிமித்தங்களான காம, க்ரோதாதிகளின் இருப்பிடமான காலநேமி முதலான தைத்யர்கள் காரணர்கள் என்று ஸ்ரீகிருஷ்னன் பதில் அளிக்கிறான்.

ருஜு கணத்தவர்களைத் தவிர, மற்ற அனைத்து தேவதைகளில்கூட, அவர்களுடைய யோக்யதா தாரதம்யத்திற்கு ஏற்ப, அசுர ப்ரவேசம் உண்டு என்று உபநிஷத்கள் தெளிவாக நிரூபிக்கின்றன. சாந்தோக்ய, ப்ருஹதாரண்ய மற்றும் ஐதரேய ஆகிய உபநிஷத்களில், நித்யமுக்தரும் நிர்துஷ்ட குணபூர்ணரும் ஆன ரமா நாராயணர்களை தவிர, மற்ற அனைத்து தத்வாபிமானி தேவதைகளில் யார் சிறந்தவர்கள் என்பதை நிர்ணயிப்பதற்கு நடந்த சோதனைகளின் விவரம் இருக்கிறது. சூர்ய, சந்த்ர முதலான தேவதைகள் ஒவ்வொருவராக விராட் புருஷ தேகத்திலிருந்து வெளியே வர, கண், காது, ஆகிய இந்திரியங்களின் செயல்கள் நின்றன. ஆனால், அந்த தேகம் பிணமாக விழவில்லை. வாயுதேவர் வெளியே வந்த நொடியில், தேகம் கீழே விழுந்தது. சோதனை மேலும் தொடர்ந்தது. அனைத்து தேவதைகள் மறுபடி அந்த தேகத்தில் நுழைய, அந்த தேகம்

எழவில்லை. கடைசியாக வாயுதேவர் அதில் நுழைந்த உடனேயே, அந்த தேகம் எழுந்து நின்றது. அதுவரை, அவர்களால் எந்த செயல்களையும் செய்ய முடியவில்லை. இதிலிருந்து, அனைத்து இந்திரியங்களின் செயல்களையும் நடத்துபவர், வாயுதேவரே என்பது தெரிய வந்தது. அவரே, அனைத்து தத்வாபிமானிகளில் சிறந்தவர் என்று நிர்ணயம் செய்து, அனைவரும் அவரை, மந்திரிகள் அரசனுக்கு மரியாதை செலுத்துவதைப் போல நடத்தினர்.

ஸ்ரீவாயுதேவருக்கு 'ஆகணாஷ்ம ஸம' என்னும் பெயர் வந்ததைப் பற்றி சாந்தோக்யத்தில் இந்த கதை சொல்லப்பட்டிருக்கிறது. தேவ, அசுர யுத்தத்தில் தேவதைகள் தோற்றனர். 'உக்த' நாமக ஸ்ரீஹரியை உபாசனை செய்து, அவனின் விசேஷ அனுக்ரஹ பலத்தினால், அசுரர்களை வெல்ல நினைத்தனர். நாஸிக்ய வாயு, அக்னி, சூர்ய, சந்த்ர, ருத்ர, சேஷ, கருட ஆகிய தேவதைகளை முறையே, உக்தனின் உபாசனைக்கு ப்ரதிமையாக சிந்தித்தனர். இதனை அறிந்த அசுரர்கள், அவர்களின் உபாசனையை அழிக்க, அந்த ப்ரதிமைகளில் நுழைந்து, அதனை அபவித்ரம் ஆக்கியவாறு இருந்தனர்.

இவ்வாறு, அந்த ப்ரதிமையின் அபவித்ரத்தினால், உபாசனை தக்க பலன்களைக் கொடுக்கவில்லை. கடைசியில், ஸ்ரீவாயுதேவரை ப்ரதிமையாக வைத்துக்கொண்டு, உக்த உபாஸனையை செய்தனர். அசுரர்கள், அந்த பிரதிமைக்குள் நுழைய முயல, ஒரு பாறாங்கல்லில் களிமண் உருண்டையால் அடித்தால், அது எப்படி பொடிப்பொடி ஆகுமோ அதைப் போல, அவர்களே தோல்வி அடைந்தனர். அந்த பிரதிமையில் நுழைந்து, அதனை அபவித்ரம் ஆக்குவதற்கு அவர்களால் முடியவில்லை. அப்போது பிராணதேவருக்கு 'ஆகணாஷ்ம' என்ற பெயர் வந்தது. இந்த வேத பிரஸித்த நாமத்தின் மகிமை, இந்த வாக்கியத்தில் இருக்கும் 'தைத்யபோகாவித்த' என்னும் சொல்லால் விளக்கப்பட்டிருக்கிறது.

இந்த மகிமை, இன்னொரு ரகசிய பிரமேயத்தையும் குறிக்கிறது. அது என்னவெனில்: தேவதைகள், முக்யபிராணாந்தர்கத விஷ்ணுவின் உபாஸனையினாலேயே ஸித்தியை அடைவார்கள். ரிஷி ஆகியோர் சூர்யாந்தர்கத விஷ்ணுவின் உபாசனையை செய்தனர். மனிதர்கள், அக்னி அந்தர்கத விஷ்ணு உபாசனையினாலேயே ஸ்வகதியை பெறுகிறார்கள். இவ்வாறு கூறுவதாலேயே, இந்த த்ரிவித

அதிகாரிகளும் வாயு, சூர்ய, அக்னிகளில் பகவந்தனை உபாசிக்கக் கூடாது என்று அறியக்கூடாது. யார், எந்த அதிஷ்டானத்தில் அதிகமாக உபாசனை செய்து, ஸ்வ கதியை பெறுகிறார்களோ, அவர்கள் அந்த உபாஸகர் என்று அழைக்கப்படுகின்றனர். இந்த அம்சங்கள் ஐதரேய பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

** பிரம்ம வாயுகள் ஸ்வரூபத்தினால் சமமானவர்கள். ஆனால், பிரம்மனுக்கு பதவி நிமித்தமாக (ஸத்யலோகாதிபதி ஆனதால்) சிறிது அதிகமானவர். இருவரும், ஆகமங்களில், இரு பெயர்களாலும் மாறி அழைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களின் ஞானம் வேதாதி ஆகமங்களிலிருந்து வந்ததல்ல. சிந்திப்பதால் மட்டுமே இவர்கள், உலகில் இருக்கும் அனைத்து பொருட்களின் த்ரிகால விஷயக அனைத்து விசேஷங்களையும் அறிய முடியும். மிகவும் சிறந்ததான இவர்களது ஞானம், ஸர்வவேதாதிகமானது. ரமா நாராயணரின் விஷயத்தில் இவர்களுடைய ஞானம், அன்ய ஸர்வ ஜீவர்களைவிட பல மடங்கு அதிகமும், பூர்ணமுமாக இருக்கிறது. இவர்கள், அனாதி காலத்திலிருந்து பகவத் அபரோக்ஷம் உள்ளவர்கள். ஸ்வயம் பக்தி ஞானங்களால் பூர்ணராக இருந்து, மற்ற ஜீவர்களின் பக்தி ஞானாதி குனங்களின் நியாமகராக இருக்கின்றனர்.

ஸ்ரீவாயுதேவரே, அத்யாத்ம, அதிபூத, ஆதிதெய்வங்களில் முக்யபிராண ரூபத்தினால் இருக்கிறார். ‘ஸர்வ தத்வாபிமானி ச ஸர்வ ப்ராண கணாதிப:’ என்று ஸ்ரீமுகபிராணனின் மகிமையின் ஸாரம் நிரூபணம் ஆகியிருக்கிறது. ‘ஸர்வேந்த்ரியாபிமானிஸ்த முக்யபிராணஸ்த விஷ்ணுனா | ப்ரேரித: ஸ்ரீஷதுஷ்ட்யர்த்தம் கரிஷ்யே கர்ம சாகிலம்’ என்பதில், ஸர்வேந்த்ரியாபிமானி தேவதைகளின் அந்தர்யாமியான முக்ய பிராணனில் இருக்கும் ஸ்ரீவிஷ்ணுவினால் ப்ரேரிதனாகி ஸ்ரீவிஷ்ணு ப்ரீத்யர்த்தமாக, அனைத்து கர்மங்களையும் செய்கிறார் என்னும் அனுசந்தானம் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்ம வாயுகள் இருவரும் ஸர்வஷப்த வாச்யர், ஆனால், ரமா நாராயணர்களைப் போல அல்ல. உதாரணத்திற்கு: ஸ்ரீவாயுபிரம்மரும் ப்ரணவ வாச்யர் (அகார, உகார, மகாரங்களால் மட்டும் வாச்யர்). ‘ஓம்காரவாச்ய: ப்ராணோ஽ஸௌ வேதானுக்த குணஸ்ததா’ -- முக்யபிராணனும் ஓம்கார வாச்யனும் ஆகியிருந்து வேதங்களில் சொல்லப்படாத

குணங்களையும் கூட உள்ளவன் என்று சொல்வதையும், ரமா நாராயணரைப் போல அல்ல என்னும் அர்த்தத்திலேயே எடுத்துக் கொள்ள வேண்டும்.

நாராயணனின் ஞானாதி அனைத்து குணமும், வாயுபிரம்மரின் குணங்களிலிருந்து வேறுபட்டதும், அனந்த விசேஷயுக்தமும் ஆகிறது. 'ஷப்த பிரம்மாத்மகோ பிரம்மா ஸர்வ ஷப்தாபிதேயத: | ருதே நாராயணாதீனாம் நாம்னாம் ஸ விஷயோயத: ||' (பாகவத தாத்பர்ய). அதாவது, நாராயண முதலான ஸ்ரீஹரியின் விஷயமே ஆன நாமங்களைத் தவிர, பிரம்மதேவன் ஸர்வஷப்த வாச்யன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'அனந்தாம்னாய வேத்யோஸௌ வினா விஷ்ணௌ ப்ரஸித்தத:', 'ததெய்வ ஸர்வ நாமானி ப்ரவர்த்தந்தே ச மாருதே' ஆகிய பிரமாண வாக்கியங்கள் பிரம்ம வாயுகளை ஸர்வ ஷப்த வாச்யர்கள் என்று சொல்கிறது. ஸர்வவேத ப்ரதிபாத்யரை ஐதரேய பாஷ்யத்தில் இவ்வாறு நிரூபிக்கிறார்.

த்வாவாத்மானௌ ஹி தேவேஷு த்வௌ ப்ராணௌ ச சேதனௌ |
அஞ்ஞானாபிபவாஸ்ப்ருஷ்டௌ வாயுர் நாராயணஸ்சதௌ ||
ஸர்வ வேதோதிதௌ தஸ்மாதேதௌ த்வாவேவ நாபர: |
அன்யே சைவ மித்யை: ஷப்த்யைருச்யந்தே நாமிதை: க்வசித் ||

அதாவது, ஆத்ம ஷப்த வாச்யர் இருவரே. பிராண ஷப்த வாச்யரான சேதனர் இருவரே. அஞ்ஞான மற்றும் அபிபவ (பிறரால் வெல்லப்படக் கூடியவர்கள்) இருவரே. அவரே வாயு மற்றும் நாராயணர்கள். ( நாராயணன் என்றால், ரமாவுடன் இருப்பவனே. வாயு என்றால், பிரம்மனும் கூட). அனைத்து வேதங்களால் பிரதிபாத்யர் இருவரே; அன்ய தேவதைகள் சில வேத ஷப்தங்களால் மட்டும் வாச்யர்கள் - ஸர்வ ஷப்த வாச்யர்கள் அல்லர்.

** அனந்த ஜீவ நியாமக அனந்த ரூபர் ஸ்ரீவாயுதேவர், என்னும் சொற்களில் அடங்கியிருக்கும் ப்ரமேயங்கள் இவ்வாறு உள்ளன. ஜீவ சரீரம் ஆத்யாத்ம, ஆதிபூத, ஆதிதெய்வங்களை கொண்டிருக்கிறது. தேகத்தில் இருக்கும் மனம் முதலான இந்திரியங்கள் 'ஆத்யாத்ம' ; ப்ருதிவ்யாதி பஞ்சபூதங்களால் நிர்மிதமான அழிவு உள்ள தேகம் 'ஆதிபூத' ; இந்திரியாபிமானி தேவதைகள், அவர்களுடைய

அந்தர்யாமி ஸ்ரீமுக்யபிராண மற்றும் அவருக்கும் நியாமகரான புருஷ ஷப்த வாச்ய ஸ்வதந்த்ர ஸ்ரீஹரியும்கூட 'ஆதிதெய்வ' ;

ஸாத்யாத்மம் ஸாதிதெய்வம் ச ஸாதிபூதமித த்ரிதா |
விராட் ப்ராணோ தஷவித ஏகதா ஹ்ருதயேன ச || (பாகவத)

அத்யாத்ம, ஆதிதெய்வ, ஆதிபூதங்களில் ஒவ்வொன்றிலும், பத்து ரூபங்களால், ஒரு ரூபத்தினால் ஹ்ருதயத்திலும், முக்யபிராணன் வீற்றிருக்கிறார் என்றும், 'ப்ராணாதி பஞ்சகம் சைவ ததா நாகாதி பஞ்சகம் | ஏவந்து தஷதா ப்ராண: அத்யாத்மாதி த்ரிதாऽகிலா: ||' (பாக. தாத்). ப்ராண, அபான, வ்யான, உதான, ஸமான என்னும் பிராணாதி பஞ்சக மற்றும் நாக கூர்ம, க்ருகல, தேவதத்த தனஞ்சய என்னும் நாகாதி பஞ்சக, இவ்வாறு அத்யாத்மாதிகளில் ஒவ்வொன்றிலும் 10 ரூபங்களால், அந்தந்த பெயர்களில் 10 பிராணர்களில் இருந்து, தேகத்தினால் ஆகும் ஸர்வ செயல்களையும் நியமனம் செய்கிறார் என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. ஹ்ருதயத்தில் இருக்கும் ஒரு ரூபம், அங்கிருக்கும் மூலேஷ (ஸ்ரீஹரியின் ரூபம்) ரூபத்தின் அதீனத்தில் இருந்து, அபரோக்ஷ தரிசன காலத்தில், ஞானிக்கு முக்யபிராணனின் இந்த ரூபத்தின் தரிசனம் ஆகிறது.

அனைத்து ஸம்ஸாரி ஜீவனுக்கும் இருக்கும் ஸ்வரூப, லிங்க, அனிருத்த, ஸ்தூல என்னும் நான்கு தேகங்களில் ஸ்ரீமுக்யபிராணன் ஒவ்வொரு ரூபத்தினால் இருந்து, அந்த தேகத்தின் அனைத்து செயல்களின் நியாமகனாக இருக்கிறான். ஸர்வ ஜீவர்களின் ஸர்வ தேகங்களில் இருந்து, அவர்களின் ஷ்வாஸ உச்வாஸ ரூபத்தினால் நாள் ஒன்றுக்கு 21,600 ஹம்ஸ மந்திரங்களை ஜபித்து, அவற்றை ஸ்ரீஹரியிடம் அர்ப்பிக்கிறான். 'ஹம்ஸ: ஸோஹம் ஸ்வாஹா' என்பதே அந்த மந்திரம். ஒவ்வொரு நிமிடத்திற்கும் 15 ஷ்வாஸ உச்வாஸ ஆகிறது. தோஷ தூரனும், பக்தர்களின் தோஷங்களை பரிகரிப்பவனுமான ஸ்ரீஹரியே ஹம்ஸன். ஸோஹம் என்றால், அந்த ஹம்ஸனே என் அந்தர்யாமி என்று அர்த்தம். (அஹம், த்வம், முதலான சொற்கள், வெவ்வேறு பொருட்களை தரக்கூடிய சொற்கள் என்றாலும், இங்கு அந்தர்யாமியை குறிப்பிட சொல்லப்பட்டிருக்கிறது).

அந்தர்யாமிணமீஷேஷம் அபேச்க்ஷ்யாஹம் த்வமித்யபி |
இமே ஷப்தா: ப்ரயஜ்யந்தே ஸதி பேதே ஔபி வஸ்துஷு || (பாஷ்ய)

ஸ்வாஹா என்றால் அர்ப்பணத்துடனான நமஸ்காரங்கள். ப்ருஹதி சஹஸ்ர மந்திரத்தால், ரமா நாராயணருக்குப் பிறகு, முக்ய ப்ரதிபாத்யனான ஸ்ரீமுக்யபிராணன், தேகத்தின் இட வல பக்கங்களில் மொத்தம் 72,000 நாடிகளில், அவ்வளவு ரூபங்களைக் கொண்டிருக்கிறான். தேகத்தில் ஒவ்வொரு அணுவிலும் அவனுடைய ரூபம் இருக்கிறது. ஸ்ரீமுக்யபிராணன், அனந்த ஜீவர்களில் அனந்த ரூபங்களால் இருப்பது மட்டுமல்லாமல், அனைத்து சம்ஸாரி ஜீவனில் ஏகப்பட்ட ரூபத்தினால் இருக்கிறான். இவனின் மகிமையை பாகவத தாத்பர்யத்தில் 'முக்யப்ராணோ மஹானேஷ யேன வ்யாப்தம் சராசரம் | தஸ்மின் ஓதமிதம் ஸர்வம் சேதனாசேதனாத்மகம் ||' அதாவது, முக்யபிராணன் சராசர உலகில் வ்யாப்தனாக இருக்கிறான். சேதனாசேதனாத்மக உலகம் அவனுடைய அதீனத்தில் இருக்கிறது - என்பதே இதன் அர்த்தம்.

ஸத்தத்வ ரத்னமாலா கிரந்தத்தில் ஸ்ரீமுக்யபிராணரின் அபார மகிமை, இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.
ஏகோ ஹி கர்தா ஸர்வஸ்ய ரமானாத ப்ரஸாதத: |
பதப்ரதஷ்ச தேவானாம் தத்தசக்தி ப்ரதஸ்ததா ||
ததா ம்ருத்யுப்ரதஷ்சயாம் முக்தானாமபி ஜீவனம் |
அனந்தானந்த ரூபேண ஜகத்யமயதீஷ்வர: ||
ஜாக்ரத்ஸ்வப்ன ஸுஷுப்த்யாதி ஸர்வாவஸ்தானியாமக: ||

அதாவது, ஸ்ரீமுக்யபிராணன் லட்சுமிபதியின் அருளால் அனந்தானந்த ரூபங்களை ஏற்று, அனந்த ஜீவர்களில் இருந்து, அனைத்தையும் செய்து செய்விக்கிறான். தேவதைகளுக்கு அவரவர்களின் பதவிகளை கொடுப்பவனும் அவனே. அந்தந்த பதவிகளில் இருந்து ஸ்வகார்யங்களை நிர்வகிக்கும் சக்தியை கொடுக்கிறான். அவனே அனைவருக்கும் ஜீவ ப்ரதன். ம்ருத்யுப்ரதன். முக்தர்களுக்கும் நியாமகன். (அபரோக்ஷ ஞானம் ஆனபிறகு, ஸ்வயோக்ய முக்தியை அடையும் வரையிலான நிலை, ஜீவன் முக்தாவஸ்தை என்று அழைக்கப்படுகிறது). அனைவரின், அனைத்து நிலைகளின் ப்ரேரகன் அவனே.

** ராமகிருஷ்ணாதி ரூபங்களால் ஸ்ரீஹரி அவதரித்தபோது, ஸ்ரீவாயுதேவரும், ஹனுமதாதி ரூபங்களில் அவதரித்து, ஸ்ரீஹரியின் அவதாரங்களின் நோக்க சாதனைகளில் முக்கிய பாத்திரங்களை

வகித்து, வணங்கினார் என்னும் அர்த்தத்தை மட்டும், 'பகவத்கார்ய ஸாதக' என்பதற்கு தெரியக்கூடாது. ஸ்ரீஹரி, ஜகத் ஸம்பந்தமான ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன, ஞான, அஞ்ஞான, பந்த, மோக்ஷ என்னும் அஷ்ட கர்த்ருத்வங்களை லீலையினால் நிர்வகிக்கும் ஸ்வதந்த்ர ப்ரபு ஆகிறான். இந்த தன் அஷ்ட கர்த்ருத்வங்களை ஸ்ரீஹரி, முக்யபிராணனின் மூலமே நிர்வகிக்கிறான். அனந்த ஜீவர்கள் மூலமாக ஒவ்வொரு நொடியிலும் நடக்கும் பற்பல செயல்களிலும், 'தேன வினா த்ருணமபி ந சலதி' - ஸ்ரீஹரியின் உதவி இல்லாமல் ஒரு புல்கூட நகர்வதில்லை என்று ஸ்ருதி யில் சொல்லும், அனைத்து அசேதன ஜகத்தின் செயல்களிலும், பரமாத்மாதீன மாத்ரனான முக்யபிராணனும் ப்ரேரகனாக இருக்கிறான்.

இந்த பரமாத்புத பகவத் கார்யஸாதகத்வம் வேறு யாருக்கு இருக்கிறது? மற்ற தத்வாபிமானிகள் தத்தம் அதிகாரங்களுக்கு உட்பட்டு, சிறிய காரியங்களுக்கு மட்டும் காரணராக இருக்கின்றனர். 'யானி யானீஹ கர்மாணி ஜகதி ஸ்யூ ரமாபதே: | ப்ராய: ப்ராணாதிபேதானி ஸமஸ்தானி ந ஸம்ஷய: || (ஸத்தத்வ ரத்ன மாலா). ரமா ரமேஷர்களிலிருந்து வேறுபட்ட உலகில், முக்யபிராணரின் நியதமல்லாத எந்த பொருளும் இல்லை. ஸ்ரீமுக்யபிராணன், ஈஷாதீனனாகி, ஈஷனைப் போல, ஜகன் நியாமகனாக இருக்கிறான். ஸர்வ போக்த்ருத்வ ஸர்வ க்ரியாகாரித்வங்கள், முக்யபிராணனுக்கு எப்படி பொருந்துகிறது என்று சந்தேகப் படக்கூடாது. ஸ்ரீஹரியால் மட்டும் போக்யமான போகங்களையும் ராவண சம்ஹாராதி செயல்களையும் விட்டு, அன்யபோக மற்றும் க்ரியைகளையே இங்கு சொல்லப்பட்டுள்ளது. ஆகையாலேயே, 'ப்ராய: ப்ராணாதிபே' என்று 'ப்ராய:' என்னும் சொல் சொல்கிறது.

** முக்யபிராணன் 'அத்யர்த்த' என்று வேதாதிகளில் அழைக்கப்படுகிறான். நித்யபூர்ண குண உள்ளவனாக இருந்தாலும், ஸ்ரீஹரிக்கு ப்ரியதமனாக இருந்தாலும், முக்யபிராணனுக்கு முடியாதது என்று எதுவும் இல்லை. ஆகையாலேயே, அத்யர்த்த மற்றும் பூர்ணகாமன். ப்ரத்யுபகார அல்லது ப்ரதிபலத்தின் விருப்பம் இல்லாமல், அனைவருக்கும் உதவி செய்பவர். ஆகையால், பூர்ணகாமனான ஸ்ரீமுக்யபிராணனே அனிமித்த பந்து ஆகிறார். தந்தை

தாய் புத்ராதி அனைத்து பந்துகளால் ஆகும் அனைத்து விதமான உதவிகளையும் (காத்தல், பய பரிகாரம் ஆகிய உதவிகள்) முக்யபிராணன் மட்டும் செய்யத் தக்கவர் மற்றும் மாதாபித்ருகளைப் போல ஸர்வ அபராதங்களை மன்னித்து அருள்வதில் சிறந்தவர்.

இவரைப் போல, க்ருபா பூர்ணனும், க்ஷமாவந்தனும், ரமா நாராயணரைத் தவிர வேறு யாரும் இல்லை. க்ஷமா ஸமுத்ரனான ஸ்ரீஹரி, ஸர்வாபராதங்களை மன்னித்து, பக்தர்களை காக்கும், கருணை ஸ்வபாவம் கொண்டவனும், பக்தர்களை காக்கும் இந்த செயல்கள் அனைத்தும் ஸ்ரீமுக்யபிராணனின் மூலமே செய்கிறான். ஸ்ரீஹரியில் இருக்கும் வாத்ஸல்ய, க்ஷமாதி குணங்கள், முக்ய பிரதிபிம்பனான முக்ய பிராணதேவனில் இருக்கிறது. ஸ்ரீவாயுதேவர் சுக்ரீவ, அர்ஜுனாதிகளை காத்தல் ஆகிய புராணோக்த சரித்திரங்களிலிருந்து அவருடைய கருணை, தயை, மன்னிக்கும் குணம், பக்தவாத்ஸல்யம் ஆகிய மகா குணங்கள் தெரிய வருகின்றன.

**3. அக்3ஞ ஞானார்த்தி2 ஞானயோக்3ய ப4கவத் க்ருபாபாத்ரபூ4த ஸல்லோக க்ருபாளு பி3ரம்ம ருத்3ராத்3யர்த்தி2த ப4க3வதாக்3ஞாம் ஶிரஸி பரமாத3ரேண அனர்க்4ய ஶிரோரத்னவத் நிதா4ய ததா2 அஶேஷ2 தே3வதா ப்ரார்த்த2னாம் ஹாரவத் ஹ்ருதி3 நிதா4ய சர்வஸ்வகீய ஸஜ்ஜனானுக்3ரஹேச்சயா கர்மபு4வி அவதீர்ணானாம்**

அக்ஞ - ஞானம் இல்லாதவனும்; ஞானார்த்தி -ஞானத்திற்காக உற்சாகம் கொண்டவனும்; ஞானயோக்ய - ஞானத்திற்கு தகுதி உள்ளவனும்; பகவத் க்ருபாபாத்ரபூத - பகவந்தனின் கருணைக்கு பாத்திரர் ஆன; ஸல்லோக க்ருபாளு பிரம்ம ருத்ராத்யர்த்தித - சஜ்ஜனர்கள் மேல் (முக்தியோக்ய ஜீவர்கள் மேல்) கருணை காட்டும் ஸ்வபாவம் கொண்டவரான பிரம்ம ருத்ராதி தேவதைகளால் பிரார்த்திதராகி செய்த; பகவதாக்ஞாம் - ஸ்ரீஹரியின் ஆணையை; ஷிரஸி - தன் தலையில்; பரமாதரேண - மிகவும் பக்திபூர்வகமாக; அனர்க்ய ஷிரோரத்னவத் - விலைமதிப்பற்ற தலையில் தரிக்கும் ரத்தினத்தைப் போல; நிதாய - தரித்து; ததா - மற்றும்; அஷேஷ தேவதா ப்ரார்த்தனாம் - அனைத்து தேவதைகளின் (பூமியில் அவதரித்து அருளவேண்டும் என்னும்) பிரார்த்தனையை; ஹாரவத் - மாலையைப்

போல; ஹ்ருதி - வக்ஷஸ்தளத்தில்; நிதாய - தரித்து; சர்வஸ்வகீய ஸஜ்ஜனானுக்ரஹேச்சயா - தம்மவரே ஆன அனைத்து சஜ்ஜனர்களையும் அருளும் விருப்பத்தால்; கர்மபுவி - கர்ம பூமியான பரத கண்டத்தில்; அவதீர்ணானாம் - அவதாரம் செய்த ஸ்ரீமுக்யபிராணனின் (ஸ்ரீமன் மத்வாசார்யரின்);

ஞானம் இல்லாதவனும், ஞானத்திற்காக முயற்சி செய்யும் ஞானயோக்ய ஸ்வபாவம் உள்ள ஜீவர்கள், பகவந்தனின் க்ருபைக்கு பாத்ரர் ஆவர். இவரே முக்தியோக்யரான ஸுஜீவர்கள் (ஸாத்விகர்). இவர் மேல் பிரம்மாதி தேவதைகளும், கருணை கொண்டவரே ஆகியிருக்கின்றனர். உலகில் ஞானஸூரியன் அஸ்தமித்து, அஞ்ஞான என்னும் இருட்டு வியாபித்தபோது, ஸஜ்ஜனர்கள் கவலை அடைந்தனர். அப்போது பிரம்மாதி தேவதைகள் ஸஜ்ஜனர்களின் பொருட்டு, அவர்களுக்கு ஞானோதயம் ஆகும் வழியைக் காட்டுங்கள் என்று ஸ்ரீஹரியிடம் பிரார்த்தனை செய்தனர். ஸ்ரீஹரி, பூமியில் அவதரித்து, அந்த காரியங்களை நிறைவேற்றுமாறு, வாயுதேவருக்கு ஆணையிட்டான். ருத்ராதி தேவதைகளும் சஜ்ஜனர்களை ஞான தானம் செய்து அருள்வதற்கு, வாயுதேவரை கேட்டுக் கொண்டனர். பகவந்தனின் ஆணையை, தலை மேல் சூட்டிய விலைமதிப்பற்ற ரத்தினத்தைப் போல தலையில் ஏந்தி, தேவதைகளின் பிரார்த்தனையை, முத்து மாலையைப் போல கழுத்தில் தரித்து, ஸ்வபக்தரான ஸஜ்ஜனர்களை அருள்வதற்காக, கர்மபூமி எனப்படும் பரத கண்டத்தில் ஸ்ரீவாயுதேவர் அவதரித்து, ஸ்ரீமதானந்த தீர்த்தர் என்னும் நற்பெயரைப் பெற்றார்.

** ஞான என்னும் சொல்லுக்கு, ‘விஷய க்ரஹண’ என்னும் அர்த்தம் உள்ளது. இது சேதனர்களின் பொதுவான தர்மம். ஆனால், சாஸ்திரங்களில் பல இடங்களில் ‘தத்வஞான’ என்னும் அர்த்தத்திலும் இது பயன்பட்டுள்ளது. ஆனால், ஞானம் என்றால் அதன் முக்கியமான அர்த்தம் பகவத் அபரோக்ஷமே ஆகும். ஆனாலும், அதனை அடைய உதவும் பரோக்ஷ ஞானமும் ஞானம் என்றே அழைக்கப்படுகிறது. மனம் முதலான ப்ராக்ருத இந்திரியங்களின் மூலம், அதன் உதவியுடன் கிடைக்கும் ஞானம் பரோக்ஷ ஞானம். ஜீவன் தன் ஸ்வரூப இந்திரியங்களாலேயே அறிவது, அபரோக்ஷ அல்லது ப்ரத்யக்ஷ என்றும், வெறும் ஞானம் என்றும்

அழைக்கப்படுகிறது. ஜீவன் பகவந்தனை ப்ரத்யட்சமாக பார்ப்பதை அபரோக்ஷ ஞானம் என்று அழைக்கும் வழக்கம் இருக்கிறது. முக்ய அர்த்தத்தில் ஞானம் என்றல், தத்வஞானமே, அபரோக்ஷ ஞானமே ஆகும். ப்ராக்ருத மனம் முதலான இந்திரியங்கள் இல்லாத முக்த ஜீவர்கள் அனைத்தையும் ஸ்வஸ்வரூப இந்திரியங்களாலேயே தெரிந்துகொள்வதால் - அவர்கள் நித்யபரோக்ஷிகளே. வேறு எந்த சாதனங்களின் உதவிகளும் இல்லாமலேயே ஸ்வயம் அறிவதை அபரோக்ஷ ஞானம் என்று கூறினாலும், மிகவும் சுத்தமான மனதின் உதவியுடன், ஜீவன் ஸமாதியில் அடையும் பகவத் தரிசனமும் அபரோக்ஷ ஞானம் என்றே அழைக்கப்படுகிறது. இந்த விளக்கத்தினால், ஜீவ ஜட ஈஷ்வர ஆகியோரின் யதார்த்த ஸ்வரூப மற்றும் பரஸ்பர ஸம்பந்தங்களையும், தர்ம அதர்ம மோக்ஷ முக்தி ஸாதனங்களையும் தவிர, மற்ற ப்ராக்ருத (லௌகிக) விஷயங்களின் ஸம்பந்தமான வித்யைகளை (ஞான விசேஷங்களை) ஞானம் என்றும், இந்த ஞானம் உள்ளவர்களை ஞானிகள் என்றும் அழைப்பது வெறும் சம்பிரதாயம் மட்டுமே என்று தெரிகிறது.

ஞான என்னும் சொல்லின் முக்கிய அர்த்தமான பகவத் தரிசனம் (அபரோக்ஷம்), அதற்காக முயற்சி செய்தவர்களுக்கெல்லாம் கிடைப்பதில்லை. ஞானயோக்யரான ஜீவர்களின் குழுவை சேர்ந்தவர்களுக்கு மட்டுமே அது கிடைக்கிறது. ஞானத்திற்கு தகுதி பெற்றிருந்தாலும், ஞானம் இல்லாமல் அதனை பெறுவதற்காக உற்சாகமாக முயலும் ஜீவர்கள் மட்டுமே பகவந்தனின் கிருபைக்கு பாத்திரர் ஆவர். இந்த ஸுஜீவர்களின் ஸமூகத்தையே ஸல்லோக என்று அழைக்கின்றனர். இந்த ஜீவர்களின் மேல் பிரம்ம ருத்ராதி தேவதைகளின் கருணை அபாரமானது. இவர்களின் பிரச்னைகளை / கவலைகளை போக்குவதற்கு, தாமே ஸ்ரீஹரியிடம் வேண்டிக் கொள்கின்றனர்.

ஜீவர்களின் ஸ்வபாவங்கள் மூன்று விதம். அதாவது, ஜீவர்கள் ஸ்வரூபத்திலேயே மூன்று விதமாக இருப்பவர்கள். முக்தி யோக்யர்கள், நித்ய ஸம்ஸாரிகள் மற்றும் தமோயோக்யர் என்று அவர்களின் கதியைக் குறிக்கும்படியான சொற்களால் அழைக்கப்படுகிறார்கள். இவர்களை ஸாத்விக ராஜச தாமஸர் என்று அழைப்பதுண்டு. ஸம்ஸாரத்தில் இருப்பவர்களுக்கு ஸத்வ ரஜ தம

என்னும் ப்ராக்ருத குணங்கள் கட்டுப்படுத்துவதுண்டு. அனைத்து ஜீவர்களிலும் இந்த மூன்று குணங்களும் சேர்ந்தே இருக்கின்றன. ஆனாலும், கட்டுப்படுத்தும் விதத்தில் யார் யாரை அதிகமாக கட்டுப்படுத்துகின்றதோ, அவர்கள் அந்த குண நாமத்தினால் அழைக்கப்படுகிறார். ஜீவ ஸ்வரூபம் நித்ய மற்றும் அனாதி. இதன் மேல், லிங்க தேஹ, அனிருத்த தேஹ மற்றும் ஸ்தூல பௌதிக தேகங்கள் உறைகளாக இருக்கின்றன. இந்த உறைகள் மூன்றும் நீங்கி பின் கிடைப்பதே மோக்ஷம்.

முக்தி யோக்ய ஜீவர்கள் ஸ்வஸ்வரூபமே ஆன ஆனந்தாதிகளை அனுபவித்தவாறு, நித்ய சுகிகளாக இருக்கின்றனர். யதார்த்த ஞானமும், பகவத் பக்தியும் இந்த ஜீவர்களின் ஸ்வரூப குணங்கள். தமோ யோக்யரின் ஸ்வரூபம் துக்க த்வேஷாதி துர்குண ரூபமானவை. அவர்களுக்கு மோக்ஷத்தில் கிடைப்பது நித்ய ஸுகமே. ஜீவ த்ரைவித்யவு, லோகானுபவ விமரிசனத்தால் பொதுவாகவே தெரிய வருகிறது. ஜீவ ஸ்வரூபங்கள் அப்ராக்ருதமானவை. அதீந்த்ரியமானவை. கண் முதலான ஞானேந்திரியங்களுக்கும் மனதிற்கும் புலப்படாதவை. அதீந்த்ரியங்களான தர்ம அதர்ம ஈஷ்வர ஸ்வர்க்க நரக முதலான வஸ்து விஷயங்கள் ஞானத்திற்கு பரம பிரமாணங்களான ஸ்ருதி ஸ்ம்ருதிகளே முக்ய ஸாதனங்கள். இவை தவறான அர்த்தங்களுக்கு சந்தர்ப்பமே இல்லாத தெளிவான சொற்களால், ஜீவத்ரை வித்யையை விளக்குகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

ஸ்ருதியில் உதாரணங்கள்:

* ஸர்வஷக்தனும் மஹைஷ்வர்யவந்தனுமான பரமாத்மன், அசுர ஸ்வபாவத்தின் அனைவரையும் தண்டித்து, பிற (தேவ ஸ்வபாவத்தின்) அனைவரையும் சம்சாரத்திலிருந்து காப்பாற்றுகிறான்.
* அசுரர்களுக்கு தேவ ஸ்வரூபமும், தேவதைகளுக்கு அசுர ஸ்வரூபமும், மனிதர்களுக்கு இந்த இரண்டில் எதுவும் கிடைப்ப தில்லை. அனைவரும் தன் ஸ்வபாவத்தையே அடைகிறார்கள்.
* தேவதைகள் தேவ ஸ்வபாவத்தையும், அசுரர்கள் அசுர ஸ்வபாவத்தையும் அடைகிறார்கள். இந்த ஏற்பாடுகள் என்றும்

மாறுவதில்லை. அவரவர்களின் ஸ்வபாவங்களே நிரந்தரமாக அவர்களுக்கு நிற்கிறது.

ஸ்ம்ருதியில் உதாரணங்கள்:

* அசுரர்கள் தாமஸ கர்மங்களாலும், மித்யா ஞானத்தினாலும் கண்டிப்பாக தமஸ்ஸினை அடைகிறார்கள். தேவதைகள் ஸத் கர்மங்களாலும், ஸமீசீன ஞானத்தினாலும் உத்தமமான விஷ்ணு லோகத்தை அடைகின்றனர். இந்த நியமத்தில் என்றும் எங்கும் மாற்றம் இருப்பதில்லை. (மனுஷ்யோத்தம ஜீவர்கள் தேவ ஸ்வபாவத்தின் குழுவைச் சேர்ந்தவர்கள்). மிஸ்ர ஞானம் உள்ள மனிதர்கள் (மனுஷ்ய மத்யமர்கள்) சுக துக்க மிஸ்ரமான கதியையே அடைகிறார்கள். ஜீவ ஸ்வபாவங்கள் இவ்வாறு இருப்பதால், தேவ ஸ்வபாவத்தின் முக்தியோக்ய ஜீவர்களே ஞானயோக்யர் என்பது புரிகிறது. 'ஓம் ஸர்வதாபி து த ஏவோபயலிங்காத் ஓம்' என்னும் ஸூத்திரத்தினால் துவங்கும் இரு லிங்காதிகரணத்தில் ஞானயோக்யருக்கு பகவத் அபரோக்ஷம் என்று தெளிவாக நிர்ணயித்து நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

** துர்மதங்களின் பிரஸாரத்தினால் அஞ்ஞான ரூபத்தின் இருட்டு அனைத்து இடங்களிலும் வியாபித்திருக்கிறது. தத்வஞானார்த்திகளான ஸஜ்ஜனர்கள் கவலைப்பட்டனர். க்ருபாளுகளான சதுர்முகாதி தேவதைகள் ஸஜ்ஜனர்களின் துக்கத்தினை பரிகரிப்பதற்கு ஸ்ரீஹரியை பிரார்த்தனை செய்தனர். 'வேதாந்த மார்க பரிமார்க்கண தீனதூனா தெய்வீ: ப்ரஜா: விஷரணா: கருணாபதம் ந: | ஆனந்தயோ: ஸுமுகபூஷித பூமிபாகோ ரூபாந்தரேண மம ஸத்குண நிர்ணயேன ||' (மத்வ விஜய). ஹே ஸுமுகனே. ப்ரியதர்ஷனே. வாயுதேவனே. தத்வஞானத்தின் வழியைக் காணாமல் துக்கப்படும் தேவ ஸ்வபாவத்தின் மக்கள், வேறு கதியில்லாமல் நம் கருணைக்கு பாத்திரர் ஆகியிருக்கின்றனர். நீ அவதரித்து, பூமியை அலங்கரித்து, என்னை நிராகாரான், நிர்குணன் என்று வாதிக்கும் துர்மதங்களை கண்டித்து, என் ஸ்வாதந்த்ர்யாதி அனைத்து நற்குணங்களையும் நிர்ணயித்து, நிரூபித்து அவர்களை அருள்வாயாக என்று ஸ்ரீஹரி வாயுதேவருக்கு ஆணையிட்டார்.

ஸ்வயம் கலியினால் பாதிக்கப்பட்ட அஞ்ஞான இருட்டினை, ஸ்ரீவாயுதேவர் அல்லாமல் வேறு யாரும் பரிகரிக்க சாத்தியம் இல்லை.

'ஆதேஷ மௌளிமணிமுஜ்வல வர்ணமேனம் பத்தாஞ்சலிர் மருதனர்க்ய மதத்த மூர்த்னா | ஹாராவலீமிவ ஹ்ருதா விபுதேந்த்ரயாஞாம் பிப்ரன் நிஜானனுஜிக்ருக்ஷூர மதி தீர்ஷத் ||' ஸ்ரீஹரியின் ஆணையை ஒளிர்வதான தலையில் அணிந்த ரத்னத்தைப் போல ஏந்தி, கை குவித்தவாறு நின்றார். தேவஸ்ரேஷ்டர்கள் (ருத்ராதிகள்) விரைவில் சஜ்ஜனர்களை அருள வேண்டி பிரார்த்தனை செய்தனர். அதனை மாலையைப் போல கழுத்தில் தரித்து, அவதரித்தார். ஸ்ரீமத்வ விஜயத்தில் சொல்லப்பட்டுள்ள இந்த விஷயங்களையே, மிகக் குறைந்த சொற்களில் ராயர் விளக்கியிருக்கும் விதத்தை கவனிக்க வேண்டும்.

ஸ்ரீவாயுதேவர் தம் அவதாரத்திற்காக ஏற்றுக்கொண்டது, பவித்ரமான கர்ம பூமியான பரத கண்டத்தையே. இந்த நற்பெயரைக் கொண்ட கர்மபூமியில், தற்காலிகமான இந்த மனித தேகத்தினால் நொடிப்பொழுதில் செய்யத் தக்கதான கர்மங்களை செய்பவர்கள், திரும்ப இந்த உலகிற்கு வரமுடியாத்தான நாராயணனின் மோட்சத்தையே பெறுகின்றனர். பரத கண்டத்தில் பிறந்து, சிறிது காலம் வசிப்பது கூட, கல்ப முடிவு வரைக்கும், வாழக்கூடியதான அன்ய லோக வாழ்வைவிட சிறந்தது என்று, பாகவதத்தில் பரத கண்டத்தின் சிறப்பு விளக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீவாயுதேவர், 'ஸத்வீபவாரிநிதி சமஸ்த பூததாத்ரா, மத்யேபி கர்மபுவி பரத நாமகண்டே' (மத்வவிஜய) - ஏழு தீவு, ஏழு கடல்களால் சூழப்பட்ட பூமண்டலத்தின் மத்யத்தில் இருக்கும் பரத கண்ட என்னும் கர்மபூமியில் ( நற்குலத்தில் பிறந்தவரான மத்யகேஹ பட்டர் என்னும் பிராமண ஸ்ரேஷ்டர் தம்பதிகளில்) அவதரித்தது பொருத்தமாக இருக்கிறது. எந்த பூபாகங்களில் மனிதர்களால் செய்யப்பட்ட அனைத்து கர்மங்களும், ஸ்வர்க்க நரக ப்ராப்திக்கு காரணமாகும் அதிர்ஷ்டத்தை கொடுக்கிறதோ, அந்த பிரதேசம், கர்மபூமி எனப்படுகிறது. 'யத்ர க்ருதானி ஷுபாஷுப கர்மாணி ஸ்வர்க்க நரக ஸாதனானி பவந்தி ஸா கர்ம பூமி:' என்று கர்மபூமி ஷப்தார்த்த விவரணை இருக்கிறது. பரத கண்டமே கர்மபூமி. பூமியின் பிற பாகங்கள் மற்றும் உலகங்கள் போக ஸ்தானங்கள் ஆகும். இங்கு செய்த கர்மங்களின் சுக துக்க ரூப பலன்களை போகிப்பதற்கு பிறவி எடுக்கும் பிரதேசங்கள் அவை. ஸ்வர்க்க நரகங்கள் - விசேஷ சுக துக்க

போக ஸ்தானங்கள். பயங்கர புண்ய பாப (கர்ம)ங்களால் இங்கேயே (பரத பூமியில் நர தேகத்தினால்) அந்த கர்ம பலன்களை அனுபவித்து, பூர்ணானுபவத்திற்காக ஸ்வர்க்க நரகங்களை சேர்வது உண்டு. மிகச் சொல்பமான புண்ய பாபங்களின் பல அனுபவத்திற்கும் கூட ஸ்வர்க்க நரகங்களுக்கு செல்ல வேண்டியதில்லை.

தேஷ காலங்களின் நியாமகனான ஸ்ரீஹரி, ஸ்வதந்த்ர ப்ரபு. இந்த கர்மபூமியில் செய்யப்படும், ஸ்ருதி ஸ்ம்ருதியில் சொல்லப்பட்ட கர்மங்களுக்கு, புண்யபாப ரூபத்தின் பலன்களைக் கொடுப்பேன் என்று சங்கல்பம் செய்து, தன் ஆஞ்ஞா ரூபமான சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் பூபாகமே கர்மபூமி. அதுவே பரதகண்டம். பிற போக பூமிகளில், முற்பிறவிகளில் கிடைத்த பலன்களை போகித்துக் கொண்டிருக்கும் தேகங்களில் செய்யும் கர்மங்களால் புண்ய பாவங்கள் தோன்றுவதில்லை. தற்காலிக ஐஹிக பலன்கள் மட்டுமே கிடைக்கின்றன. க்ருதாதி யுகங்களின் மத்யத்தில், மோட்ச ஸாதனத்திற்காக, அல்ப கர்மங்களுக்கு மிகப்பெரிய பலன்களைப் பெற முடிகிறதான கலியுகமும், பற்பல தேகங்களின் நடுவில் மனித தேகமும் சிறந்ததாக இருப்பதைப் போல, பூபாகங்களில் கர்மபூமியான பரத கண்டமும் சிறந்ததாகும். அது போலவே, கர்மபூமியே புண்ய பூமி. 'கல்பாயுஷாம் ஸ்தானஜயாத் புனர்ஜவத் க்ஷணாயுஷாம் பாரத பூஜயே வர: | க்ஷணேன மர்த்யேன க்ருதம் மனஸ்வின: ஸன்யஸ்ய ஸம்யாந்த்யபயம் பதம் ஹரே: || என்று பாகவதம் பரத கண்டத்தை புகழ்கிறது.

### 4. ததா[2] அவதீர்ய ஸகல சச்சாஸ்த்ர கர்த்ருணாம், ஸகலது[3]ர்மத ப[4]ஞ்சகானாம், அனாதி[3]த: ஸத்ஸம்ப்ரதா[3]ய பரம்பரா ப்ராப்த ஸ்ரீமத்[3] வைஷ்ணவ ஸித்தா[3]ந்த ப்ரதிஷ்டாபகானாம்

ததா அவதீர்ய - அப்படியாக அவதரித்து; ஸகல சச்சாஸ்த்ர கர்த்ருணாம் - அனைத்து நற்சாஸ்திரங்களையும் இயற்றிய; ஸகல துர்மத பஞ்சகானாம் - அனைத்து துர்மதங்களையும் கண்டித்த; அனாதித: - அனாதி காலத்திலிருந்து; ஸத்ஸம்ப்ரதாய பரம்பரா ப்ராப்த - ஷுப ஸம்ப்ரதாய பரம்பரையிலிருந்து கிடைத்த; ஸ்ரீமத் வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரதிஷ்டாபகானாம் - ஸ்ரீவிஷ்ணுவே ஸர்வோத்தமன் என்னும் ஸத் ஸித்தாந்தத்தை ஸ்தாபித்த (ஸ்ரீமதானந்த தீர்த்தரின்);

ஸ்ரீவாயுதேவர், நம் இந்த பரத கண்டத்தில் அவதரித்து, அனைத்து துர்மதங்களையும் கண்டித்து, 'ஸர்வமூல' என்று புகழ் பெற்ற 37 நற்சாஸ்திர கிரந்தங்களை இயற்றி, அனாதி பரம்பரையிலிருந்து கிடைத்த, அதனாலேயே பரம பிரமாணம் எனப்படும், ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தமத்வாதி ஸத்வைஷ்ணவ ஸித்தாந்தங்களை நிறுவி, அருளினார். ஸ்ரீவாயுதேவரின் அவதாரரான இவரே, ஸ்ரீமதானந்த தீர்த்தர்.

** ஸ்ரீமதானந்த தீர்த்தரால் இயற்றப்பட்ட சர்வமூல எனப்படும் 37 கிரந்தங்கள் இவையே. 1. கீதாபாஷ்ய 2. கீதா தாத்பர்ய 3. ஸூத்ர பாஷ்ய 4. அணு பாஷ்ய 5. அணு வ்யாக்யான 6. ப்ரமாண லக்ஷண 7. கதா லக்ஷண 8. உபாதி கண்டன 9. மாயாவாத கண்டன 10. ப்ரபஞ்ச மித்யாத்வானுமான கண்டன 11. தத்வ ஸங்க்யான 12. தத்வ விவேக 13. தத்வோத்யோத 14. கர்ம நிர்ணய 15. விஷ்ணு தத்வ நிர்ணய 16. ருக் பாஷ்ய 17. உபநிஷத் பாஷ்யங்களான - ஐதரேய 18. ஈஷாவாஸ்ய 19. பிருஹதாரண்ய 20. காடக 21. தைத்திரீய 22. சாந்தோக்ய 23. தலவகார 24. ஷட்ப்ரஷ்ன 25. மாண்டூக 26. அதர்வண 27. ந்யாய விவரண 28. மஹாபாரத தாத்பர்ய நிர்ணய 29. பாகவத தாத்பர்ய நிர்ணய 30. யமக பாரத 31. த்வாதஷ ஸ்தோத்ர 32. கிருஷ்ணாம்ருத மஹார்ணவ 33. தந்த்ரஸார 24. நரஸிம்ஹ நகஸ்துதி 25. ஸதாசார ஸ்ம்ருதி 36. யதிப்ரணவ கல்ப மற்றும் 37. ஜயந்தி நிர்ணய.

** மத ஸ்தாபகர் எனப்படும் அனைவரும், ஸ்ரீபாதராயணரால் இயற்றப்பட்ட வேதார்த்த நிர்ணாயக பிரம்ம ஸூத்ரங்களுக்கு பாஷ்யத்தை இயற்றி, தம் ஸித்தாந்தத்தை நிறுவியிருக்கிறார்கள். ஸ்ரீமதாசார்யரின் காலத்திற்கு முன்னர், பிரம்ம ஸூத்ரங்களுக்கு 21 பாஷ்யங்கள் இயற்றப்பட்டிருந்தன. விசேஷமாக அவர் அவதரித்த காலத்தில் பிரபலமாக இருந்தது 21வதாக இருந்த சங்கர பாஷ்யம். இவை அனைத்தையும் தம் பாஷ்யாதி கிரந்தங்கள் மூலமாக கண்டித்து, ஸ்ரீமதாசார்யர் ஸ்ரீபாதராயணருக்கு சம்மதமான நிர்ணயங்களை நிரூபித்தார். இவர் இயற்றிய ஸூத்ர பாஷ்யம் 22வதாகும். இதனை தாமே, ஸ்ரீபாதராயணர் இருந்த ஹிரேபதரிக்கு (அதாவது மனிதர்களால் போக முடியாத, இப்போது அனைவரும் போய்வரும் சிறிய பதரியிலிருந்து வேறான பதரிகாசிரமத்திற்கு)

சென்று அவரிடம் சமர்ப்பித்து, 'உன் ஆணையை நிறைவேற்றுகிறேன். மகிழ்வாயாக, பிரபோ' என்றார்.

அதுவரை இருந்த அனைத்து பாஷ்யத்தையும் கண்டித்து மற்றொரு மதம் வளர்ந்தது. அந்த 21 துர்மதங்களின் மூலமான துர்பாஷ்யங்கள் (ஸூத்ர கர்த்தரான ஸ்ரீவேதவ்யாஸருக்கு அவை என்றுமே சம்மதமில்லாதவை). 1. பாரதி விஜய 2. ஸம்விதானந்த 3. ப்ரம்மகோஷ 4. ஷதானந்த 5. உத்தவ 6. விஜய 7. ருத்ரபட்ட 8. வாமன 9. யாதவ ப்ரகாஷன 10. ராமானுஜ 11. பர்த்ரு ப்ரபஞ்ச 12. த்ரவிட 13. ப்ரம்மதத்த 14. பாஸ்கர 15. பிஷாச 16. வ்ருத்திகாரக 17. விஜயபட்ட 18. விஷ்ணுக்ராந்த 19. வாதீந்த்ர 20. மாதவதாஸ 21. ஸங்கர.

** வைஷ்ணவ ஸித்தாந்தம் அனாதி காலத்திலிருந்து இருப்பது. ஸாக்ஷாத் ஸ்ரீஹரியிடமிருந்து தத்வோபதேசத்தைப் பெற்றவர் சதுர்முக பிரம்ம தேவர். ஸ்ருஷ்டிகர்த்தனும் சகல ஜகத்தின் பிதாமகனுமான பிரம்மனிடமிருந்து கிடைத்த சித்தாந்தமே அனாதிமூலம் கொண்டது. அனைத்து பிரமாணங்களையும் கொண்டது. 'வம்ஷஸ்யாதீன் ஸனகாதீன் வந்தே' ஆகிய பிரமாண வாக்கியங்களில், பரம்பரையில் வந்த அச்யுத ப்ரேக்ஷர் என்னும் யதிகளிடமிருந்து ஸ்ரீமன்மத்வாசார்யர் யதி ஆசிரமத்தை ஏற்று, அச்யுதப்ரேக்ஷருக்கு, பரம்பரையிலிருந்து வந்த நிரூபிக்கப்பட்ட தத்வங்களையே உபதேசித்து, அதன் சம்பந்தமான அவரின் சந்தேகங்களை போக்கி, அந்த தத்வங்களுக்கு எதிரான வாதங்களை கண்டித்து, வைஷ்ணவ சித்தாந்தத்தை நிறுவினார்.

பிரம்மதேவரிடமிருந்து, ஸ்ரீமத்வாசார்யர் வரையிலான பரம்பரையினரின் விவரத்தை, ஸ்ரீ நாராயண பண்டிதாசார்யர் இயற்றிய 'மணிமஞ்சரி' கிரந்தத்தில் அறியலாம். ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் உபதேசம் செய்தது அந்த வைஷ்ணவ சித்தாந்தமே. உபதிஷ்ட தத்வஞானத்தின் பரம்பரையின் மகிமையை விளக்கியவாறு, ஸித்தாந்தத்தின் ப்ராமாண்யத்திற்கு பரம்பரையின் முக்கியத்துவத்தை தெரிவித்து, தன் உபதேசத்திற்கு எதிர்மறையான வேறு பரம்பரையை கூறுகிறான்.

இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்ஷவாஹமவ்யயம் |
விவஸ்வான்மனவே ப்ராஹ மனுரிக்ஷ்வாக வேऽப்ரவீத் |

ஏவம் பரம்பராப்ராப்தமிமம் ராஜர்ஷயோ விது: |
ஸ காலேனேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப ||
ஸ ஏவாயம் மயா தேsத்ய யோக: ப்ரோக்த: புராதன: |
பக்தோஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேதத்துத்தமம் || (கீதை)

ஸ்ரீகிருஷ்னன் கூறுகிறான்.
பரமாத்மனை அடைவதற்கு முக்கிய சாதனமான நிவ்ருத்த கர்மத்தின் லட்சணத்தின், யோகம் என்று அழைக்கப்படும் ஞானோபாயத்தை, நான் முதலில் சூரியனுக்கு உபதேசித்தேன். சூரியன் தன் மகனான (ஷ்ராத்ததேவ) மனுவிற்கு உபதேசம் செய்தான். மனு, தன் மகனான இக்ஷ்வாகுவிற்கு உபதேசம் செய்தான். இக்ஷ்வாகுவிடமிருந்து பரம்பரையாக இந்த ஞானம், ராஜரிஷிகளுக்கு கிடைத்தது. பல்லாண்டு காலங்கள் கழித்து, இந்த யோகஞானம் நஷ்டமடைந்தது. நீ என் பக்தனும், நண்பனும் ஆகியிருப்பதால், அனாதியான இந்த ரகசியத்தையே மிகவும் கௌரவத்துடன் உனக்கு உபதேசம் செய்திருக்கிறேன்.

கீதோபதேசமே வைஷ்ணவ சித்தாந்தம் என்பதை ஸ்ரீமதாசார்யர் தம் கீதா பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறார். வைஷ்ணவ சித்தாந்த தத்வங்களை தொகுத்து, ஸ்ரீவ்யாஸதீர்த்தர் புகழ்பெற்ற இந்த ஸ்லோகத்தில் நிருபித்திருக்கிறார்.

ஸ்ரீமன் மத்வமதே ஹரி: பரதர: ஸத்யம் ஜகத்தத்வதோ
பேதோ ஜீவகணா: ஹரேரனுசரா நீசோச்சபாவம் கதா: |
முக்திர் நைஜ ஸுகானுபூதிரமலாம் பக்திஷ்ச தத்ஸாதனம்
ஹ்யக்ஷாதி த்ரிதயம் ப்ரமாணமகிலாம்னாயைக வேத்யோ ஹரி: ||

இதன் பொருள்: 1. ஸ்ரீஹரியே ஸர்வோத்தமன். 2. ஜகத் ஸத்ய 3. ஜீவ கணங்கள் (ஸ்ரீஹரியிடமிருந்து மற்றும் தமக்குள்) வேறுபட்டவை. 4. மற்றும் விஷ்ணுவின் பக்தர்கள் 5. ஜீவர்களில் பரஸ்பரம் தாரதம்யம் உள்ளது. 6. ஸ்வஸ்வரூபானந்தத்தின் ஆவிர்பாவமே முக்தி 7. ஷுத்தமான பக்தியே முக்திக்கு காரணம் 8. ப்ரத்யக்ஷ, அனுமான மற்றும் ஆகமங்கள் என்று பிரமாணங்கள் மூன்றே 9. ஸ்ரீஹரியே ஸர்வவேத முக்ய பிரதிபாத்யன் (வேதகம்யன் - வேதங்களிலிருந்தே அறியப்படுபவன்). இந்த ஒன்பது பிரமேயங்கள், வைஷ்ணவ சித்தாந்தத்தின் நவரத்னங்களைப் போல உள்ளது.

**5. அத ஏவ ப$^4$க$^3$வத் பரமானுக்$^3$ரஹ பாத்ரபூ$^4$தானாம், ஸர்வதா$^3$ ப$^4$க$^3$வதா$^3$க்ஞுயா ப$^4$க$^3$வத் ஸன்னிதெள$^4$ பூஜ்யானாம் ததா$^2$ ப$^4$க$^3$வதா$^1$ த$^3$த்த வராணாம்**

அத ஏவ - இவ்வாறு பகவத் ஆணையை மிகவும் பக்தியுடன் நிறைவேற்றியதால்; பகவத் பரமானுக்ரஹ பாத்ரபூதானாம் - பகவந்தனின் விசேஷ அருளுக்கு பாத்திரரான; ஸர்வதா - அனைத்து காலங்களில்; பகவதாக்ஞுயா - பகவந்தனின் ஆணையினால்; பகவத் ஸன்னிதௌ - பகவந்தனின் எதிரில்; பூஜ்யானாம் - (பக்தர்களால்) பூஜிக்கப்படும்; ததா - அப்படி; பகவதா - ஸ்ரீஹரியினால்; தத்த வராணாம் - கொடுக்கப்பட்ட வரம் உள்ளவரான (ஸ்ரீமதானந்த தீர்த்தரின்).

துர்மதங்களை கண்டித்து வைஷ்ணவ மத ப்ரதிஷ்டாபக பாஷ்யாதி கிரந்தங்களை இயற்றி, ஸ்ரீஹரிக்கு சமர்ப்பித்ததால், ஸ்ரீஹரி மகிழ்ந்ததைப் போல, (வாயுதேவரின் மேல் எப்போதும் மகிழ்ச்சியுடனே இருப்பவன்), தன் பூஜாதி காலங்களில், தன் எதிரில் ஸ்ரீவாயுதேவரும் பூஜிக்கப்படுவதைப் போல வரம் அளித்து அருளினார். ஆகையால், ரமா நாராயணரின் பூஜை ஆனபிறகு, ஸ்ரீமுக்ய பிராணனின் பூஜையை கண்டிப்பாக செய்யவேண்டும். இல்லையெனில், ஸ்ரீஹரியின் பூஜையே முழுமையாவதில்லை. ஸ்ரீஹரி மகிழ்வதில்லை.

** ஸ்ரீவாயுதேவரின் வேத பிரஸித்த அவதாரங்கள் மூன்று: ஹனும, பீம, மத்வ. ஸ்ரீஹரி எப்போதும் ஸ்ரீவாயுதேவரின் மேல் மிகவும் அன்பு கொண்டிருக்கிறான். அவர் எப்போதும் ஸ்ரீஹரியின் விசேஷ அருளுக்கு பாத்திரர் என்பது, இந்த மூன்று அவதாரங்களின் சரித்திரங்களிலிருந்து தெரிய வருகிறது.

ஹனுமத் அவதாரத்தில் செய்திருக்கும் அபாரமான சேவையினால் மகிழ்ந்த ஸ்ரீராமசந்திரன், இத்தகைய சேவைக்கு ப்ரதியாகி, தக்க காலத்தில் மோட்சத்தையே கொடுத்தாலும் அது குறைவே என்று சொல்லி ‘ஸஹபோக’ த்தை கொடுத்தான் மற்றும் ஸ்வேச்சையினால் முக்த ஸ்தானங்களை பிரவேசித்து, தன் தரிசனாதிகளை அடையும் அனுமதியையும் அருளினான். தன் ஒரு ரூபத்தை (ஸ்ரீராம ரூபத்தை) ஹனுமந்தனுக்கு கொடுத்து, நித்ய தரிசன பாக்கியத்தை கொடுத்தான். அனைத்து ஜீவர்களைவிட அதிகமான

பக்தியையும் அருளினான். ஸஹபோகத்தைவிட அதிகமான விசேஷ அருள் என்பதில்லை. ஸர்வ ஷுப கர்ம பல போக்தனான ஸ்ரீஹரியுடன், பிரம்மாண்டத்தில் உள்ள அனைத்து சஜ்ஜனர்கள் பின்பற்றும், அனைத்து ஷுப கர்ம பலன்களை ஸத்யலோகாதிபதியாக இருந்துகொண்டு, போகிப்பதே 'ஸஹபோகம்' ஆகும்.

போகாஷ்ச யே யானி ச கர்மஜாதான்யனாத்யனந்தானி மமேஹ ஸந்தி |
மதாக்ஞயா தான்யகிலானி ஸந்தி தாது: பதே தத்ஸஹபோக நாம ||
(பா. தாத்.)
என்று ஸஹபோகத்தை வர்ணித்திருக்கிறார்.

பீமாவதாரத்தில் பூபாரஹரண காரியத்தில் ஸ்ரீகிருஷ்னனுக்கு, பீமனாக இருந்து சேவை செய்தவர் வேறு யாரும் இல்லை. அதைப் போலவே, ஸ்ரீகிருஷ்ணனுக்கு பீமன் மேல் இருந்த அன்பு வேறு யார் மீதும் இருந்திருக்கவில்லை. துரியோதனாதி 100 துஷ்ட சகோதரர்களையும், கீசகனையும், நூற்றுக்கணக்கான உப கீசகர்களையும் பீமசேனதேவர் கொன்றார். ஜராஸந்த, பக, கிர்மீராதி பல வீரர்களைக் கொன்று, இந்த செயல்களை ஸ்ரீகிருஷ்ணனுக்காக செய்யும் யக்ஞும் என்று சிந்தித்து, ஸ்ரீகிருஷ்ணனிடமே அவற்றை சமர்ப்பித்தார். இதன் பின், ஸ்ரீகிருஷ்ணனின் அன்பிற்கு பீமசேனதேவரைத் தவிர வேறு யார் பாத்திரம் ஆகமுடியும்?

மூன்றாம் அவதாரத்தில், ஸ்ரீமதானந்த தீர்த்தராக அவதரித்து, ஸ்ரீஹரியின் ஆணையை நிறைவேற்றினார். கலியுகத்தில், கலியினால் பாதிக்கப்பட்டு, கலியிலிருந்து வேறுபாடு இல்லாத, கலியின் நித்ய ஸ்தானமான அந்தம்தமஸ்ஸினையே அடையச் செயுயும் மாயாவாத உடனான அனைத்து துர்மதங்களையும் கண்டித்து, யுக்தியுடன், தக்க பிரமாணங்களுடன், ஸத்வைஷ்ணவ சித்தாந்த தத்வங்களையும் நிறுவியது, சாதாரணமான சேவையா? அல்ல. ருத்ராதி அன்ய தேவதைகளாலும்கூட சாத்தியமில்லாத காரியம் இது. இதனால் மகிழ்ந்த ஸ்ரீவேதவ்யாஸரூபி ஸ்ரீ நாராயணன், சூத்ர பாஷ்யத்தை ஸ்ரீமதாசார்யர் தமக்கு சமர்ப்பித்தபோது, பிரதம அவதாரத்தில் அருளிய ஸஹபோகத்தையே மேலும் அளிக்கிறேன் என்று விசேஷ அனுக்கிரகம் செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸஹபோகமனன்ய லப்யமஸ்ம்யை ஹனுமத்ரூபவதே ததௌ புரா

ஹி | அனவேக்ஷ்ய பரம்ஸ்வபீஷ்டகார்த்ரே ப்ரதிதாதும் ஹரிரைதயத்தமேவ || (மத்வ விஜய).

இவ்வாறு இந்த மூன்று அவதாரங்களிலும் மற்றும் முக்யபிராணனாகி அனந்த ரூபங்களால் செய்த பகவத் காரியங்களை சரியாக செய்து முடிப்பவர்கள் ஸ்ரீவாயுதேவரைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆகையாலேயே, இவரைவிட ஸ்ரீஹரியின் அருளை அதிகமாக பெற்றவர்கள் வேறு யாரும் இல்லை. பக்தி ஞானாதி ஸத்குணங்களில் இவருக்கு சமானம் வேறு யாரும் இல்லை. இனி யாரும் வரப்போவதும் இல்லை. இவர் ஸ்ரீஹரியின் ஏகாந்த பக்தர்களில் சிறந்தவர். ஆகையாலேயே, 'ஹனுமதோ ந ப்ரதிகர்த்ருதா ஸ்யாத் ஸ்வபாவபக்தஸ்ய நிரௌபதம் மே' (பா. தாத்.). என்னை வணங்கும் மற்றவர்களுக்கு மோட்ச தானம் என்பது ப்ரதி உதவியாகும். ஆனால், ஸ்வபாவ பக்தனான ஹனுமந்தனுக்கு, அவனுடைய சேவைக்கு தக்க எந்த பலன்களையும் கொடுப்பது சாத்தியம் இல்லை என்று ஸ்ரீராமசந்திரன் கூறியிருக்கிறான். ஏகாந்த பக்த ஸ்ரேஷ்டர் ஸ்ரீவாயுதேவர் என்றால், ஏகாந்த பக்தர் யார்? அவருடைய லட்சணங்கள் என்ன என்பதை அறிய வேண்டும் அல்லவா?.

யதி தத்யாத்சகியோகபலம் மோக்ஷமபீஷ்வர: | பக்தியோக பலத்வேன ந தத்க்ருண்ஹீயுரேவ தே || (பாக தாத் 11ம் ஸ்கந்தம்). பக்தி யோக்யத்தின் பலன் என்று ஸ்ரீஹரி, மோட்சத்தைக் கொடுத்தால், பக்தியின் பலனாக மோட்சத்தை ஏற்றுக் கொள்வதில்லை என்று 'னேச்சந்தி ஸாயுஜ்யமபி பலத்வேன ஹரிர்யதி | ததாதி பதிஸந்துஷ்ட ஆக்ஞாத்வேனைவ க்ருண்ஹதே ||' (பாக தாத் 3ம் ஸ்கந்தம்) - பக்தியினால் மகிழ்ந்து ஸ்ரீஹரி சாயுஜ்ய முக்தியை கொடுத்தாலும், அதனை பலன் ரூபமாக ஏற்றுக் கொள்ள விரும்புவதில்லை. ஆனால், ஸ்ரீஹரியின் ஆணைப்படி ஏற்றுக் கொள்கிறார் என்றும், ஏகாந்த பக்தர்களின் ஸ்வபாவத்தை விளக்கியிருக்கிறார். இத்தகைய ஏகாந்த பக்தர்க்ள் யார் என்றால், 'ஏகாந்தபக்தாஸ்தே ப்ரீதிமாத்ரோத்தேஷ்யாஸ்ததா ஹரே: | ஸர்வேச ஸோமபா: ப்ரோக்தா: ஸபார்யாஸ்த்ரிதிவௌகஸ: || (ஸ.ர.மாலா). ஸ்ரீஹரி ப்ரீதி ஒன்றையே வேண்டும் ஏகாந்த பக்தர் என்றால், ஸோமபான அர்ஹரான தேவதைகள் மற்றும் அவர்களின் மனைவியர்' என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. 'நவகோட்யோ ஹி தேவானாம்

தேஷாம் மத்யே ஷதஸ்ய து | ஸோமாதிகாரோ வேதோக்தோ பிரம்மணி த்வேஷதாதிகே | யதாததைவாஸங்க்யேயா: ப்ரஜாஸ்தாஸு கியான் ஜன: | ஞானாதிகாரீ ஸம்ப்ரோக்தோ விஷ்ணுபாதைக ஸம்ஸ்ரய: || (பாஷ்ய). அதாவது ஒன்பது கோடி புகழ்பெற்ற தேவதைகளில் பரபிரம்ம (பரமாத்ம) மற்றும் அபரபிரம்ம (பிரம்ம), இவர்களுடன் வெறும் 100 தேவதைகளுக்கு மட்டுமே ஸோமபானத்தில் அதிகாரம் இருக்கிறது. இதைப் போல, அனைத்து ஜீவர்களிலும், விஷ்ணுவை சரணடைந்த சிலருக்கு மட்டுமே, ஞானாதிகாரம் உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிரது. ஸோமபான அர்ஹரான அந்த 102 தேவதைக்ள் யார் என்றால்: பரபிரம்ம - 1; சதுர்முக பிரம்மன் - 1; பிரதான வாயு - 1; மருத்கண - 49; ஆதித்யர் - 12; ருத்ரர் - 11; வஸுகள் - 8; அஷ்வினி தேவதைகள் - 2; த்யாவா ப்ருதிவி - 2; ருஜுகண - 1; ப்ருஹஸ்பதி - 1; விஷ்வேதேவதைகள் - 10; பித்ரு தேவதைகள் - 3; என மொத்தம் 102 பேர் ஸோமபான அர்ஹர் ஆவர். இவர்களில் பரபிரம்மனிலிருந்து வேறுபட்ட இதர 101 பேர் ஏகாந்த பக்தர்கள். அவர்களில் வாயுபிரம்மர் சிறந்தவர் ஆவர்.

** ஸ்ரீஹரியின் அருளால், ஸ்ரீவாயுதேவர் எப்போதும் பூஜ்யர், அனைவராலும் ஸ்ரீஹரிபூஜா ஸாபல்யத்திற்காக தவறாமல் பூஜிக்கப்பட வேண்டியவர். இவர் இருக்கும் இடத்தில், ஸ்ரீஹரி இருந்தே இருக்கிறான். பிரம்மாண்டத்தில் ஸ்ரீஹரி இருக்கும் இடத்திலெல்லாம் (அனைத்து இடங்களிலும்) ஸ்ரீவாயுதேவர் இருந்தே இருக்கிறார். இவர் இல்லாத இடத்தில் ஸ்ரீஹரியும் இருப்பதில்லை. பிரம்மாண்டத்திற்குள் மட்டும் இந்த இருவரின் வ்யாப்தி இவ்வாறு உள்ளது.

ஸ்ரீவாயுதேவரின் இவ்விதமான வ்யாப்தியும் ஸ்ரீஹரியின் விசேஷ அருள் பலத்தினால் ஆகிறது. ஸ்ரீஹரியின் அசிந்த்ய ஷக்தியினாலேயே இவர் அனந்தாம்ஷங்களால் விபக்தராக அனைத்து இடங்களிலும் இருக்கிறார். ஆகையால், ஸ்ரீஹரி வாயுகளின் சான்னித்யத்திற்கு என்றும் பிரிவில்லை. அத்யாத்மாதிகளில் இவ்வாறு இருவரின் ஸான்னித்யம் இருக்கையில், ஸ்ரீவாயுதேவரின் அவதார ரூபங்கள்கூட ஸ்ரீஹரி ஸான்னித்யத்தில் தேவாதிகளால் பூஜிக்கப்படுகிறது. உடுப்பி க்ஷேத்திரத்தில் ஸ்ரீஅனந்தேஷ்வர சன்னிதியில் ஐதரேய உபநிஷத் பாஷ்ய பிரவசனத்தை செய்து

கொண்டிருக்கையில், ஆகாய மார்க்கத்தில், தேவ, கந்தர்வ, ருஷிகள் நின்று தேவலோகத்தின் புஷ்பங்களை தூவினர். விஜய மஹோத்ஸவத்தின் சந்தர்ப்பத்திற்காக பூஜித்தனர் என்று ஸ்ரீசுமத்வ விஜயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

**6. த்$^{3}$வாத்ரிம்ஶல் லக்ஷணோ பே$^{1}$தானாம், ததா$^{2}$ ஸமக்$^{3}$ர கு$^{3}$ருலக்ஷணோபேதானாம், அஸம்ஶயானாம் ப்ரஸாத$^{3}$மாத்ரேண ஸ்வப$^{4}$க்தா ஶேஷ$^{2}$ ஸம்ஶயச்சேத்ரூணாம்**

த்வாத்ரிம்ஷல்லக்ஷணோ பேதானாம் - 32 லட்சணங்களைக் கொண்டவரும்; ததா - மற்றும் ஸமக்ர குருலக்ஷணோபேதானாம் - அனைத்து ஸத்குரு லட்சணங்களைக் கொண்டவரும்; அஸம்ஷயானாம் - சந்தேகம் அற்ற தத்வஞானத்தைக் கொண்டவரும்; ப்ரஸாதமாத்ரேண - மகிழ்ந்து அருள்வதாலேயே; ஸ்வபக்தா ஷேஷ ஸம்ஷயச்சேத்ரூணாம் - தம் பக்தர்களின் அனைத்து சந்தேகங்களை பரிகரிப்பவருமான (ஸ்ரீமதானந்ததீர்த்தரின்)..

ஸ்ரீவாயுதேவர் ஸத்குருகளில் இருக்கவேண்டிய அனைத்து நல்ல லட்சணங்களைக் கொண்டவர்; அவருடைய தேகம், லட்சண சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும், ஜகத்குருகளுக்கு இருக்கவேண்டிய, 32 நல்ல லட்சணங்களைக் கொண்டிருக்கிறது (அவதாரங்களிலும் கூட). ஸத்குருகளின் முக்கிய லட்சணமான சந்தேகமற்ற ஞானம் உள்ளவர் மற்றும் தம்மை பக்தியுடன் நம்பி வணங்கும் பக்தர்களின் அனைத்து சந்தேகங்களையும் பரிகரித்து, நிஸ்சய ஞானத்தைக் கொடுக்கும் சாமர்த்தியம் உள்ளவர்.

** அஸம்ஷய: ஸம்ஷயபித்குருருக்தோ மனீஷிபி: |
தஸ்மாத்ப்ரம்மா குருர்முக்ய: ஸர்வேஷாமேவ ஸர்வதா ||
அன்யேபிஸ்வாத்மனோ முக்யா: க்ரமாத்குரவ ஈரிதா: |
க்ரமால்லக்ஷணஹீனாஷ்ச லக்ஷணாலக்ஷணை: ஸமா: || (பா. தாத்)

சந்தேகமற்ற ஞானம் உள்ளவனாகி, சிஷ்யர்களின் சந்தேகங்களை பரிகரிக்கத் தக்கவரே குரு என்று ஞானிகள் சொல்கின்றனர். இந்த லட்சணங்களை முக்கியமாகக் கொண்டிருக்கும் பிரம்மனே, அனைவருக்கும் எப்போதும் முக்கிய குரு ஆகிறார். தம்மைவிட உத்தமரான அனைவரும், முறையே குருகளே. இந்த ஸ்வோத்தம

குருகள் அனைவரும் அவர்களுடைய ஸ்வரூப யோக்யதா தாரதம்யத்திற்கு ஏற்ப, கீழே இருப்பவர்கள் முறையே லட்சணங்களால் குறைவானவர்கள். இன்னும் கீழானவர்கள், லட்சண, அவலட்சணங்கள் சமமாக உள்ளவர்களும் ஆகின்றனர். இத்தகைய ஜகத்குருவின் தேக லட்சணமும் அங்கேயே (பா. தாத்) வர்ணிக்கப்பட்டுள்ளது.

ஷண்ணவத்யங்குலோ யஸ்து ந்யக்ரோதபரிமண்டல: |
ஸப்தபாதஷ்சதுர்ஹஸ்தோ த்வாத்ரிம்ஷல் லக்ஷணைர்யுத: ||

அதாவது, பாதத்திலிருந்து நெற்றி வரை, 96 அங்குல உயரம் தேகம் கொண்டவராக இருக்க வேண்டும். அந்த தேகம் 48 அங்குல சுற்றளவு கொண்டிருக்க வேண்டும். ஒரு பாதத்தின் 7 அளவு என்பது, ஒரு கையின் 4 அளவிற்கு சமமாக இருக்க வேண்டும். 32 லட்சணங்களைக் கொண்டிருக்க வேண்டும். இவ்விதமாக ஞான மற்றும் தேகம் இரண்டிலும் அனைத்து லட்சணங்களையும் கொண்டவர் பிரம்மதேவர் ஒருவரே. 'வாயுர்ஹி பிரம்மதாமேதி தஸ்மாத் பிரம்மைவ ஸ ஸ்ம்ருத:' (ஸ.ர.மாலா). ஸ்ரீவாயுதேவரே பிரம்ம தத்வத்தை (பிரம்ம பதவியை) அடையப் போவதால், அவர் பிரம்மன் என்றும் அழைக்கப்படுகிறார். ஆகையால், வாயு அவதாரரான ஸ்ரீமதானந்த தீர்த்தரே முக்ய குருகள் - அனைவரின் குருகள் ஆனதால் ஜகத்குரு - அவரே குருஸார்வபௌமர். வாயு ஆவேஷ யுக்தர் ஆனதாலேயே ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள், குருஸார்வபௌமர் என்று ஞானிகளால் அழைக்கப்படுகிறார்.

ஜகத்விஷயகமான அனைத்து பூர்ண ஞானத்தைக் கொண்டவர் ஸ்ரீவாயுதேவர். இந்த அனைத்தையும் சிந்திப்பதாலேயே அறியும் சக்தி கொண்டவர். அனாதி காலத்திலிருந்து அபரோக்ஷம் உள்ள, தேவதா கணத்திற்கெல்லாம் சிறந்ததான ருஜுகண என்னும் தேவ கணத்தை சேர்ந்தவர். பிரம்ம பதவி யோக்யர். அவருடைய ஞானம் ஸர்வதா யதார்த்தத்தை கிரகிக்கிறது. சந்தேக, பிரமைகள் அவரிடம் இல்லை. ருத்ராதி தேவ ஸ்ரேஷ்டர்களுக்கும் ஞான ப்ரதராக இருப்பவரில், அஞ்ஞான, சந்தேகங்கள் இருப்பதற்கு சாத்தியமே இல்லை. அவரே அனைத்து ஞானாதிகாரிகளுக்கு வரும் அனைத்து சந்தேகங்களையும் பரிகரிக்க வல்லவர். ஸ்வோத்தமர், ஸ்வாவரர் ஆகிய அனைவரின் சந்தேகங்களையும் பரிகரிக்கத் தக்கவரும் இவரே.

** ப்ரஸாதமாத்ரேண ஸ்வபக்தாஷேஷ ஸம்ஷயசேத்ரூணாம் - என்பதின் தாத்பர்யத்தை சரியாக புரிந்து கொள்ள வேண்டும். இங்கிருக்கும் 'மாத்ர' சொல், வெறும் குரு பிரஸாதத்தினால், சிஷ்யர்களின் அனைத்து சந்தேகங்களின் பரிகாரம் ஆகிறது என்று சொல்வதில்லை. மற்ற சாஸ்த்ர ஸ்ரவண மனனாதி விஷயங்கள் இருந்தாலும், அவற்றிலிருந்து கிடைக்காத பலன் ( நிஸ்சய ஞானம்), குரு பிரஸாதத்தினால் மட்டுமே கிடைக்கிறது என்னும் அர்த்தத்தை சொல்கிறது. இவ்வாறான குரு பிரஸாதத்தின் மகிமையை 'ஓம் லிங்கபூயஸ்வாத் தத்தி பலீயஸ்ததபி ஓம்' என்னும் ஸூத்ரத்தில் ஸ்ரீ பாதராயணர் கூறியிருக்கிறார். அந்த ஸூத்ரத்தின் அர்த்தம் இவ்வாறு உள்ளது: லிங்கபூயஸ்த்வாத் - (உண்மையான சரித்திரங்களில்) குரு பிரஸாதத்திற்கு பற்பல பிரபல லட்சணங்கள் தெரிய வருவதால், தத் - அதே (குருபிரஸாதமே, பிரம்ம ஞான ப்ராப்தி விஷயங்களில்), பலீய: - பிரபல காரணம் எனப்படுகிறது; ததபி - அப்படியிருந்தாலும், ஸ்ரவணாதிகளை செய்தே ஆகவேண்டும். குருப்ரஸாதோ பலவான் ந தஸ்மாத் பலவத்தர: - ஆகிய புராண வாக்கியங்கள் குரு பிரஸாதத்தை பிரம்மஞான காரணங்களில் முக்கியமானவை என்று கூறுகிறது. 'பலீயஸ்தம குருப்ரஸாதரூபேதி கர்தவ்யதாயுக்த ஷ்ரவணாத்யுபாஸா கோசராய நம:' என்று ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள் தம் அதிகரண நாமாவளியில் இந்த அதிகரணார்த்தத்தை தொகுத்து நிரூபித்திருக்கிறார்.

**7. ப்ரணவாத்[3]யஶேஷ[2] வைஷ்ணவ மந்த்ரோத்[3]தா[4]ரகாணாம், ஸர்வதா[3] ஸர்வ வைஷ்ணவ மந்த்ர ஜாபகானாம் ஸம்ஸித்[3]த[4] ஸப்தகோடி மஹாமந்த்ராணாம்,**

ப்ரணவாதி - ஓம்காரமே முதலான; அஷேஷ வைஷ்ணவ மந்த்ர - அனைத்து விஷ்ணு ப்ரீதிகரமான மந்திரங்களை; உத்தாரகாணாம் - வெளிப்படுத்துபவரான; ஸர்வதா ஸர்வ வைஷ்ணவ மந்த்ர ஜாபகானாம் - எப்போதும் அனைத்து வைஷ்ணவ மந்திரங்களை ஜபம் செய்பவரும்; ஸம்ஸித்த ஸப்தகோடி மஹாமந்த்ராணாம் - ஏழு கோடி மஹா மந்திரங்களின் ஸித்தியை பெற்றவருமான (ஸ்ரீமதாசார்யரின்);

பிரணவாதி அஷ்ட மஹாமந்திரங்கள் என்று புகழ்பெற்ற மந்திரங்கள் விஷ்ணுவை மகிழ்விக்கக்கூடியதான சிறந்த ஸாதனங்கள் ஆகும்.

இவற்றை வெளிப்படுத்துபவரான ஸ்ரீவாயுதேவர் - அதாவது, மூல தந்த்ரஸாரத்தினால் (ஸ்ரீஹரி மூலரூபத்தினால் சதுர்முகனுக்கு உபதேசித்த அதி விஸ்தாரமான தந்த்ரஸாரத்தினால்) அனைத்து அபீஷ்டங்களான கல்பவ்ருட்சத்தைப் போல இருக்கும் சில முக்கிய பாகங்களை தொகுத்து, தம் 'தந்த்ரஸார' கிரந்தத்தை ஸ்ரீமத்வரூபத்தினால் இயற்றினார். அனைத்து வைஷ்ணவ மஹாமந்திரங்களையும், தேவ ரகசியங்களான ஏழு கோடி மஹா மந்திரங்களையும் எப்போதும் ஜெபித்தவாறு ஸ்ரீவிஷ்ணு ப்ரஸாதத்திற்கு முழுமையாக பாத்திரர் ஆகி, அந்த மந்திரங்களின் (வைஷ்ணவ மந்திரங்களின்) பிரபாவத்தை சஜ்ஜன லோகத்திற்கு தெரிவித்தவாறு, நிதர்ஷகராக இருப்பவர் - ஸ்ரீமதாசார்யர்.

** பிரணவாதி அஷ்ட மஹாமந்திரங்கள், ஜபக்ரம, அதற்கு முன்னால் பின்பற்ற வேண்டிய ந்யாஸங்கள் ஆகிய விவரங்களை, தந்த்ரஸாரத்தை குருவிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டும். இந்த மந்திரங்களின் ஜபத்தினால் கிடைக்கும் ஸித்தி, ஸ்ரீவிஷ்ணு ப்ரஸாத ரூபமானது. 'கிமலப்யம் பகவதி ப்ரஸன்னே ஸ்ரீநிகேதனே' என்று சொல்வதைப் போல, ஸ்ரீவிஷ்ணு மகிழ்ந்தால், கிடைக்காதது என்று எதுவும் இல்லை - விரும்பிய அனைத்தையும் பெறலாம். இந்த மஹாஸித்தியின் முன் அணிமாதி ஸித்திகள் மிகவும் சிறியதானவை.

அஷ்ட மஹாமந்திரங்கள் எவை என்றால்: 1. ப்ரணவ 2. பூ: புவ: ஸ்வ: மற்றும் பூர்புவஸ்வ: என்னும் 4 வ்யாஹ்ருதிகள் 3. நாராயண அஷ்டாக்ஷர 4. வாஸுதேவ த்வாதஷாக்ஷர 5. காயத்ரி 6. மாத்ருகா 7. புருஷஸூக்த 8. விஷ்ணு ஷடக்ஷர ஆகும். ஸ்ரீமதாசார்யர் தமது தந்த்ரஸாரத்தில் அஷ்ட மஹா மந்திரங்களைத் தவிர, வராஹ, ந்ருஸிம்ஹாதி அனேக பகவத் ரூபங்களின் உபாஸனா மந்திரங்களையும் நிரூபித்திருக்கிறார். மூல தந்த்ரஸாரத்தில் தேவ ரஹஸ்யங்களான அஸங்க்ய வைஷ்ணவ மந்திரங்கள் இருந்து, அவை அனைத்தும் ஸித்தி உள்ளவர் ஸ்ரீவாயுதேவர். வைஷ்ணவ மந்திரங்கள் என்றால், விஷ்ணு பக்தர்களால் வணங்கப்படுபவை. விஷ்ணு ப்ரஸன்னதையை கிடைக்கச் செய்யும் சாமர்த்தியம் உள்ளவை. விஷ்ணு மகிமைகளை விளக்குபவை. விஷ்ணு சாக்

ஷாத்காரத்தை கிடைக்கச் செய்பவை. இவற்றை எப்போதும் ஜெபிக்கும் அதிகாரம் ஸ்ரீவாயுதேவருக்கு மட்டுமே உள்ளது.

* எப்போதும் அனைத்து மந்திரங்களையும் ஜெபிக்கிறார் என்பதை சந்தேகம் கொள்ளக் கூடாது. 'அகிலா வேதா உத்கீர்யந்தேsனிஷம் யத:' (த்வாதஷ ஸ்தோத்ர) என்று ஸ்ரீவாசுதேவனின் கழுத்தின் மகிமை வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நொடியிலும் அனந்த வேதங்கள் உச்சரிக்கப்படுவதான அத்யத்புத கழுத்தினை சிந்திகிறேன் என்று ஸ்ரீமதாசார்யர் சொல்லியிருக்கிறார். ஒரு முறை அனந்த வேதங்களை உச்சரிப்பது சாத்தியமா என்றோ அல்லது இப்படியான பிரயோஜனம் இல்லாத செயல்களை ஸ்ரீஹரி ஏன் செய்கிறார் என்றோ சந்தேகம் வந்தால், அதற்கான சரியான பரிகாரங்களை ஞானிகளின் வியாக்யானங்களில் பார்க்கிறோம். இப்படியான அற்புத மகிமையின் உதாரணத்தை, முக்ய பிரதிபிம்பரான ஸ்ரீவாயுதேவரில் மட்டுமே பார்க்க வேண்டுமே தவிர, வேறெங்கும் பார்க்க முடியாது. இவர் எப்போதும் அனைத்து வைஷ்ணவ மந்திரங்களை ஜெபிப்பது உண்மை - அது அல்ப மானவரின் கற்பனைக்கும் மீறியது. ' நிஜஹ்ருத்கமலேsதி நிர்மலே ஸததம் ஸாது நிஷாமயன்னபி | அவலோக்ய புன: புனர்னவம் தமஸௌ விஸ்மித இத்யசிந்தயத் ||' மற்றும் ' ந ஹி ஹரிம் ஸததம் ந நமத்யஸௌ ந ச ந பஷ்யதி நாபி ந வந்ததே | அபி ததேதி விதாய விசேஷத: ஸ நனு ஸாதுஜனான் ஸமஷிக்ஷயத் ||' என்னும் மத்வவிஜயத்தின் இரு ஸ்லோகங்கள் மேற்கூறிய, வாயுதேவரின் மகிமைகளையே விளக்குகிறது. இந்த ஸ்லோகங்களின் விளக்கம் இவ்வாறு: பரமாத்மனே ஸததமேகரூபிணே தஷரூபிணே ஷத ஸஹஸ்ர ரூபிணே | அவிகாரிணே ஸ்புடமனந்த ரூபிணே ஸுகசித் ஸமஸ்த தனவே நமோ நம: || -- என்று சொல்லப்படும் பரமாத்மனின் அனந்த ரூபங்களை, ஸ்ருதியின்படியான மத்ஸ்யாதி 10, நாராயணாதி 100,விஷ்வாதி 1000, அமிதாதி அனந்த ரூபங்களின் வ்யூகங்களை, எப்போதும் மிகத் தெளிவாக, சச்சிதானந்த ரூபங்களாகவே அபரோக்ஷத்தில் பார்க்கிறார்கள். பரம பரிசுத்தமான தம் ஹ்ருத்கமலத்தில் எப்போதும் அனந்த ரூபங்களை நன்றாக பார்த்து வந்தாலும், எதிரில் இருந்த ஸ்ரீவேதவ்யாஸ ரூபத்தில் திரும்பத்திரும்ப புதிய ரூபங்களை பார்த்தவாறு மிகவும் வியப்புடன் ஸ்ரீஹரியின் ரூபங்களை சிந்திக்கிறார்.

இந்த பாலகன் (வாசுதேவன் - பூர்ணப்ரக்ஞருக்கு தந்தை வைத்த பெயர்). ஸ்ரீஹரியை நிரந்தரமாக நமஸ்கரிப்பதில்லை என்று இல்லை. எப்போதுமே நமஸ்கரிக்கிறான். ஸ்ரீஹரியை எப்போதும் பார்ப்பதில்லை என்றில்லை. எப்போதும் ப்ரத்யட்சமாக பார்க்கிறான். எப்போதும் வணங்குவதில்லை என்று இல்லை; நிரந்தரமாக வணங்குகிறான். இப்படியிருந்தாலும், இவ்வாறு இங்கேயும் நமஸ்காரங்களை செய்து, முக்தியோக்ய ஜீவர்களுக்கு நல்வழியைக் காட்டுகிறான்.

வாயுதேவரை அனந்த மகிமைகளைக் கொண்ட மஹாத்மர் என்றும், ருத்ராதி தேவதைகளாலும் சொல்லி முடிக்கமுடியாத மகிமைகளைக் கொண்டவர் என்று அறிந்து, ஆஸ்சர்ய ஷப்த வாச்யனான ஸ்ரீஹரிக்குப் பின்னர், இவரும் ‘ஆஷ்சர்ய’ என்றே அறியப்பட வேண்டும்.

### 8. ப[4]க[3]வதி ப[4]க்த்யதி[1]ஶயேன ப[4]க[3]வது[3]பாஸனார்த்த[2]ம் ஸ்வேச்சயா க்[3]ருஹீதரூபாணாம்

பகவதி - ஷட்குணைஷ்வர்ய பூர்ணனான ஸ்ரீஹரியில்; பக்த்யதிஷயேன - அதிகமான பக்தியினால்; பகவதுபாஸனார்த்தம் - பகவந்தனை த்யானிப்பதற்காக; ஸ்வேச்சயா க்ருஹீத - தன் விருப்பப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட; ரூபாணாம் - பகவன் மூர்த்திகள் உள்ளவரான.

நிரந்தரமாக ஸ்ரீஹரி த்யானத்தினால் நிரம்பியிருக்கும் தன் பக்திக்கு மெச்சி; மற்றும் த்யானத்தினால் ஆகும் ஆனந்தத்தை வளர்க்கும் சிறப்பான பகவத் மூர்த்திகளை, தன் விருப்பப்படி த்யானம் செய்வதற்காக ஏற்றுக்கொள்ளும் மஹாத்மர், ஸ்ரீமதானந்த தீர்த்தர்.

ஸ்ரீவாயுதேவர், எந்தவொரு பகவத் ரூபத்தில் அனந்த குனங்களை சிந்திக்கும் சாமர்த்தியம் உள்ளவரேயானாலும், குண (மகிமை) த்யானத்தினால் வளர்வதான பக்தியை, பல ரூபங்களை ஒரே காலத்தில் த்யானிப்பதில் ஈடுபட்டிருக்கும் மகாத்மர் இவர். ஒவ்வொரு நொடியும் தொடர்ந்து வளர்வதான பக்தியைக் கொண்டவர். முக்தி வரைக்கும் இத்தகைய வளர்ச்சியைக் கொண்ட மகாபக்திமான்.

இதையே ஹனுமத் அவதாரத்தில்கூட வரமாக ஸ்ரீராமசந்திரனிடம் கேட்டிருந்தார்.

ப்ரவர்த்ததாம் பக்திரலம் க்ஷணே க்ஷணே த்வயீஷ மே ஹ்ராஸவிவர்ஜிதா ஸதா | அனுக்ரஹஸ்தே மயி சைவமேவ (பா தாத்) || ஹனுமந்தனின் சேவைக்கு மிகவும் மகிழ்ந்த ஸ்ரீராமன், வரத்தைக் கேள் என்றபோது, உபாதி நிமித்தம் இல்லாத, குறைவு இல்லாத, ஒவ்வொரு நொடிக்கும் வளர்வதான பக்தியை கேட்டுக் கொண்டான் என்று கேட்கிறோம்.

**9. தத்ர தத்ர ப்ருத$^2$க் ப்ருத$^2$க் ப$^4$க$^3$வத: அனந்த ரூபேஷு$^2$ ப்ருத$^2$க் ப்ருத$^2$க் வேதோ$^3$க்த தத$^3$னுக்த பா$^4$ரதோக்த தத$^3$னுக்த ஸம்ப்ரதா$^3$யாக$^3$த ஸ்வேதர ஸ்வாபி$^4$ன்னதயாபி அஶேஷ$^2$ஶக்தி விஶேஷா$^2$ப்$^4$யாம் ப்ருத$^2$க்$^3$ வ்யவஹார விஷ$^2$ய ஸர்வ ஸாமர்த்$^2$யோபேத நிரவதி$^4$க அனந்தானவத்ய கல்யாண கு$^3$ணபரிபூர்ண அனந்தகு$^3$ணோப ஸம்ஹத்ருணாம்**

தத்ர தத்ர - த்யானத்திற்காக பெற்றுக்கொண்ட பகவந்தனின் ரூபங்களில்; ப்ருதக் ப்ருதக் - தனித்தனியாக (ஒவ்வொரு ரூபத்திலும்) இருக்கும்; பகவத: - பகவந்தனின்; அனந்த ரூபேஷு - அனந்த ரூபங்களில்; ப்ருதக் ப்ருதக் - ஒவ்வொன்றிலும்; வேதோக்த ததனுக்த பாரதோக்த - வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் மற்றும் வேதங்களில் சொல்லப்படாமல் பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கும்; ததனுக்த - பாரதத்தில் கூட சொல்லப்படாத; ஸம்ப்ரதாயாகத - ஞானி ஸம்ப்ரதாய ப்ராப்தமான; ஸ்வேதர ஸ்வாபின்னதயா - தன்னிலிருந்து வேறுபட்டும், வேறுபடாமலும் இருந்ததைப் போல; அஷேஷஷக்தி விஷேஷாப்யாம் - (ஸர்வஷக்தி) எண்ண முடியாத சக்தி மற்றும் 'விசேஷ' என்னும் இந்த இரண்டின் சிறப்பினால்; ப்ருதக் வ்யவஹார விஷய - தனித்தனியாக விளக்கக்கூடிய; ஸர்வ ஸாமர்த்யோபேத - ஸர்வஷக்தி சகிதமான; நிரவதிக அனந்தானவத்ய - நித்யமும், அனந்தமும், சிறப்பானதுமான; கல்யாண குணபரிபூர்ண அனந்தகுணோப ஸம்ஹத்ருணாம் - ஷுபகுண பரிபூர்ணனான ஸ்ரீஹரியின் அனந்த குணங்களை தொகுத்து கூறத்தக்கவருமான...

ஸ்ரீமதானந்த தீர்த்தர் சிந்திப்பதான பல பகவத் ரூபங்களில், ஒவ்வொன்றும் அனந்த ருபங்களைக் கொண்டவை. அவற்றில் ஒவ்வொரு ரூபமும், வேதத்தில் சொல்லியிருக்கும், அங்கு சொல்லப்படாமல், மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கும், மற்றும் அங்கும் சொல்லப்படாத அனந்த கல்யாண குனங்களால் பூர்ணமானவை. அல்பத்வ, அபூர்ணத்வ, தோஷங்கள் ஆகியவை இல்லாதவை. அந்த குணங்கள் ஒவ்வொன்றும் பகவந்தனிடமிருந்து அபின்னமே. அதாவது, அவை அனைத்தும் அவனுடைய ஸ்வரூபமே ஆகும். பரமாத்மன் ஸர்வகுண ஸ்வரூபனே ஆகியிருக்கிறான். இவ்வாறு இருந்தாலும், அந்த குணங்கள் (ஞான ஆனந்தாதிகள்) பகவந்தனிடமிருந்து வேறுபட்டிருப்பதைப் போல (பகவந்தனின் ஞானம், பகவந்தனின் ஆனந்தம், பகவந்தனின் ஸ்வாதந்த்ர்ய ஆகியவை) தெரியலாம். பகவந்தனின் ஸ்வரூபத்திலிருந்து வேறுபடாமல் இருக்கும் 'விசேஷ' என்னும் தர்மமும், அசிந்த்ய ஷக்தியும், அபேதம் இருந்தாலும் பேதத்தை சொல்வதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. ஸ்ரீவாயுதேவர், ஒவ்வொரு பகவத் ரூபத்தையும் அதன் அனந்த கல்யாண குணங்களுடன் ஒரே காலத்தில் சிந்தித்து, த்யானிக்கிறார். இதையே குணோபஸம்ஹார பூர்வகமான த்யானம் என்கிறார்கள்.

** பகவந்தன் ஷட்குணைஷ்வர்ய பூர்ணன். ஆகையால், 'பகவான்' என்று அழைக்கப்படுகிறான். 'ஐஷ்வர்யஸ்ய ஸமக்ர்யஸ்ய வீர்யஸ்ய யஷஸ: ஷ்ரிய: | ஞான விக்ஞானயோஷ்சைவ ஷண்ணாம் பக இதீரணா ||' பூர்ணங்களான ஐஷ்வர்ய, வீர்ய, யஷஸ், ஒளி, ஞான, விக்ஞான என்னும் ஆறு பிரதான குனங்கள் 'பக' என்று அழைக்கப்படுகின்றன. இந்த ஆறு யாரிடம் இருக்கிறதோ, அவன் 'பகவான்' .

** பகவந்தனின் ஒவ்வொரு ரூபத்திலும் அனந்த ரூபங்கள் உள்ளன. இந்த ப்ரமேயத்தை ஸ்ரீஜகன்னாததாசர் இவ்வாறு நிரூபித்திருக்கிறார்.

ஒந்து ரூபதொளனந்த ரூபவு பொந்திப்பவு குண கண ஸஹித
ஹிந்து முந்து எந்தெந்திகு ஸ்ரீகோவிந்தகெ ஸரிமிகி
யில்லெந் தெம்புதே பலவிது பாள்துதக்கெ ||

இப்படியான அற்புத மகிமைகளைக் கொண்டவன் ஸ்ரீஹரி. ராம ரூபத்தில், கிருஷ்ணாதி ரூபங்கள் அனைத்தும் இருக்கின்றன. கிருஷ்ண ரூபத்தில், ராமாதி ரூபங்கள் இருக்கின்றன. தன் விருப்பப்படி ஒரு ரூபத்தை உலகிற்கு காட்டிக் கொள்கிறான். கிருஷ்ண ரூபத்தில் ராம ரூபத்தையும் ஜாம்பவந்தனுக்கு காட்டியதான புராணத்தில் சொல்லப்பட்டுள்ள ஸ்ரீஹரியின் லீலைகள் இந்த பிரமேயத்தை விளக்குகிறது. ஒவ்வொரு ரூபமும் அனந்தகுண பூர்ணமானவை.

ஸரஸ பாரதி விலாஸத்தில் இது இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது. ஸ்ரீஹரியின் அனந்த ரூபங்களில் ஒவ்வொன்றும் அனந்த குண பூர்ணமானவை. ஒவ்வொரு குணமும் (தனித்தனியாக) அனந்தமானவை. ஒவ்வொரு குணமும் ஸர்வகுணாத்மகமும் ஆனவை (ஞானத்தில் ஆனந்தாதிகளும்; ஆனந்தத்தில் ஞானாதிகளும் இருக்கின்றன என்று அர்த்தம்). ரூபங்களைப் போல குணங்களும் அனந்தமே. அனைத்து ரூபங்களும், குணாத்மகமும் க்ரியாத்மகமும் ஆகியிருக்கின்றன. குண விசேஷங்கள் (பற்பல விதங்கள்) மறுபடி குணபூர்ணங்களே. ரூப - குண - க்ரியைகள் ஒவ்வொறும் வேறுபாடு அற்றவை ஆகும். இதையே 'எல்லி ஹரிரூப மத்தல்லி குணக்ரியெகளு | அல்லெ குணரூப க்ரியெகளு | க்ரியெகளு குணரூப பல்லவனெ ஞானி ஜகதொளு' (தத்வ ஸுவ்வாலி). இந்த சிறப்பினை அறிந்தவனே ஞானி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

** வேதோக்த ததனுக்த பாரதோக்த' என்பதில் அடங்கியிருக்கும் ப்ரமேயம், பண்டிதர்களால் பல முறை விவாதத்திற்கு உட்பட்டதாகும். அவற்றின் ஸாரம் இவ்வாறு: பரமாத்மனின் அனந்த குணங்களை நிரூபிப்பதில் வேதங்கள் ஈடுபட்டிருக்கின்றன. அங்கு சொல்லப்படாத குண நிரூபணைகள், மகாபாரதத்தில் இருப்பதற்கு சாத்தியமா என்று சந்தேகம் வரலாம். வேதாபிமானி ஸ்ரீமகாலட்சுமிதேவி. பரமாத்மனின் மகிமைகளை (குணங்களை) அவளும் முழுவதுமாக அறிவதில்லை என்று பல பிரமாணங்களிலிருந்து அறியலாம்.

ஸரஸ பாரதி விலாஸத்தில் சொல்லப்பட்டவாறு, பிரம்மாதிகளால்கூட எண்ண முடியாத மகா ஞானம் உள்ள ரமாதேவி, பரமாத்மனின் குணத்யானத்தில் ஈடுபட்டு, ஒவ்வொரு நொடியிலும் புத்தம்புதிய விசேஷங்களை பார்க்கிறாள். அப்போது, மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி, பரமானந்தத்தைக் கொண்டு, மறுபடி த்யானிக்கிறாள்.

மறுபடி புதிய அற்புதங்களைக் கண்டு மகிழ்ச்சியடைகிறாள். ரமாதேவி, குணபூர்ணனான ஸ்ரீஹரியின் குணங்களின் (மற்றும் ஏதோவொரு குணங்களின்) அம்சத்தின் ஒரு பாகத்தைக் கூட அறிவதில்லை'. இதனால், ஸ்ரீஹரியின் குணங்கள், ரமா பிரம்மாதிகளின் கற்பனைக்கும்கூட எட்டாதவை என்று தெரிகிறது.

மகாபாரத கர்த்ருகளோ ஸாக்ஷாத் நாராயணரின் அவதாரரான ஸ்ரீவேதவ்யாஸரே. லட்சுமியின் ஞானத்தைவிட அனந்த மடங்கு அதிகமான ஞானம் உள்ள இந்த ஸர்வக்ஞர், வேதங்களில் சொல்லப்படாத, வெறும் ஈஷ்வர ஞானத்திற்கு விஷயமான அர்த்த விசேஷங்களை சொல்லியிருக்கிறார் என்பது அஸாத்தியம் அல்ல. 'வேதாதபி பரம் சக்ரே பஞ்சமம் வேதமுத்தமம்' - வேதங்களைவிட அதிகமான அர்த்தங்களால் விஷ்ணுவை அறிய வைக்கும் ஐந்தாம் வேதத்தினை செய்தார் என்றும், தயா ஸமுத்ரனான ஸ்ரீவேதவ்யாஸர், ஸர்வவேதார்த்தங்களாலும், வேதங்களில் சொல்லப்படாத வெறும் ஈஷ்வர ஞானத்திற்கு புலப்படும் அர்த்த விசேஷங்களாலும் கூடிய மகாபாரதத்தை இயற்றினார் என்றும் சொல்லப்படுகிறது.

பிரமேயங்களை நிரூபிக்கும் கிரந்தங்களில் பாரதம் இவ்வாறு சிறந்தது என்றால், பிரமாண கிரந்தங்களில் பிரம்ம மீமாம்ஸா (பிரம்மஸூத்ர) கிரந்தம் சிறந்ததாகும். ஆகையால், பிரம்ம ஸூத்ரங்களுக்கு சிறப்பினை சொல்லும் வாக்கியங்களால், மகாபாரதத்தின் சிறப்பிற்கு எந்த விரோதமும் இல்லை.

மகாபாரதம், தர்ஷன, ஸமாதி, குஹ்ய என்னும் பாஷாத்ரயங்கள் கொண்டது. மற்றும் ப்ரதி ஸ்லோகமும் 10 அர்த்தங்களைக் கொண்டவை. பாரதத்தில் சொல்லப்படாத விஷயமே இல்லை. 'யதிகாஸ்தி ததன்யத்ர யன்னேஹாஸ்தி ந குத்ரசித்' இங்கு இருப்பதே வேறு இடத்தில் உள்ளது; இங்கு இல்லாதது வேறு எங்கும் இல்லை. என்று பாரதத்தின் சிறப்பு சொல்லப்பட்டிருக்கிறது.

**10. ததா[2] வேதோ[3]க்த ஸர்வ க்ரியோப ஸம்ஹர்த்ரூணாம் ஏவம் அனந்தரூபாவயவ கு[3]ண க்ரியாஜாத்யவஸ்தா[2] விஶிஷ்ட ப[4]க[3]வது[3]பாஸகானாம்**

ததா - மற்றும் (ஸர்வ குணங்களை சிந்திப்பதோடு மட்டுமல்லாமல்); வேதோக்த - வேதங்களில் சொல்லப்பட்ட; ஸர்வ க்ரியோபஸம்ஹார்த்ருணாம் - ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயாதிகளால் கூடிய பகவந்தனின் அனைத்து க்ரியைகளையும் சிந்தித்து த்யானிப்பவரான; ஏவம் - இவ்வாறு; அனந்தரூபாவயவ குண க்ரியாஜாத்யவஸ்தா விஷிஷ்ட பகவதுபாஸகானாம் - பகவந்தனின் அனந்த ரூபங்களையும், கர சரணாதி அவயவங்களையும், ஞானானந்தாதி அனைத்து கல்யாண குணங்களையும் மற்றும் க்ரியைகளையும் இந்த அனைத்தின் ஜாதி (ஸஜாதீய, விஜாதீய என்னும் இரு ஜாதி) மற்றும் நிலைகளுடன் உபஸம்ஹாரம் செய்து த்யானிப்பவரான..

ஸ்ரீவாயுதேவர் சர்வ குணங்களை த்யானிக்கும் அதிகாரிகள் மட்டுமல்ல. அவயவ ஆபரண ஆயுதாதிகளால் ஒளிரும் பரம மங்களகரமான அஸங்க்ய பகவத் ரூபங்களையும், ஒவ்வொரு ரூபத்தின் குணக்ரியைகளையும் அவற்றின் ஜாதி, நிலைகளின் சிறப்புகளுடன் சிந்தித்து த்யானிப்பவர் ஆகிறார்.

பரமாத்மனின் க்ரியாவிசேஷங்களின் ப்ரபாவம் அல்பமல்ல. அதன் பலன்களில் மிகப்பெரிய தாரதம்யத்திற்கு காரணமாகின்றன. கால் தூக்கினான், வெண்ணெய் தின்றான், வேணுகானம் இசைத்தான், பசுக்களை காத்தான், ஆகிய மிகச்சிறியதாக தோன்றும் செயல்களும் மகாமகிமோபேதமானவை. சஞ்சாரத்திற்கு புறப்பட்டார், அமர்ந்தார், நின்றார், பேசினார் ஆகிய ஸ்ரீமத்வாசார்யரின் செயல்கள்கூட மோட்ச சாதக மகிமைகள் உள்ளவை என்று ஸ்ரீமத்வவிஜயத்தில் வர்ணிக்கப்பட்டிருப்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

கமனாஸன ஸங்கதாதி லீலா: ஸ்ம்ருதி மாத்ரேண பவாபவர்க்க தாத்ரீ: |
கதமப்யமரா: ப்ரபஞ்சமேயு: நனு மத்வஸ்ய ந மாத்ருஷோல்ப போதா: ||

அல்பங்கள் என்று தெரியும் க்ரியாவிசேஷங்க்ளும், த்யானத்தினால் மிகப்பெரிய பலன்களைக் கொடுக்கின்றன என்று சொல்லப்பட்டுள்ளன. ஆகையால், சர்வ குணோபாஸனா ஸாம்யத்தினால், ஒரே ஸ்தானத்தில் இருப்பதும்,

க்ரியோபஸம்ஹாரத்தினால் அனந்த தாரதம்யமும், பிரம்ம வாணியரில் இருக்கிறது என்று அறிய வேண்டும்.

**11. பரம த$^3$யாளூனாம் க்ஷமா ஸமுத்$^3$ராணாம் ப$^4$க்த வத்ஸலானாம் ப$^4$க்தாபராத$^3$ ஸஹிஷ்ணூனாம் ஸ்வப$^4$க்தான் து$^3$ர்மார்க்கா$^3$த் உத்$^3$த்$^4$ருத்ய ஸன்மார்க்க$^3$ ஸ்தா$^2$பகானாம் ஸ்வப$^4$க்தம் மாம் உத்$^3$தி$^3$ஷ்ய ப$^4$க$^3$வத: புர: பரம த$^3$யாளோ க்ஷமாஸமுத்$^3$ர ப$^4$க்தவத்ஸல ப$^4$க்தாபராத$^3$ ஸஹிஷ்ணோ த்வத$^3$தீ$^4$னம் தீ$^3$னம் தூ$^3$னம் அனாத$^2$ம் ஷரணாக$^3$தம் ஏனம் உத்$^3$த$^4$ர இதி விக்ஞாபன கர்த்ரூணாம்**

பரம தயாளூனாம் - மிகச்சிறந்த கருணைசாலியும்; க்ஷமா ஸமுத்ராணாம் - மன்னிப்பு குணங்கள் நிரம்பியவனும்; பக்த வத்ஸலானாம் - பகவத் பக்தர்களிடம் அன்பு செலுத்துபவனும்; பக்தாபராத ஸஹிஷ்ணூனாம் - பக்தாபராதங்களை சகித்துக் கொள்ளும் (மன்னிக்கும்) விஷால இதயத்தைக் கொண்டவனும்; ஸ்வபக்தான் - தம் பக்தர்களை; துர்மார்க்காத் - கெட்ட வழியிலிருந்து; உத்த்ருத்ய - பிடிக்க வைத்து (அவர்களின் கை பிடித்து); ஸன்மார்க்க ஸ்தாபகானாம் - ஸன்மார்க்கத்தில் வைத்து காப்பவனும்; ஸ்வபக்தம் மாம் உத்திஷ்ய - ஸ்வபக்தனான என்னைக் காட்டி; பகவத: புர: - பகவந்தனின் எதிரில்; பரம தயாளோ - ஹே க்ருபாளோ; க்ஷமாஸமுத்ர - கருணைக் கடலே; பக்தவத்ஸல - பக்தவத்ஸலனே; பக்தாபராத ஸஹிஷ்ணோ - பக்தர்களின் தவறுகளை சகிப்பவனே; த்வததீனம் - உன் தாஸனும்; தீனம் - கருணாவிஷயனும்; தூனம் - துக்கத்தை போக்குபவனும்; அனாதம் - காப்பவர்கள் யாருமில்லாதவனும்; ஷரணாகதம் - உன் ஆதரவை வேண்டுபவனும்; ஏனம் - இந்த வாழ்க்கையை (இவனை); உத்தர - காப்பாற்று (அருள்வாயாக); இதி - இவ்வாறு; விக்ஞாபன கர்த்ரூணாம் - வேண்டுகோள் விடுக்கும் (ஸ்ரீஹரியிடம் வேண்டுகோள் விடுத்து, சுஜீவருக்கு பகவத் அருளை கிடைக்கச் செய்பவரும்) ஆன;

பரம தயாளுவும், க்ஷமா ஸமுத்ரனும், பக்தவத்ஸலனும், பக்தாபராத ஸஹிஷ்ணுவும் ஆன ஸ்ரீவாயுதேவர், ஸ்வ பக்தர்களை கெட்ட வழியிலிருந்து மீட்டு, நல்வழியில் வைத்து, பகவந்தனின் எதிரில், ‘ஹே தயாளோ. க்ஷமா ஸமுத்ரனே, பக்தவத்ஸலனே. பக்தாபராத

ஸஹிஷ்ணோ. உன் தாஸனான இந்த ஜீவன், தீனனும், தூனனும், அனாதனுமாகி உன்னையே சரணடைந்திருக்கிறான். இவனை நீ அருள்வாயாக. பிரபோ' என்று சுஜீவர் அனைவரின் சார்பாக ஸ்ரீஹரியிடம் வேண்டுகோள் விடுத்து, பகவந்தனின் அருளை பெற்றுத் தருகிறார்.

ஸ்ரீஹரியே பரம தயாளு, க்ஷமா ஸமுத்ரன். பக்தவத்ஸலன் மற்றும் பக்தாபராத ஸஹிஷ்ணு ஆகிறான். இந்த குணங்கள் ஸ்ரீஹரியின் முக்ய பிரதிபிம்பரான வாயுதேவரில்கூட இருக்கிறது. இருவரில் இந்த குணங்கள், தாரதம்யத்திற்கேற்ப முழுமையாக இருக்கிறது என்பதை அறிய வேண்டும். ஸ்ரீஹரியில் இந்த குணங்கள் ஒவ்வொன்றும் அனந்தமாக இருக்கின்றன. ருத்ராதி மற்ற ஜீவர்களைவிட வாயுதேவரில், இத்தகைய குணங்கள் அபாரமாக இருக்கின்றன என்பதை அறிய வேண்டும்.

பூர்ணானந்த ஸ்வரூபனும், பூர்ணகாமனும், அதனாலேயே, ஸ்வப்ரயோஜன லேஷவில்லாதவனுமான ஸ்ரீஹரி, ஜீவர்களுக்கு அவரவர்களின் கதிகளை கொடுப்பதற்கு, சேதனாசேதனாத்மகமான உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன, ஞான, அஞ்ஞான, பந்த, மோக்ஷ என்னும் அஷ்ட கர்த்ருத்வங்களை வகிக்கிறான். இதனாலேயே அவனின் தயாளு குணம் தெளிவாகிறது. ஸ்வபக்தர்களின் அபராதங்களை மன்னிப்பதில் அவனின் சமானர் யாரும் இல்லை. பகவந்தனின் பற்பல அவதார சரித்திரங்கள், அவன் க்ஷமா ஸமுத்ரன் என்பதை காட்டுகிறது.

அச்யுதனே நின்னந்த ஹுச்சு தொரெகள காணெ | கச்சி பைதொப்ப பகதரபராதகள துச்சகெய்தவர ஸலஹிதி ||
ஸ்ரீனிவாஸன போல்வ தீனவத்ஸலருண்டெ தானிகளுண்டெ ஜகதொளு | ஜகதொளு இஹரெம்ப ஞானிகளுண்டே அனுகால ||
ஏனு கருணாநிதியோ ஸ்ரீனிதம்பினிரமண தா நம்மன்னகலி ஸைரிஸ |
ஸைரிஸத கருணிய நானெந்து துதிஸி ஹிக்கலி ||

என்று ஸ்ரீஜகன்னாததாசரும், இதைப் போலவே மற்ற ஞானிகளும் இந்த பகவத் குணங்களை கொண்டாடியிருக்கின்றனர். பாகவதத்தில் வரும் குசேலனின் கதை, ஸ்ரீஹரி எப்பேற்பட்ட பக்தவத்ஸலன் என்பதை காட்டுகிறது. 'தரித்திரனான நான் எங்கே? லக்ஷ்மிபதியான

ஸ்ரீகிருஷ்ணன் எங்கே? (ஜீவ-ஈஷரில் எப்பேற்பட்ட வேறுபாடு உள்ளது!). இப்படி இருந்தாலும் ஸ்வபக்தனான பிராமணன் என்னும் அபிமானத்தினால், என்னை தன் தோள்களால் ஆலிங்கனம் செய்து, கால்களை தொட்டு வணங்கி, உபசரித்தான். எத்தகைய பக்தவத்ஸலன் ஸ்ரீகிருஷ்ணன்' என்று பாகவதத்தில் குசேலன் சொல்கிறான்.

இவ்வாறே பக்தாபராதங்களை சகித்துக் கொள்ளும் மற்றும் மன்னிக்கும் மஹா அற்புதமான குணங்களுக்கு ஸ்ரீஹரி, நிதியைப் போன்றவன் என்று விளக்கும் சரித்திரங்கள், ராம கிருஷ்ணாதி அவதாரங்களில் பல இடங்களில் பார்க்கிறோம். இத்துடன், அவனுடைய விபூதிகளின் பற்பல செயல்களாலும் அறிகிறோம்.

ஜகத் ஸம்பந்தமான ஸ்ரீஹரியின் அனைத்து செயல்களில், முக்கிய பாத்திரரான ஸ்ரீவாயுதேவரில் இந்த குணங்க்ள் யதார்த்தமாக பூர்ணமாக இருக்கின்றன. ஸ்ரீவாயுதேவர், ஸாம்ஸாரிக பயத்தினால் பயந்தவர்களுக்கு வஜ்ர-பஞ்சரத்தைப் போல இருக்கிறார். கல்யாதி தைத்யரின் பிரச்னைகளை அனைத்து ஆதிவ்யாதிகளையும் பரிகரிக்கும் கருணாஸிந்துகளாக இருக்கிறார். ஞானத்தைக் கொடுப்பவரான ஜகத்குருகளாக இருக்கிறார். இவருடைய சிபாரிசு ஒன்று இருந்தால், ஸ்ரீஹரி தவறாமல் காக்கிறான். தேவ தைத்யர்கள் அமிர்தத்திற்காக மந்தர பர்வதத்தை மத்தாக ஆக்கிக் கொண்டு, வாசுகியை கயிறாக ஆக்கிக் கொண்டு, பாற்கடலைக் கடைய, முதலில் வந்த ஹாலாஹல விஷத்தை ஸ்ரீவாயுதேவர் பானம் செய்து அனைவரையும் காத்தார். ருத்ரதேவர் பானம் செய்தார் என்று சொல்வதாகத் தோன்றும் பாகவத நிரூபணம், ஸ்ரீஹரி, ருத்ரதேவரை அந்த விஷத்தைக் குடிக்கச் சொல்ல, அதற்கு முன், வாயுதேவரால் அந்த விஷத்தின் தீவிரத்தைக் குறைக்கச் செய்து, அதில் ஒரேயொரு அம்சத்தை மட்டும் ருத்ரதேவருக்குக் கொடுத்து, அதுவும் அவர் கழுத்தில் நின்றுவிட, அவருக்கு நீலகண்டர் என்று பெயர் வந்தது என்னும் வேதோக்த சரித்திரங்கள், வாயுதேவரின் மகிமைகளை விளக்குகின்றன.

ஸ்ரீவாயுதேவரின் ஸ்மரணையினால், புத்தி, பல, யஷஸ், தைர்ய, நிர்பயத்வ, ஆரோக்ய பாக்ய, வாக்படுத்வ, ஆயுஷ்ய ஆகிய செல்வங்கள், அவருடைய பக்தர்களுக்கு கிடைக்கின்றன.

நல்மார்க்கத்தில் இருந்து, தக்க காலத்தில் ஸ்ரீஹரியின் பிரசாதத்திற்கு பாத்திரர் ஆகும் அனைத்து சுஜீவர்களும் இந்த மஹானுபாவர்களின் அருள் பலத்தினாலேயே 'யேனாஹமிஹ துர்மார்காதுத்ருத்யாபி நிதேஷித: | ஸம்யக் ஸ்ரீவைஷ்ணவே மார்க்கே பூர்ணப்ரக்ஞம் நமாம்யஹம் ||' என்று காலையில் தினமும் சொல்லவேண்டிய ஸ்லோகார்த்தமும் இதையே சொல்கின்றன.

ஸ்ரீமுக்யபிராணன் இந்த சரீரத்தில் இருந்தால் மட்டுமே, ஸ்ரீஹரி இருக்கிறான். அவன் விட்டுச் சென்றால், ஸ்ரீஹரியும் தானே விலகிவிடுகிறான். 'கஸ்மின்வஹமுத்மாந்தே பவிஷ்யாமி | கஸ்மின்வாப்ரதிஷ்டிதே ப்ரதிஷ்டாஸ்யாமீதி' என்னும் ஸ்ருதி, ஸ்ரீமுக்யபிராணனின் இந்த மகிமையையே சொல்கிறது.

**12. ஸர்வக்$^{3}$ஞ ஶிரோமணீனாம் அஶேஷ$^{2}$ கு$^{3}$ர்வந்தர்யாமிணாம் ஸதா$^{3}$ ப$^{4}$க$^{3}$வத்பராணாம் ப$^{4}$க$^{3}$வதோऽன்யத்ர ஸர்வ வஸ்துஷு$^{2}$ மன:ஸங்க$^{3}$ ரஹிதானாம்,**

ஸர்வக்ஞ ஷிரோமணீனாம் - சிறந்த சர்வக்ஞனும்; அஷேஷ குர்வந்தர்யாமிணாம் = அனைத்து குருகளின் அந்தர்யாமிகளும்; ஸதா பகவத்பராணாம் - நிரந்தரமாக பகவந்தனின் ஸ்மரணை உள்ளவனும் (ஸ்ரீஹரியே சர்வோத்தமன் என்னும் நித்ய நிஸ்சய ஞானம் உள்ளவன்); பகவதோऽன்யத்ர ஸர்வ வஸ்துஷு - பகவந்தனைத் தவிர பிற பொருட்களில்; மன:ஸங்க ரஹிதானாம் - அனாஸக்த மனஸ் உள்ளவருமான...

ஸ்ரீவாயுதேவர் (ஸ்வயோக்ய) பூர்ணஞானம் உள்ள அனைத்து ஜீவர்களுக்கு ஷிரோரத்னமாக இருக்கிறார். அனைத்து குருகளின் அந்தர்யாமிகளாக இருக்கிறார். எப்போதும் பகவத்பரர். மற்ற அனைத்து வஸ்துகளில் விரக்தியுடன் இருக்கிறார்.

** முக்ய அர்த்தத்தில் 'ஸர்வக்ஞர்' என்றால் அது ஸ்ரீஹரி ஒருவரே. லட்சுமிதேவியும், ஸ்ரீஹரிக்குப் பிறகான ஸர்வக்ஞளே. பரமாத்மன் ஒருவரைத் தவிர, மற்ற அனைத்தையும் முழுமையாக அறிந்திருக்கிறாள் லட்சுமிதேவி. அனைத்து உலகங்களையும், தன் உள்ளங்கையில் இருப்பதைப் போல, தெளிவாகக் காண்கிறாள். ஆனால், லட்சுமியின் ஞானம், பரமாத்மனின் அதீனமானதாகும்.

ஸ்வதந்த்ரம் அல்ல. ஸர்வக்ஞத்வத்தின் லட்சணங்களை அறிவதற்கு, ஞானம் மற்றும் அதன் சிறப்புகளை அறிந்திருக்க வேண்டும். வஸ்துவை அது எப்படி இருக்கிறதோ, அப்படியே அறிவது - யதார்த்த ஞானம். யதார்த்த ஞானம் வெறும் ப்ரமாணம் என்று அழைக்கப்படுகிறது. ப்ரத்யக்ஷ, அனுமான, ஆகமங்கள் யதார்த்த ஞானத்தின் ஸாதனங்கள். இவை ‘அனுப்ரமாண’ எனப்படுகின்றன. வெறும் பிரமாணம், அனுப்ரமாணத்திலிருந்து பிறக்கிறது என்று சொல்வதைப் போல ஆயிற்று. ஆனால், அனைவரின் யதார்த்த ஞானம், அனுப்ரமாணத்திலிருந்து வந்ததல்ல. ஈஷ, லட்சுமியரின் ஞானம், அனாதி மற்றும் நித்ய. அனுப்ரமாணத்திலிருந்து வந்ததல்ல. ஈஷ ஞானம் ஸ்வதந்த்ர; லட்சுமி ஞானம் பரதந்த்ர (ஈஷாதீன). ஈஷ ஞானம் ஸ்வ - பர என அனைத்து விசேஷங்களையும் கொண்டது; லட்சுமி ஞானம், ஈஷாதி அன்யத்ர ஸர்வாதிகமானது. யோகிகள் மூன்று விதங்கள். ருஜுகள் (வாயு பிரம்ம பதவிகளுக்கு வரத் தகுந்த ஜீவர்கள்); தாத்விகர் (தத்வாபிமானி தேவதைகள்); அதாத்விகர் (தத்வாபிமானிகள் அல்லாத மற்ற தேவதைகள்). யோகிகள் அல்லாத அனைவரும் அயோகிகள் ஆவர். ஈஷ லட்சுமியர் எப்போதும் ஸ்வரூபேந்த்ரியங்களினால் ஆன ப்ரத்யக்ஷ உள்ளவர்கள். ஸ்வரூபத்திலிருந்து வேறுபட்ட பிற ஸாதனங்களால் உண்டாகும் ப்ரத்யக்ஷம் அல்ல. மனஸ் மற்றும் சக்ஷுராதி பஞ்ச ஞானேந்த்ரியங்களால் தெரிகிறது என்னும் பேதத்தினால் ப்ரத்யக்ஷம் ஏழு விதமானவை. மனம் மற்றும் ஆறு ப்ராக்ருத இந்திரியங்களின் தொடர்பே இல்லாத, ஈஷ லட்சுமியரின் ப்ரத்யக்ஷம் எப்போதும் யதார்த்தமானவையே. ருஜு யோகிகளின் ப்ரத்யக்ஷம் முக்தியின் வரைக்கும் ஸ்வரூப அஸ்வரூப (ப்ராக்ருத) என இரு வகையாகவும் இருக்கிறது. முக்தியில் ஸ்வரூபேந்த்ரியத்தின் ஸன்னிகர்ஷத்தினால் மட்டுமே யதார்த்த ஞானம் உண்டாகிறது.

பிரம்மாதி அனந்த முக்தியோக்ய ஜீவர்களில், தாரதம்யத்தில் மேலே இருப்பவர்கள், கீழே இருப்பவர்களைவிட அதிகம் ஸர்வக்ஞர். தாத்விக யோகிகளின் ஸர்வக்ஞதை கூட, கீழே உள்ள முக்தி யோக்யர்களுக்கு (அ-தாத்விகர்களுக்கு மற்றும் அ-யோகிகளுக்கு) கற்பனைக்கும் எட்டாத விஷயமாக இருக்கிறது. இவ்வாறு இருக்கையில், ஸ்ரீவாயுதேவரின் ஸர்வக்ஞதையை பிறர் பெறுவது என்று?. ஸர்வக்ஞ ஷிரோமணிகள் என்று மட்டும் சொல்லி சமாதானம் செய்து கொள்ள

வேண்டும். தாத்விகர்களின் ஸர்வக்ஞத்வாதி குணங்கள் இவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது.

தாரதம்யத்தில் மேன் மேலே உள்ளவர்கள் முறையே அதிகமான விஷ்ணு ஸன்னிதானம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் ஸாமர்த்தியமும் இதே முறையில் அதிகமாகின்றன. ஆகையால், ஸ்வாவரர்கள் (கீழே இருப்பவர்கள்) லயம் அடைந்தபிறகே, இவர்கள் லயம் அடைகிறார்கள். அதாவது, லயமும் வ்யுத்க்ரமப்படியே நடக்கிறது. (முதலில் படைக்கப்பட்டவர்கள், பிறகு லயம் அடைவதும், பிறகு படைக்கப்பட்டவர்கள் முதலில் லயம் அடைவதும் 'வ்யுத்க்ரம' எனப்படுகிறது). தாத்விக தேவதைகள், தம்மிடமிருந்து வேறுபடாத தத்வங்களின் நியமனத்திற்காக, அந்த தத்வங்களைப் போல அதிகமான வ்யாப்தி உள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் அசிந்த்ய (கீழே உள்ளவர்களால் சிந்திக்கவும் முடியாத) சக்தியைக் கொண்டவர்கள்; ஸர்வக்ஞர்கள் (வேதாதிகளில்); புகழ்பெற்ற ஒளி உள்ளவர்கள்; இவர்கள் அனைவரும், ஸர்வபக்ஷகர்கள், என்றும் குறையாத, பூர்ணமான விக்ஞானம் உள்ளவர்கள். ஸ்வபோக்தாரர்கள் (கந்த மால்யாதி போக்ய வஸ்துகளில் நியாமகராக இருக்கும் தாம் ஸ்வோத்தமர்களுக்கும் தமக்கும் போக்யராக இருப்பதால், ஸ்வபோக்தாரர்). எப்போதும் ஸத்யகாமர்கள். அணிமாதி அஷ்ட ஸித்திகளைக் கொண்டிருப்பவர்கள். ஆகையாலேயே, குண பூர்ணர். அபாரமான ஆனந்த போகம் உள்ளவர்கள்.

இப்படியான அற்புத சக்தி சம்பன்னரான மஹாமஹிமர்களுக்கும் ஸ்ரீமுக்யபிராணன் அந்தர்யாமியாக இருந்து, அவர்கள் அனைவருக்கும் காலகாலத்திற்கு யோக்ய ப்ரேரகனாக இருக்கிறான். இப்படியான அசிந்த்யமான ஸர்வக்ஞத்வம் இல்லையெனில், அனந்த ஜீவர்களில் இருந்துகொண்டு, அவரவர்களின் பூர்ணகர்மாதிகளுக்கு அனுகுணமாக எப்படி ப்ரேரணை செய்யமுடியும்?.

** யாரொருவருக்கும் ஒரு குருவிடமிருந்து ஸ்வயோக்யபூர்ண ஞானம் கிடைப்பதில்லை. ஆனால், பிரம்மதேவருக்கு மட்டும் அப்படியல்ல. ஸ்ரீவிஷ்ணு ஒருவரே, எந்த காலத்திற்கும் பிரம்மனின் குரு. பிரம்ம பதவிக்குத் தகுதியான ஒருவர், குருவிடமிருந்து ஸ்ரீஹரியின் அபரோக்ஷ ஞானத்தைப் பெறுவது சாத்தியமாக இருக்கிறது. அந்த பிரம்ம பத யோக்ய ஜீவருக்கு, ஸ்ரீஹரி, ஸ்வயம்

உபதேஷகனாக இருக்கிறான். ஸ்ரீஹரி பிரம்மதேவனில் விசேஷ அனுக்கிரம் செய்து, அவரில் இருந்து, பக்தர்களுக்கு ஞானோபதேஷம் செய்கிறார். மோட்சத்தையும் அருள்கிறான். பல குருகளிடமிருந்து ஞானத்தைப் பெற்றாலும், பிரம்மனிடமிருந்து உபதேசம் பெறாமல் மோட்சம் இல்லை - என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதனால், ஸ்ரீஹரி ருஜுகணத்து ஜீவர்களுக்கு (பிரம்ம பத யோக்யர்களுக்கு) ஒரேயொரு குரு என்றும், பிரம்மதேவனே (பிரம்மனில் இருக்கும் ஸ்ரீஹரியே) அனைத்து சஜ்ஜனர்களின் முக்ய குரு என்றும் தெரிகிறது. பிரம்மன் சித்தாபிமானி ஆகையால், அனைவரின் சித்த நியாமகனாக இருக்கிறான். பற்பல பிறவிகளில் பற்பல நிலைகளில் பற்பல குருகளிடமிருந்து ஞானத்தை பெற்றவாறு, ஸ்வயோக்ய ஞானபூர்ணன் ஆகும், ஜீவனுக்கு, பல குருகள் இருக்கின்றனர் - அவ்வளவே. அனைத்து குருகளின் சித்தாபிமானியான பிரம்மதேவன், அவர்களின் புத்தி ப்ரேரகனாகி, அதனால், அந்தந்த சிஷ்ய ஜீவயோக்ய ஞானத்தை உபதேசம் செய்விக்கிறான். இந்த விஷயம் 'ஆசார்ய சைத்யவபுஷா ஸ்வகதிம் வ்யனம்க்ஷி' (பாகவத) - குரு சித்தாபிமானியான பிரம்மாந்தர்யாமி ஸ்ரீவாசுதேவனே மோட்சப்ரத ஞானோபதேஷகன் என்று சொல்லி, விளக்குகிறது. அனைத்து குருகளின் சித்தத்தில் இருந்து, அனைத்து ஜீவர்களுக்கு, அனைத்து ஞானோபதேஷகனாக இருப்பதால், பிரம்மதேவனே ஜகத்குரு. இவனே ஸ்ரீவாயுதேவர். பாவி பிரம்மனான ஸ்ரீவாயுதேவர், பிரம்மன் என்றே ஆகமங்களில், பல இடங்களில் அழைக்கப்படுகிறான். ஆகையால், பிரம்ம ஷப்தத்தினால் வாயுவையே சிந்திக்க வேண்டும்.

அனைவருக்கும் ஞானோபதேஷகன் ஆகையால் பிரம்மன் (வாயுதேவர்) 'ஸாதாரண' குரு எனப்படுகிறார். அனைத்து ஜீவனும், பரோக்ஷ ஞான பரிபக்குவத்தை அடைந்து, பகவத் அபரோக்ஷத்திற்கு தேவையான த்யான ஸாமர்த்தியத்தைப் பெற்ற பிறகு, அவனின் 'அஸாதாரண' குரு என்று அழைக்கப்படும், நியத குருவைப் பெற்று, ஸ்வபிம்பத்தை உபதேசம் பெற்று, பிம்போபாஸனையின் கிரமத்தை அருள்கிறான். நியத குருவிலும் இருந்து, பிம்போபதேஷ செய்பவர், ஸ்ரீவாயுதேவரே. ஆகையால், அனைத்து குருகளின் அந்தர்யாமியாக இருக்கிறார்.

** பகவதன்யத்ர அஸங்க - என்றால், அனைத்தும், பகவத் அதீனமே என்று அறிந்து, பிற வஸ்துகளில் அல்லது மனிதர்களில், தேவையானவற்றுடன் மற்றும் செயல்படுவது (பயன்படுத்துவது) ஆகும். இந்த மனோபாவம், மோக்ஷ காரணங்களில், ஹரி பக்தி யுடன், முக்கிய காரணம் என்பது ஸர்வ ஷாஸ்திரங்களில் சொல்லப்பட்ட விஷயமாக இருக்கிறது.

பாகவதம் சொல்வதைப் போல, பரமாத்ம பின்னமான அனைத்து வஸ்துகளில் அஸங்கமும், ப்ராக்ருத குண ரஹிதனான (சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள அனந்த கல்யாணகுண பூர்ணனான - நிர்குணனான) பிரம்மனில் த்ருட பக்தியும், மோக்ஷத்திற்கான வழிகள் என்பது சர்வ ஷாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள நிர்ணயம் ஆகும்.

ஸ்ரீவாயுதேவர், நிரந்தர ஹரிஸ்மரணை உள்ளவர். அவரின் அனைத்து செயல்களும் ஹரிஸ்மரணை பூர்வகமே நடக்கின்றன. அவர், பகவந்தனைத் தவிர மற்ற அனைத்தையும் பரித்யாகம் செய்த மஹாவிரக்தர் ஆவார் - ருத்ராதி அசேஷ ஜகத்திற்கு வைராக்ய ப்ரதர், அனைத்து கர்மங்களின் பலன்களையும், ஸ்வதந்த்ர கர்த்ருத்வாபிமானத்தையும் முழுமையாக துறந்த, ஏகாந்த பக்தர்களில் சிறந்தவர்.

**13. ஸர்வத்ர ஸர்வதா3 ஸர்வாகார ஸர்வாதா4ர ஸர்வாஸ்ரய ஸர்வோத்பாத3க ஸர்வபா1லக ஸர்வ ஸம்ஹாரக ஸர்வ நியாமக ஸர்வ ப்ரேரக ஸர்வ ப்ரவர்த்தக1 ஸர்வ நிவர்த்தக யதா2யோக்3யம் ஸர்வ ஞானாஞான ப4ந்த3மோக்ஷப்ரத3 ஸர்வ ஸத்தாப்ரத3 ஸர்வஶப்3த3வாச்ய ஸர்வஶப்த3 ப்ரவ்ருத்தி நிமித்த ஸார்வகு3ணாதி1 பரிபூர்ணதம ஸர்வ தோ3ஷா2தி1தூ3ர ஸர்வாசிந்த்ய ஸர்வோத்தம ஸர்வேஶ்வர ஸர்வாத்1யந்த விலக் ஷண ஸ்வக3தபே4த3 விவர்ஜித1த்1வாதி3னா ப4க3வத்3ரஷ்ட்ரூணாம்**

ஸர்வத்ர - அனைத்து தேஷத்திலும் இருப்பவனும்; ஸர்வதா - அனைத்து காலங்களிலும் இருப்பவனும்; ஸர்வாகார - அனைத்து வஸ்துகளைப் போலவும் ஆகார (உருவம்) உள்ளவனும்; ஸர்வாதார - அனைத்து வஸ்துகளின் ஆதாரமாக இருப்பவன் (அவற்றை

தரித்திருப்பவனும் கூட); ஸர்வாஸ்ரய - அனைத்து உலகிற்கும் காத்தல் முதலான அனைத்து விதங்களில் ஆதரவாக இருப்பவனும்; ஸர்வோத்பாதக - ஸர்வ ஸ்ருஷ்டி கர்த்தனும்; ஸர்வபாலக - ஸர்வ பாலகனும்; ஸர்வ ஸம்ஹாரக - ஸர்வலய கர்த்தனும்; ஸர்வ நியாமக - அனைத்தையும் தன் வசத்தில் வைத்துக்கொண்டு நியமனம் செய்பவனும்; ஸர்வ ப்ரேரக - அனைவரின் ஸர்வ ப்ரவ்ருத்தி ப்ரேரகனும்; ஸர்வ ப்ரவர்த்தக - அனைவரின் அனைத்து க்ரியைகளையும் செய்து செய்விப்பவனும்; ஸர்வ நிவர்த்தக - அனைவரின் ஸர்வ ப்ரவ்ருத்திகளிலிருந்து விடுவிப்பவனும்; யதாயோக்யம் - வஸ்து ஸ்வபாவங்களின் யோக்யதைக்கேற்ப; ஸர்வ ஞானாஞான பந்தமோக்ஷப்ரத - அனைவருக்கும் ஞான, அஞ்ஞான, பந்த, மோட்சங்களை கிடைக்கச் செய்பவனும்; ஸர்வ ஸத்தாப்ரத - அனைத்து வஸ்துகளின் ஸர்வ ஷக்தி ப்ரதனும் (அல்லது இருப்பினைக் கொடுப்பவனும்); ஸர்வஷப்தவாச்ய - அனைத்து எழுத்துகளின் முக்ய வாச்யனும்; ஸர்வஷப்த ப்ரவ்ருத்தி நிமித்த - அனைத்து எழுத்துக்களின் ப்ரவ்ருத்திக்கு காரணனும்; ஸார்வகுணாதி பரிபூர்ணதம - அனைத்து நற்குணங்களால் அத்யந்த பரிபூர்ணனும்; ஸர்வ தோஷாதிதூர - எவ்வித தோஷங்களும் அற்றவனும்; ஸர்வாசிந்த்ய - ரமா பிரம்மாதிகளால் சிந்திக்கப்பட்டு முடிக்கமுடியாத அனந்த மகிமைகளைக் கொண்டவனும்; ஸர்வோத்தம - ஸர்வ ஸ்ரேஷ்டனும்; ஸர்வேஷ்வர - ஸர்வஸ்வாமியும்; ஸர்வாத்யந்த விலக்ஷண - அனைத்து வஸ்துகளிடமிருந்து மிகவும் வேறுபட்ட தர்மங்களின் ஸ்வரூபனும்; ஸ்வகதபேத விவர்ஜிதத்வாதினா - தன் அனந்த ரூபங்களில் வெவ்வேறாகவும், ஒவ்வொரு ரூபங்களின் அவயவ, குண, செயல்களால்கூட மிகவும் வேறுபடாதவனும் - என்றான பூர்ண சிந்தனைகளால்; பகவத்ரஷ்ட்ரூணாம் - பகவந்தனின் ஸ்வரூபத்தை எப்போதும் பார்த்துக் கொண்டிருப்பவனான (நித்யா பரோக்ஷ தர்ஷன உள்ளவரான).

ஸ்ரீஹரி, தேஷ காலங்களில் வ்யாப்தன். அதாவது, அனைத்து தேஷ காலங்களிலும் இருப்பவன் (அவன் இல்லாத இடம் மற்றும் காலமே இல்லை). சேதனா சேதனாத்மக அனைத்து வஸ்துகளைப் போல அனந்த ரூபங்களைக் கொண்டவன். அந்தந்த வஸ்துகளில், அந்தந்த உருவங்களில் இருந்து, அவை அனைத்தின் உருவங்களையே நியந்த்ரணம் செய்கிறான். அனைத்து உலகின் மூலாதாரன் இவனே.

முக்ய ரக்ஷகனாகி அனைத்து வஸ்துகளின், அனைத்து விதமான கதியாகவும் இருக்கிறான். அனைத்து உலகின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன, யோக்யதைக்கேற்ப, ஞான, அஞ்ஞான, பந்த மற்றும் மோட்ச ஆகியவற்றை அடையச் செய்பவன் என்னும் எட்டு வித கர்த்ருத்வங்களை ஸ்வதந்த்ரனாக தன் லீலைகளால் நிர்வகிக்கிறான். அனைத்து வஸ்துகளின் ஸத்தா ப்ரதனாக இருக்கிறான் (வஸ்துகளின் இருப்பு அவனுடைய அதீனமே. அவனை ஒதுக்கினால், எந்த பொருட்களும் இருப்பதே இல்லை). ஸ்ரீஹரியே அனைத்து சொற்களாலும் குறிக்கப்படுகிறான். அனைத்து சொற்களின் ப்ரவ்ருத்திக்கு காரணமான அனைத்து ஸத் தர்மங்களால் (கல்யாண குணங்களால்) பரிபூர்ணனாக இருக்கிறான். அவனின் அருகில் தோஷங்கள் எதுவுமே அண்டுவதில்லை. அசிந்த்யமான அற்புத ஞான ஸாமர்த்தியம் உள்ள ரமா பிரம்மாதிகால் கூட அசிந்த்யமான மஹாமஹிமைகளைக் கொண்டவன். தன் ரூப, குண, க்ரியாதிகளால் வேறுபடாதவன். இத்தகைய மகிமைகளால், பூர்ணன் என்னும் ஞானத்துடன், ஸ்ரீஹரியின் நிரந்தர ஸாக்ஷாத் தர்ஷனத்தைப் பெற்றவர், ஸ்ரீமதாசார்யர்.

** சிச்சேத்யமேததகிலம் அம்ஷாந்தே ப்ரதிபிம்பிதம் - சேதன அசேதனர்கள் அனைத்திற்கும் ஸ்ரீஹரியின் ப்ரதிபிம்பத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. பிம்பாதீனமும், பிம்பத்திலிருந்து வேறுபட்டும் இருப்பதே ப்ரதிபிம்பம். ப்ரதிபிம்பரான ஜீவர்களுக்கு, ஞான, இச்சை, முயற்சி (க்ரியாஷக்தி) ஆகியவையே ஸ்வரூபமாக இருக்கிறது என்னும் காரணத்தினால் மட்டும் பிம்பனான ஸ்ரீஹரியிடமிருந்து வேறுபாடு இருக்கிறது. பிம்ப ப்ரதிபிம்பரான ஸ்ரீஹரி மற்றும் ஜீவ சேதனரில் இருக்கும் இந்த விதமான ஸம்பந்தத்தை சொல்வதற்கு இதுவே காரணமாக இருக்கிறது.

ஆனந்தோ நேத்ருஷானந்த: - ஆகிய ஸ்ருதி வாக்கியங்கள் இந்த சம்பந்தத்தை எப்படி புரிந்து கொள்வது என்று விளக்குகின்றன. ஸ்ரீஹரியின் ஆனந்தம் (ஞானாதி அனைத்து குணங்களும்), மிகவும் வேறுபட்டது என்று சொல்கின்றன. ஜீவானுபவ கோசரமான (இங்கு அல்லது முக்தியில்) ஆனந்தத்தினால் விஜாதீயமானது. ஜீவானுபவ கோசரமான சுகத்தை ‘ஆனந்த’ என்று அழைப்பதால் மட்டுமே, ஸ்ரீஹரியின் ஸஜாதீய ஆனந்த என்று நினைக்கக்கூடாது.

சேதனாசேதன ஜகத் அனைத்தும் ஸ்ரீஹரியின் ப்ரதிபிம்பமானதால், ஸர்வ வஸ்துகளில் அந்தந்த உருவத்தில் பிம்பனான ஸ்ரீஹரி இருக்கிறான். ஜீவர்களில், பசு, பக்ஷி, மரம், புல் ஆகிய ஸ்வரூபம் உள்ளவர்களும் இருக்கிறார்கள். அவர்களின் பிம்பனான ஸ்ரீஹரி, அந்தந்த ரூபங்களையே கொண்டிருக்கிறான் என்றாலும், அவனுடைய ரூபங்கள் அனைத்தும் அனைத்து நல்ல லட்சணங்களை, அழகுகளைக் கொண்டிருப்பவையே. குரூபத்தின் உருவங்கள் என்றும் ஸ்ரீஹரிக்கு இல்லை. ஜீவ தேகத்தில் இருக்கும் குறைபாடுகள் ஸ்ரீஹரியின் அதீனங்கள் ஆகும். ஜட வஸ்துகளும் ஸ்ரீஹரியின் ப்ரதிபிம்பங்களே ஆகும். அவற்றில் ஸ்ரீஹரியின் அதீனத்வ, உருவம், குணங்களின் மிகவும் குறைந்ததான ஒப்புமையை அறிய வேண்டும். 'பகவதி ஸர்வாகாரனாம் நித்யஸித்தத்வாத்' (ஸத். ரத். மாலா) பகவந்தனில் அனைத்து உருவங்களும் நித்ய ஸித்தமாக இருப்பதால், சேதன அசேதன இருவருக்கும் ப்ரதிபிம்பத்வம் தெரிகிறது.

** உலக சம்பந்தமான ஸ்ருஷ்ட்யாதி அஷ்ட கர்த்ருவங்களில், ஸ்வபாவத்தினாலேயே ஞான, இச்சா, க்ரியா ஷக்தி இல்லாத அசேதன ஜகத்திற்கு (ஜடத்திற்கு), ஞான அஞ்ஞான பந்த மோட்சங்கள் ஆகியவை பொருந்துவதில்லை. சேதன உலகிற்கு இந்த எட்டும் பொருந்துகின்றன. இந்த காரணத்தினாலேயே ஸ்ருஷ்ட்யாதி நான்கு கர்த்ருத்வங்களை சொல்வதில் 'யதாயோக்யம்' என்று சொல்லவில்லை. அசேதன ஜகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய மற்றும் நியமங்களையும் நடத்தும் ஸ்ரீஹரியே க்ரஹ, நட்சத்ராதிகளின் ஸஞ்சார முதலான ஜட க்ரியைகளின் நியாமகரும் ஆகிறார். 'பீஷோதேதி ஸூர்ய:' ஆகிய ஸ்ருதிகள், ஸ்ரீஹரியின் ஆணையை மீறிவிடக்கூடாது என்னும் பயத்தினால் தக்க காலத்தில் உதய, அஸ்தமனங்களை செய்கிறான் என்று சொல்வது சரியாகவே பொருந்துகிறது.

** நீதி நீதி என்னும் ஸ்ருதி, பரமாத்மனுக்கு ஸ்த்ரீ அல்ல, புருஷன் அல்ல என்று ஜகத்விலக்ஷணத்வத்தை (உலகிலிருந்து வேறுபட்டவன் என்னும் குணம்) சொல்கிறது. ஸ்ரீஹரிக்கு ப்ராக்ருத ஸ்த்ரீத்வ, புருஷத்வங்கள் இல்லை. மாறாக, அப்ராக்ருத, ஞானானந்தாத்மக ஸ்த்ரீ புருஷ இரு ரூபங்களும் பரமாத்மனுக்கு அனந்தமாக இருக்கிறது. இந்த ப்ரமேயம், இந்த வாக்கியத்தில்

இருக்கும் 'ஸர்வாத்யந்த விலக்ஷண' என்னும் சொல்லினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

** ஸ்ரீஹரி, ஸ்வகதபேத விவர்ஜிதன் என்றால், அவனுடைய அனந்த ரூபங்களில் ஒன்றுகொன்று பேதம் இல்லையென்றும், ஒவ்வொரு ரூபத்திற்கும் அதன் உறுப்புகள், குண, க்ரியாதிகளுக்கும் எந்தவொரு பேதங்கள் இல்லையென்றும், ஒவ்வொரு ரூபத்தின் குண க்ரியாதிகளுக்குக்கூட பரஸ்பரம் பேதம் இல்லையென்றும் அர்த்தம். 'நேஹ நானாஸ்தி கிஞ்சன' ஆகிய ஸ்ருதிகள், பரமாத்மனின் ரூப, குண, க்ரியாதிகளில் எந்த பேதமும் இல்லையென்றும், பேத-அபேதங்களும் இல்லை என்றும் சொல்கிறது. பரமாத்மனின் ஞானம், ஆனந்தாதி குணங்களும் பரஸ்பரம் அபின்னங்களே. இவ்வாறு பல அபேதங்கள் இருந்தாலும், பேதம் இருப்பதைப் போல சொல்வது 'விசேஷ' பலத்தினால் மட்டுமே.

### 14. அபி[4]மானாதி[3] ஸர்வதோ[3]ஷதூ[3]ராணாம் அஸூயேர்ஷ்[2]யாத்[3]ய ஶேஷ[4] மனோதோ[3]ஷ நிவர்த்தகானாம்

அபிமானாதி - அபிமானமே முதலான; ஸர்வதோஷதூராணாம் - எவ்வித தோஷங்களும் அற்றவனான; அஸூயேர்ஷ்யாதி - அஸூயை, பொறாமை ஆகிய; அஷேஷ மனோதோஷ நிவர்த்தகானாம் - அனைத்து மனோதோஷங்களையும் பரிகரிப்பவனான

ஸ்ரீவாயுதேவர், அபிமானம் இல்லாதவர், பரமாத்மனை ஒவ்வொரு நொடியும், தொடர்ச்சியாக சரணடைந்திருக்கும் ஷுத்த அந்த:கரணத்தைக் கொண்டவர். ஆகையாலேயே, அனைத்து பக்தர்களின் மனோ நோய்களான அஸூயை முதலான தோஷங்களை பரிகரித்து, ஷுத்த மனதினைக் கொண்டவராக செய்யும் சாமர்த்தியத்தைக் கொண்டவர்.

'பிரம்மானிரபிமானித்வாத் ஷாரீரோப்ய ஷரீரவான்' - பிரம்ம வாயுகள் ப்ராக்ருத ஷரீரம் உள்ளவர்களாக இருந்தாலும், அபிமானங்கள் இல்லாதவர்கள் ஆகையால், அஷரீரிகள் என்றே அழைக்கப்படுகின்றனர் என்றும்; 'ஸத்ஞானாயானந்த விக்ஞான மூர்த்தீ' - ஞானானந்த ரூபரான ஸ்ரீவேதவ்யாஸரும் மற்றும் ஆனந்த

தீர்த்தரும் பதரிகாஸ்ரமத்தில் வீற்றிருக்கின்றனர் என்றும்; சொல்லும் இந்த பிரமாண வாக்கியங்கள் மற்றும் மற்ற பல பிரமாண வாக்கியங்களும், பிரம்ம வாயுகளை தேகம் இருந்தாலும் இல்லாதவர்கள் என்று தெளிவாக விளக்கி, அபிமானம் இல்லாதவர்கள் என்பதையே திரும்பச் சொல்கிறது.

அபிமானம் என்றால், கோப த்வேஷங்களால் வரும் சுக துக்கம், வெற்றி தோல்வி ஆகியவற்றில் கர்வம், தற்பெருமை கொள்வது. அதாவது, இந்த செயல்களுக்கு தானே ஸ்வதந்த்ர காரணன் என்று அறிவது மற்றும் பிற வஸ்துகள் அனைத்தும் தன் அதீனங்களே என்று நினைத்துக் கொள்வதாகும். இந்த கர்வம், தற்பெருமைகள், ஜீவர்களை சம்சாரத்திலேயே சுற்ற வைக்கும் மூலகாரணங்கள் ஆகும். ஸ்ரீவிஷ்ணு ஒருவரே ஸ்வதந்த்ரர் - பிறர் அனைவரும் அ-ஸ்வதந்த்ரர்கள். அனைத்து உலகங்களும் அவன் அதீனங்கள். இப்படி இருந்தாலும், தனக்கு சிறிது ஸ்வதந்த்ரம் இருக்கிறது என்று நினைப்பது அஹங்காரம் என்று சொல்லப்படுகிறது. அதாவது, நாஹம் கர்தா ஹரி: கர்தா என்று அறியாமல், அஹங்கர்தா என்று அறிவது. ரமா பிரம்மாதி அனைத்து உலகங்களும் ஸ்ரீஹரியின் அதீனமாக, அவனின் கட்டுப்பாட்டில் இருக்க, தன்னுடன் இருப்பவர்களை, தன்னுடைய தேக உறுபுகளை தன்னுடையது என்று நினைத்து மயங்குவது அஹங்காரம் எனப்படுகிறது.

இந்த கோப த்வேஷங்கள் மற்றும் அதனால் உண்டாகும் மோகம், ஸ்ருஷ்டி காலத்தில் அனைத்து ஜீவர்களுக்கும், ப்ராக்ருத தேக சம்பந்தத்தினால், தவறாமல் உண்டாகிறது. முக்தியோக்ய ஜீவர்களுக்கு, ஸாதன வழியில் அவர்கள் இருப்பதால், இந்த மோகம் குறைந்து கொண்டே போய், கடைசியில் ஸ்ரீஹரியின் பிரஸாதத்தினால் முழுமையாக தொலைந்து போய்விடுகிறது.

இந்த விஷயம் கீதையில் இவ்வாறு உள்ளது.

இஷ்டாத்வேஷ ஸமுத்தேன த்வந்த்வமோஹேன பாரத |
ஸர்வபூதானி ஸம்மோஹம் ஸர்கே யாந்தி பரந்தப ||

அதாவது, அனைவருக்கும், ஸ்ருஷ்டி காலத்தில் (ஜீவர்கள் ஸாதன தேகத்தில் நுழையும் காலத்தில்), கோபம், த்வேஷங்களும் அவற்றின்

மூலமாக மோகங்களும் உண்டாகின்றன. இவையே கர்வம், தற்பெருமைகளுக்கு காரணம் ஆகின்றன.

இதிலிருந்து மேலும் அஸூயை போன்ற தோஷங்களும் உண்டாகின்றன. அஸூயை என்றால், பிறரில் இருக்கும் நற்குணங்களை கணக்கில் கொள்ளாமல், அவரில் இல்லாத தோஷங்களை மட்டுமே பார்ப்பது. அவர்களுடைய வெற்றிகளைக் கண்டு சகிக்காமல் இருப்பது இன்னொரு தோஷமாக இருக்கிறது. இவ்வகையான தோஷங்கள் காம, க்ரோதாதி அரிஷட்வர்க்கங்கள், அவற்றின் அபிமானிகளான காலநேமி ஆகிய தைத்யர்களால் உண்டாகிறது.

எந்த தைத்யரும் என்றும் நெருங்க முடியாதவரும், அஸூயாதி தோஷங்கள் என்றும் இல்லவேயில்லை. இவ்விதமான மஹாமஹிமர் அல்லதே அஞ்ஞானிகளின் அஸூயாதி தோஷங்களைக் களைந்து அவர்களை ஷுத்தாந்த:கரணராக மாற்றுவதற்கு வல்லமை படைத்தவர்கள் வேறு யார் இருக்கின்றனர்?.

**15. நித்யாபரோக்ஷீக்ருத ரமாயுக்தா அஶேஷ2 ப4க3வத் ரூபாணாம் அத ஏவ விலீனாஶேஷ2 ப்ரக்ருதி ப3ந்தா4னாம் அத ஏவ தூ3ரோத்ஸாரித1 அஶேஷ2 அனிஷ்டானாம் அத ஏவ அஶேஷ2 ப4க்தாஶேஷ2 அனிஷ்2ட நிவர்த்தகானாம்**

நித்யாபரோக்ஷீக்ருத - நிரந்தர ஸாட்சாத்காரம் உள்ள; ரமாயுக்தா அஷேஷ பகவத் ரூபாணாம் - ரமா ஸஹித அனைத்து பகவத் ரூபங்கள் உள்ளவரான; அத ஏவ - இப்படியாக நித்யாபரோக்ஷிகளாக இருப்பதாலேயே; விலீனாஷேஷ ப்ரக்ருதி பந்தானாம் - அனைத்து ப்ரக்ருதி பந்தனங்களும் நஷ்டம் அடைந்தவரான; அத ஏவ - இப்படியாக எவ்வித ப்ரக்ருதி பந்தனங்களும் இல்லாதவராக இருப்பதாலேயே; தூரோத்ஸாரித - தூரமாக தள்ளப்பட்ட; அஷேஷ அனிஷ்டானாம் - எவ்வித துக்கங்களும் இல்லாதவரும்; அத ஏவ - இப்படியாக எவ்வித துக்கங்களும் இல்லாததாலேயே; அஷேஷ பக்தாஷேஷ அனிஷ்ட நிவர்த்தகானாம் - அனைத்து பக்தர்களின் அனைத்து துக்கங்களையும் பரிகரிப்பவரான...

அனைத்து இடங்களிலும், லட்சுமி ஸமேதனான நாராயணனின் அனைத்து ரூபங்களின் நிரந்தர சாட்சாத்காரம் கொண்டவர் ஸ்ரீவாயுதேவர். நித்யாபரோக்ஷிகளான இவருக்கு, எந்த காலத்திலும், ப்ரக்ருதி பந்தனங்கள் இல்லை; பந்தனங்கள் இல்லாதவர் ஆகையால், துக்கங்கள் இல்லை; தான், ஸ்வயம் இத்தகைய துக்கங்கள் இல்லாதவர் ஆகையால், மற்றவர்களின் துக்கங்களை பரிகரிப்பதற்கு சாமர்த்தியம் கொண்டவராக இருந்து, தம்மை வணங்கும் மக்களின் (விஷ்ணு பக்தர்களின்) அனைத்து துக்கங்களையும் பரிகரித்து காக்கிறார்.

** ருஜு முதலான அனைத்து தாத்விக தேவதைகளும், அனாதி காலத்திலிருந்து அபரோக்ஷ ஞானம் உள்ளவர்கள். பிரம்ம வாயுகளுக்கு துக்க, அஞ்ஞானங்கள் என்றும் இல்லை. இவர்களின் லிங்க தேகாதிகள், தக்த வஸ்திரத்தைப் போல - பந்தக சக்தி இல்லாதவையாக இருக்கின்றன. ஸத்வ ஸத்வ மஹாஸத்வ என்று வர்ணிக்கப்படும் ஸத்வகுணங்கள் கொண்ட சூக்ஷ்ம மஹத் தத்வாதிகளால் ஆனது இவரது தேகம். வாயுதேவரால் நியம்யரான தாத்விக தேவதைகள்கூட அபாரமான மகிமைகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

** பகவந்தனை, ரமா ஸஹிதனாகவே உபாசிக்க வேண்டும். ரமாயுக்த ரூபத்தையே தியானிக்க வேண்டும். இதுமட்டுமல்ல, பகவந்தனின் முக்கிய பிரமேயம் எனப்படும், பகவத் குடும்பத்தில் முக்கியமானவர் எனப்படும் ஸ்ரீமுக்யபிராணனையும் கூட தியானிக்க வேண்டும். பகவந்தனின் அபரோக்ஷ தரிசனம், உபாஸனைக்கு ஏற்பவே இருக்கிறது. தியானித்த ரூபமே ப்ரத்யட்சம் ஆகிறது. மனிதனின் இதய கமலத்தில் இருப்பதான மூலேஷ நாமக பிம்பரூபி ஸ்ரீஹரியின் காலடியில், ஸ்ரீமுக்யபிராணன் ஒரு ரூபத்தினால் எப்போதும் இருக்கிறான். அந்த ரூபத்தின் தரிசனமும், பகவத் அபரோக் ஷத்துடனேயே கிடைக்கிறது.

** அனைத்து துக்கங்களுக்கும் முன்பு செய்த பாவங்களே காரணம் ஆகும். பாவங்கள் பரிகாரம் ஆனால், துக்கங்கள் வருவது நின்று விடுகின்றன. ஆகையால், 'ஸர்வாரிஷ்ட பரிஹாரகர்' என்றால், பாவங்களை பரிகரிப்பவர் என்றே அர்த்தம். 'ஜன்மாதி வ்யாத்யுபாதி ப்ரதிஹதிவிரஹ' என்றும் 'ஸம்ஸாரோத்தாபனித்யோ' என்றும்

பக்தர்களின் ஆதிவ்யாதிகளையும், பிறப்பு இறப்பு ஆகிய ஸம்ஸார தாபங்களையும் பரிகரிக்க ஸாமர்த்தியம் கொண்டவரான, எப்போதும் புன்னகையுடன் இருப்பவரான முக்ய பிராண தேவரை வாயு ஸ்துதியில் இவ்வாறு கொண்டாடியிருக்கிறார்.

நம்ம குருகள பாத ஒம்மெ
நெனெயலு ஜன்மஜன்மக்ருத பாப பரிஹார | பரிஹாரவாகி
ஸத்பிரம்மபததல்லி ஸுகிஸோரு ||

என்று ஸ்ரீஜகன்னாததாசரின், ஸ்ரீவாயுதேவரின் இந்த மகிமையை கொண்டாடியிருக்கிறார்.

### 16. ப்ரணவோபாஸகானாம் அஸ்மதா[3]தி[3] கு[3]ரூணாம் ஸ்ரீமதா[3]னந்த[3] தீர்த்த[2] ஸ்ரீமத் சரணானாம் (அந்தர்யாமின்)

ப்ரணவோபாஸகானாம் - ப்ரணவ மந்திரத்தின் உபாஸகரும்; அஸ்மதாதி குரூணாம் - நாம் (ஸ்ரீராகவேந்திர தீர்த்தரின்) முதலான அனைத்து தேவாதி ஸுஜனர்களுக்கு குருகளும் (ஆதிகுருகளான - குரு பரம்பரையின் மூல குருகளான); ஸ்ரீமதானந்த தீர்த்த ஸ்ரீமத் சரணானாம் - ஸ்ரீமதானந்ததீர்த்த பகவத்பாதரின்; (அந்தர்யாமின்) - அந்தர்யாமியான ஹே நாராயணனே.

பிரணவோபாஸகர்களின் சிறந்தவரும், தேவாதி அனைத்து முக்தியோக்ய ஜீவர்களுக்கு மூல குருகுகளுமான ஸ்ரீமதானந்த தீர்த்த பகவத்பாதரின் அந்தர்யாமியும் (நியாமகரும், ஸ்வாமியும்) ஸ்ரீமன் நாராயணனே. இவ்வாறு மகாமகிமரும், ஜீவோத்தமருமான ஸ்ரீவாயுதேவரின் அந்தர்யாமியான ஹே நாராயணனே. நீ (அடுத்த வாக்கியத்தில் சொல்லப்பட்டதைப் போல) அசிந்த்ய மஹிமன் ஆகிறாய்.

** அகார, உகார, மகார என்று பொதுவாக சொல்லப்படும் ஓம்காரம், அனந்தாம்ஷங்கள் கொண்டதாகும். நாத, பிந்து, கோஷாதி அஷ்டாக் ஷரங்களை மட்டும் கொண்டதல்ல. இந்த அனந்தாம்ஷங்கள் ஸ்ரீஹரியின் அனந்த குணங்களை விளக்குகிறது. அனந்த குணோபஸம்ஹாரத்தினால் தியானிப்பதற்கு சமர்த்தரான பிரம்ம பதயோக்ய ஜீவரே பிரணவோபாஸனையில் முக்யாதிகாரிகளாக இருக்கின்றனர்.

பிறர், யதா யோக்ய குணங்களை மட்டும் ஓம்காரத்தில் சிந்திக்கின்றனர்.

அனந்தமாத்ராந்த முதாஹரந்தி யம் த்ரிமாத்ர பூர்வம் ப்ரணவோசயம் புதா: |
தராபவத்பாவி சதுர்முகாக்ருதி: ஜபாதிகாரி யதிரஸ்ய ஸூசித:
(மத்வ விஜய)

ஸன்யாஸத்தை ஏற்று, பிரணவ மந்த்ர ஜபோபதேசத்தை, ஸ்ரீபூர்ணபிரக்ஞாசார்யர், அச்யுதப்ரேக்ஷர் என்னும் தம் குருகளிடமிருந்து பெற்றார் என்று சொல்லியவாறு, பிரணவ மந்திரத்தின் முக்யாதிகாரிகளே யதிகள் ஆனார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

** 'பாத' என்னும் சொல், உத்தமரின் ஸ்வரூபத்தை குறிக்கிறது. ஸ்ரீமத் சரணர் என்றால், ஸ்ரீபாதர்; ஸ்ரீபாதர் என்றால், ஞானாதி ஸ்வரூப ஸம்பத் உள்ளவர் என்று அர்த்தம்.

**17. அனிருத்3த4 ப்ரத்3யும்ன ஸங்கர்ஷண வாஸுதே3வாத்மக ஸ்ரீமத்4வ வல்லப4 ஸ்ரீலட்சுமி வேத3வ்யாஸாத்மக அண்ட3ஸ்தி2த அனந்தரூபாவயவ கு3ணக்ரியா ஜாத்1யவஸ்2தா விஸிஷ்2ட ரமாயுக்த க்ஷீராப்3தி4 ஶேஷ2ஶாயி ஸ்ரீபத்3மனாபா4த்மக**

அனிருத்த ப்ரத்யும்ன ஸங்கர்ஷண வாஸுதேவாத்மக - இத்தகைய நான்கு ரூபங்கள் உள்ளவனும்; ஸ்ரீமத்வ வல்லப - ஸ்ரீமன் மத்வாசார்யருக்கு பிடித்தமான ஸ்வாமியும்; ஸ்ரீலட்சுமி வேதவ்யாஸாத்மக - ஸ்ரீலட்சுமி உடனான வேதவ்யாஸ ஸ்வரூபரும்; அண்டஸ்தித அனந்தரூபாவயவ குணக்ரியா ஜாத்யவஸ்தா விஸிஷ்ட - பிரமாண்டத்தில் இருக்கும் அனந்த ரூபங்களின் கர, சரணாதி அவயவங்களும், ஞானானந்தாதி குணங்களும், ஸ்ருஷ்டி நியமனாதி க்ரியைகளும், இந்த குண க்ரியைகளின் ஜாதி நிலைகள் உள்ளவரும்; ரமாயுக்த க்ஷீராப்தி ஷேஷஷாயி ஸ்ரீபத்மனாபாத்மக - ரமா ஸமேதனாக பாற்கடலில் நடுவில், ஸேஷனின் மேல், படுத்திருக்கும் ஸ்ரீபத்மனாப ரூபத்தினால் அபின்னனுமான;

ஸ்ரீமதானந்த தீர்த்த ஸ்ரீமத் சரணரின் அந்தர்யாமியான ஸ்ரீநாராயணன், அனிருத்த, ப்ரத்யும்ன, ஸங்கர்ஷண, வாஸுதேவ என்னும் நான்கு ரூபங்களை தரித்திருக்கிறான். அவனே (நாராயணனே) ஸ்ரீமத்வரின் ப்ரியதமான லட்சுமிபதி வேதவ்யாஸனும் ஆகிறான். பிரம்மாண்டத்தில் இவனின் அனந்த ரூபங்கள் உள்ளன. இந்த அனைத்து ரூபங்களும் பரஸ்பர அபின்னமானவை. ஒவ்வொரு ரூபத்தின் கரசரணாதி அவயவங்களுக்கும், குண க்ரியைகள் மற்றும் அவற்றின் ஜாதி மற்றும் நிலையின் விசேஷங்களுக்கும் எந்தவித பேதமும் இல்லை; அனைத்து ரூபங்களும் ரமா ஸஹிதமானவையே. பாற்கடலின் நடுவில் இருக்கும், ஷ்வேதத்வீபத்தில் இருக்கும் சேஷஷாயியான ரமா ஸஹித ஸ்ரீபத்மனாப ரூபமும் மற்ற அனைத்து ரூபங்களிலிருந்து அபின்னமானவையே ஆகிறது.

உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயாதிகளை நிர்வகிப்பதற்காகவே மூல ரூபத்திலிருந்து வெளிப்பட்ட அனிருத்த, ப்ரத்யும்ன, ஸங்கர்ஷண மற்றும் வாசுதேவ ரூபங்கள், ஸ்ரீமதாசார்யருக்கு மிகவும் ப்ரியமானவை ஆகும். பிரம்மாண்டத்தில் இருக்கும் ஸ்ரீஹரியின் அனந்த ரூபங்களும், மூல ரூபி நாராயணனிடமிருந்து வேறுபடாதவையே. பற்பல அவதாரங்களுக்கு மூலம் எனப்படும், ஷ்வேதத்வீபத்தில் இருக்கும் ஸ்ரீஹரி, ரமா ஸஹித ஸ்ரீபத்மனாப ரூபமும் நாராயணனிடமிருந்து அபின்னமே ஆகும்.

**18. அண்டாத்3 ப3ஹிரபி4வ்யக்த ஶுத்3த4 ஸ்ருஷ்டித்வேன அபி4மத ஸ்ரீசதுர்முக2 முக்2யப்ராணோபாஸ்யத்வாத்3யனேக ப்ரயோஜனக அனந்தானந்தரூப மூலபூ4த ததா2 அஶேஷ2 ஜக3த்பாலன பிரயோஜனக ஶாந்திபதி அனிருத்3த4 மூலபூ4த ததா2 அஶேஷ2 ஜக3த்ஸ்ருஷ்டி ப்ரயோஜனக க்ருதிபதி ப்ரத்3யும்ன மூலபூ4த, ததா2 அஶேஷ2 ஜக3த்ஸம்ஹார பிரயோஜனக ஜயாபதி ஸங்கர்ஷண மூலபூ4த**

அண்டாத் பஹிரபிவ்யக்த - பிரம்மாண்டத்தின் வெளியே வெளிப்பட்ட; ஷுத்த ஸ்ருஷ்டித்வேன அபிமத - ஷுத்த ஸ்ருஷ்டி என்று (ஞானிகளுக்கு) சம்மதமான; ஸ்ரீசதுர்முக முக்யப்ராணோ பாஸ்யத் வாத்யனேக ப்ரயோஜனக - சதுர்முக மற்றும் முக்யபிராணர்களால் உபாசனை செய்யப்படுபவர் என்னும் எனேக ப்ரயோஜனங்களைக்

கொண்ட; அனந்தானந்தரூப மூலபூத - எண்ணிக்கையற்ற ரூபங்களுக்கு மூலமும்; ததா - மற்றும்; அஷேஷ ஜகத்பாலன பிரயோஜனக - உலகைக் காப்பதே முக்கிய வேலையாக உள்ள; ஷாந்திபதி அனிருத்த மூலபூத - ஷாந்தி நாமக லட்சுமிதேவியின் பதியான அனிருத்த ரூபத்தின் மூலமும்; ததா - மற்றும்; அஷேஷ ஜகத்ஸ்ருஷ்டி ப்ரயோஜனக - அனைத்து உலகின் ஸ்ருஷ்டியே பலனாக உள்ள; க்ருதிபதி ப்ரத்யும்ன மூலபூத - க்ருதி நாமக லட்சுமிதேவியின் பதியான ப்ரத்யும்ன ரூபத்தின் மூலமும்; ததா - மற்றும்; அஷேஷ ஜகத்ஸம்ஹார பிரயோஜனக - அனைத்து உலகின் லயமே பலனாக உள்ள; ஜயாபதி ஸங்கர்ஷண மூலபூத - ஜயா நாமக லட்சுமிபதி சங்கர்ஷண ரூபத்தின் மூலமும்;

பிரம்மாண்டத்திற்கு வெளியே, அதாவது, பிரம்மாண்டத்தின் ஸ்ருஷ்டிக்கு முன்னரே, இந்த மூலரூபி நாராயணனிடமிருந்து மேற்கூறிய நான்கு ரூபங்கள் வெளிப்பட்டன. இந்த நாராயணன், சதுர்முக மற்றும் முக்யபிராணர்களல் உபாசிக்கப்படும் அனந்த ரூபங்களுக்கு மூலபூதமானவன். இந்த நான்கு ரூபங்களில் ஒன்றான அனிருத்த ரூபத்தினால் ஜகத்பாலனை நடக்கிறது. அனிருத்தனை, ஸ்ரீலட்சுமிதேவி, ஷாந்தி நாமக ரூபத்தினால் வணங்குகிறாள். ப்ரத்யும்ன ரூபத்தினால் ஸ்ருஷ்டி நடைபெறுகிறது. ப்ரத்யும்னனை க்ருதி நாமக ரூபத்தினால் ஸ்ரீலட்சுமிதேவி வணங்குகிறாள். ஸங்கர்ஷண ரூபத்தினால் உலகின் லய காரியம் நடைபெறுகிறது. ஸங்கர்ஷணனை ஜயா நாமக ரூபத்தினால், ஸ்ரீமஹாலட்சுமி வணங்குகிறாள்.

பிரளய காலத்து இரவில், 8ல் ஒரு பாகம் பாக்கி இருக்கும்போது, துர்கா ரூபளான ஸ்ரீலட்சுமிதேவி, போற்றி பிரார்த்தனை செய்ய, யோக நித்திரையிலிருந்து எழுந்த ஸ்ரீஹரி, ஸ்ருஷ்டி காலத்தில் தொடங்குகிறான். ஸ்ருஷ்ட்யாதி காரியங்களை நிர்வகிக்கும் வாஸுதேவாதி தன் ரூபங்களை வெளிப்படுத்துகிறான். இந்த ரூபங்களின் தோற்றன், ஒரு வகையில் தன்னை தானே படைத்துக் கொள்கிறான் என்னும் ஈஷ ஸ்ருஷ்டி எனப்படுகிறது. இது 'ஷுத்த ஸ்ருஷ்டி' என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வாறு மூலருபத்திலிருந்து (நாராயணனிடமிருந்து) வெளிப்படும் வாஸுதேவ, சங்கர்ஷண, பிரத்யும்ன, அனிருத்த என்னும் நான்கு

ரூபங்களை வணங்க, ஸ்ரீஹரியின் நித்யாவியோகினியான லட்சுமிதேவி, முறையே ஜயா, க்ருதி, ஷாந்தி நாமக ரூபங்களை ஏற்கிறாள். ரமா நாராயணரின் இந்த அனைத்து ரூபங்கள் மற்றும் அவருடைய மற்ற அனந்த ரூபங்கள், சச்சிதானந்தாத்மகமானவையே. இருவருக்கும் எந்த காலத்திலும் ப்ராக்ருத தேகங்கள் இல்லை.

முன்னர் நடைபெற்ற பிரம்ம கல்பத்தில் மோட்ச சாதனையை முடித்து, லிங்க தேகத்தை விட்டு, பிரளய காலத்தில் சதுர்முகனுடன் ஸ்ரீஹரியின் தேகத்தை பிரவேசம் செய்து, தியானத்தில் இருந்தவாறு, வைகுண்டாதி ஸ்வயோக்ய ஸ்தானங்களை சேர்த்து, இஷ்டப்படி சஞ்சரிக்க தகுதி உள்ள ஜீவர்களுக்கு, ஷ்வேதத்வீபத்தில் இருக்கும் தன் ரூபத்தின் தரிசனத்தை அளித்து, அவரவர்களின் ஸ்தானங்களை அடையச் செய்வது, முதலில் வெளிப்பட்ட வாஸுதேவ ரூபத்தின் செயல் ஆகும்.

பிறகு வெளிப்பட்ட ரூபம் - ஸர்வ ஸம்ஹாரகனான ஸங்கர்ஷண ரூபம் ஆகும். ம்ருத்யுவை முதலிலேயே படைத்துவிட்டு, பின்னர் ஜீவர்களை படைக்கும் (ஸ்தூல தேக சம்பந்தத்தைக் கொடுக்கும்) ஸ்ரீஹரி ஸங்கல்பம் அர்த்தபூர்ணமானதாகும். பிரத்யும்னன், ஸ்ருஷ்டி கர்தன். அனிருத்தனின் பிரவேசத்தால், ஸூக்ஷ்ம தேகங்களைப் பெற்று, பிரத்யும்னனின் உதரத்தை பிரவேசம் செய்து, பிறகு ஸ்தூல தேக யோக என்னும் ஸ்ருஷ்டியை ஜீவர்கள் பெறுகிறார்கள். அனைத்து பிராணி தேகங்களில் இருந்து, பிரத்யும்னன் காமத்தை உண்டு பண்ணி, புருஷ ப்ராணிகளின் ரேதஸ் மூலமாக, ஜீவர்களை மாத்ரு கர்ப்பத்தில் வைக்கிறான். இவனே அனைத்து உலகின் ஜகத்பதி ஆகிறான். அனிருத்தன் - அனைத்து விதங்களிலும் பிறந்த ஜீவர்களை காக்கிறான். இந்த நாராயணாதி பஞ்ச ரூபங்களின் மகிமைகள் அதி அற்புதமானவை.

வாஸுதேவாதி சதுர்ரூபங்களால் ஆகும் செயல்களை, அதற்கு சம்பந்தப்பட்ட விவரங்களை ஸ்ரீஜகன்னாததாசரின் ஹரிகதாம்ருதஸார மாத்ருகா ஸந்தி, வர்ணப்ரக்ரியா ஸந்தி முதலான பாகங்களிலும், ஸ்ரீவாதிராஜ யதிவர்யரின் வைகுண்ட வர்ணனெ (தத்வஸார) கிரந்தத்திலும் பார்க்கலாம். இவை கன்னட கிரந்தங்கள். சம்ஸ்கிருதத்தில், ஸ்ரீமதாசார்யரின் ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில், இந்த சதுர்ரூப சம்பந்தமான, ப்ரமாண பூர்வக

நிரூபணங்களை பார்க்கலாம். ஸ்ரீஹரி, தன் எந்தவொரு ரூபத்தினால், சர்வரூபங்களால் ஆகும் அனைத்து காரியங்களையும் நிர்வகிக்க சாமர்த்தியம் கொண்டிருக்கிறான். இதன் ரகசியங்களை, ரகசிய பிரமேயங்களை, ஒரு தக்க குருவிடமிருந்து சாஸ்திர அத்யயனம் செய்து அறிய வேண்டும்.

ஸ்ரீஹரி, ஸ்ருஷ்ட்யாதி கர்த்ருத்வ செய்வதற்காக, மூலரூபத்திலிருந்து பற்பல ரூபங்களை வெளிப்படுத்துகிறான். ஷுத்த ஸ்ருஷ்டி, ஜகத் ஸ்ருஷ்டி சம்பந்தமான பற்பல விதங்களை இங்கு சுருக்கமாக பார்க்கலாம். ஸ்ருஷ்டி, ஸூக்ஷ்ம, ஸ்தூல என்று இரு விதம். ஸ்ருஷ்டி காலம் வருகையில், ஸ்ரீஹரி, அவ்யக்த தத்வத்திற்கு (மூல ஜட ப்ரக்ருதிக்கு) அபிமானியான ஸ்ரீமஹாலட்சுமிதேவியில், ப்ரக்ருதியில் இருக்கும் ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள், விஷயாவஸ்தையை அடைந்து, மஹதாதி தத்வங்களின் ரூபங்களாக ஆவதற்குத் தேவையான சக்தியை நிறுவுகிறான். ஸ்ரீஹரியின் விருப்பப்படி, முறையே மஹதாதி 24 தத்வங்களும் அவற்றின் அபிமானி தேவதைகளும் ஸ்ருஷ்டி ஆகின்றனர். 24 தத்வங்கள் எவை என்றால்: ஆகாஷாதி பஞ்சபூதங்கள் 5; ஷப்தாதி தன்மாத்ரங்கள் 5; வாகாதி கர்மேந்திரியங்கள் 5; சக்ஷுராதி ஞானேந்திரியங்கள் 5; மனஸ், அஹங்கார, மஹத் மற்றும் அவ்யக்த என்னும் 4; என மொத்தம் 24 தத்வங்கள்.

அவ்யக்த ஸ்ருஷ்டி என்றால்: மிகச்சிறிய மாற்றங்களுடன் ஸத்வ ரஜஸ் தமோ குணங்களின் வெளிப்பாடு ஆகும். இந்த தத்வங்களின் அபிமானி தேவதைகள் யார் என்றால்: ஆகாஷ - கணபதி; வாயு - ப்ரவஹ வாயு; அக்னி (தேஜஸ்) - அக்னி; ஜல - வருண; ப்ருத்வி - தராதேவி; ஷப்த, ஸ்பர்ஷ, ரூப, ரஸ, கந்தங்களுக்கு - ஸௌபர்ணி (கருட பத்னி), வாருணி (சேஷ பத்னி), உமா (ருத்ர பத்னி), இந்த மூவரும். வாக் - அக்னி, பாணி - இந்த்ர, பாத - ஜயந்த, வாயு - யம, உபஸ்த - தக்ஷ. சக்ஷு - சூர்ய. ஸ்ரோத்ர - சந்த்ர, த்வக் - குபேர, ரஸன - வருண, க்ராண - அஷ்வினி தேவதைகள். மனஸ் மற்றும் அஹங்காரங்களுக்கு கருட சேஷ ருத்ரர்கள். மஹத் தத்வத்திற்கு - பிரம்ம; மஹத் தத்வத்தின் பிரபேதமான புத்தி தத்வத்திற்கு சரஸ்வதி அபிமானி; சரஸ்வதி சதுர்முகர்களுடன் பாரதி வாயுகளையும் அபிமானிகள் என்று அறிய வேண்டும். இவை அனைத்தின் ஸ்ருஷ்டி -

ஸூக்ஷ்ம ஸ்ருஷ்டி. இதில் இருக்கும் ப்ருத்வி ஆகியவை, ப்ரத்யக்ஷமாக தெரிவதான பூமிகளைப் போல, ஸ்தூல என்று அறியக்கூடாது.

மஹத் தத்வத்திலிருந்து பிறந்த அஹங்கார தத்வம் - வைகாரிக, தைஜஸ, தாமஸ என்று மூன்று விதங்களாக இருக்கின்றன. வைகாரிகத்திலிருந்து ருஜு-பின்ன-தத்வாபிமானிகளும் மற்றும் மனஸ்ஸும், தைஜஸத்திலிருந்து தஷேந்திரியங்களும், தாமஸத்திலிருந்து ஷப்தாதி தன்மாத்ரெகளும் மற்றும் பஞ்சபூதங்களும் தோன்றுகின்றன. ஸ்ரீஹரியின் ஆணைப்படி பிரம்மாண்டத்தை நிர்மாணம் செய்வதற்கு முடியாமல், ஸ்ரீஹரியை பிரார்த்தனை செய்ய, ஸூக்ஷ்ம தத்வங்களை வினியோகித்து, லட்சுமி த்வாரா 'ஆவரண ஸஹித' பிரம்மாண்டத்தை நிர்மாணிக்கிறான். பிறகு பிரம்மாண்டத்திற்குள், சதுர்முக பிரம்மனில் இருந்து, பிரம்மனின் மூலம் உலகங்கள், உலக விபாகங்கள், கிரக நட்சத்ராதி அனைத்தையும், ஸ்ரீஹரி படைக்கிறான். எண்ணிக்கையற்ற ஜீவர்களுக்கு அவரவர்களின் தகுதிக்கேற்ப ஸ்தூல தேகங்களையும் கொடுக்கிறான். இது ஸ்தூல ஸ்ருஷ்டி ஆகும்.

** ஜகத் ஸ்ருஷ்டி என்பது வேறு விதமான, நான்கு வகைகள் என்று ஆகமங்கள் சொல்கின்றன. ஷுத்த ஸ்ருஷ்டி, பராதீன விசேஷாவப்தி ஸ்ருஷ்டி, மிஸ்ர ஸ்ருஷ்டி மற்றும் வெறும் ஸ்ருஷ்டி என்பது நான்கு வித ஸ்ருஷ்டிகள் ஆகும். மேலே பார்த்த மாதிரி, மூல ரூபத்தினால், வாஸுதேவாதி ரூபங்களை வெளிப்படுத்துவது ஷுத்த ஸ்ருஷ்டி. பிரளய காலத்தில் லட்சுமி, பிரம்மாதி எந்த தத்வாபிமானிகளும், பிரக்ருத்யாதி தத்வங்களின் மேல் தம் (ஸ்ரீஹரியின் அதீனமே ஆன) ஸ்வாமித்வத்தை பயன்படுத்துவதில்லை. சேதனாசேதன ஜகத் அனைத்தும் சேஷ்டா ரஹிதமாக இருக்கிரது. முக்த ஜீவர்கள் த்யானத்தில் இருந்தால், பிறர் நித்ரா அவஸ்தையில் இருக்கின்றனர். ஜட-விஷ்வம், மூல ப்ரக்ருதியில் லயம் அடைகிறது. ஸ்ருஷ்டியின் துவக்கத்தில், ரமாதேவி, ப்ரக்ருதியின் மேலான தன் ஸ்வாமித்வத்தை பயன்படுத்தி, அதிலிருந்து ஸ்ருஷ்டி காரியங்களை துவக்குவது என்னும் விசேஷ ஸ்திதியை அடைகிறாள். இவ்வாறே படைக்கப்பட்ட மஹதாதி தத்வங்களின் அபிமானிகளும் கூட தம்மை தத்வங்களின் மேலான (பிரளய காலத்தில் இருக்கும்) ஸ்வாமித்வாதி விசேஷ ஸ்திதியை அடைகின்றனர்.

லட்சம்யாதிகளுக்கு ப்ரக்ருதி ஸ்வாமித்வாதி விசேஷங்களை கொடுப்பது ஒரு வகையான ஸ்ருஷ்டி ஆகும். 'பராதீன விசேஷாவாப்தி ஸ்ருஷ்டிஸ்து லட்சம்யாதீனாம் பகவதாக்ஞயா ப்ரக்ருதி ஸ்வாமித்வாதி விசேஷாவாப்தி' (பாவபிரகாசிகா) என்று இதையே சொல்கின்றனர். அனாதி நித்ய ஜீவ ஸ்வரூபத்திற்கு ஸ்ருஷ்டி என்பதில்லை. ஜீவர்கள் எண்ணிக்கையற்றவர்கள் - அவரவர்களின் கதியை கொடுப்பதற்கு (லிங்க தேகாதி ஸ்வரூபாவதாரங்களை போக்கிக் கொள்வதற்கு), தேவையான ஸாதனைகளை செய்விப்பதற்கு, அவரவர்களின் கர்மானுசாரமான ப்ராக்ருத ஸ்தூல தேகங்களை அடையச் செய்வது 'மிஸ்ர ஸ்ருஷ்டி' . மிஸ்ர ஸ்ருஷ்டியின் கர்தன் - ஸர்வக்ஞத்வாதி அசிந்த்ய ஸாமர்த்யத்தை கொண்டிருக்க வேண்டும் அல்லவா.

அனந்த ஜீவாந்தர்யாமி ரூபங்களால் அனந்த ஜீவர்களை நியமனம் செய்தவாறு, அவரவர்களின் கதிகளை அடையச் செய்யும் அற்புதமான செயல்களை ஸ்வதந்த்ர பிரபுவான ஸ்ரீஹரி ஒருவர் மட்டுமே நிர்வகிக்க முடியும். நவீன விக்ஞானிகளுக்கு ஊகிக்கவும்முடியாத ஜடஸ்ருஷ்டி, கிரஹ நட்சத்ரங்கள், கடல், மலை, மரம் முதலிய அனந்த ஆகியவை சிந்திப்பதற்கும் முடியாத விஷயங்கள் ஆகும். இவற்றின் நிர்மாண கர்தனும் ஸ்ரீஹரியே. இது வெறும் ஸ்ருஷ்டி. இவ்வாறு ஸ்ருஷ்டி நான்கு விதமாகும்.

இவ்வாறு, உலகில் நிறைந்திருக்கும் ஸ்ரீஹரியின் அனந்தரூபங்களுக்கெல்லாம் மூலமானது நாராயணன் என்னும் மூலரூபம் ஆகும். இந்த அனந்த ரூபங்கள், மூலரூபத்திலிருந்துகூட மிகவும் அபின்னங்கள் ஆகும்.

**19. ததா2 ஸ்வஸ்வ ஸமக்3ர யோக்3யதாபி4க்ஞ பரமானுக்3ரஹ ஶீலப4க3வத்ப்ரேரித சதுர்முகா2தி3 ஸத்கு3ரூபதி3ஷ்ட ஸ்வஸ்வயோக்3ய ப4க3வத்3ரூப கு3ணோபாஸனயா ஸஞ்ஞாத ஸ்வஸ்வயோக்3ய ப4க3வத்ரூப விஶேஷ2த3ர்ஷன போ4கா3ப்4யாம் வினஷ்டானிஷ்ட சஞ்சித ப்ராரப்3த4லக்ஷணாஶேஷ2 கர்மணாம்**

ததா - மற்றும்; ஸ்வஸ்வ ஸமக்ர யோக்யதாபிக்ஞ - அவரவர்களின் (அனைவரின்) முழுமையான யோக்யதையை நன்றாக அறிந்தவரும்; பரமானுக்ரஹ ஷீல - சிறந்த அருளைக் கொடுக்கும் ஸ்வபாவம்

உள்ளவரும்; பகவத்ப்ரேரித - ஸ்ரீஹரியால் ப்ரேரிதரான; சதுர்முகாதி ஸத்குரூபதிஷ்ட - பிரம்மாதி ஸத்குருகளால் உபதேசிக்கப்பட்ட; ஸ்வஸ்வயோக்ய பகவத்ரூப குணோபாஸனயா - தமக்கு யோக்யமான பகவத் ரூபங்களையும், குணங்களையும் உபாசிப்பதால்; ஸஞ்ஞாத - உண்டான (கிடைத்த); ஸ்வஸ்வயோக்ய பகவத்ரூப விஷேஷதர்ஷன போகாப்யாம் - ஸ்வயோக்ய பகவத்ரூபத்தின் அபரோக்ஷ தரிசனத்தாலும் (ப்ராரப்த கர்ம) போகத்தினாலும்; வினஷ்டானிஷ்ட சஞ்சித ப்ராரப்தலக்ஷணாஷேஷ கர்மணாம் - நாசம் அடையும் அனைத்து ஸஞ்சித கர்மங்களும் மற்றும் ப்ராரப்த கர்மங்கள் உள்ளவரும் ஆன;

ஜீவ யோக்யதையை நன்றாக அறிந்து, ஜீவனின் மேல் மகிழ்ந்து பரமானுக்கிரம் செய்யும் ஸ்வபாவம் கொண்டவரும், ஸ்ரீஹரி ப்ரேரிதருமான, சதுர்முகாதி சத்குருகளான ஸ்வயோக்ய குணங்களால் பகவந்தனை உபாஸிக்கும் திவ்யோபதேஷத்தையும், ஸுஜீவர்கள் பெறுகின்றனர். ஸ்வயோக்ய பகவத் ரூபத்தை தியானிக்கின்றனர். தியானத்தின் ஸித்தியினால் ஸ்வயோக்ய பகவத் ரூபத்தின் தரிசனத்தை அடைகின்றனர். அபரோக்ஷ தரிசனத்தின் பிரபாவத்தினால் ஸஞ்சித கர்மராஷிகளின் அனைத்து கர்மங்களும் (பாப புண்யங்கள் இரண்டும்) அழிகின்றன. ப்ராரப்த கர்மத்தினை போகத்தினால் போக்கிக் கொள்கின்றனர்.

** பிம்போபதேஷ குரு அல்லது நியத குருவே ஆத்மோத்தாரக குரு ஆகிறார். தாரதம்ய கிரமத்தில் மேலே உள்ள ஜீவர்கள், கீழே உள்ளவர்களுக்கு நியத குருகள். அஸ்மதாதி அல்ப ஜீவர்களின் நியத குரு, ஸாதன பரிபக்குவத்தின் காலத்தில், ஸ்ரீஹரியின் ப்ரேரணையினால் கிடைக்கிறார். தனிமையில் சிஷ்யனின் பிம்பரூபத்தை தெரிவித்து, பிம்போபாஸனையின் கிரமத்தை உபதேசம் செய்கிறார். பிம்போபாஸனையில் ஈடுபடும் ஜீவனுக்கு ஸ்ரீஹரி ஸ்வஸங்கல்பித காலத்தில் தரிசனத்தை அளிக்கிறான். இந்த வாக்கியத்தில் - நியத் குருகளின் லட்சணங்களை நிரூபிக்கிறார்.

அந்த குரு, சிஷ்யனின் யோக்யதையை முழுமையாக அறிந்திருக்கிறார். பரமானுக்கிரகம் செய்து அவரை மேம்படுத்தும் கருணை உள்ளம் கொண்டவராக இருக்கிறார். சிஷ்யர் எந்த பகவத்ரூபத்தை, எவ்வளவு குணங்களால், எப்படி உபாசனை செய்ய

வேண்டும் என்பதை உபதேசம் செய்கிறார். சதுர்முகர் வரையிலான ஸத்குரு சமூகத்தில் ஒவ்வொரு ஜீவனுக்கும் தனக்கு யோக்யனான ஸத்குரு கிடைக்கிறார். நியத குரு உபதேசத்தினால், யோக்ய காலத்தில் ஸ்வயோக்ய காலத்தில் அபரோக்ஷ தரிசனத்தை அடைகிறான்.

** பகவத் அபரோக்ஷ ஞானத்தினால் கிடைக்கும் பலன்களில் முக்கியமான முதலாம் பலன் என்றால் - அது கர்மக்ஷயம் ஆகும். பிரம்மஸூத்திரத்தின் 4ம் அத்தியாயத்தின் 1ம் பாதத்தின் 8ம் தததிகமாதி கரணத்தை படித்து, அல்லது அறிந்தவரிடமிருந்து கேட்டு விவரங்களை அறியலாம். அனைவரும் ப்ராரப்தத்தினை அனுபவித்தே ஆகவேண்டும். ஸ்ரீஹரியின் அனுக்ரஹ விசேஷத்தினால், அந்த கர்ம போகத்தில் குறைவும் ஏற்படலாம். இந்த ப்ராரப்த கர்மம், புண்ய பாப அல்லது இரண்டும் சேர்ந்ததாகவும் இருக்கலாம். பிரம்மாதி ருஜுகண ஜீவர்களின் ப்ராரப்தம், வெறும் புண்ய ரூபமாக இருக்கிறது. ஸுக மாத்ரமான போகத்திற்கு காரணமாகிறது. ருத்ர, இந்திராதிகளின் ப்ராரப்தம், சிறிது துக்கமும் கொண்டிருக்கிறது. மற்றும் ப்ராரப்த கர்மத்தின் போகத்தின் காலம், மேலேயிருந்து கீழே உள்ளவர்களுக்கு குறைந்து கொண்டே போகிறது. தாரதம்யத்தில் கீழே வந்தால், ஜீவர்களின் ப்ராரப்தம் அதிகமாக துக்கமும், போக காலம் குறைவாகப் போகிறது.

அல்பமான மனுஷ்யோத்தம ஜீவர்களின் ப்ராரப்தம், துக்கம் அதிகமாக இருந்து, போகம் மிகக் குறைந்த காலம் இருக்கிறது. ப்ராரப்த போகம் முடியும்போது இருக்கும் ஜீவ சரீரம் 'சரமதேகம்' என்று அழைக்கப்படுகிறது. ப்ராரப்தம் அல்பமாக இருந்தால், அபரோக்ஷம் ஆகும் தேகத்திலேயே அதன் போகம் முடிந்துவிடுகிறது. அந்த தேகம் முடிந்தபின், ஜீவன் முக்தன் ஆகிறான். அப்படியில்லாமல், ப்ராரப்தம் குறைவாக இருந்து ஒரு அல்லது அதிகமான பிறவிகளை எடுத்து போகிக்க வேண்டியிருந்தால், ஞானி பல தேகங்களைப் பெறுகிறான். சரம தேகத்திற்குப் பிறகு, ஞானி, சரியான வழியில், ஜன - தப - ஸத்ய - அமுக்த வைகுண்டாதி லோகங்களில் மஹா ப்ரளய காலத்தின் வரை இருக்க வேண்டியிருக்கிறது. பிறகு அனைவரும் பிரம்மனிடம் வந்து, அவனின் உபதேசத்தினால் ஸ்பஷ்டமான பிம்பாபரோக்ஷத்தைப் பெற்று, அவனுடன் விரஜா நதியில் ஸ்னானம் செய்து,

லிங்கதேகத்தை விட்டு, பிரம்மனுடன் பரமாத்மனின் உதரத்தில் நுழைகின்றனர்.

சரம தேக நாசத்தினால் ப்ராரப்தம் நாசம் அடைவதில்லை. மறுபடி பிறவி எடுக்க வேண்டியதாக மீந்து போவதும் இல்லை. ப்ராரப்த-சேஷம் விரஜா ஸ்னானத்தினால் நஷ்டம் ஆகி, ஞானிஜீவர்கள் வெறும் ஸ்வரூப தேகத்தினால் இருக்கிறான். 'ப்ராரப்த கர்ம சேஷஷ்ச விரஜாதரணாவதி:' என்னும் ப்ரமாண வாக்கியம், இந்த பிரமேயத்தையே நிரூபிக்கிறது.

**20. ஸ்வஸ்வயோக்$^{3}$யதானுஸாரேண ஸம்பூர்ண ஸாத$^{4}$னானம் பூர்வகல்பே பி$^{3}$ரம்ஹணா ஸஹ விரஜானதீ$^{3}$ ஸ்னானேன த்யக்த லிங்கா$^{3}$னாம் ததா$^{2}$ வினஷ்$^{2}$ட அவஶிஷ்$^{2}$ட இஷ்$^{2}$டாஶேஷ$^{2}$ ப்ராரப்$^{3}$த$^{4}$ கர்மாணாம் பிரலயகாலே ப$^{4}$க$^{3}$வது$^{3}$த$^{3}$ரே வஸதாம்**

ஸ்வஸ்வயோக்யதானுஸாரேண - தத்தம் யோக்யதைக்கேற்ப; ஸம்பூர்ண ஸாதனானம் - முழுமையான ஸாதனைகள் உள்ளவரும்; பூர்வகல்பே - முன்னர் நடந்த பிரம்ம கல்பத்தில்; பிரம்ஹணா ஸஹ - சதுர்முக பிரம்மனுடன்; விரஜானதீ ஸ்னானேன - விரஜா நதி ஸ்னானத்தினால்; த்யக்த லிங்கானாம் - விட்டுவிட்ட லிங்க தேகம் உள்ளவரும்; ததா - மற்றும்; வினஷ்ட - நாசமான; அவஷிஷ்ட - நாசம் ஆகாமல் இருக்கும்; இஷ்டாஷேஷ ப்ராரப்த கர்மாணாம் - இஷ்ட புண்ய மற்றும் அனைத்து ப்ராரப்த கர்மங்கள் உள்ளவரும்; பிரலயகாலே - பிரளய காலத்தில்; பகவதுதரே - பகவந்தனின் உதரத்தில்; வஸதாம் - வசிப்பவரும் ஆன;

முன்னர் நடந்த பிரம்ம கல்பத்தில், அபரோக்ஷ ஞானிகளான ஜீவர்கள், தரிசனத்தினால், ஸர்வஸஞ்சித பாவங்களையும், புண்யங்களையும் போக்கிக் கொண்டு, போகத்தினால் ப்ராரப்த கர்மத்தையும் போக்கிக் கொண்டு, ஸ்வயோக்ய ஸாதன பரிபூர்ணதையை அடைந்து, சதுர்முகனுடன் விரஜா நதியில் ஸ்னானம் செய்யும் முன்னரே, இஷ்ட (காம்ய) புண்யங்களை தம்மை பிரவேசித்து வணங்குபவர்களுக்கு தானம் செய்து, விரஜா ஸ்னானத்தினால் ப்ராரப்தத்தை கொஞ்சம் கூட மிகாமல் போக்கிக் கொண்டு, பிரளய காலத்தில் பகவந்தனின் உதரத்தில் தியான அவஸ்தையில் இருக்கின்றனர்.

** வைகுண்ட லோகம், ஸ்ரீ பூ துர்கா நாமக மூன்று பாகங்களைக் கொண்டதாகும். அவை, தன் நாமக லட்சுமி ரூபங்களால் நியம்யமாக இருக்கிறது. இவற்றில் ஸ்ரீபாகம் அப்ராக்ருதமானது. மற்ற இரண்டும் த்ரிகுணாத்மகமானவை. ஸ்ரீபாகத்தில் வைகுண்டன் என்னும் ஸ்ரீவிஷ்ணு ஸ்ரீதேவியுடன் வசிக்கும் ஸார்வபௌம நகரம் (வைகுண்டபுரி) லக்ஷ்ம்யாத்மகமானது - லட்சுமி தேவியே அந்த ரூபத்தினால் இருக்கிறாள். மற்ற ஸ்ரீபாகம், ஷுத்த ஸத்வாத்மகமானது. த்ரிகுணாத்மக ப்ரக்ருதி அபாரமாக இருக்கிறது. அதன் ஒரு சிறிய பாகம் மட்டும் ஸ்ருஷ்ட்யார்த்தமாக உபயோகிக்கப்படுகிறது. இவ்வாறு உபயோகிக்கப் படாமல் இருக்கும் ப்ரக்ருதியில் இருக்கும் ஸத்வ குணம், 'ஷுத்தஸத்வ' என்று அழைக்கப்படுகிறது.

வைகுண்ட நகரியை ஸ்ரீதேவியே விரஜா நதி ரூபத்தினால் சுற்றி வளைத்து பாய்கிறாள். வைகுண்ட நகரிக்கும், அதனை சுற்றியிருக்கும் ஷுத்த ஸத்வாத்மக ஸ்ரீபாக வைகுண்டத்திற்கும் நடுவே இருக்கும் விரஜா நதி, ப்ரளய காலத்தில், அதாவது, பிரம்மாண்டம் லயம் அடைந்து, பிரமாண்டத்தின் வெளியே இருக்கும் ஆவரணங்கள் லய அடையும்போது, அங்கிருக்கும் ஸூக்ஷ்ம ஸ்ருஷ்டியில் படைக்கப்பட்ட தத்வாபிமானி தேவதைகள், அவரின் மேல் இருப்பவர்களில் (ஸ்வோத்தம தேவதைகளில்) பிரவேசிக்கும்போது, பிரம்மாண்டத்தின் ஆவரணங்களில் கடைசியான ஸத்வகுண ஆவரண மற்றும் அதன் புறத்தில் இருக்கும், நித்யமும் அனந்தமுமான அவ்யாக்ருதாகாஷகளின் நடுவே வருகிறது.

அப்போது (கருட சேஷ வழிகளிலிருந்து வந்து) சதுர்முகனை நுழைந்திருந்த அனைத்து ஜீவர்களும் வெளியே வந்து, விரஜா நதியில் ஸ்னானம் செய்கின்றனர். லிங்க தேகத்தினை விடுகிறார்கள். பிரம்மாண்டம் 50 கோடி யோஜனை விஸ்தாரமானது. அதன் ப்ருதிவ்யாத்மக கர்பர 100 கோடி யோஜனை விஸ்தாரமானது. அதன் மேல் ஜலாதி பூதங்கள், அஹங்கார, மஹதாதி தத்வங்களின் ஆவரணங்கள். ஒன்றைவிட ஒன்று 10 மடங்கு விஸ்தாரமானது. அதன் மேல் ஸத்வதி குணங்களின் ஆவரணங்கள் மற்றும் ஸத்வ குணத்தின் மேல் அனந்த விஸ்தாரம் உள்ள அவ்யாக்ருத ஆகாஷமும்

இருக்கிறது. இவற்றின் விவரங்களை சாஸ்திரங்களை படித்து, தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

** லிங்கஸ்வரூபம் - நித்யம் மற்றும் நிர்விகாரமானது. இதனை அனாதிகாலத்திலிருந்து லிங்கதேகம் போர்த்திக் கொண்டிருக்கிறது. அமுக்த ஜீவர்கள் அனைவரும் லிங்கதேகம் உள்ளவர்கள் - ஸலிங்கிகள். இந்த லிங்கதேகம் 16 ப்ராக்ருத கலைகளால் (ஸூக்ஷ்மாம்ஷங்களால்) நிர்மாணம் ஆனது. ப்ருத்வி முதலான பஞ்சபூதங்களுக்கு காரணங்களான பூதஸூக்ஷ்ம என்னும் பஞ்ச தன்மாத்ரங்கள், தஷேந்த்ரியங்கள் மற்றும் மனஸ் - என மொத்தம் 16 கலைகளால் ஆனது. இது ஜட வஸ்து ஆகையால், ப்ரேரக சேதன சக்தியை விட்டு தனியாக இருக்கும் சக்தியைக் கொண்டிருப்பதில்லை. இதற்கு ஜீவஸ்வரூபத்தை கட்டுப்படுத்தும் சாமர்த்தியமும் இல்லை.

ஸர்வப்ரேரகனான ஸ்ரீஹரியே இதற்கு பந்தகஷக்தி ப்ரேரகன் ஆகிறான். 'பந்தகோ பவபாஷேன மோசகக்ஷ்ச ஸ ஏவ ஹி' என்னும் ஸ்ருதி இதையே சொல்கிறது. லிங்க தேகத்தின் உபாதான காரணங்களான 16 கலைகள், ஸத்வரஜஸ்தமோ குணங்கள் என்னும் ப்ராக்ருதி குணங்களின் அதிஸூக்ஷ்ம விகாராம்ஷங்கள் ஆகும். ஸ்ரீஹரியின் இச்சையினால் த்ரிகுணங்களுக்கு அபிமானியான ஸ்ரீ பூ துர்கா ரூபளான ரமாதேவி, முக்ய பந்தகஷக்தி ப்ரதள் ஆகிறாள்.

ஸ்ரீஹரியின் அதீனளாகி, பிறகு பாரதி ஸரஸ்வதியர், பிறகு ஸௌபர்ணி வாருணி உமாதேவியர்கூட, லட்சுமிதேவியைப் போல, அவளுக்குப் பிறகு, ப்ரக்ருதி ஷப்த வாச்யரும், ப்ரக்ருதி அபிமானிக்ளும் ஆகியிருந்து, இவர்களும் கூட ஜீவர்களை த்ரிகுணங்களால் பந்தனம் செய்கின்றனர். இவர்களில் உத்தமர், உத்தமாதிகாரிகளிலும், கீழே இருப்பவர்கள் கீழான அதிகாரிகளிலும், த்ரிகுணாகார்ய ப்ரார்த்தகராக இருக்கிறார்கள் என்பது பொதுவான விதி ஆகும்.

இந்த த்ரிகுணங்களின் ப்ரபாவத்தை (குணக்ருத கர்த்ருத்வத்தை), ஸ்வரூப குணத்திற்கேற்ப ப்ரவ்ருத்தி செய்வதே த்ரிகுணாதீதத்வம் ஆகும். த்ரிகுணங்களை தாண்டுவது. இதனை அடைவதே அனைத்து

ஸாதனைகளின் குறி ஆகும். அதாவது, லிங்கபங்கமே முக்கிய குறிக்கோள் ஆகும்.

**21. ஆனந்த$^{3}$மாத்ர வபுஷாம் தத$^{3}$னுப$^{4}$வ ரஹிதானாம் ஸ்வஸ்வயோக்$^{3}$ய ப$^{4}$க$^{3}$வத்$^{3}$ரூப விஶேஷ$^{2}$ த்$^{4}$யான ரதா$^{1}$னாம் ஸ்ருஷ்டிகாலே ப$^{4}$க$^{3}$வதா$^{3}$ஞயா ப$^{4}$க$^{3}$வது$^{3}$த$^{3}$ராத் ப$^{3}$ஹிர்க$^{3}$தானாம் ஶ்ரீஶ்வேதத்$^{3}$வீப த$^{3}$ர்ஷனம் நிமித்தீக்ருத்ய ப்ரதா$^{4}$னாவரணபூ$^{4}$த ஸ்வேச்சாப$^{1}$ஸரணேன ஸ்வஸ்வயோக்$^{3}$ய ஆனந்தா$^{3}$விர்பா$^{4}$வலக்ஷண முக்திப்ரதா$^{3}$ன ப்ரயோஜனக மாயாபதி ஶ்ரீவாஸுதே$^{3}$வாத்மக**

ஆனந்தமாத்ர வபுஷாம் - ஆனந்தமே தேகமாக உள்ள (ஆனந்த ஸ்வரூபரான); ததனுபவ ரஹிதானாம் - அந்த தேகத்திலிருந்து பெறக்கூடிய பூர்ணானந்த ரஹிதரான; ஸ்வஸ்வயோக்ய பகவத்ரூப விஷேஷ த்யான ரதானாம் - ஸ்வயோக்யமான பகவந்தனின் ரூபத்தை தியானிப்பதில் (பிரளய காலத்தில் ஶ்ரீஹரியின் உதரத்தில் இருந்து) ஈடுபட்டிருக்கும்; ஸ்ருஷ்டிகாலே - ஸ்ருஷ்டி காலம் தொடங்குகையில்; பகவதாஞயா - பகவந்தனின் ஆணையின்படி; பகவதுதராத் - பகவந்தனின் உதரத்திலிருந்து; பஹிர்கதானாம் - வெளியே வந்தவர்களுக்கு; ஶ்ரீஷ்வேதத்வீப தர்ஷனம் - (முக்தகம்யமான) ஷ்வேதத்வீப தரிசனத்தை; நிமித்தீக்ருத்ய - காரணமாக வைத்துக்கொண்டு; ப்ரதானாவரணபூத - (பூர்ணானந்தத்தின் வெளிப்பாட்டிற்கு இடம் இல்லாத) ஜீவஸ்வரூபத்தின் முக்யாவரண பூதமான; ஸ்வேச்சாபஸரணேன - தன் இச்சா ரூபத்தின் ஆவரணத்தை அபஸரணம் செய்து (திரையை விலக்கி); ஸ்வஸ்வயோக்ய ஆனந்தாவிர்பாவலக்ஷண - ஜீவஸ்வரூப யோக்யமான பூர்ணானந்தத்தை வெளிப்படுத்துவது என்னும்; முக்திப்ரதான ப்ரயோஜனக - முக்தி ப்ரதானமே ப்ரயோஜனமாக உள்ள; மாயாபதி ஶ்ரீவாஸுதேவாத்மக - மாயாபதி ஶ்ரீவாஸுதேவ ஸ்வரூபனான;

மஹா பிரளய காலத்தில் பகவந்தனின் உதரத்தின் பிரவேசம் செய்து ஸ்ருஷ்டி காலம் வரைக்கும் த்யானாவஸ்தையில் இருக்கும் ஜீவர்கள், லிங்கதேகத்தை விட்டு ஸ்வஸ்வரூபானந்த தேகத்தை அடைகின்றனர். ஆனாலும், ஸ்வயோக்யமான பூர்ணானந்தம், இந்த முக்தர்களின் அனுபவத்திற்கு வருவதில்லை. ஸ்ருஷ்டி காலம்

வரும்வரை ஸ்வபிம்ப த்யானத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். ஸ்ருஷ்டி காலம் வரும்போது, பகவந்தனின் ஆணைப்படி இந்த அனைத்தும் உதரத்திலிருந்து வெளியே வருகின்றனர். ஷ்வேதத்வீப தரிசனத்திற்காக இவர்கள் அனைவரையும் மாயாபதி ஸ்ரீவாசுதேவன், அங்கு அழைத்துச் செல்கிறான். அங்கிருக்கும், தன்னுடையதே ஆன நாராயண (பத்மனாப) ரூபத்தின் தரிசனத்தை செய்விக்கிறான். அப்போது, தன் இச்சாரூபத்தின் ஆவரணத்தை விலக்கி (இவர்களுக்கு பூர்ணானந்த அனுபவம் கிடைக்க வேண்டும் என்று சங்கல்பம் செய்து) தன் விருப்பம் என்னும், ஆவரணங்களில் முக்கியமான ஆவரணம் விலக, அவர்களை முக்தர்கள் என்கிறான். இந்த செயல், ஸ்ரீவாசுதேவ ரூபத்தினால் ஆவதால், வாசுதேவன் முக்திபிரதன் என்று அழைக்கப்படுகிறான்.

** மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் சொல்லப்பட்ட பிரமேயம், இங்கு விளக்கப்படுகிறது. லிங்க பங்கத்தை அடைந்து, சம்சாரத்திலிருந்து முக்தரான ஜீவர்கள், பிரளய காலத்தில் பரமாத்மனின் உதரத்தில் இருந்தவாறு, ஸ்வயோக்ய த்யானத்தில் இருப்பவர்களை, ஸ்ருஷ்டி காலம் வந்தபின், உதரத்திலிருந்து வெளியே கொண்டு வந்து, ஷ்வேதத்வீபத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று, நாராயணனின் தரிசனத்தினால் இச்சாவரணத்தின் உறையை விலக்கி, ஸ்வஸ்வரூபானந்தத்தின் பூர்ணானுபவம் உள்ளவர்களாக ஆக்கி, முக்தர் என்னும் நாமம், முழுமையாக பொருந்துமாறு செய்கிறான் - மாயாபதி ஸ்ரீவாசுதேவன்.

**22. லக்ஷ்ம்யாத்மக பிரளயாப்3தி4ஸ்த2 ஸ்ரீவடபத்ரஶாயி அஶேஷ2 ஜக3து3த3ர அஶேஷ2 முக்த நாபி4தே3ஶோர்த்4வபா4க3 குக் ஷ்யாக்2யதே3ஷ த்ரிவிதா4ஶேஷ ஸம்ஸாரி நாபி4தே3ஷ அஷே1ஷ2தம: பதிதனாப்4யதோ4 பா4க3தே3ஷ ஸ்ரீபூ4ம்யாலிங்கி3த காலாதி3சேஷ்2டக பரமாண்வாத்3ய ஶேஷ2காலாவயவ ஸ்ருஷ்ட்யாதி3கர்த்ரு அஶேஷ2 நாமக பரமபுருஷ நாமக ஸ்ரீசதுர்முக2 ப்ராணோபாஸிதசரண அனிருத்3தா4தி3 சதூரூபாத்மக கா3யத்ரீ நாமக ஸவித்ரு நாமக ரூபவிஶேஷா2த்மக வ்யாப்தரூப ப்3ருஹச்சரீர**

லக்ஷ்ம்யாத்மக - லட்சுமிஸ்வரூபமே ஆன; பிரளயாப்திஸ்த - பிரளய ஸமுத்திரத்தில் இருக்கும்; ஸ்ரீவடபத்ரஷாயி - லட்சுமி ஸ்வரூபத்தின் (ஸ்ரீ) வடபத்ரமே சேஷதேவனைப் போல இருக்கும் படுக்கையில் படுத்திருக்கும்; அஷேஷ ஜகதுதர - அனைத்து உலகங்களையும் உதரத்தில் தரித்திருக்கும்; அஷேஷ முக்த நாபிதேஷோர்த்வபாக குக்ஷயாக்யதேஷ - அனைத்து முக்த ஜீவர்களையும் தரித்திருக்கும் நாபியின் மேல் இருக்கும் குக்ஷி என்னும் தேக பாகத்தைக் கொண்ட; த்ரிவிதாஷேஷ ஸம்ஸாரி - நாபிதேஷ - அனைத்து சம்சாரி ஜீவர்களையும் தரித்திருக்கும் நாபியைக் கொண்ட; அஷேஷதம: பதிதனாப்யதோ பாகதேஷ - தமஸ்ஸினில் விழுந்திருக்கும் அனைவரையும் தரித்திருக்கும் நாபியின் கீழ்பாகத்தைக் கொண்ட; ஸ்ரீபூம்யாலிங்கித - ஸ்ரீபூதேவியர்களால் ஆலிங்கனம் செய்யப்பட்டவனும்; காலாதிசேஷ்டக - காலாதி நியாமகனும்; பரமாண்வாத்ய ஷேஷகாலாவயவ - பரமாணுவே முதலான அனைத்து கால விபாகங்களின்; ஸ்ருஷ்ட்யாதிகர்த்ரு - ஸ்ருஷ்ட்யாதி கர்தனான; அஷேஷ நாமக - சேஷன் என்று அழைக்கப்படும்; பரமபுருஷ நாமக - பரமபுருஷன் என்னும் (புருஷோத்தமன் என்னும்) பெயர் கொண்ட; ஸ்ரீசதுர்முக ப்ராணோபாஸிதசரண - மங்கள ஷுத்த ஸ்வரூபரான சதுர்முக பிரம்ம மற்றும் முக்யபிராணர்களால் வணங்கப்படும் சரணங்களைக் கொண்ட; அனிருத்தாதி சதூரூபாத்மக - அனிருத்தாதி நான்கு ரூபங்களைக் கொண்ட; காயத்ரீ நாமக ஸவித்ரு நாமக ரூபவிஷேஷாத்மக - காயத்ரி மற்றும் ஸவித்ரு என்னும் ரூப விசேஷங்களைக் கொண்ட; வ்யாப்தரூப ப்ருஹச்சரீர - ஸர்வ வ்யாபகமும் குணபூர்ணமும் (ப்ருஹத்) ஆன, சரீரம் உள்ளவனுமான...

பிரளய காலத்தில் ஸ்ரீஹரி, சேதனாசேதனாத்மக அனைத்து உலகினையும் தன் உதரத்தில் வைத்துக்கொண்டு, மூலரூபத்தினால் (நாராயணன்) பிரளய நீரில், வடபத்ரத்தில் படுத்திருக்கிறான். அப்போது ப்ராக்ருத ஜீவிகள் எதுவும் இருப்பதில்லை. லட்சுமிதேவியே ஜலரூபத்தினால் ப்ரளய சமுத்ரமாக இருக்கிறாள். இன்னொரு ரூபத்தினால் வடபத்ரமும் (ஆல இலை) ஆகியிருக்கிறாள். இவ்வாறு படுத்திருக்கும் நாராயணன் (நாபியின் மேலிருக்கும்) குக்ஷி ப்ரதேசத்தில் அனைத்து முக்தர்களையும் (முக்த உலகங்களையும் கூட); நாபி பிரதேசத்தில் த்ரிவிதரான அனைத்து ஸம்ஸாரி (அடுத்த ஸ்ருஷ்டியில் வரக்கூடிய) ஜீவர்களை; நாபியின் கீழ்பாகத்தில் நித்ய

தமஸ்ஸினை தரித்திருக்கும் நாராயணன், ஸ்ரீபூதேவியர்களின் ஆலிங்கத்தை பெற்றிருக்கிறான். இவனே கால நியாமகன் - பரமாணு முதலான சூக்ஷ்ம கால அம்சங்களின் நிர்மாணம் செய்தவனும் இவனே. அனைத்தும் கார்யஷூன்ய நிலையில் இருக்கும் பிரளய காலத்தில், தான் ஒருவனே அனைத்தையும் பார்த்தவாறு ஜாக்ரதனாகி பூர்ணானந்தத்தை அனுபவித்தவாறு, இருக்கிறான் ஆகையால், 'சேஷ' என்றும், ஸர்வோத்தமன் ஆகையால் 'பரமபுருஷ' என்றும் அழைக்கப்படுகிறான். சதுர்முக பிரம்ம மற்றும் முக்யபிராணர்களால் தினமும் வணங்கப்படக்கூடிய சரணங்களைக் கொண்டிருக்கிறான். அனிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண, வாசுதேவ என்னும் நான்கு ரூபங்களால் வெளிப்பட்டது இவனே. காயத்ரி, ஸவிதா நாமக ரூப விசேஷங்களைக் கொண்டவன். குணபூர்ணன் (ப்ருஹதாகார - ஸர்வவ்யாப்தமான ஒரு ரூபம் உள்ளவனாகி) அனைத்தையும் வ்யாபித்திருப்பவன் இவனே.

** 'யத்ர வாயூத பத்மாதி ரூபேண ப்ரக்ருதி: ஸ்திதா' (பாக. தாத்) என்று, வாயு, உதக, பத்ம முதலான ரூபங்களால் ஸ்ரீமகாலட்சுமி தேவியே பிரளயகால பூர்ணம் அடையும்வரை இருக்கிறாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதே பிரமேயத்தை பிரம்மகாண்ட புராணத்தில் - லட்சுமிதேவியே பிரளயோதக மற்றும் படுக்கையாக இருக்கிறாள், ஹே கருடனே. பிரளயோதகத்தில் படுத்திருந்த ஸ்ரீஹரியின் உதகாந்தர்கத ஜலரூபளும் அவளே ஆகிறாள் - வேறு எதுவும் இருந்திருக்கவில்லை'. இதையே ஸ்ரீஜகன்னாததாசர் 'பிரளயகாலதி பதியு மலகபேகெனுத வட | தெலெயாகி ஹரிய ஒலிஸிதி | ஒலிஸிதி ஜகத மங்கள தேவி நமகெ தயவாகெ' என்று தத்வஸுவ்வாலியில் நிரூபித்திருக்கிறார்.

** வடபத்ர இலையில் படுத்த நாராயணனை பாரத தாத்பர்யத்தில் இவ்வாறு வர்ணித்திருக்கிறார். ஸ்ருஷ்டிக்கு முன்னர் (பிரளய காலத்தில்), சிறந்த குணஸமுத்ரனும், அப்ரமேயனும், ஸர்வோத்தமோத்தனும் (லட்சுமிதேவியைவிட அனந்த மடங்கு உத்தமன்) ஆன நாராயணன் ஒருவனே, அனைத்து உலகத்தையும் உதரத்தில் தரித்து, வேதாதி ஞானத்தையும் ஹ்ருதயத்தில் வைத்துக் கொண்டு, லட்சுமிதேவியினால் ஆலிங்கனம் செய்யப்பட்டு, பூர்ணானந்தனான தான், அவளுக்கு ஆனந்தப்ரதனாக இருக்கிறான்'

என்று இந்த பிரமேயத்தின் நிர்ணயம் சொல்லப்பட்டுகிறது. பூர்ணானந்த ஸ்வரூபனான ஸ்ரீஹரிக்கு ஸ்ரீலட்சுமிதேவி, ரதிபாத்ரள் மட்டுமே தவிர, ரதி-ப்ரதள் அல்ல.

ஸரஸபாரதி விலாஸத்தில் கூறியபடி - ரமாதேவியை, அவளில் அபாரமான கருணையைக் கொண்ட ஸ்ரீஹரி, மகிழ்ச்சியைக் கொடுத்து, அவளுடன் க்ரீடிக்கிறான். அவளுடன் ரமிக்கிறான் என்றால், அவளில் இருக்கும் தன் ஸ்த்ரீ ரூபத்துடன் ரமித்து, அதிஷ்டான பூதளான அவளுக்கு அபாரமான ஆனந்தத்தை அருள்கிறான் என்று அர்த்தம். வடபத்ரஷாயியான ஸ்ரீஹரி, தன்னில், எந்த பாகத்தில் யாரை தரித்திருக்கிறான் என்னும் ரகசிய பிரமேயம் பிரம்மாண்ட புராணத்தில் பல வாக்கியங்களில் விளக்கப்பட்டுள்ளது.

வைகுண்ட, ஷ்வேதத்வீப, அனந்தாஸான என்னும் மூன்று முக்த லோகங்களில் இருக்கும் முக்தர்கள், ஸ்ருஷ்டி காலம் வரும்வரைக்கும், வடபத்ரஷாயி ஸ்ரீகிருஷ்ணனின் குக்ஷி தேஷத்தில், த்யானத்தில் இருந்து மகிழ்ச்சியில் இருந்தவாறு, ஸ்ருஷ்டி ஆனபிறகு (வெளிப்பட்ட அந்த த்ரிதாமங்களில்) தம் ஸ்தானங்களை அடைகின்றனர். தமஸ்ஸினை அடைந்த தாமஸ ஜீவர்கள், லிங்கதேகத்தை விட்டு, பூர்ணமானஹரித்வேஷ ஸ்வரூபராகி நாபியின் கீழ் பாகத்தில் இருக்கின்றனர். அவர்கள் துக்க மாத்ர ஸ்வரூபராக இருக்கின்றனர். நாபியில் (நாபியின் மேல்) ஸம்ஸாரி ஜீவர்கள் (அதாவது அடுத்த ஸ்ருஷ்டியில் வருபவர்கள்) நித்ராவஸ்தையில் ப்ரளய காலம் முடியும்வரை இருக்கின்றனர்.

** லட்சுமிபதியான நாராயணனை காலரூபனாக கால நாமகனாக காலத்தில் இருந்து, கால நியாமகன் என்று ஞானிகள் அறிந்திருக்கின்றனர். பாகவதத்தில் கூறியபடி, அப்போதே அவதரித்த ஸ்ரீகிருஷ்ணனை தேவகிதேவி துதிக்கிறாள். அகண்ட காலத்தின் (மஹாகாலத்தின்) அந்தர்யாமியே காலாம்ஷங்களின் (கால விபாகங்களின்) ஸ்ருஷ்டி கர்தனும், காலாவயவங்களின் அந்தர்யாமியும், ஆகியிருக்கிறான். அவனே பரபிரம்மன். தேஷ காலங்கள், ஸ்வகதம் ஆனாலும், ஸ்வதந்த்ரங்கள் அல்ல. தேஷ காலங்கள் ஸ்ரீஹரியின் அதீனங்கள் என்னும் ப்ரமேயத்தை விளக்கியவாறு, ஸ்ரீஹரியின் பற்பல லீலைகளை பாகவதாதி புராணங்களில் பார்க்கிறோம்.

உதாரணம்: ஸ்ரீகிருஷ்னன், கைலாஸத்திற்குச் சென்று சிவனைக் குறித்து தவம் செய்து, ப்ரத்யும்னனை புத்திரனாக பெற்றான் என்று அஞ்ஞானிகளின் மயக்கத்திற்காக சொல்லியவாறு, தீர்க்க காலாவதியின் விரத நிஷ்டைகளை த்வாதஷ ராஷிகளில் கிரகங்களை வணங்கி, அல்பகாலத்தில் பூர்ணமாக்கினான். ஒரு நாளின் அஷ்வமேத யாகத்தில் தீக்ஷிதனான ஸ்ரீகிருஷ்ணன், த்விஜபுத்திரனை காக்க முடியாமல், அக்னி பிரவேசத்திற்கு தயாரான அர்ஜுனனைக் கண்டு, பல கோடி யோஜன ரூபத்தில் இருக்கும் அனந்தாஸனத்திற்கு தன் ரதத்தில், அர்ஜுனனையும், பிராமணனையும் அழைத்துக் கொண்டு சென்று, அந்த த்விஜ புத்திரனை திரும்பக் கொண்டு வந்து கொடுத்தான். யாக குதிரை, லட்ச யோஜன விஸ்தாரமான பூமண்டலத்தை ஒரு முகூர்த்தத்தில் சுற்றி வந்தது. அனேக ஷத யோஜன பரப்பு உள்ள ரத்ன பர்வதாதி ஐஷ்வர்ய ராஷியை கருடனின் மேல் வைத்து, த்வாரகைக்கு அனுப்பி, உபவனாதி அல்பதேஷத்தில் ஸ்தாபிக்கிறான் - ஆகிய சம்பவங்கள் உதாரணமாக பார்க்கிறோம்.

மிகச் சிறியதான அணுவும்கூட நிரம்ஷம் அல்ல. அதுவும் அனந்தாம்சங்களைக் கொண்டதே ஆகும். பரமாணுவில் நிரம்ஷத்வ என்பது பிரமை மட்டுமே. பாகவதத்தில் இதன் ஆதாரம் சொல்லப்பட்டுள்ளது. இதைப் போலவே, காலபிரமாணங்களும்கூட அனந்தாம்சங்களைக் கொண்டதாகும்.

** பிரம்மனின் பர நாமக ஆயுள் முடிந்தது என்றால், மஹாப்ரளயகாலம் வருகிறது. அப்போது அனைத்து உலகங்களும், அனைத்து உலக மக்களும் நாசம் அடைகின்றனர். பஞ்சபூதங்கள் தம் உற்பத்திக்கு காரணமான அஹங்கார தத்வத்திலும், அது மஹத் தத்வ த்திலும், அது அவ்யக்த தத்வத்திலும் (மூல ப்ரக்ருதியிலும்), லயம் அடைகின்றன. கால நாமக ஸ்ரீஹரியின் அசிந்த்ய ஷக்தியினால் இவ்வாறு ஸர்வமும் நாசம் அடைந்து (நிஷ்க்ரிய நிலையை அடைந்து), ஸ்ரீஹரி ஒருவனே இருக்கிறான். ஷஷ்வதேக ப்ரகாரனான அவனில், எந்த வேறுபாடுகளும் இல்லாமல், நித்ய ஜாக்ரதனாகியே இருக்கிறான். இந்த காரணத்தினால் ‘சேஷ’ என்று அழைக்கப்படு கிறான். அப்போது முக்கியமாக ஸர்வஷப்த வாச்யனாக இருக்கிறான்.

பிரளய காலத்தில் ஷப்தங்களுக்கு வேறு வ்ருத்திகளே இல்லாததால், (அன்யவஸ்து வாசகமாகும் சந்தர்ப்பமே இல்லாத காரணத்தினால்) வேதாதி அனைத்து ஷப்தங்களும் வெறும் பரமாத்ம வாசகமாக இருக்கின்றன. இந்த அர்த்த விசேஷங்கள், ஸ்ரீகிருஷ்ணன் அவதரித்த உடன், திவ்ய தர்சனம் அளித்து தேவகிதேவியின் ஸ்தோத்திர பாகத்தினால் தெளிவாகிறது. தேவகிதேவி இவ்வாறு சொல்கிறாள். நஷ்டே லோகே த்விபரார்தாவஸானே மஹாபூதேஷ்வதி பூதம் கதேஷு | வ்யக்தேவ்யக்தம் காலவேகேனெ யாதே பவானேக: சிஷ்யதே சேஷ ஸங்க்ஞ: || (பாகவத)

**23. ஶூன்யாபி4த3 காலாபி4த3 கேவலாபி4த3 பி3ரம்மாபி4த3 அனந்தாபி4த3 ரூபவிஶேஷா2த்மக நிருபசரித மூலரூப நிருபசரித வ்யாப்த ப்ரதிபாத்3ய அனந்ததேஜ:புஜ்ஜ தாத்3ருஷ ரமாயுக்தரூப விஶேஷாத்மக கா3யத்ரீ பூ4தவாக்1 ப்ருதி2வி ஶரீர ஹ்ருத3யபே4தே3ன ஷட்3வித4 கா3யத்ரி நாமக லோகவேத3ஸமீர ரமாந்தர்க3த ப்ரணவாக்2ய துரீயபாதோ3பேத கா3யத்ரீ பாத3சதுஷ்2டய ப்ரதிபாத்3ய வைகுண்ட2ஸ்தி2த அனந்தாஸன ஸ்தி2த ஶ்வேதத்3வீபஸ்தி2த ஸர்வஜீவஸ்தி2த ரூபபே4தே3ன சதுரூபாத்மக தே3ஹவ்யாப்த தே3ஹாந்தர்யாமி ஜீவவ்யாப்த ஜீவாந்தர்யாமி ரூபபே4தே3ன சதுரூபாத்மக**

ஷூன்யாபித - ஷூன்ய நாமகனும்; காலாபித - காலநாமகனும்; கேவலாபித - கேவல நாமகனும்; பிரம்மாபித - பிரம்ம நாமகனுமான; அனந்தாபித ரூபவிஷேஷாத்மக - அனந்த நாம ரூப விசேஷ ஸ்வரூபனும்; நிருபசரித மூலரூப - உபசார வல்லப மூல ரூபங்களே ஆன; நிருபசரித வ்யாப்த - முக்யார்த்தத்திலேயே ஸர்வத்ர வ்யாப்தங்களும்; ப்ரதிபாத்ய அனந்ததேஜ:புஜ்ஜ - ப்ரதிபந்த ரஹித அபார தேஜோராஷிகளும்; தாத்ருஷ ரமாயுக்த - அவற்றைப் போல இருக்கும் (ஸ்ரீஹரியின் ரூபங்களைப் போல அபார தேஜோராஷி களான) ரமாதேவியின் ரூபங்களால் கூடியவைகளான; ரூப விஷேஷாத்மக - ரூப விசேஷகள் உள்ளவனும்; காயத்ரீ பூதவாக் ப்ருதிவி ஷரீர ஹ்ருதயபேதேன - காயத்ரி, பூத, வாக், ப்ருதிவி, ஷரீர மற்றும் ஹ்ருதத்தில் இருக்கும் ரூபவிசேஷங்களின் பேதத்தினால்; ஷட்வித காயத்ரி நாமக - ஆறு விதமான காயத்ரி பெயர் உள்ளவனும்;

லோகவேதஸமீர ரமாந்தர்கத - லோகாபிமானிகளும், வேதாபிமானி களும் மற்றும் முக்யபிராண மற்றும் லட்சுமி ஆகியோரின் அந்தர்யாமியும்; ப்ரணவாக்ய துரீயபாதோபேத - ஓம் என்னும் நான்காம் பாதத்தினால் கூடிய; காயத்ரீ பாதசதுஷ்டய ப்ரதிபாத்ய - காயத்ரி மந்திரத்தின் நான்கு பாதங்களால் ப்ரதிபாத்யனும்; வைகுண்டஸ்தித - வைகுண்டத்தில் இருக்கும்; அனந்தாஸன ஸ்தித - அனந்தாஸனத்தில் இருக்கும்; ஷ்வேதத்வீபஸ்தித - ஷ்வேதத்வீபத்தில் இருக்கும்; ஸர்வஜீவஸ்தித - மற்றும் ஸர்வஜீவர்களில் இருக்கும்; ரூபபேதேன - ரூப வேறுபாடுகளால்; சதுரூபாத்மக - நான்கு ரூபங்களைக் கொண்டவனும்; தேஹவ்யாப்த தேஹாந்தர்யாமி - சரீரத்தில் வ்யாப்தனாகி, நியாமகனாகி; ஜீவவ்யாப்த ஜீவாந்தர்யாமி - ஜீவர்களுக்குள் இருந்து, ஜ்யேஷ்டப்ரதனாகி; ரூபபேதேன சதுரூபாத்மக - நான்கு ஸ்வரூபங்கள் உள்ளவனாக இருக்கும்.

ஸ்ரீஹரி 'ஷூன்ய' என்னும் பெயர் உள்ளவன். கால நாமகனும் அவனே. 'கேவல' மற்றும் 'பிரம்ம' சொற்களும் அவனுடைய பெயர்களே. அவன் அனந்த பெயர்களால் அழைக்கப்படும் அனந்த ரூபவிசேஷங்கள் உள்ளவன். அந்த அனைத்து ரூபங்களும் ஒன்றுக்கொன்று அபின்னங்களே மற்றும் மூலரூபனான நாராயணனிடமிருந்து மிகவும் அபின்னங்களே ஆகின்றன. இது வெறும் பேச்சுக்காக சொல்லப்படுவதில்லை. இந்த அனைத்து ரூபங்களும் முக்யார்த்தத்திலேயே ஸர்வத்ர வ்யாப்தகள். ஒவ்வொன்றும் தேஜோராஷிகளைப் போல ஆனவை. இவற்றின் தேஜோவ்யாப்திக்கு எந்த தடைகளும் இல்லை (யாரும் எந்த பொருளும் தடை வருவதில்லை). இவ்வாறே ஸர்வத்ர வ்யாப்தமும் தேஜோமயமும் ஆன லட்சுமி ரூபங்களால் பரமாத்மனின் இந்த அனைத்து ரூபங்களும் இருக்கின்றன.

ஸ்ரீஹரி, ஷட்வித காயத்ரி (காயத்ரி, பூத, வாக், ப்ருதிவி, ஷரீர, ஹ்ருதய என்னும் ஷட்வித காயத்ரிக்கு) ப்ரதிபாத்யனும் ஆகியிருக்கிறான். லோகாபிமானிகளும், வேதாபிமானிகளும், முக்யபிராண மற்றும் ஸ்ரீதேவி இவர் அனைவரின் அந்தர்யாமியும் இவனே. (ஸர்வ நியாமகன் என்று சொல்லவும் வேண்டுமா?); ஓம்கார ஸஹிதமான நான்கு பாத காயத்ரி மந்த்ர ப்ரதிபாத்யனும்

ஆகியிருக்கிறான். வைகுண்ட, அனந்தாஸன, ஷ்வேதத்வீப என்னும் நித்யங்களான முக்த லோகங்களில் இருக்கும் மூன்று ரூபங்கள் (வைகுண்ட, வாசுதேவ, நாராயண நாமக மூன்று ரூபங்கள்) மற்றும் ஸர்வஜீவஸ்திதமான (பிம்ப) புருஷ நாமக ரூபம் ஒன்று (அனந்த ஜீவர்களில் அனந்த ரூபங்களால் பிம்பனாக இருந்தாலும், அந்த அனைத்து ரூபங்களில் அத்யந்த அபேதம் இருந்து, அவை அனைத்தும் 'புருஷ' என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றன). இவ்வாறு நான்கு ரூபங்களால் எப்போதும் வீற்றிருக்கிறான். அனைத்து சேதனர்களின் உள்ளே இருந்து வ்யாப்தனாகி மற்றும் ஷரீரங்களிலும், அந்தர்யாமி வ்யாப்தனாகி, இந்த சிறப்புகளால் கூடிய நான்கு ரூபங்களால் வீற்றிருக்கிறான்.

** விஷ்ணுவைத் தவிர, வேறு இடங்களில் மட்டும் பயன்படுத்தப்படும் சொற்களை விஷ்ணுவில் பொருத்திக் கொண்டு, அந்த சம்பந்தமான நிர்ணயங்கள் பிரம்ம ஸூத்ரத்தின் முதலாம் அத்தியாயம் 4ம் பாதத்தில் சொல்லப்பட்டுள்ளது. சுகபூர்ணனான ஸ்ரீவிஷ்ணு, அவ்யக்தனாக இருந்துகொண்டே, மற்ற அனைத்து சுகங்களையும் அல்பமாகவே வைக்கிறான் ஆகையால், (சுக ஸ்வரூபரான மற்ற ரமா பிரம்மாதி அனைவரும், ஆனந்தபூர்ணனான விஷ்ணுவைவிட மிகக்குறைவான சுகத்தை உள்ளவர்கள் ஆகையால், ஸ்வபாவ ரக்ஷகனான விஷ்ணு, அவர்களின் சுகத்தை அல்பமாகவே வைப்பதால்), 'ஷூன்ய' என்று அழைக்கப்படுகிறான். இவ்வாறு, யோக்யவ்ருத்தியினால் கூட, விஷ்ணுவில் ஷூன்ய என்னும் சொல்லை பொருத்திப் பார்க்கலாம்.

** 'கேவல' என்பதும் ஸ்ரீஹரியின் நாமமே. 'ஸாக்ஷி சேதா கேவலோ நிர்குணஷ்ச' - ஆகிய ஸ்ருதி, ஸ்ரீஹரி, ஜடாமிஸ்ரனும், சச்சிதானந்த ரூபனும் ஆனதாலேயே கேவலன் என்றும் அழைக்கப்படுகிறான் என்கின்றன. ஸ்வதந்த்ரன் ஆனதாலும், அன்யஸ்வதந்த்ர வஸ்துவே இல்லை என்பதாலும், ஸ்ரீஹரியே கேவலன் ஆகிறான். பாகவத தாத்பர்யத்தில் 'கேவலம் ஸ்வதந்த்ரம்' என்று ஸ்ரீமதாசார்யர் வ்யாக்யானம் செய்து, அதனை 'ஏகலம் கேவலம் சேதி ஸ்வதந்த்ரமபிதீயதே' என்னும் வாக்கியத்தினால் விளக்கியிருக்கிறார். பகவந்தனின் அனைத்து ரூபங்களும் அனந்த

குணபூர்ணங்களே ஆகையால், அவை அனைத்தும் பிரம்மஷப்த வாச்யங்களெ ஆகும்.

** சாந்தோக்ய உபநிஷத் நிரூபிக்கும் விவித பகவத் உபாஸனைகளில், காயத்ரி மந்த்ர ப்ரதிபாத்யனான காயத்ரி நாமக ஸ்த்ரிரூபி ஸ்ரீ நாராயணன், ஆறு விதமாக இருக்கிறான் என்று சொல்லி, அந்த ரூபங்களில் உள்ள காயத்ரி நாமக ஸ்ரீஹரியின் உபாஸனை விவரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆறு ரூபங்களையும் தொகுத்து, ஸ்ரீமதாசார்யர், தமது பாஷ்யத்தில் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

1. காயத்ரி மந்த்ர ப்ரதிபாத்ய விஷ்ணு ஸ்த்ரீ ரூபன். ஸுரியனைப் போல ஒளி பொருந்தியவன்.
2. மத்ஸ்ய முதலான அவதாரங்களின் ரூபங்களைக் கொண்டவன். பூத நாமக காயத்ரி ப்ரதிபாத்யன். (பூத = பரிபூர்ணன்).
3. வாக் இந்திரியத்தில் இருக்கும் (பேசும் சக்தியைக் கொடுப்பதால் 'வாக்' என்று அழைக்கப்படும்) வாக் நாமக ஸ்த்ரீ ரூபி ஹயக்ரீவன்.
4. ப்ருதிவியில் இருக்கும் பீத (மஞ்சள்) வண்ணம் கொண்ட ப்ருதிவி நாமக ரூபம்.
5. ஜீவனில் இருக்கும் ஜீவஸ்வரூபனை வ்யாபித்திருக்கும் சரீர நாமக ரூபம். மற்றும்
6. ஜீவனின் ஹ்ருதயத்தில் இருக்கும் ஹ்ருதய நாமக ரூபம். என,

காயத்ரி நாமக விஷ்ணு - ஆறு விதமாக இருக்கிறான்.

இந்த ரூபங்களை ப்ரதிபாதிக்கும் காயத்ரி, நான்கு பாதங்களைக் கொண்டவள். காயத்ரி மந்திரம் பொதுவாக இரு விதமாக சொல்லப்படுகிறது. ஸந்த்யாவந்தனையில் சொல்லப்படும் காயத்ரி மந்திரத்திற்கு ரிஷி - விஷ்வாமித்ரர்; தேவதா - ஸவித்ரு; சந்தஸ் - காயத்ரி; இது வ்யாஹ்ருதி ஸஹிதமானதாகும். 'ஓம் பூர்புவஸ்வ: தத்ஸவிதுர்வரேண்யம் | பர்கோ தேவஸ்ய தீமஹி | தியோ யோ ந: ப்ரசோதயாத் |' என்பதாகும். இன்னொரு விதம் - அஷ்ட மஹா மந்திரத்தில் ஒன்றாக ஜெபிக்கப்படுவது ஆகும். இதற்கு ரிஷி - ப்ரஜாபதி (பிரம்ம); தேவதா - ஸவித்ரு; சந்தஸ் - காயத்ரி; ஆனால் இது வ்யாஹ்ருதி இல்லாததாகும். 'ஓம் | ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் | பர்கோ தேவஸ்ய தீமஹி | தியோ யோ ந: ப்ரசோதயாத் |' என்று இதன் ரூபம். இதில் 'ஓம்தத்ஸவிதுர் வரேண்யம்' ஆகிய மூன்று பாதங்களும் ஸந்த்யா காயத்ரி மந்திரத்தின் பாகமே - ஸவித்ரு நாமக

நாராயணனை ப்ரதிபாதிக்கின்றது. ‘ஓம்’ என்பது, அகாராதி எட்டு எழுத்துக்கள் கொண்டதாகி, அதே ஒரு பாதமாக இருக்கிறது - இவ்வாறு இது பாத சதுஷ்டய காயத்ரி மந்த்ரம் எனப்படுகிறது.

இதற்கான விளக்கங்கள் தந்த்ரஸாரத்தில் இருக்கின்றன. ஸ்ரீஹரியின் ஸ்வரூபாம்சங்கள் மூன்று. பின்னாம்சங்கள் ஒன்று. என காயத்ரி நாமக விஷ்ணுவின் அம்ஷங்கள் நான்கு என்று ஸ்ருதி சொல்கிறது. அனந்த ரூபங்களைக் கொண்ட ஸ்ரீஹரியின் நித்யமும் வெளிப்படும் ரூபங்கள் இவை. நாராயண (ஷ்வேதத்வீப), வாஸுதேவ (அனந்தாஸன); வைகுண்ட (வைகுண்ட) என்னும் த்ரிதாமங்களில் இருக்கும் 3 ரூபங்கள் ஸ்வரூபாம்சங்கள் ஆகும். பின்னாம்ஷா் என்று அழைக்கப்படும் ‘அஸங்க்ய ஜீவகத அம்ஷ’ ஒன்று. இவ்வாறு நான்கு அம்சங்களால் நித்யப்ரகடனாக இருப்பதால், காயத்ரி நாமக விஷ்ணு சதுஷ்டாத் என்று அழைக்கப்படுகிறான்.

ஸூத்ர பாஷ்யத்தில் ஸ்ரீஹரி, சதுஷ்பாத என்றும் கூட அழைக்கப்படுகிறான். அனைத்து இடங்களிலும் (உள்ளே வெளியே) வ்யாப்தனாகி ‘பிரம்ம’ எனப்படுபவன், ஜீவதேகத்தின் (ஸ்தூல தேகத்தின்) இதயத்தில் இருந்து ‘ஆகாஷ’ எனப்படுகிறான் - ஜீவஸ்வரூபாந்தர்யாமியாகி ‘புருஷ’ எனப்படுகிறான். ஜீவஸ்வரூபத்தின் ஹ்ருதய பாகத்தில் இருந்து ‘அந்த:புருஷ’ எனப்படுகிறான். ஆகிய விவர விசேஷணங்களை குருமுகேன உபநிஷதாதி சாஸ்திரங்களை படித்து அறிய வேண்டும்.

இந்த த்ரிதாமங்களில் இருக்கும் மூன்று ரூபங்களும் மற்றும் ஸர்வஜீவாத்மக ரூபமும் பிரளய காலத்தில் கூட மூலரூபத்தில் ஐக்யம் அடைவதில்லை. ஜீவனில் இருக்கும் ஸ்ரீஹரியின் ரூபம், ஒரு அம்சத்தினால் மூலரூபத்தினை சேர்கிறது என்றும், ஜீவஸ்வரூப அம்சம், ஜீவனத்திலேயே நிற்கிறது என்றும் பிரம்மகாண்ட புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தன்னிலிருந்தே வெளிப்படும் வேதங்களை தான் கானம் செய்வதாலும், ஸர்வ ரக்ஷகனானதாலும், வாசுதேவன் காயத்ரி நாமகன் - அவனே பரமபுருஷன் - ஸ்ரீஹரி. காயத்ரி மந்த்ரோபாஸனையில், சதுர்முகனும், பிரம்ம பதத்திற்கு தகுதி பெற்ற

ஜீவர்கள் மட்டும் அதிகாரிகள் - அந்த உபாஸனையின் முக்யபலன்களை அடையத் தகுந்தவர்கள்.

** இந்த த்ரிதாமங்களில் எப்போதும் ஸர்வமுக்தர்களுக்கு, ஸ்ரீஹரி ப்ரத்யட்சனாகி தரிசனம் அளித்து மகிழ்ச்சிப்படுத்துகிறான். இந்த மூன்றும் முக்த லோகங்கள். பிரளய காலத்தில் ஸ்ரீஹரியின் உதரத்தில் இருந்து, ஸ்ருஷ்டி காலம் வந்தபோது, தத்தம் இடங்களில் வெளிப்படுகின்றன. ஸ்ரீஹரியின் ஸங்கல்பத்தைப் போல நடக்கும் இது, ஸ்ரீஹரியின் அற்புத லீலையாகும். ஜம்பூத்வீப முதலான ஸப்த த்வீபங்களை சுற்றியிருக்கும் லவணாதி சப்த சமுத்திரங்களில், பாற்கடலின் நடுவில் ஷ்வேதத்வீபம் இருக்கிறது. ஸப்தத்வீபங்களைத் தாண்டிய பிறகு, அடுத்து வஜ்ரபூமி, லோகாலோக மலைகளும், பிறகு தமஸ், அதன் இரு மடங்கு கனோதகமும் இருக்கிறது. அதற்குப் பின், பிரம்மாண்ட கர்பர வரைக்கும் அனந்தாஸனம் இருக்கிறது. மேலே உள்ள உலகங்களில், அனைத்திற்கும் மேலே இருக்கும் ஸத்ய லோகத்தின் மேல் பிரம்மாண்ட ஓடு வரைக்கும் வைகுண்ட லோகம் இருக்கிறது. ஷ்வேதத்வீபத்திற்கு நாராயண புர என்னும் பெயரும் இருக்கிறது. இவை மூன்றும் 'த்ரிதாம' என்று வேதங்களில் அழைக்கப்படுகின்றன.

** ஜீவாந்தர்யாமி புருஷ நாமக பரமாத்மன் அனைவருக்கும் அவரவர்களின் கதியைக் கொடுக்கிறான் - அவனே அனைவரின் பிம்பன். கால ரூபத்தினால் வெளியே இருந்து, ம்ருத்யு ப்ரதனும் அவனே. இவ்வாறு நித்ய ப்ரகடகளாக இருந்து, ப்ரளய காலத்தில் கூட மூல ரூபத்தில் ஐக்யம் அடையாத இந்த நான்கு ரூபங்கள் (வைகுண்ட, நாராயண, வாஸுதேவ மற்றும் புருஷ) - ஸர்வஷப்த வாச்யங்கள் ஆகும்.

### 24. நிருபசரித சர்வவாக3ர்த்த2 ப்ரதிபாத3க ஸ்ரீதே3வ்யாதி3 ரமாரூபாஷ்2டக அபி4மன்யமான சக்ரஶங்க2 வராப4யயுக்த ஹஸ்த சதுஷ்2டயோபேத ப்ரதீ3பவர்ண ஸர்வாப4ரணபூ4ஷித

நிருபசரித - பரம முக்ய வ்ருத்தியினால் (முக்யார்த்தத்தில்); சர்வவாகர்த்த ப்ரதிபாதக - அனைத்து ஷப்தார்த்தங்களையும் பிரதிபாதிக்கும்; ஸ்ரீதேவ்யாதி - ஸ்ரீதேவியே முதலான; ரமாரூபாஷ்டக - லட்சுமிதேவியின் எட்டு ரூபங்களால்; அபிமன்யமான -

அபிமன்யமானங்களான (எட்டு ரூபங்களே அபிமானிகளாக உள்ள); சக்ரஷங்க - சக்ர ஷங்கங்கள் உள்ள; வராபயயுக்த - வர மற்றும் அபய ஹஸ்தங்களைக் கொண்ட; ஹஸ்த சதுஷ்டயோபேத - நான்கு தோள்கள் உள்ள; ப்ரதீபவர்ண - ப்ரதீபத்தைப் போல வர்ணம் உள்ள (ஸூரியனைப் போல ஒளிரும்); ஸர்வாபரணபூஷித - அனைத்து ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட.

** அனைத்து வாக் இந்திரியங்களில் 'வாக்' நாமகளாகி வசிக்கும் ஸ்ரீதேவி, பரம முக்ய வ்ருத்தியினால் எப்போதும் எல்லா இடங்களிலும் ஸ்ரீஹரியையே ப்ரதிபாதிக்கிறாள். ப்ரணவத்தின் அகாராதி எட்டு எழுத்துக்களால் பிரதிபாத்யங்களான விஷ்வாதி எட்டு பகவத் ரூபங்களுடன் ஸ்ரீதேவி, தன் பற்பல எட்டு ரூபங்களைக் கொண்டு ஒளிர்கிறாள். இந்த எட்டு பகவத் ரூபங்களும், சக்ர, ஷங்க, வர, அபயங்களை நான்கு கைகளில் கொண்டு, திவ்ய ப்ரகாஷம் உள்ள கிரீட குண்டலாதி அனைத்து ஆபரணங்களால் ஒளிர்வதுமாக இருக்கிறது. இவ்வாறு ப்ரணவோபாஸகர்கள் சிந்திக்கின்றனர். ப்ரணவத்தின் வ்யாக்யானமே அனைத்து ஷப்தராஷிகள் - அனைத்து சொற்களும் முக்யார்த்தத்தில் ஸ்ரீஹரியையே சொல்கிறது.

** ஸ்ரீதேவியே முக்கியமாக ஸர்வ வாகர்த்த ப்ரதிபாதகள் ஆகிறாள். அனைத்து வேதாபிமானினியும் அனைத்து இடங்களிலும் வாகபினானியும் ஆன லட்சுமிதேவி, ஸர்வஷப்தார்த்த ப்ரதிபாதகள். அதாவது, ஸகல த்வன்யாத்மக வர்ணாத்மக ஷப்தங்களால் பரமாத்மனின் குணங்களை புகழ்வது அவளே. 'அ கார: ஸர்வவாகாத்மா' என்று (ஐதரேய) சொல்வதைப் போல, அகாரத்திலிருந்து ஓம்காரமும், ஓம்காரத்திலிருந்து அனைத்து எழுத்துக்களும் தோன்றுகின்றன. அதாவது, அகாரத்தின் வ்யாக்யானமே ஓம்காரம். ஓம்காரத்தின் வ்யக்யானமே நாராயணாதி ஷப்தங்கள் மற்றும் காயத்ர்யாதி ஷப்த சமூகங்கள். ஸர்வஷப்தார்த்தங்களை அறிந்து தினமும், அனைத்து வாக் இந்திரியத்தில் நியாமகளாக இருந்து, ஸ்ரீஹரியை வணங்குபவள் ஸ்ரீலட்சுமிதேவி.

** ஸ்ரீஹரியின் ரூபங்கள் தரித்திருக்கும் ஷங்க சக்ராதிகள், பகவந்தனின் ஸ்வரூபாத்மகவே ஆகியிருக்கின்றன. ஸ்வஸ்வரூபத்திலிருந்து பின்னமான ஷங்க சக்ராதிகளை ஸ்ரீஹரி

தரித்திருப்பது உண்டு. அஸ்வரூபகளான சக்ராதிகள் சில லட்சுமி ஸ்வரூபங்களாக இருந்து, மற்றும் சில லட்சுமிதேவியிடமிருந்து அபிமன்யங்களான ப்ராக்ருதங்களும் ஆகியிருக்கின்றன.

பகவத கீதையில் சொல்லியிருப்பதைப் போல, அனைத்து ப்ராக்ருத வஸ்துவின் நிர்மாணத்திற்கு மூலபூதமான ப்ராக்ருத தத்வங்கள் எட்டு விதங்களாக இருக்கின்றன. இந்த ப்ருதிவ்யாதி எட்டு தத்வங்களின் முக்யாபிமானி, ப்ரக்ருதி நாமக லட்சுமிதேவியே ஆகியிருக்கிறாள். நமக்குத் தெரிவதான சங்கு, சக்ரம், ஆபரண, ஆயுதாதிகள் ஆகியவை ப்ராக்ருதங்களாக இருந்து, அனிருத்த, காமாதி அபிமானி தேவதைகளைக் கொண்டதாகவும் ஆகின்றன. இவ்வாறு லட்ச்ம்யாத்மகமும், லட்சுமியினால் அபிமான்யமாகவும் ஆன சக்ர, சங்கங்களை தரித்த இரு கைகள் மற்றும் வரத, அபய ப்ரத என்னும் சூரியனைப் பொல ஒளிர்வதான, கிரீட, குண்டல, அங்கத, கங்கண, காஞ்சி முதலான ஆபரணங்களால் பூஷிதளான ப்ரணவப்ரதிபாத்ய விஷ்வாதி அஷ்டரூபங்களைக் கொண்டது என்று த்யானத்தில் சிந்திக்க வேண்டும். இவ்வாறு த்யானம் செய்வதுடன், வேதாதி அனைத்து ஷப்தாபிமானியும், பிரம்மாதி அனைவரும் வாக் இந்திரியத்தில் வாக் நாமகளாகி நியாமகளாகியும் இருக்கும் ஸ்ரீதேவி, ஸர்வஷப்தார்த்த ப்ரதிபாதளாகி ப்ரணவப்ரதிபாத்ய விஷ்வாதி எட்டு பகவத் ரூபங்களுடன், தன் அபார ப்ரேமத்தினால், ஸ்ரீஹரி தன்னுடையவனே என்னும் விசேஷ அபிமானத்தைக் கொண்டிருக்கிறாள் என்பதை கவனிக்க வேண்டும்.

**25. விஶ்வாதி$^{3}$ ப$^{4}$க$^{3}$வத்$^{3}$ரூபாஷ்$^{2}$டக ப்ரதிபாத$^{3}$க அகாராத்$^{3}$யஷ்$^{2}$டாக் ஷராத்மக ஸ்ரீமத் ப்ரணவாத்$^{3}$யஷ்$^{2}$ட மஹாமந்த்ர ப்ரதிபாத்$^{3}$ய அஷ்$^{2}$ட ரூபாத்மக மந்த்ராத்$^{4}$யாயோக்த பூ$^{4}$வராஹாத்$^{3}$யஶேஷ$^{2}$ வைஷ்ணவமந்த்ர ப்ரதிபாத்$^{3}$ய பூ$^{4}$வராஹாத்$^{3}$ய ஶேஷ ரூபவிஶேஷா$^{2}$த்மக ரமாதிமந்த்ர ப்ரதிபாத்$^{3}$ய ரமாதி$^{3}$ நிஷ்$^{2}$ட ரமாதி$^{3}$ நாமக ரூப விஶேஷா$^{2}$த்மக ஸ்ரீலட்சுமி ந்ருஸிம்மாத்மக பரமத$^{3}$யாளோ க்ஷமாஸமுத்$^{3}$ர ப$^{4}$க்தவத்ஸல ப$^{4}$க்தாபராத$^{3}$ ஸஹிஷ்ணோ தே$^{3}$ஶகாலாதி$^{4}$பதே தே$^{3}$ஹேந்த்$^{3}$ரியாதி$^{4}$பதே ஸூர்யவம்ஷத்$^{4}$வஜ ரகு$^{4}$குலதிலக லக்ஷ்மண ப$^{4}$ரத ஷத்ருக்$^{4}$னாக்$^{3}$ரஜ ஸ்ரீமத் ஹனுமது$^{3}$பாஸிதசரண ஸீதாபதே ஸ்ரீராமசந்தி$^{3}$ர ।**

விஷ்வாதி பகவத்ரூபாஷ்டக ப்ரதிபாதக - விஷ்வ முதலான எட்டு பகவத் ரூபங்களை ப்ரதிபாதிக்கும்; அகாராத்யஷ்டாக்ஷராத்மக - அகாராதி எட்டு எழுத்துக்கள் உள்ள; ஸ்ரீமத் ப்ரணவாதி - பரமபவித்ரமான ப்ரணவமே முதலான; அஷ்ட மஹாமந்த்ர ப்ரதிபாத்ய - அஷ்ட மஹாமந்திரங்களால் (எட்டு மஹா பலன்களைக் கொடுக்கக்கூடிய மந்திரங்களால்) போற்றப்படுபவனான; அஷ்ட ரூபாத்மக - எட்டு ரூபங்களைக் கொண்டவனான; மந்த்ராத்யாயோக்த - மந்திரங்களை நிரூபிக்கும் தந்த்ரஸார கிரந்தத்தின் அத்யாயத்தில் சொல்லப்படும், மற்றும்; பூவராஹாதி - பூவராஹமே முதலான; அஷேஷ வைஷ்ணவமந்த்ர ப்ரதிபாத்ய - அனைத்து வைஷ்ணவ மந்திரங்களால் ப்ரதிபாத்யனான (சொல்லப்படும், நிரூபிக்கப்படும்); பூவராஹாத்ய ஷேஷ ரூபவிஷேஷாத்மக - பூவராஹாதி அனைத்து ரூப விசேஷங்களைக் கொண்டவனும்; ரமாதிமந்த்ர ப்ரதிபாத்ய - ரமாதி மந்திரங்களால் சொல்லப்படும்; ரமாதி நிஷ்ட - லட்சும்யாதிகளில் ஸ்திரமாக நிலைத்திருக்கும்; ரமாதி நாமக - லட்ச்ம்யாதி நாமங்களைக் கொண்ட; ரூப விஷேஷாத்மக - (ஸ்த்ரீ) ரூப விசேஷங்களைக் கொண்டவனும் ஆன; ஸ்ரீலட்சுமி ந்ருஸிம்மாத்மக - ஸ்ரீலட்சுமி ந்ருஸிம்ஹ ரூபியான; பரமதயாளோ - சிறந்த தயாவந்தனே; க்ஷமாஸமுத்ர - மன்னிக்கும் குணம் நிரம்பியவனே; பக்தவத்ஸல - பக்தர்களை விரும்புபவனே; பக்தாபராத ஸஹிஷ்ணோ - பக்தர்களின் அபராதங்களை மன்னிப்பவனே; தேஷகாலாதிபதே - தேஷ காலங்களை ஆளுபவனான ஹே ஸ்வாமியே; தேஹேந்த்ரியாதிபதே - அனைவரின் தேக மற்றும் இந்திரியங்களின் நியாமகனான ஹே ஹ்ருஷிகேஷனே; ஸூர்யவம்ஷத்வஜ - சூர்ய வம்சத்திற்கு த்வஜத்தைப் போல இருக்கும்; ரகுகுலதிலக - ரகுவம்சத்திற்கு திலகப்ராயனான; லக்ஷ்மண பரத ஷத்ருக்னாக்ரஜ - லட்சுமண, பரத, ஷத்ருக்னர்களின் அண்ணனான; ஸ்ரீமத் ஹனுமதுபாஸிதசரண - ஸ்ரீஹனுமந்தனால் (நிரந்தரமாக) உபாசிக்கப்படும் சரணங்களைக் கொண்ட; ஸீதாபதே ஸ்ரீராமசந்திர - ஜானகி ரமணனான ஸ்ரீராமசந்திர ப்ரபோ...

ப்ரணவ மந்திரமானது, அ உ ம நாத பிந்து கோஷ ஷாந்த அதிஷாந்த என்னும் எட்டு வர்ணங்களைக் கொண்டது. அந்த எட்டு மந்திரங்களால் விஷ்வ, தைஜஸ, ப்ராக்ஞ, ஆத்ம, அந்தராத்ம, பரமாத்ம மற்றும்

ஞானாத்ம என்னும் எட்டு பகவத் ரூபங்கள் ப்ரதிபாத்யங்களாக இருக்கின்றன. ப்ரணவ மந்திரம் (ஸ்ரீமத்) பரம பவித்ரமும், மோட்சாதி அனைத்து செல்வங்களையும் கொடுக்கத்தக்கதாகும். புகழ்பெற்ற அஷ்ட மஹா மந்திரங்களில் ஒரு முதலாவதாகும். அஷ்ட மஹாமந்திரங்களின் ஸித்தி பெற்றவர்களுக்கு, ஸர்வாபீஷ்டங்கள் கிடைக்கின்றனா. அவை எவை என்றால்: 1. ப்ரணவ 2. மாத்ருகா (அகாராதி 50 வர்ணங்களால் ப்ரதிபாத்யங்களான அஜாதி ரூபங்கள்) 3. நாராயண அஷ்டாக்ஷர 4. வ்யஹ்ருதி 5. வாசுதேவ த்வாதஷாக்ஷர 6. காயத்ரி 7. புருஷ சூக்த 8. விஷ்ணு ஷடக்ஷர.

தந்த்ரஸாரத்தின் 4ம் அத்தியாயத்தில் பூவராஹாதி வைஷ்ணவ மந்திரங்களின் நிரூபணம் இருக்கிறது. அவற்றில் புகழ்பெற்றவை என்றால்: பூவராஹ, ந்ருஸிம்ஹ, ஹம்ஸ, ததிவாமன (மந்த்ரசிந்தாமணி), பரசுராம, ரகுராம, கிருஷ்ண, வேதவ்யாஸ, ஹயக்ரீவ, கபில, தத்தாத்ரேய, தன்வந்தரி ஆகியன. ஸ்ரீஹரி, ரமாதி மந்திர ப்ரதிபாத்யனும் ஆகியிருக்கிறான். 'ரமாதி' என்றதால், சதுர்முக பிரம்ம, சரஸ்வதி பாரதி ஆகியோரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதே 4ம் அத்தியாயத்தில் ரமாதி மந்திரங்களின் நிரூபணையும் இருக்கிறது. அவை எவை என்றால்; லட்சுமி, சதுர்முக, முக்யபிராண, சரஸ்வதி, பாரதி மந்திரங்கள், ஷிவ மந்த்ர, பார்வதி, சேஷ, கருட, இந்திராதி திக்பாலகர்களின் மந்திரங்கள், ஸ்கந்த, சூர்ய, விக்னேஷ்வர மந்திரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

அந்தந்த தேவதைகளில் அந்தந்த நாமங்களைக் கொண்ட ஸ்ரீஹரியின் ரூபங்களும் இருக்கின்றன. அந்த தேவதா அதிஷ்டானங்களில் தத்தன் நாமக ஸ்ரீஹரியையும் உபாசனை செய்து, பக்தர்கள் யோக்யாபீஷ்டங்களை பெற வேண்டும். இவ்வாறு ரூபவிசேஷங்களைக் கொண்ட ஸ்ரீலட்சுமி ந்ருஸிம்ஹன் பரம தயாளுவும், க்ஷமா ஸமுத்ரனும், பக்தவத்ஸலனும், பக்தர்களை சகித்துக் கொள்ளும் ஷாந்த ஸ்வபாவனும், தேஷ காலங்களின் நியாமகனும், தேஹேந்திரியாதிபதியும் ஆகியிருக்கிறான். இவ்னே சூர்யவம்ஷ த்வஜனாக இருக்கிறான் (ரதாக்ரபாகத்தில் த்வஜம் ஒளிர்வதைப் போல, அந்த வம்சத்தில் ஒளிர்கிறான்). அந்த வம்சத்தில் முக்கிய ஸார்வபௌமன் எனப்படும் ரகு மஹாராஜனின் வம்சத்திற்கு மங்களகர காந்திப்ரதனாக இருக்கிறான். லக்ஷ்மண, பரத, ஷத்ருக்ன

ஆகியோரின் அண்ணனும், ப்ராக்ஞ ஷிகாமணியான ஸ்ரீஹனுமந்தனால் வணங்கப்படும் சரணங்களைக் கொண்டவனும், லட்சுமி ஸ்வரூபளான ஸீதையின் நிஜ ப்ருத்யனுமான ஹே ராமசந்திர ப்ரபுவே!!

** அஷ்ட மஹாமந்திரங்களின் ஜப நியமங்களை தந்த்ரஸாரத்திலிருந்து அறியலாம். அஷ்ட மஹா மந்திரங்கள் எவை என்பதை மேலே பார்த்தோம். இந்த மந்திரங்களின் ஜபத்திற்கான விதிகள் இவ்வாறு உள்ளன. அனைத்து மந்திரங்களுக்கும் பஞ்சாஷத் வர்ண ரூப மாத்ருகா மந்திரத்தாலும், நரசிம்ஹ ப்ரதிபாத்ய க்ஷகாரத்தினாலும், தக்க விதியினால், அங்கன்யாஸ செய்து கொள்ள வேண்டும். மற்றும் அந்தந்த மந்திரங்களுக்கு தனித்தனியாக சொல்லப்பட்டிருக்கும் பஞ்சாங்கன்யாஸங்களையும் (ஹ்ருதய, ஷிரஸ், ஷிகா, கவச, அஸ்த்ர) மற்றும் ரிஷி, தேவதா, சந்தஸ் களையும் சொல்லிக் கொண்டு, பிறகு ஜபம் செய்ய வேண்டும். பிரதிமைகளில் பகவந்தனை ஆவாஹனம் செய்து, பிறகு ஷோடஷோபசாராதி பூஜைகளையும் செய்ய வேண்டும். 'ப்ரதிமார்ச்சனை' என்று இதை சொல்கிறோம். இந்த சிறப்பு பூஜாதிகாரத்தைப் பெறுவதற்கு, அஷ்ட மஹா மந்திரங்களின் ஜபம் அவசியம். பூவராஹாதி மற்ற பகவத்ரூபங்களை குரு உபதேசத்தினால் பெற்று, த்யானித்து, அந்த மந்திரங்களை ஜெபித்து, ஐஹிக, ஆமுஷ்மிகாதி அனைத்து புருஷார்த்தகள ஸித்தியை அடையலாம். இந்த மந்த்ர ஜபங்கள் ஐஹிக - ஸந்த்யா காயத்ர்யாதிகளைப் போல ஜெபித்தாக வேண்டும் என்று விதி இல்லை. தன்வந்தரி முதலான மந்திரங்களால் ஐஹிகமான மஹாரோகாதி விபத்துகளின் பரிஹாரம் ஆவதைப் போல, பவரோகத்தின் பரிகாரத்திற்காக மோட்சம் கிடைக்கிறது. இந்த மந்த்ரஜப கிரமங்களின் விளக்கங்களையும், அவற்றிலிருந்து கிடைக்கும் ஸித்திகளையும் தந்த்ரஸாரத்தை படித்து அறியலாம். இந்த கிரந்த கர்த்ருவானவர் (ஸ்ரீமந்த்ராலய ப்ரபுகள்), தந்த்ரஸாரத்தின் ஸாரத்தினை இந்த சிறிய கிரந்தத்தில் (ப்ராத: ஸங்கல்ப கத்யத்தில்) அடக்கி நமக்கு பேருதவி செய்திருக்கிறார்.

** பக்தாபராத ஸஹிஷ்ணு : ஸ்ருதி ஸ்ம்ருதி ஹரேராக்ஞே. அதாவது, ஸ்ருதி, ஸ்ம்ருதிகள் ஹரியின் ஆணைகள் ஆகும். இவை பற்பல விதி

நிஷேதங்களை நிரூபிக்கின்றன. அவற்றை மீறுவது தவறு. சேவகன், தலைவனின் ஆணையை மீறுவது தவறு அல்லவா?. இந்த தவறுகள், எண்ணிக்கையற்ற அளவிற்கு தினம்தோறும், தெரிந்தோ தெரியாமலோ நடக்கின்றன. ஸர்வ ஸாக்ஷியான ஸ்ரீஹரிக்கு தெரியாத நம் தவறுகள் ஏதேனும் இருக்கிறதா?. அவன், அனைத்தையும் ப்ரத்யக்ஷமாக பார்க்கும் ஸர்வக்ஞன். நம் கர்மங்கள் அனைத்தும், ஏதோவொரு தோஷத்தினால் கூடியிருக்கிறது.

அக்னி, புகையினாலேயே வருகிறது என்பதைப் போல, அனைத்து கர்மங்களும் தோஷத்தினால் மூடப்பட்டிருக்கின்றன என்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணனே சொல்லியிருக்கிறான். இந்த காரணத்தினால், ஸர்வகர்மங்களையும் விட்டுவிடுவதே சரி என்று அறியக்கூடாது. இப்படி கர்மங்களை செய்யாமல் விடும் தோஷம் அதிகமானது. கர்மங்களை செய்தால், விதி நியமங்களை சரியாக செய்யாததற்கான தோஷம் வருகிறது. செய்யாமல் இருந்தால், அதற்கும் அதிகமான தோஷம் உள்ளது. இப்படியாக, முக்தி யோக்ய ஜீவர்கள் கூட, தினம்தோறும் பாபகர்மங்களை செய்கின்றனர். இந்த அனைத்து தவறுகள், பற்பல பிறவிகளை எடுப்பதற்கும் காரணம் ஆகின்றன. மறுபடி அப்படி பெறும் மனிதப் பிறவியில் செய்யப்படும் தோஷங்கள் மறுபடி இதே பிறப்பு சுழற்சியில் நம்மை தள்ளுகின்றன.

இப்படியாக ஏராளமான தவறுகளை ஸ்ரீஹரி மன்னிக்காவிட்டால், போகத்தினால் இந்த கர்மங்களை முழுமையாக போக்கிக் கொண்டு, மோட்சத்தை அடைவது என்பது சாத்தியமே இல்லை. ஆனால், நிலைமை அப்படியல்ல. ஸ்ரீஹரி, கருணா ஸமுத்ரன். ஆகையாலேயே க்ஷமா ஸமுத்ரனும் ஆகிறான். சரண் அடைந்த பக்தர்களின் தவறுகளை மன்னிக்கிறான். தவறுகளை சகித்துக் கொண்டு, மிகப்பெரிய தவறுகளுக்கும்கூட, சிறிய தண்டனையை தருகிறான். அனேக தவறுகளை முழுமையாகவே மன்னிக்கிறான். கர்மங்களை செய்வதால் வருவதான தோஷங்களை, பக்தியுடன் தன்னுடைய பெயர்களை உச்சாரணம் செய்வதாலே போக்கி, குறை-கர்மங்களை முழுமையாக்குகிறான்.

பாகவத தாத்பர்யத்தில் சொல்லியிருக்கும்படி, முக்தி யோக்யர்களான தன் பக்தர்கள், அசுராவேஷத்தினால் செய்யும் துஷ்ட கர்மங்களிலிருந்து அவர்களை விடுதலை செய்வேன் என்னும்,

ஸ்ரீஹரியின் அபய வசனமும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த காரணத்தினாலேயே ‘அபராத ஸஹஸ்ராணி..’ என்று பிரார்த்திக்கிறோம். தினம்தோறும் செய்யும் ஆயிரக்கணக்கான தவறுகளை மன்னிக்குமாறு பிரார்த்தனை செய்கிறோம். ஒரு வேளை மன்னிக்காவிட்டால் அல்லது மன்னிக்கும் தகுதி அல்லது ஸ்வாதந்த்ர்யம் இல்லையென்றால், ஸ்ரீஹரியை இவ்வாறு பிரார்த்தனை செய்வது வீண் அல்லவா? தேவேந்திரனின் அகலிகை சம்பவம், சந்திரனின் குருபத்னி ஸங்கம், ப்ருகு ரிஷி பாதங்களால் மிதித்தது போன்ற மிகப்பெரிய தவறுகளை மன்னித்து, அவர்களைக் காத்தவன் ஸ்ரீஹரியே ஆகிறான்.

** ஸ்ரீஹரியே தேஹேந்த்ரியாதிபதி ஆகிறான். தேக இந்திரியங்களுக்கு அபிமானிகளான தேவதைகள் இருந்தாலும், அவர்களில் ஸ்ரீமுக்யபிராணன் இருந்து, அவர்களை நியாமனம் செய்கிறான். இந்த முக்யபிராணனின் அந்தர்யாமியாகி ஸ்ரீவிஷ்ணுவே அவனை நியமிக்கிறான். ஆகையால், ஸர்வாபிமானிகளுக்கு அபிமானியாகி, அனைத்தையும் ஸ்வதந்த்ரமாக ஆளும் விஷ்ணுவே தேஹேந்திரியங்களுக்கு முக்யாதிபதி ஆகிறான்.

**26. த்வதா$^3$க்ஞயா த்வத்ப்ரஸாதா$^3$த் த்வத்ப்ரேரணயா த்வத்ப்ரீத்யர்த்தம் த்வாமுத்$^3$தி$^3$ஶ்ய த்வாம் அனுஸ்மரன்னேவ த்வதா$^3$க்ஞயா நியதேன மன்னியாமகேன ஸத்தாப்ரத வாயு நாமக சேஷ்டா$^2$ ப்ரத$^3$ ப்ராண நாமக தா$^4$ரணா ப்ரத த$^4$ர்ம நாமக முக்திப்ரத$^3$ ப$^4$க்தி நாமக ரூபவிஶேஷை$^2$: மத்$^3$ ஹ்ருதி$^3$ஸ்தி$^2$தேன பரம த$^3$யாலுனா க்ஷமா ஸமுத்$^3$ரேண ப$^4$க்தவத்ஸலேன ப$^4$க்தாபராத$^4$ ஸஹிஷ்ணுனா ஸர்வஸ்வாமினா ஸர்வப்ரேரகேண ஸர்வதாத்விக தே$^3$வதா ப்ரேரகேண ஸர்வ தாத்விக அஸுர ப$^4$ஞ்சகேன ததா$^2$ தத் ப்ரேரணா ப்ரயுக்தாஶேஷ$^2$ து$^3$ர்மத ப$^4$ஞ்சகேன அத ஏவ ப்ரப$^4$ஞ்ஜன ஶப்$^3$த$^3$வாச்யேன**

த்வதாக்ஞயா - (ஹே ஸ்ரீராமசந்திரனே) உன் ஆணையால்; த்வத்ப்ரஸாதாத் - உன் பிரஸாதத்தினால்; த்வத்ப்ரேரணயா - உன் ப்ரேரணையினால்; த்வத்ப்ரீத்யர்த்தம் - உன் ப்ரீத்யர்த்தமாகி; த்வாமுத்திஷ்ய - உனக்காகவே (உன்னையே மனதில் நினைத்துக்கொண்டு); த்வாம் - உன்னையே; அனுஸ்மரன்னேவ -

நினைத்துக் கொண்டே (என்னை ஆளும் பிரபு என்பதை மறக்காமல்); த்வதாக்ஞயா - உன் ஆணையினாலேயே (ஷ்ருதிஸ்ம்ருதி ரூபத்தில் இருக்கும் உன் ஆணையினாலேயே) (அனைத்து கர்மங்களையும் செய்கிறேன் என்று கடைசி வாக்கியத்தின் 'கரிஷ்யே' மற்றும் 'காரயிஷ்யே' என்னும் சொற்களுடன் பொருத்துக் கொண்டு இதனை படிக்கவேண்டும்). அல்லது, த்வதாக்ஞயா நியதேன - உன் ஆணையினால் நியதமான; மன்னியாமகேன - (நானே செய்வதில்லை; உன் ஆணைப்படி முக்யபிராணனால் ப்ரேரணை ஆகி, செய்கிறேன் மற்றும் பிறரால் 'காரயிஷ்யே' செய்விக்கிறேன் என்று சொல்லியவாறு, மேலும் முக்யபிராணரின் மகிமைகளையே நிரூபிக்கிறார்); என் நியாமகனான (முழுமையாக அதீனமாக வைத்துக்கொண்டு, அனைத்து கர்மங்களையும் செய்விக்கும்); ஸத்தாப்ரத வாயு நாமக - என் அஸ்தித்வத்திற்கு (இருப்பு) காரணன் ஆகையால், வாயு என்னும் நாமம் உள்ள; தாரணா ப்ரத தர்ம நாமக - தாரக சக்தியைக் கொடுப்பவனாகையால் தர்மன் என்று அழைக்கப்படும், முக்திப்ரத பக்தி நாமக - பக்திப்ரதனாகி தத் பலனாக முக்தியை கொடுப்பதால் பக்தி என்னும் நாமம் உள்ள; ரூபவிஷேஷை: - வெவ்வேறு ரூபங்களால்; மத் ஹ்ருதிஸ்திதேன - என் இதயத்தில் நின்றிருக்கும்; பரம தயாலுனா - உத்தம தயாளுவான; க்ஷமா ஸமுத்ரேண - அபாரமான மன்னிக்கும் குணம் உள்ள; பக்தவத்ஸலேன - பக்தப்ரேமியும்; பக்தாபராத ஸஹிஷ்ணுனா - பக்தாபராதங்களை சகிக்கும் உதார ஸ்வபாவம் கொண்ட; ஸர்வஸ்வாமினா - ஸர்வஸ்வாமியும்; ஸர்வப்ரேரகேண - ஸர்வ ப்ரேரகனும்; ஸர்வதாத்விக தேவதா ப்ரேரகேண - அனைத்து தத்வாபிமானி தேவதைகளின் ப்ரேரகனும்; ஸர்வ தாத்விக அஸுர பஞ்சகேன - அனைத்து தாத்விக அசுரர்களை நிக்ரஹிஸுவனும்; ததா - மற்றும்; தத் ப்ரேரணா - அவர்களின் ப்ரேரணையினாலேயே ஆன; ப்ரயுக்தாஷேஷ துர்மத பஞ்சகேன - அனைத்து துர்மத த்வம்ஸகனும் ; அத ஏவ - இந்த காரணத்தினாலேயே; ப்ரபஞ்ஜன ஷப்தவாச்யேன - ப்ரபஞ்சன ஷப்தத்தினால் அழைக்கப்படுபவனுமான..

ஹே ராமசந்திரபிரபுவே. ஸ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டுள்ள உன் ஆணையைப் போல, நீ மகிழ்ந்து (என்னை அருள்வதாக நிச்சயித்து) என்னில் நின்று ப்ரேரணை செய்வதால், நீ ப்ரீதனாக வேண்டும் என்னும் நோக்கத்தினால் மட்டுமே அனைத்து

கர்மங்களையும் செய்கிறேன். அந்த: ப்ரேரகனான நீ, என் புத்தியில் நின்று, ப்ரேரணை செய்வதை எந்த விதத்தினாலும், எதிர்க்க அல்லது மீற விருப்பம் அல்லது முயற்சியை செய்வதில்லை. நீ, ஸர்வேந்த்ரியாபிமானிகளின் நியாமகனான முக்யபிராணனின் மூலம், என்னை ப்ரேரணை செய்கிறாய். அவன், உன் ஆணைக்கேற்பவே செயல்களை செய்கிறான். அவன் உன்னைத் தவிர வேறு ஸ்வாமிகள் இல்லாதவன். இவனே என் நியாமகன். இவன் ஸத்தாப்ரதன் ஆகையால் 'வாயு' என்றும், அனைத்து வித சேஷ்டாப்ரதன் ஆகையால் 'ப்ராண' என்றும், எனக்கு ஸர்வவிதியினால் ஆஸ்ரயன் ஆகையால், 'தர்ம' என்றும், உன் ஆணையினால் அவன் முக்திப்ரதனும் ஆகி, முக்திக்கு பிரதான சாதனமான பக்தியை அருள்வதால் 'பக்தி' என்றும் அழைக்கப்படுகிறான். இந்த வாயு முதலான நாமங்கள் உள்ள ரூப விசேஷங்கள் உள்ளவனாக இருக்கிறான். இவன், பரம தயாளுவும், க் ஷமா ஸமுத்ரனும், பக்தவத்ஸலனும், ஸர்வப்ரேரகனும், ஸர்வ தத்வாபிமானி தேவதைகளின் ப்ரேரகனும், தாத்விக தைத்யர்களை நிக்ரஹிஸி பக்தர்களுக்கு நற்புத்திகளைக் கொடுத்து அருள்கிறான். இவன், தைத்யர்களாலும், தைத்ய ப்ரேரணையினாலும், நிர்மிதமான அனைத்து துர்மதங்களின் ப்ரபஞ்சகன். இந்த காரணங்களால் 'ப்ரபஞ்சன' என்று பொருத்தமான பெயரைக் கொண்டிருக்கிறான்.

** பிரம்ம வாயுகள், லோக வேதங்களின் அபிமானிகள் என்றும், அனைத்து பிராணிகளின் அனைத்து விதங்களின் அதிபத்யம் உள்ளவர்கள் என்றும் சொல்கிறது. இந்த அதிபத்யத்திற்கு, இவரே அருகதை உள்ளவர்கள். வேறு யாரும் இல்லை. ஏனெனில், அனைத்து பாபலேப ரஹிதரான இவர், ஸர்வ லக்ஷணங்களால் பூர்ணராகி, முக்தப்ராயராக இருந்து, ஜகன் நியாமகராக இருக்க சாமர்த்தியம் கொண்டிருக்கின்றனர். இவர்கள், காயத்ரி உபாஸனையில் முக்யாதிகாரிகள் ஆகையால், அனைத்து பாவங்களின் அலேப ரூபத்தின் ஸ்ரீஹரியின் விசேஷ அருளுக்கு பாத்திரர் ஆகியிருக்கின்றனர்.

ஸ்ரீமுக்யபிராணன், ஜீவர்களுக்கு சர்வ ப்ரகாரங்களால் ஸத்தாபிரதன் ஆகிறான். ஜீவன் தேகத்தில் இருக்க வேண்டுமெனில், அங்கு ஸ்ரீமுக்யபிராண இருக்கவேண்டும். அவன் இல்லையெனில்,

ஸ்ரீஹரியும் ஒரு நொடிப்பொழுதும் இருப்பதில்லை. இந்த தேகத்திலிருந்து யார் புறப்பட்டால், நான் புறப்படுவேனோ, யார் தேகத்தில் நின்றால், நான் நிற்கிறேனோ, அத்தகையவனை நான் படைக்கிறேன் என்று சங்கல்பம் செய்து, பிராணனை படைத்தான் என்று ஸ்ருதி சொல்கிறது. இதனால், ஜீவதேகத்தை, ஸ்ரீஹரி, ஜீவ ஸஹிதனாக பிரவேசிக்க, ஸ்ரீமுக்யபிராணன் வழிகாட்டியாக செல்கிறான் என்று தெளிவாகிறது. தேஹப்ரவேஷத்திற்குப் பிறகு, அங்கு நடக்கவேண்டிய ஸ்வாஸ உச்வாஸங்களும் முக்யபிராணனின் அதீனமே. அவை இவனின் ஹம்ஸ மந்திர ஜபங்கள் ஆகும். ஜபம் நின்றால், ஜீவனுக்கு தேகத்தில் இருப்பு நிற்கிறது - அவன் இறக்கிறான்.

** நித்யானந்தஸ்தித ரூபமான மோட்சத்தை அடைவதற்கு, ஸ்ரீவிஷ்ணு ப்ரஸாததமே முக்கியமானது. ‘ஏவம் மோசயாமி’ இந்த ஜீவனை சம்சாரத்திலிருந்து விடுதலை செய்கிறேன் என்னும் ஸ்ரீஹரி ஸங்கல்பத்திற்கு பாத்ரன் ஆவதற்கு அவனில் செய்யும் பக்தியே முக்கிய ஸாதனம் ஆகும். வஸ்துகளின் ஸத்குணங்களின் ஞானத்தினால் எந்தவொரு வஸ்துவினிலும் ஈர்ப்பு உண்டாகிறது. ஸ்ரீஹரியின் செய்யும் பக்தியும் ப்ரேம ரூபமானதே. அது நிரந்தரமும் த்ருடமும் ஆக வேண்டும். ஸ்ரீஹரி, அசிந்திய சக்தியுதனும், ஸ்வதந்த்ரனும், காருண்ய, தயை போன்ற குணங்களால் பூர்ணனும், ஸர்வக்ஞனும், ஸர்வசமனும், பக்தவத்ஸலனும், க்ஷமாவந்தனுமாக இருக்கிறான் என்னும் ஞானம் திடமாகி, அவனில் நிஷ்காருண்ய, வைஷம்ய, அஞ்ஞானாதி எவ்வித தோஷங்கள் என்றும் இல்லை என்னும் ஞானமும் உண்டானால், அவனின் பரம பிரஸாதத்திற்கு காரணமாகும் ஸ்ரேஷ்ட பக்தி கிடைக்கிறது. ஞான பூர்வகமான ப்ரேமமே பக்தி. துக்க, அஞ்ஞானாதி தோஷங்கள் விலகப்பெற்று, பக்தி ஞானங்களே மூர்த்தியாக இருப்பவன் ஸ்ரீமுக்யபிராணன். மற்ற ஸர்வ ஜீவர்களின் பக்தி ஞானங்களின் நியாமகன் இவரே. ஸ்ரீவிஷ்ணு ப்ரஸாதத்திற்கு ஸாதனமான பக்தி ஞானங்கள் இவனிடமிருந்தே கிடைக்கிறது - வேறு யாரிடமிருந்தும் அல்ல. தன்னை சரணடைந்தவர்களுக்கு இந்த குணங்களை தவறாமல் அருள்கிறான்.

முக்திப்ரத பக்தியின் ஸ்வரூபத்தை மஹாத்ம்ய ஞானத்துடனான ஸத்ருட ப்ரேம என்று அழைக்கிறோம். பக்தியின் ப்ரகாரத்தை

அறிந்தால், யோக்யரான ஸஜ்ஜனர்களின் பக்தி பாவத்தை அடையாளம் கண்டுகொள்வதற்கு உதவியாக இருப்பதோடு, ஸ்வயம் விவித பக்தி பாவனைகளால் மகிழ்ச்சியாக இருக்கலாம். பக்தி, நவவிதமானது என்று தெரிகிறது. அவை: ஹரிகதைகளின் ஸ்ரவணா, ஹரிகுணங்களின் கீர்த்தனை, ஹரி ஸ்மரணை, ஹரி பாதஸேவனம், ஹரிமூர்த்திகளின் பூஜை, ஹரி நமஸ்காரம், ஹரிதாஸ என்னும் நித்யபாவனை, ஹரியே நித்யஸகன் என்னும் அனுஸ்மரணை, ஆத்ம நிவேதனம். இவை ஒன்பது விதமான பக்திகள் ஆகும்.

இவை அனைத்துமே அனைவருக்குமே விஷ்ணு பிரஸாத ப்ராப்திக்காக தேவையே ஆனாலும், இவற்றில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பக்தி ப்ரகாரங்கள், மற்றதைவிட அதிகமாக இருக்கலாம். ஜீவர்களின் யோக்யதைக்கேற்ப, வெவ்வேறு ஜீவர்களில் வெவ்வேறு விதமான பக்தியின் வெளிப்பாடு இருக்கிறது. இந்த அனைத்து வித பக்திகளும் சுத்தமாக இருக்க வேண்டும். ஷுத்த பக்தி என்றால், நவவித த்வேஷங்களின் ஸ்பர்ஷம் இல்லாதிருக்க வேண்டும்.

நவவித த்வேஷங்கள் என்றால்;

1. ஜீவன் ஸ்ரீஹரியிடமிருந்து வேறுபடாதவன் என்று அறிவது
2.ஸ்ரீஹரி, ஆனந்தாதி குணஷூன்ய என்று அறிந்திருப்பது
3. குணங்கள் இருந்தாலும் அவை அபூர்ணங்கள் என்று அறிவது
4. ரமா, பிரம்மா, ருத்ராதிகளுக்கு ஸ்ரீஹரி ஸாம்யத்தை அறிவது
5. அல்லது அவர் அனைவரும் (அல்லது அவர்களில் ஒருவர்) ஸ்ரீஹரிக்கு சமம் என்று அறிவது
6. ஸ்ரீஹரியின் ரூபங்களில் ஒவ்வொன்றிற்கு, அல்லது அவரது கரசரணாதி அவயவங்களுக்கும், குண க்ரியாதிகளில் அல்லது ஸ்ரீஹரியிடமிருந்து வேறுபாடு உள்ளது என்று அறிவது
7. ஸ்ரீஹரியின் அவதாரங்களை மனுஷ்யாதி ப்ராக்ருத ரூபங்கள் என்று அறிவது
8. ஹரிபக்தர்களை த்வேஷிப்பது
9. வேதாதி பிரமாணங்களை நிந்திப்பது

ஆகியவை ஒன்பது வித த்வேஷங்கள் எனப்படுகின்றன. த்வேஷ சம்பர்க்கம் இல்லாத சுத்தமான பக்தி பிரதனான ஸ்ரீவாயுதேவர், பக்திஷப்த வாச்யரும் ஆகியிருக்கிறார்.

** ஸ்ரீவாயுதேவரும் பக்தவத்ஸலர். க்ருபாபூர்ணர். ஆனால், ஸ்ரீஹரியில் இந்த குணங்கள் பல மடங்கு அதிகமாக இருக்கின்றன. ஸ்ரீஹரியின் முக்கிய ப்ரதிபிம்பன் ஆகையால், ஸ்ரீவாயுதேவரில் ஸ்ரீஹரிகுணங்களின் ஸாத்ருஷ்யம், அனைத்து ஜீவர்களைவிட இவரிடம் அதிகமாக இருக்கின்றன. இப்படி இருந்தாலும், பக்தாபராத ஸஹிஷ்ணு என்னும் குணம், ஸ்ரீஹரியில் இருப்பதைப் போன்ற அளவில் இவரிடம் விரும்பக்கூடாது. பக்தர்களை உக்ரமான பரிட்சையில் ஈடுபடுத்தி, கடுமையான முறையில் அவரது யோக்யதையை அறிந்து, ஸ்ரீஹரியில் பிரஸாதார்த்தமாக அவரிடம் வேண்டுகிறார். ஸ்ரீவாயுதேவர், ருத்ரார்திகளைப் போல, மிகவும் சீக்கிரமாக மகிழ்ந்து, ஐஹிகாதி வரங்களை கொடுப்பதில்லை.

அனுவ்யாக்யானத்தில் ஸ்ரீமதாசார்யர், தாத்விக தேவதைகளின் காரியங்களையும், அவருக்கு கிடைக்கும் பலன்களையும் விளக்கியிருக்கிறார். இப்படியான அசிந்த்ய மஹிமரான தாத்விக தேவதைகளையும் அந்தர்நியாமகனாகி அவர்களில் இருந்து ஆள்பவனான ஸ்ரீமுக்யபிராண, அபார மஹிமன் என்று சொல்வதற்கு என்ன இருக்கிறது?.

தாத்விக தைத்யர்கள் யார் என்றால்: மதுகைடபர், காலநேமி, விப்ரசித்தி, அலக்ஷ்மி (கலி-பத்னி) மற்றும் கலி. இவர்கள் முறையே ஒருவரைவிட ஒருவர் அதமர். அனைவரைவிட நீசன் (அதமன்) கலி. அஞ்ஞானம், பிரமை ஆகியவற்றிற்கு கலி அபிமானி. துஷ்ட காமாதிகளுக்கு காலநேமியும், மற்ற பற்பல கெட்ட சிந்தனைகளுக்கு மற்றும் அதன் மூலம் வரும் துஷ்கர்மங்களுக்கு வெவ்வேறு தைத்யர்கள் அபிமானிகளாக இருக்கின்றனர். இந்த சம்பந்தமான விவரங்களையும் சாஸ்திர அத்யயனத்தினால் அறிய வேண்டும். இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் என்னவென்றால்: ஸ்ரீமுக்யபிராணன் தேவ, தைத்யர் என்னும் இரு தாத்விகர்களுக்கும் பிரதான ப்ரேரகன். மேலே பார்த்த பிரமாணங்களால் புண்ய பாவங்களுக்கு இருவருக்கும் ப்ரேரகர் என்னும் தேவதைகளுக்கு பாப-லேபம் இல்லை என்றும், முக்யபிராணனுக்கு இந்த பாப லேபம் எப்போதும் இல்லை என்று சொல்லவும் வேண்டுமோ?

முக்தியோக்யரான ஸுஜீவர்கள்கூட பூர்வ ஸம்ஸ்கார மற்றும் அதிர்ஷ்டத்திற்கேற்ப, துஷ்கர்மங்களில் ஈடுபடுகின்றனர். ப்ரதான

ப்ரேரகனான ஸ்ரீமுக்யபிராணனே இதற்கும் ப்ரேரகனாக இருந்தாலும், தன்னை சரணடைந்த பக்தர்களை அருளி, அவர்கள் மூலமாக பாப கர்மங்கள் சம்பவிக்காதவாறு, ப்ரபல கர்மங்களுக்கேற்ப சம்பவிக்கவே வேண்டும் என்றபோது, அவற்றின் தீவிரம் மற்றும் உக்ரதைகளை வெகு மடங்காக குறைத்தும், காக்கிறான்.

மனதினை ஆக்ரமித்திருக்கும் தாத்விக தைத்யர்கள், அங்கு இருக்கும் ஸூக்ஷ்ம விகாரங்களையும் கவனித்து, பாப கர்மங்களில் ஜீவன் ஈடுபடுமாறு செய்யும் முயற்சிகளை இவனே முறியடித்து விடுகிறான். இந்த காரணத்தினால், அதாவது, பாப ப்ரேரக முயற்சிகளை முறியடித்து, பக்தர்களை காப்பதால், முக்யபிராணன் 'ப்ரபஞ்சன' என்று அழைக்கப்படுகிறான். ஸ்ரீமுக்யபிராண அனுக்ரஹ என்னும் வஜ்ர கவசத்தை தரித்த புண்ய ஜீவியே தன்யன்.

**27. ப்ரதிதி$^{3}$னம் ப்ரதிக்ஷணம் பு$^{3}$த்$^{3}$தி$^{4}$ஷோத$^{4}$கேன ஸர்வகர்ம கர்த்ரா ஸர்வகர்ம காரயித்ரா ஸர்வகர்ம ஸ்வாமினா ஸர்வகர்ம ஸமர்ப்பகேண ஸர்வகர்ம ப$^{2}$லபோ$^{4}$க்த்ரா ஸர்வகர்ம ப$^{2}$லபோ$^{4}$ஜயித்ரா ஸர்வகர்ம ப்ரேரகேண ஸர்வ கர்மோத்$^{3}$போ$^{3}$த$^{4}$கேன ஸர்வகர்ம ஶுத்$^{3}$தி$^{4}$ப்ரதே$^{3}$ன ஸர்வகர்ம ஸித்$^{3}$தி$^{4}$ப்ரதே$^{3}$ன ஸர்வகர்ம நிஷ்$^{2}$டேன ஸர்வகர்ம ஸாக்ஷிணா ஸர்வகர்ம நிஷ்$^{2}$ட$^{2}$ ப$^{4}$க$^{3}$வத்$^{3}$ரூபோபாஸகேன**

ப்ரதிதினம் - தினம்தோறும்; ப்ரதிக்ஷணம் - ஒவ்வொரு நொடியிலும்; புத்திஷோதகேன - மனதினை சுத்தப்படுத்தி; ஸர்வகர்ம கர்த்ரா - அனைத்து கர்மங்களையும் செய்பவனும்; ஸர்வகர்ம காரயித்ரா - அனைத்து கர்மங்களையும் ஜீவர்கள் மூலமாக செய்விப்பவனும் (தானும் செய்து, தன்னுடன் ஜீவனும் செய்யுமாறு செய்யும், அவன் மூலமாக செய்விக்கும்); ஸர்வகர்ம ஸ்வாமினா - அனைத்து கர்ம ஸ்வாமியும்; ஸர்வகர்ம ஸமர்ப்பகேண - அனைத்து கர்மங்களையும் (இவ்வாறு தான் செய்யும் அனைத்து கர்மங்களையும் ஸ்ரீஹரியில்) சமர்ப்பிப்பவனும்; ஸர்வகர்ம பலபோக்த்ரா - அனைத்து கர்மபல போக்தனும்; ஸர்வகர்ம பலபோஜயித்ரா - அனைத்து கர்மங்களின் பலன்களையும் (ஜீவர்கள்) போகிக்குமாறு செய்பவனும்; ஸர்வகர்ம ப்ரேரகேண - ஸர்வகர்ம ப்ரேரகனும்; ஸர்வகர்மோத்போதகேன - ஸர்வ கர்மங்களின் உத்போதகனும் (கர்ம காரணங்களான

ஸம்ஸ்காரங்களை புரிய வைத்து, அதன்படி கர்மங்களில் ஈடுபடுமாறு செய்பவனும்); ஸர்வகர்ம ஷுத்திப்ரதேன - அனைத்து கர்மங்களுக்கு பரிசுத்தத்தை செய்பவனும்; ஸர்வகர்ம ஸித்திப்ரதேன - அனைத்து கர்மங்களுக்கு பலன்களைக் கொடுக்கும் பரிபூர்ணத்வத்தைக் கொடுப்பவனும்; ஸர்வகர்ம நிஷ்டேன - அனைத்து கர்ம ஆசரணையில் பூர்ண சிரத்தை உள்ளவனும்; ஸர்வகர்ம ஸாக்ஷிணா - அனைவரின் அனைத்து கர்மங்களையும் சாட்சாத்தாக பார்க்கும்; ஸர்வகர்ம நிஷ்ட பகவத்ரூபோபாஸகேன - அனைத்து கர்மங்களுக்கு சக்தியைக் கொடுத்து, அதன் பின், ஸ்திரமான (க்ரியாத்மக) பகவத் ரூபங்களை சிந்திப்பவனும், ஆன ஸ்ரீமுக்ய பிராணனால் மகிழ்பவனான....

தினம்தோறும் ஒவ்வொரு நொடியிலும், அனைத்து ஜீவர்கள் மூலமாக நடக்கும் அனைத்து கர்மங்களையும் தானே செய்து, தன்னுடன் ஜீவர்கள் மூலமாகவும் செய்விப்பவன் ஸ்ரீமுக்யபிராணன். இவனே அனைவரின் அனைத்து கர்மங்களின் மேல் (ரமா நாராயணர்களைத் தவிர) அனைத்து விதமான ஸ்வாமித்வம் உள்ளவன். அனைத்து ஜீவர்களின் ஸர்வ கர்மங்களையும் ஸ்ரீஹரியில் அர்ப்பிக்கும் அதிகாரம் உள்ளவன். இந்த அதிகாரத்தை ஸ்ரீஹரியே கொடுத்திருக்கிறான். அனைவரின் ஷுப கர்மங்களின் பலபோக்தன் மற்றும் அவரவர்களின் யோக்யதைக்கேற்ப ஜீவனால் போகிக்கப்படுமாறு செய்பவனும் இவனே ஆகியிருக்கிறான். அனைவரின் ஸர்வ பூர்வ கர்மங்களையும் சம்ஸ்கார அத்ருஷ்டாதிகளை அறிந்து, யதா காலங்களில் சம்ஸ்காரங்களை அவர்களுக்கு நினைவுபடுத்தி, அதற்குத் தேவையான கர்மங்களில் ஈடுபடுமாறு, தத்வாபிமானிகளில் நின்று முக்யப்ரேரகனாக இருக்கிறான். ஸுஜீவர்களின் ஷுப கர்மங்களுக்கு ஷுத்தியைக் கொடுப்பவனும் இவனே. ஸர்வகர்ம ஸித்தி ப்ரதனும் ஸ்ரீமுக்யபிராணனே. ஞான பக்தி வைராக்ய ஹரிபிரஸன்னதை முதலான பலன்களின் ப்ராப்தியே ஸித்தி. ஸ்ரீப்ராணதேவனே ஸர்வகர்ம நிஷ்டன் - அதாவது, அனைவரின் அனைத்து விதமான கர்மங்களையும், ஸ்ரீஹரி ப்ரீத்யர்த்தமாகி, ஸ்ரீஹரி பூஜை என்றே அறிந்து செய்கிறான். தைத்ய தானவர்களில் இருந்து, அனில தேவன், அயோக்ய செயல்களை செய்து, அவர்கள் மூலமாக செய்விப்பவனும்

இந்த நிஷ்டையினாலேயே. துவக்கிய கர்மங்களை எவ்வித குறைகளும் இல்லாதவாறு முடிப்பதில் காட்டும் பக்தி மரியாதைகளே நிஷ்டை ஆகும். இதனால், ஸ்ரீமுக்யபிராணரை விட்டு இந்த நிஷ்டை உள்ளவர்கள் வேறு யாரும் இல்லை என்பதை அறியலாம். இவன், அனைவரின் அனைத்து வித க்ரியைகளையும் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறான். அனைவரின் அனைத்து வித கர்மங்களுக்குப் பின் இருக்கும் ஸ்ரீஹரியின் க்ரியாத்மக ரூப விசேஷங்களையும் தவறாமல் சிந்திப்பவன். தன் ஸ்வாமியும், ஸர்வஸ்வாமியும் ஸ்ரீஹரியே என்பதை என்றும் இவன் மறப்பதில்லை.

** கர்தா - காரயிதா - என்பதற்கு முக்கிய அர்த்தத்தில் ஸ்ரீஹரியே மற்றும் அனைத்து ஜீவர்கள் மூலமாகவும் அவனே செய்விக்கிறான். ஸ்ருதிகள் ஸ்ரீஹரியை 'தேன வினா த்ருணமபி ந சலதி' என்கின்றன. கர்தா காரயிதா என்பதன் விளக்கத்தை ஷாண்டில்யர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

'யதாஷ்னாதி ததாஷ்னாதி யதாவக்தி ததெய்வ ஸ: | கிமுத்ரபஹுனோக்தேனனாக்ருதம் க்ரியதே ஜன்யை' அதாவது, பிம்பன் உண்டால், பிரதிபிம்பன் உண்கிறான். பிம்பன் பேசினால், ப்ரதிபிம்பன் பேசுகிறான். அதாவது, பிம்பன் செய்யாத எதையும் பிரதிபிம்பன் செய்வதில்லை. ப்ரதிபிம்பனான ஜீவன் அனைத்து செயல்களையும், பிம்பனான ஸ்ரீஹரியின் க்ரியைகளுக்கேற்பவே ஆகின்றன. ப்ரதிபிம்பத்தின் செயல்கள் பிம்பக்ரியா ப்ரவேஷம் உள்ளது. ஸ்ரீஹரியின் முக்கிய ப்ரதிபிம்பனாகி, அவன் ஒருவனின் மட்டுமே அதீனனாகி, அவனுடன் ஜகத் வ்யாபாரங்கள் அனைத்தையும் செய்யும் முக்யபிராணனின் அனைத்து செயல்களும், அனைத்து ஜீவர்களில் ப்ரதிபிம்பமாக இருக்கிறது என்று நினைக்கக்கூடாது. அந்தந்த ஜீவர்களின் தகுதிக்கேற்ப மட்டுமே அந்தந்த ஜீவர்களில் செயல்கள் நடைபெறுகிறதே தவிர, அனைத்து செயல்களும் அனைவரிலும் நடப்பதில்லை. உலகத்தின் ஸ்ருஷ்ட்யாதிகளை நடத்தும் ஸ்ரீஹரியுடன் சேர்ந்து, அவை அனைத்தையும் தான் நிர்வகிக்கும் ஸ்ரீமுக்யபிராணனின் ஸாமர்த்தியம் அற்புதமானதே ஆகும்.

** தாத்விக தேவதைகளும், தாத்விக அஸுரர்களும் அவரவர்களின் ஸாதனை பூர்த்திக்காக வேறான தேகங்களை பெறுவது உண்டு. வேறு

அம்சங்களால் அவதரித்து, ப்ராரப்தங்களை அனுபவித்து, அந்த தேகங்களில் செய்யும் பலன்களுக்காக, மோட்சத்தில் ஆனந்தாதிஷயங்களையும், தமஸ்ஸில் துக்காதிஷயங்களையும் அனுபவிக்கின்றனர். தத்வாபிமானி தேவதைகள் இந்திரியங்களுக்கும், இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் விஷயங்களுக்கும் அபிமானிகள் ஆகையால், இந்திரியங்களால் ஆகும் போகத்தில் அவர்களே போக்தாரரும், போஜ்யரும் ஆகியிருக்கின்றனர். அனந்த ஜீவர்களில், ஸ்ரீஹரியின் அற்புதமான ப்ரபாவத்தினால், அனந்தாம்ஷங்களாக பிரிந்து, தேஹேந்திரியங்களின் நியாமகராகி வசிப்பதால், இவர்கள் ஸர்வவித போக்த்ருகள் ஆகின்றனர்.

இவர்களுக்கு துக்க போகத்தின் அனுபவமே இல்லை. இவர்கள் பூர்ண ஸுகிகள். இவர்கள் அனைவரின் அந்தர்யாமியான ஸ்ரீமுக்யப்ராணன், ஸர்வஸுக போகம் உள்ளவன் என்பது இதிலிருந்தே தெரிகிறது. துக்கபோக்கம் இல்லாதவன் ஸர்வபோக்தன் எப்படி என்னும் சந்தேகம் நமக்கு வருகிறது. தேகாபிமானி ஜீவனுக்கு துக்கபோகம் உண்டாகட்டும் என்று விரும்பி, துக்கத்தை கொடுப்பதே முக்யபிராணன். மற்றும் அந்தர்யாமியான ஸ்ரீஹரி, துக்கபோக ப்ரதன் ஆகிறான். அரசன், தன் மக்களால் கொடுக்கப்பட்ட பழ, புஷ்பங்களை கண்களால் மட்டும் பார்த்து ஏற்றுக் கொள்வதைப் போல, ஸங்கல்ப மாத்ரத்தினால், ஜீவனுக்கு துக்க அனுபவத்தை உண்டாக்குவதே, ஸ்ரீஹரிவாயுகளின் போகம் ஆகும்.

பிரம்ம பதவி, ஸஹபோகம் எனப்படுகிறது. ஸஹபோகம் என்பது ஸர்வஷுப போக்தனான ஸ்ரீஹரி போகிக்கும் ஸர்வபோகங்களும், பிரம்மனுக்கும் கிடைக்கட்டும் என்று ஸ்ரீஹரியே சங்கல்பம் செய்து, விதியை செய்திருக்கிறான். பாகவத தாத்பர்யத்தில் கூறியுள்ளவாறு, ‘ஸர்வபோக்தனான எனக்கு விஷ்வவ்யாபரங்களை நிர்வாகம் செய்வதில் கிடைப்பதான அனாதி அனந்த சுகபோகங்கள் மற்றும் கர்மங்கள் அனைத்தும், என் ஆணையினால் பிரம்மபதவியில் இருக்கும் ஜீவனுக்கு கிடைக்கட்டும்’ என்று ஸ்ரீஹரி, ஆணையிட்டிருப்பதாக சொல்கிறது.

** ஸர்வகர்ம ப்ரேரக என்றால்: அனைவரின் அனைத்து கர்மங்களின் ப்ரேரகனுக்கு, அனைவரின் பூர்வ ஸம்ஸ்கார மற்றும் அத்ருஷ்ட மற்றும் ஜீவஸ்வரூப யோக்யதைகளின் பூர்ணமான ஞானம்

இருக்கவேண்டும். இந்த ஞானத்தின் யதாயோக்யமான விசேஷாம்ஷங்களையும், தன் அதீனரான மற்ற தத்வாபிமானி தேவதைகளுக்கு, யதா காலத்தில் சொல்லிக் கொடுத்து, அவர் தமது நியமனத்துக்கு உட்பட்ட இந்திரியங்களை அதற்கேற்ப நடக்குமாறு ஸ்ரீமுக்யப்ராணன் செய்கிறான். இவ்வாறு ஸர்வகர்ம ப்ரேரகனான இவன், ஸுஜீவிகள் ஸ்ரத்தா பக்திகளால் ஆசரணை செய்யும் கர்மங்களை சுத்தப்படுத்தி, அவர்களின் சார்பாக தானே ஸ்ரீஹரியிடம் அவற்றை அர்ப்பிக்கிறான்.

பலன்களின் ஆசை மற்றும் ஸ்வதந்த்ர கர்த்ருத்வ அபிமானங்களை விட்டு, கர்மங்களை செய்யும் மனோபாவத்தினை அருள்பவனும், முக்யபிராணனே. இந்த சிந்தனையால் செய்யப்படும் கர்மமே ஷுத்தமானதாகும். பொதுவாக, அஞ்ஞான நிலையில் இருக்கும் ஸஜ்ஜனர்கள் செய்யும் வித்யுக்த கர்மங்கள் கூட, பல்வேறு குற்றம், குறைகளை கொண்டிருக்கிறது. எவ்வித தோஷங்களும் இல்லாமல் கர்மங்களை செய்பவர்கள் என்றால் அது பிரம்ம வாயுகள் மட்டுமே.

ஸ்ரீமுக்யபிராணர் தான் செய்யும் மற்றும் எண்ணிக்கையற்ற அனைத்து ஜீவர்களில் இருந்து செய்து, செய்விக்கும் அனைத்து கர்மங்களையும் ஸ்ரீஹரியின் அதீனனாகி அவனின் ப்ரேரணையிலேயே செய்கிறார். ஸ்ரீஹரி, முக்யபிராணாந்தர்கதனாக இருக்கிறான். ஸ்ரீஹரி, தன் ஸர்வகுண க்ரியைகளால் அபின்னனாக இருக்கிறான். தன் ஸர்வ க்ரியைகளுக்கு ஸ்வதந்த்ர காரணங்களான ஸ்ரீஹரியின் அனந்த க்ரியாத்மக ரூபங்களின் ஸ்மரணைபூர்வகமாக, ஸ்ரீமுக்யபிராணன், அனைத்து கர்மங்களையும் செய்கிறான் மற்றும் அனைவரிடமிருந்தும் செய்விக்கிறான்.

**28. அஶேஷ[2]ஜீவனி: ஸங்க்[2]ய அனாதி[3]காலீன த[4]ர்மாத[4]ர்ம த்[3]ரஷ்டு ஸ்வேச்சயா உத்[3]போ[3]த[4]கேன தத்[3]வாசக கபிலோபாஸகேன ரமாவ்யதிரிக்த பூர்வ ப்ரஸித்[3]த[4] வ்யதிரிக்த அனந்தவேத[3] ப்ரதிபாத்[3]ய முக்[2]யதம அனந்தகு[3]ண பரிபூர்ணேன ஸர்வ தோ[3]ஷதூ[3]ரேண த்வச்சித்தாபி[4]க்[3]ஞேன த்வச்சித்தானுஸாரி சித்தேன த்வத்பரமானுக்[3]ரஹ பாத்ரபூ[4]தேன மத்[3]யோக்[3]யதா பி[4]க்[3]ஞேன ஸ்ரீபா[4]ரதிரமணேன ருத்[3]ராத்[3]யஶேஷ தாத்விக**

**தே[3]வதோபாஸித சரணேன மம ஸர்வாஸ்வவஸ்தாஸு சித்ரதா[3] விசித்ரதா[3] த்வது[3]பாஸகேன ஶ்ரீமுக்[2]யபிராணேன ப்ரேரித:ஸன்**

அஷேஷஜீவனி: ஸங்க்ய அனாதிகாலீன - அனைத்து ஜீவர்களின், எண்ணிக்கையற்றதும், அனாதி காலத்திலிருந்து இருப்பதும் ஆன; தர்மாதர்ம த்ரஷ்டு ஸ்வேச்சயா உத்போதகேன - புண்யபாப ரூப அதிர்ஷ்டங்களை, சாக்ஷாத்தாக கண்டு, தன் விருப்பத்திற்கேற்ப உத்போதிக்கும்; தத்வாசக கபிலோபாஸகேன - இந்த அர்த்தத்தைக் கூறும் (ஶ்ரீமுக்யபிராணனின் இந்த மகிமையை சொல்லும்) கபில என்னும் நாமம் உள்ள ஶ்ரீஹரியை உபாஸிக்கும்; ரமாவ்யதிரிக்த பூர்வ ப்ரஸித்த வ்யதிரிக்த - ரமாதேவியிலேயே (ரமா தேவியை சொல்கிறது என்னும்) புகழ்பெற்ற சொற்களால் பின்னங்களான; அனந்தவேத ப்ரதிபாத்ய முக்யதம - அனந்த வேத ஷப்தங்களால், ப்ரதிபாத்யர் ஆனவர்களில் முக்யதமரான; அனந்தகுண பரிபூர்ணேன - எண்ணிக்கையற்ற குணங்களால் பூர்ணனும்; ஸர்வதோஷதூரேண - எவ்வித தோஷங்களும் அற்றவனும்; த்வச்சித்தாபிக்ஞேன - உன் சித்தத்தை அறிந்தவனும் (அந்தந்த காலத்தின் பகவத் ஸங்கல்பங்களை அறிபவனும்); த்வச்சித்தானுஸாரி சித்தேன - உன் சித்தத்திற்கேற்ப சித்தம் உள்ளவனும்; த்வத்பரமானுக்ரஹ பாத்ரபூதேன - உன் பரமப்ரஸாத முக்யபாத்ரனும்; மத்யோக்யதாபிக்ஞேன - என் யோக்யதையை நன்றாக அறிந்திருப்பவனும்; ஶ்ரீபாரதிரமணேன - பாரதிபதியும்; ருத்ராத்யஷேஷ தாத்விக தேவதோபாஸித சரணேன - ருத்ரனே முதலான அனைத்து தத்வாபிமானி தேவதைகளால் வணங்கப்படும் சரணங்களைக் கொண்டவனும்; மம - என்; ஸர்வாஸ்வ - அனைத்து; வஸ்தாஸு - ஜாக்ரதாதி அனைத்து நிலைகளில்; சித்ரதா விசித்ரதா - சித்ர விசித்ர ப்ரகாரத்தினால்; த்வதுபாஸகேன - உன்னை உபாசிப்பவனுமான; ஶ்ரீமுக்யபிராணேன - ஶ்ரீமுக்யப்ராணனால்; ப்ரேரித:ஸன் - ப்ரேரிதனாகி, (கரிஷ்யே என்று அடுத்த வாக்கியத்தில் வருவதையும் சேர்த்து படிக்க வேண்டும்).

ஶ்ரீஹரி ஸர்வத்ர ஸர்வ கர்மங்களின் கர்தன். அவன் செய்யாத கர்மத்தினை வேறு யாரும் என்றும் செய்ய மாட்டார்கள். ஶ்ரீஹரி, தன் குண, ரூப, க்ரியைகளால் அத்யந்த அபின்னன். அனைத்து க்ரியைகளும் அவனில் இருந்து, யோக்ய காலத்தில் மற்றும் யோக்ய

அதிஷ்டானங்களில், வெளிப்படுகின்றன. இந்த பிரம்மாதி ஜீவ கர்மங்களின் ஸ்வதந்த்ர கர்தனான ஸ்ரீஹரியின் க்ரியாகாரக, க்ரியாத்மக ரூபங்கள் எண்ணிக்கையற்று இருக்கின்றன. இந்த ரூபத்தை சிந்தித்து, அந்தந்த கர்மங்களை, தானும் செய்து, மற்றவர்கள் மூலமாகவும் செய்வதில், ஸ்ரீமுக்யபிராணன் சமர்த்தராக இருக்கிறார். ஸ்ரீஹரியின் அருளால் அனைத்து ஜீவர்களின் சஞ்சித கர்மராஷிகளை (கர்மத்திலிருந்து வந்த புண்யபாப ரூப அதிர்ஷ்டங்களை) அறிந்தவனாகி, தன் இஷ்டத்திற்கேற்ப, அவற்றை பலன்களுக்காக செய்யும் மற்றும் செவிக்கும் ஸர்வக்ஞத்வத்தைக் கொண்டவனாக இருக்கிறான்.

ஜகத் ரக்ஷகனாக இருந்து, இப்படியாக தன்னை அருளும் கபில நாமக ஸ்ரீஹரியை, எப்போதும் உபாஸனை செய்கிறான். அனந்த வேதங்கள் பரம முக்ய அர்த்தத்தில் ஸ்ரீஹரியையே போற்றினாலும், நாராயணனில் மட்டும் ப்ரஸித்தமாக இருக்கும் அனைத்து வேதங்கள் ரமாதேவியையும் போற்றுகின்றன. ரமாதேவியை விட்டு, வேத ப்ரதிபாத்யரான அக்ன்யாதி மற்ற தேவதைகளின் நடுவில், ஸ்ரீமுக்யபிராணன் முக்யமானவன். ரமா நாராயணர்களை மட்டும் போற்றுவதான சில சொற்களை விட்டு, மற்ற அனைத்து வேதங்களாலும், முக்கிய ப்ரதிபாத்யனாக இருக்கிறான். மற்ற தேவதைகள் ஸ்வயோக்யதைக்கேற்ப, வேதங்களின் சில பாகங்களால் அமுக்ய ப்ரவ்ருத்தியினால் ப்ரதிபாத்யராக இருக்கின்றனர். இவ்வாறு அனைத்து வேத ப்ரதிபாத்யனான ஸ்ரீமுக்யப்ராணர் ஸர்வகுண ஸம்பூர்ணராக இருக்கிறார். ஜீவயோக்ய ஸத்குணங்களான ஞானபக்த்யாதி ஸர்வகுணங்களால் பூர்ணராக இருக்கிறார்.

** தர்ம என்றால் புண்ய. ஸத்கர்மங்களை செய்வதால் வரும், காலாந்தரத்தில் அல்லது ஜன்மாந்தரத்தில் ஸுகப்ராப்திக்கு காரணமாகும் ஷக்திவிசேஷம் புண்யம் எனப்படுகிறது. அதர்ம என்பது இதன் எதிர்ப்பதமானது. பாப, துஷ்கர்மங்களால் தோன்றும், எதிர்காலத்தில் வரக்கூடிய துக்க ப்ராப்திக்கு காரணமாகும் ஷக்திவிசேஷம் பாவம் எனப்படுகிறது. இவ்வாறு தர்ம அதர்மங்கள் இந்திரியங்களுக்கு கட்டுப்படாதவை என்பதால், அவற்றை புறக்கணிக்க முடியாது. இன்று செய்யும் கர்மங்களுக்கு,

காலாந்தரத்தில் தக்க பலன்கள் கிடைக்கின்றன என்பது பொதுவாக அனைவரும் அறிந்த விஷயமே. எந்த கர்மமும், அவற்றை செய்யும் காலத்தில், பலன்களைக் கொடுப்பதில்லை. அனைத்து ஜீவனும், பல்வேறு பிறவிகளை எடுக்கிறான். ஒவ்வொரு பிறவியிலும் எண்ணிக்கையற்ற கர்மங்களை செய்கிறான். ஆயிரக்கணக்கான மனித பிறவிகளையே எடுக்கிறான்.

இப்படியிருக்கையில், அனைத்து ஜீவர்களின் அத்ருஷ்டாதி அதீந்த்ரிய வஸ்து ஞானம் உள்ளவனாகி, அவற்றில் எதனை, எந்த காலத்தில் தோற்றுவித்து ஜீவர்களை அவர்களின் யோக்ய கர்மங்களில் ஈடுபடுமாறு செய்ய வேண்டும் என்பதை தீர்மானித்து, அந்தந்த கர்மங்களில் ஈடுபடுத்தும் செயலானது, அசிந்த்யாத்புத ஸர்வக்ஞத்வ உள்ளவரால் மட்டுமே ஸாத்தியம் என்பதை நாம் அறியலாம். இந்த அனைத்தையும் நிர்வகிக்கும் ஸ்வதந்த்ரப்ரபு, ஸர்வக்ஞனான ஸ்ரீஹரியே. அவனின் அருளால் அவனின் ஸங்கல்பத்தை அந்தந்த காலத்தில் அறிந்து, அவனின் அதீனனாகி, அதற்கேற்ப ஜீவர்களை ப்ரேரணை செய்யும் ஸ்ரீமுக்யபிராணனும், ஜீவ ப்ரேரண காரியத்திற்கு அவசியமான அனைத்து விசேஷங்களையும் அவனின் அருளாலேயே அறிந்த ஸர்வக்ஞன்.

ஸரஸ பாரதி விலாஸத்தில் கூறியுள்ளபடி, தாத்விக தேவதைகள்கூட, குணபூர்ணராக இருக்கையில், அவர்கள் அனைவரின் நியாமகனான ஸ்ரீமுக்யபிராணன் குணபூர்ணன், மஹாஸர்வக்ஞன் என்று சொல்லவும் வேண்டுமோ? அனைத்து ஜீவர்களின் அனைத்து கர்ம ப்ரேரகனான ஸ்ரீஹரியின் அனந்த க்ரியாத்மக ரூபவிசேஷங்களை அறிந்து, ப்ரதிரூபத்தின் முக்யப்ரதிபிம்பனாகி, அனைத்து க்ரியைகளின் ப்ரேரகனும், ப்ரசோதகனும், கர்தனுமாகியிருக்கும் ஸ்ரீமுக்யபிராணனும் அனந்தஜீவர்களின் நியமனத்திற்கு காரணமான அனந்தரூபங்களைக் கொண்டவன். ஸ்ரீஹரிக்குப் பின்னர், அற்புத அசிந்த்ய மகிமன் ஸ்ரீமுக்யப்ராணனே.

மேலும் ஸரஸ பாரதி விலாஸத்தில் கூறியுள்ளபடி: ரமா நாதனின் அருளால், முக்யப்ராணன் அனந்தானந்த ரூபங்களை ஏற்று, அனந்த ஜீவர்களில் இருந்து அனைத்தையும் செய்து செய்விக்கும் கர்தனாக இருக்கிறான். தேவதைகளுக்கு அவரவர்களின் பதவிகளைக்

கொடுத்து, அந்தந்த பதவிகளில் இருந்து, தம் காரியங்களை கொடுப்பவனும் அவனே ஆகிறான். அனைவரின் ஜாக்ரதாதி நிலைகளின் நியாமகனும் அவனே ஆகிறான்.

அசிந்த்யாத்புத மகிமன் என்று சொற்களால் சொல்லமுடியுமே தவிர, முக்யபிராணனின் மகிமைகளை புத்தியினால் ஊகிப்பதற்கு சாத்தியமே இல்லை. இவனுடைய மகிமை இவ்வாறு இருக்கையில், இவனைவிட அனந்த மடங்கு அதிகமான அற்புத மகிமனான ஸ்ரீஹரியின் மகிமைகள் சிந்திக்க அப்பாற்பட்டது என்றும், ஸ்ரீமகாலட்சுமியும் அதில் ஒரு அம்சத்தை மட்டுமே அறிந்திருக்கிறாள் என்றும், ஸ்ரீஹரியை நித்ய நூதனனாகவே பார்க்கிறாள் என்றும் நிரூபிப்பதை இல்லை என்று மறுக்க முடியுமா? முடியாது.

**29. த்வத் ஸம்ஸ்க்ருதி பூர்வகம் ஶயனாத் ஸமுத்தா2ய அத்3யதனம் ஸ்வவர்ணாஶ்ரமோசிதம் தே3ஶ காலாவஸ்தோ2சிதம் நித்ய நைமித்திக காம்யபே4தே3ன த்ரிவித4ம் த்வத்பூஜாத்மகம் கர்ம யதா2ஶக்தி யதா2ஞப்தி யதா2வைப4வம் கரிஷ்யே | மதா3ஞாகாரிபி4: வித்3யா ஸம்ப3ந்தி4பி4: தே3ஹஸம்ப4ந்தி4பி4ஸ்ச த்வதீ3யை: அஶேஷைர்ஜனை: தத் ஸர்வகர்ம க்ர்த்ருத்வ காரயித்ருத்வாத்யனு ஸந்தா4னபூர்வகம் காரயிஷ்யே ச ||**

த்வத் ஸம்ஸ்க்ருதி பூர்வகம் - உன் ஸ்மரணையையே செய்துகொண்டு; ஷயனாத் - படுக்கையிலிருந்து; ஸமுத்தாய - எழுந்து; அத்யதனம் - அனைத்து நாட்களிலும்; ஸ்வவர்ணாஷ்ரமோசிதம் - என் வர்ணாசிரமத்திற்கு தக்கதான; தேஷ காலாவஸ்தோசிதம் - தேஷ, கால, நிலைகளுக்கு யோக்யமான; நித்ய நைமித்திக காம்யபேதேன - நித்ய, நைமித்திக மற்றும் காம்ய என்னும் வேறுபாடுகளால்; த்ரிவிதம் - மூன்று விதங்களாக இருக்கும்; த்வத்பூஜாத்மகம் - உன் பூஜையின் ரூபமான; கர்ம - கர்மத்தினை; யதாஷக்தி - என் சக்திகேற்ப; யதாஞப்தி - என் ஞானத்திற்கேற்ப; யதாவைபவம் - என் பொருட்கள் / செல்வங்களுக்கு ஏற்ப; கரிஷ்யே - செய்கிறேன். மதாஞாகாரிபி: - என்னை சார்ந்திருப்பவர்களாலும்; வித்யா ஸம்பந்திபி: - என் சிஷ்யர்களாலும்; தேஹஸம்பந்திபிஸ்ச - என் உற்றார் உறவினர்களாலும்; த்வதீயை: - உன் பக்தி உள்ள; அஷேஷைர்ஜனை: - அனைத்து மக்கள் மூலமாகவும்; தத் ஸர்வகர்ம க்ர்த்ருத்வ

காரயித்ருத்வாத்யனு ஸந்தானபூர்வகம் - நீயே ஸர்வகர்தனும், அனைவராலும், அனைத்தையும் செய்யத் தக்கவனுமாக இருக்கிறாய் என்னும் அனுசந்தானத்துடன்; காரயிஷ்யே - செய்விக்கிறேன்; ச - நானும் செய்வது மட்டுமல்லாமல், அவர்கள் மூலமாகவும் செய்விக்கிறேன்.

ஸ்ரீராமசந்திர பிரபுவே. தினமும் எழுந்தவுடனேயே, உன் ஸ்மரணை உடனேயே படுக்கையிலிருந்து எழுந்து, அந்த சமயத்திலிருந்து நாள் முழுக்க, என் வர்ணாசிரம தர்மங்களுக்கேற்ப கர்மங்களை செய்கிறேன். அவற்றை தேஷ, கால, நிலைக்கேற்ப யோக்யதைக்கேற்ப செய்கிறேன். என்னால் செய்யப்படுவதான அந்த கர்மங்கள், நித்ய, நைமித்திக மற்றும் காம்ய என்று மூன்று விதங்களாக இருக்கின்றன. இவை அனைத்தையும் உன் பூஜை என்று தெரிந்தே செய்கிறேன். உன் அருளால் எனக்கு இருக்கும் சக்தி, ஞான மற்றும் செல்வங்களை பயன்படுத்தி அவற்றை செய்கிறேன். நான் அவற்றை செய்வது மட்டுமல்ல - என் சிஷ்யர்கள் மூலமாகவும், உற்றார் உறவினர்கள் மூலமாகவும், உன்னில் பக்தி உள்ளவர்களாலும், நீயே ஸ்வதந்த்ரனாகி அனைத்தையும் செய்து செய்விக்கிறாய் என்னும் அனுசந்தானத்துடன் செய்வதாக செய்கிறேன்.

** ஸ்ரீமதாசார்யர், ஸத்பக்தர்களின் அனுஷ்டானத்திற்காக செய்ய வேண்டிய கடமைகளை விளக்குவதான தனது 'ஸதாசார ஸ்ம்ருதி' என்னும் கிரந்தத்தில் 'ஸ்ம்ருத்வாவிஷ்ணும் ஸமுத்தாய க்ருதஷௌசோயதாவிதி' என்று துவங்கும் வாக்கியத்தால், படுக்கையிலிருந்து எழுந்ததிலிருந்து செய்ய வேண்டிய கடமைகளை விளக்கியிருக்கிறார். 'ஸ்ம்ருத்வா விஷ்ணும் ஸமுத்தாய' என்று சொல்லி, எழுந்த உடனேயே முதல் கடமை ஹரி ஸ்மரணையே என்று சொல்லி, அந்த சிந்தனையிலேயே எழ வேண்டும் என்கிறார்.

** தேஹேந்திரியங்களால் செய்யக்கூடிய அனைத்து செயல்களையும், ஸ்ரீஹரி பூஜை என்று அறிவது அவசியம். இந்த அனுசந்தானம் உத்தம ஞானிகளுக்கு மட்டுமே ஸித்தியாகிறது. அபரோக்ஷஞானம் ஆகும் முன்னர், அதற்காக ஸாதனத்தில் ஈடுபட்டிருக்கும் பக்தர்கள், அந்த:கரண ஷுத்தி த்வாரா அபரோக்ஷ தரிசனத்திற்கு காரணமாகும் ஸ்ரீஹரி ப்ரஸாதத்தை அருளச் செய்யும், தமது வர்ணாசிரமத்திற்கு

உசிதமான கர்மங்களை தவறாமல் செய்ய வேண்டும். இது மிகச்சிறந்த பகவத் பூஜையாகும்.

கீதா தாத்பர்யத்தில் ஸ்ரீமதாசார்யர் - விஹித கர்மங்களை செய்து, விடவேண்டிய கர்மங்களை விட்டு, ஸ்ரீஹரி ப்ரீதி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு, அனைத்தையும் அவனில் அர்ப்பிப்பதே பரம தர்மம் என்று கூறுகிறார். பிராமண, க்ஷத்ரிய, வைஷ்ய, ஷூத்ர என்று வர்ணங்கள் நான்கு உள்ளன. பிரம்மசர்ய, கிருஹஸ்த, வானப்ரஸ்த மற்றும் ஸன்யாஸ என்று ஆசிரமங்கள் நான்கு. அந்தந்த வர்ண மற்றும் ஆசிரமங்களுக்கு தக்கதான கர்மங்கள் எவை என்று தர்ம சாஸ்திர கிரந்தங்களிலிருந்து அறிய வேண்டும்.

விதி மற்றும் விதிவிலக்குகளை விளக்கும் ஸ்ருதி ஸ்ம்ருதிகள் மற்றும் வர்ணாசிரம தர்மங்களையும் நிரூபிக்கும் தர்ம சாஸ்திரங்கள் ஸ்ரீஹரியின் ஆணையே ஆகின்றன. விஹித கர்மங்களை குறையின்றி பின்பற்றி, பக்தி பூர்வகமாக ஸ்ரீஹரியில் அவற்றை அர்ப்பிப்பது சிறந்த விஷ்ணு பூஜை ஆகும். ஸ்வாமியின் மகிழ்ச்சியைப் பெறுவதற்கு, சேவகனுக்கு அவனின் ஆணையைப் பின்பற்றுவதைத் தவிர சிறந்த செயல் வேறு எதுவும் இல்லை.

** வெவ்வேறு வர்ண, ஆசிரமங்களுக்கு வெவ்வேறு கர்மங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நித்ய, நைமித்திக மற்றும் காம்ய என்று அவை மூன்று விதங்கள். தவறாமல் தினமும் செய்ய வேண்டிய ஸ்னான, ஸந்த்யாவந்தன, தேவதார்ச்சனை, கிருஹஸ்தர்களின் பிரம்மயக்ஞ, வைஷ்வதேவ ஆகியவை நித்ய கர்மங்கள். இவற்றை செய்யாமல் விட்டால் நரகாதி துக்கத்திற்குக் காரணமாகும் சாத்தியம் இருக்கிறது. சில குறிப்பிட்ட காலங்களில் மட்டும் செய்ய வேண்டிய கர்மங்கள் நைமித்திக கர்மங்கள் எனப்படுகின்றன. கிரகணம், பர்வ காலம் முதலான காலங்களில் செய்ய வேண்டிய பித்ரு தர்ப்பண, தானம் முதலிய கர்மங்கள், இந்த நைமித்திக வகையை சேர்ந்தவை. குறிப்பிட்ட பலன்களுக்காக செய்வதான கர்மங்கள் காம்யங்கள். வாரிசு வேண்டி, மழைக்காக செய்யப்படும் நாக ப்ரதிஷ்டை, புத்ர காமேஷ்டி யாகம் ஆகியவை இதற்கு உதாரணங்கள்.

பிராமண கிருஹஸ்தனின் நித்ய கர்மங்களில்: வைஷ்வதேவ கர்மம், தேவயக்ஞ ரூபமானது. பிரம்மயக்ஞம் ரிஷியக்ஞம்; தர்ப்பண,

ஸ்ராத்தாதிகள் பித்ரு யக்ஞம் ஆகும். தேவருண, ரிஷிருண, பித்ருருணங்களின் பரிகாரத்திற்காக இவை விதிக்கபட்டுள்ளன. பிராமணன் இந்த மூன்று ருணங்களின் பரிகாரத்தினை கண்டிப்பாக செய்ய வேண்டும். யக்ஞம் என்றால் விஷ்ணு பூஜாத்மகமான கர்மம் ஆகும். வைஷ்வதேவாதிகளை ஸ்ரீஹரி ஸ்மரணையுடன் செய்தால் மட்டுமே, அவை பலன்களைக் கொடுக்கின்றன. எதையும் விரும்பாமல் இவற்றை செய்தால், அத்தகைய ருணங்கள் எப்படி பரிகாரம் ஆகும் என்னும் சந்தேகம் வேண்டாம். வெறும் ஸ்ரீவிஷ்ணு ப்ரீத்யர்த்தமாகி செய்யப்படும் நிஷ்காம கர்மங்களால், கேட்கப்படாத பிற பலன்களும்கூட நிறைவேறுகின்றன.

** மகாமகிமனும், ஜீவோத்தமனும் ஆன ஸ்ரீமுக்யபிராணன், ஸ்வதந்த்ரனும், ஸர்வகர்த்தனுமான ஸ்ரீஹரியின் சங்கல்பத்தை அனுசரித்து அவனின் ப்ரேரணைக்கேற்ப அனைத்தையும் செய்து, அனைவர் மூலமாக அனைத்தையும் செய்விக்கிறான் என்னும் அனுசந்தானத்தைக் கொண்டு, நித்ய, நைமித்திக, காம்யாதி கர்மங்களை ஸ்ரீவிஷ்ணு ப்ரீத்யர்த்தமாக செய்ய வேண்டும் என்பதே, இந்த வாக்கியத்தில் மறைந்திருக்கும் பொருள் ஆகும். 'நா ஹம் கர்தா ஹரி: கர்தா த்வத்பூஜா கர்மசாகிலம் | ததாபி மத்க்ருதாபூஜா த்வத் பிரஸாதேன நான்யதா' என்னும் சிந்தனையை கொண்டிருக்க வேண்டும்.

** என் ஆணையை நிறைவேற்றும் சிஷ்யர்கள் மூலமாகவும், மற்ற உற்றார் உறவினர்கள் மூலமாகவும், ஸ்வயோக்ய கர்மங்களை செய்விக்கிறேன் என்னும் சங்கல்பத்தைக் கூட முந்தைய வாக்கியத்தில் பார்த்த 'ஸ்ரீபாரதிரமணேன முக்யப்ராணேன ப்ரேரித: ஸன்' என்னும் அனுசந்தானத்தினாலேயே செய்ய வேண்டியது என்று அறிய வேண்டும். பிறர் மூலமாக செய்யப்படும் கர்மங்களும் ஸ்ரீஹரி ப்ரீதிக்கான கர்மங்களே ஆகும். அதுவும்கூட ஸ்ரீபாரதிரமண முக்யபிராணனின் ப்ரேரணையினாலேயே ஆக வேண்டும். யோக்ய ஜீவர்களால் ஸ்வ விஹித கர்மங்களை விஷ்ணு பூஜை என்னும் அனுசந்தானத்துடன் பூஜிப்பதும், ஸ்ரீவிஷ்ணு ப்ரீதிகரமான செயலே ஆகும்.

**இதி ஸ்ரீராக⁴வேந்திராக்²ய யதினா க்ருதமஞ்சஸா |**
**ப்ராத:ஸங்கல்ப க³த்யம் ஸ்யாத் ப்ரீத்யை மாத⁴வ மத்⁴வயோ: ||**

இது - இவ்வாறு; ஸ்ரீராகவேந்த்ராக்ய யதினா - ஸ்ரீராகவேந்த்ர என்னும் நாமம் உள்ள யதியினால்; அஞ்சஸா - பக்திபூர்வகமாக; க்ருதம் - இயற்றப்பட்ட; ப்ராத:ஸங்கல்பகத்யம் - நித்யமும் காலையில் அனைவரும் சொல்ல வேண்டிய ப்ராத: ஸங்கல்ப கத்யம் (காலையில் செய்ய வேண்டிய சங்கல்பத்தை நிரூபிக்கும் கத்ய ரூபத்தின் இந்த வாக்கியம்); மாதவமத்வயோ: - ஸ்ரீஹரிவாயுகளின் (லட்சுமிபதியான ஸ்ரீவேதவ்யாஸரின் மற்றும் வாயுவின் அவதாரரான ஸ்ரீமன் மத்வாசார்யரின்); ப்ரீத்யைஸ்யாத் - ப்ரீத்யர்த்தமாக ஆகட்டும் (அவர்களை மகிழ்விக்கட்டும்).

இப்படியாக ஸ்ரீமத் ராகவேந்திர யதிஷிரோமணிகளால் இயற்றப்பட்ட ப்ராத:ஸங்கல்ப கத்யம் முடிந்தது.

**|| ஸ்ரீபாரதீஷாந்தர்கத ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||**
**|| ஆசார்ய: ஸ்ரீமதாசார்ய: ஸந்து மே ஜன்மஜன்மனி ||**

***